1.89

METHODS OF TEACHING TAMIL

4-48

V. K. SESHADRI, B.A., L.T.,
Madras Educational Department

★

PALANIAPPA BROS
TEPPAKULAM :: TRICHINOPOLY

தமிழ் கற்பிக்கும் முறைகள்

[Approved by the Text-Book Committee, Madras for class use in Training Schools, Vide Fort Saint George Gazette, Part I-B Page 18 dated 20-5-47.]

வி. கி. சேஷாத்திரி பி. ஏ., எல். டி.,
சென்னைக் கல்வி இலாகா

பழனியப்பா பிரதர்ஸ்
தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

[விலை ரூ. 2—0—0

முதற் பதிப்பு—1946
இரண்டாம் பதிப்பு—1948

முன்னுரை

போதனை முறைப் பயிற்சிக் கூடங்களின் பாடத் திட்டத்தில் தாய்மொழிப் போதனை ஒரு கட்டாயப் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி பெற்றுப் பெரிதும் விரிந்துள்ள இக்காலத்தில், தமிழில் சிறந்த ஆற்றல் படைத்த ஆசிரியர்களே அம்மொழியைத் திறமையுடன் மாணவர்க்குக் கற்பித்தல் கூடும். நவீன ஆராய்ச்சிகளின் பயனைப் பல அறிஞர்கள் கண்டுள்ள உண்மைகளைத் தாய்மொழிப் போதனையில் கையாளுவதால் நல்ல பலன் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. நவீன போதனமுறைக் கொள்கைகளில் ஆழ்ந்த அறிவும் பயிற்சியுமுள்ளவர்களே தமிழ் மொழியை நன்கு கற்பிக்க முடியும். இந் நூல், இந்த நோக்கத்திற்கும் பயிற்சிக் கூடங்களின் பாடத்திட்டத்திற்கும் இணங்க, கற்பிக்கும் முறைகளையும் கொள்கைகளையும் எடுத்துக் கூறுகின்றது.

தமிழ் நாட்டில் கல்வித்தொண்டில் ஈடுபட்டுள்ள பெரியார்க்கு இச் சிறுநூல் பயன் [illegible] என நம்[illegible]ன்றேன்.

திருச்சிராப்பள்ளி, [illegible].3—46. } கி. சேஷர்த்திரி.

The Royal Printing Works, Madras-2.

உள்ளுறை

Training School Leaving certificate Examination

Revised Syllabuses:

Secondary and Elementary Grades

METHOD OF TEACHING - INDIAN LANGUAGE

SECTION A

1. *நியமிக்கப்பட்ட பாட புத்தகத்தில் ஆழ்ந்த படிப்பு :* (i) இலாகாவினால் தொகுக்கப்பட்ட இலக்கியத் திரட்டு. (ii) மேற்கண்ட தொகுப்பில் மிகச் சிறப்பு வாய்ந்த செய்யுட் பகுதிகளை மனப்பாடம் செய்தல்.

2. *கூடிய படிப்பு :* பயிற்சிசாலைத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு காவியங்களையும், சிறப்பு வாய்ந்த ஆறு வசன நூல்களையும் கூடப் படித்தல். பிரதமப் பயிற்சி வகுப்புக்கு இரு வசன நூல்கள் மட்டும்.

3. *இலக்கணம் :* தமிழ் எழுத்துக்களின் நெடுங்கணக்கைத் தரம் பிரித்தல். சொற்களின் வகைகளும் அவற்றின் பயனும். பால், எண், இடம், வேற்றுமை. வினைகளும் அவற்றின் பாகுபாடுகளும்.

சொற்களின் புணர்ச்சி. எழுவாய், பயனிலைகளின் வகைகள். *ஆகுபெயர்*. அணிகள்—உவமை, உருவகம் *உயர்வு நவிற்சி*. திசைச் சொற்கள்—தாய்மொழியில் ஸம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் ஆட்சி. *யாப்பிலக்கணத்தில் ஆரம்ப அறிவு.*

4. *தாய்மொழியில் இலக்கிய வளர்ச்சியின் சுருக்கமான வரலாறு.*

† 5. *கட்டுரை :* விருத்தாந்தம், கற்பனை, வர்ணனை, விவாதம் ஆகிய பலவகைக் கட்டுரைகளை, படித்த வகுப்

புப் புத்தகங்களை அனுசரித்து, பழக்கமான பொருள் களைப்பற்றி, வரைதல்.

ஒன்று அல்லது இரண்டு அங்கங்களையுடைய சிறு நாடகங்களை எழுதுதல்.

SECTION B

1. **கற்பிக்கும் முறைகள் :** கல்வியில் தாய்மொழி யின் ஸ்தானம்

2. விளையாட்டு முறை, சுயநோக்க முயற்சி முறை, நடிப்பு முறை, தனித்த முறை ஆகிய முறைகளின் பிர யோகம்.

3. மொழிப் பயிற்சியில் கிரகிக்கும் திறமையும் சொல்வன்மையும்.

4. **திருத்தமாகப் பேசுவதில் பயிற்சி :** வாய்மொழி வேலை—(i) முதல் இரண்டு வகுப்புக்களில் குடும்பம், உற வினர், நண்பர்கள், திருவிழாக்கள் போன்ற கவர்ச்சி யுள்ள விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தல். (ii) மேல் வகுப்புக்களில், திருத்தமான பாஷையில், கவர்ச்சியுள்ள நடப்பு விஷயங்களைப் பற்றிப் பேசுதல்.

கதைகள் : குழந்தைகளுடைய அபிவிருத்தி நிலைக் கேற்ப, கதையை ஆராய்ந் தெடுத்தல். கதை சொல்லு வது எப்படி? கதையைக் குழந்தைகள் விவரித்தலும், அதை நாடக ரூபமாக நடித்தலும். உரையாடல்கள்.

வாய்மொழிச் சொல்வன்மையை அபிவிருத்தி செய் வதற்குப் படங்கள், கதைகள், விருத்தாந்தச் செய்யுட் கள், பாடல்கள் ஆகியவற்றின் உபயோகம்.

பேசுவதில் நிவிர்த்திக்க வேண்டிய குறைகள்— தெளிவற்ற உச்சரிப்பு, பிழையான உச்சரிப்பு, கத்தரித்த முடிவுகள், துரிதமான உச்சாரணம்.

5. **வாசிப்பு :** (i) வாசிப்புப் பழக்கம் உண்டாக்கு தல்—நானாவித முறைகள் : எழுத்து முறை, பார்த்துச்

சொல்லும் முறை, வார்த்தை முறை, வாக்கிய முறை. இம் முறைகளின் நிறைகளும் குறைகளும். (1) வாசிப்புக் குறிப்புகள். (2) தனிப்பட்ட வேலைக்கான உபகரணங்கள். (3) அடிக்கடி சம்பவிக்கும் உபயோகமான சொற்களின் அட்டவணைகள்—ஆகியவற்றைத் தயாரித்தல்.

வாசிப்புத் திறமை: உரக்க வாசித்தல். கிரகித்துக் கொண்டும், தெளிவாகவும், வேகமாகவும் வாசித்தல்.

(i) **மௌன வாசிப்பு:** அதன் முக்கியம். ரகிக்கும் திறமையும் வேகமும் அதிகரித்தல். புதிய சொற்களுக்குக் கவனம். சிந்தனையின் அலகுக்கும், கால வரம்புக்கும் கவனம். கண்சாலை நீட்டுவதற்கும், எதைப் படிக்க வேண்டும்-என்பதில் மாணவனுடைய அறிவை விசாலப் படுத்துவதற்கும், குரல் சப்தத்தை வெல்லுவதற்கும், முகாந்திரம் தோற்றுவிப்பதற்கும் கையாளக் கூடிய உபாயங்கள். மௌன வாசிப்பில் திறமைச் சோதனைகள்*. மௌன வாசிப்புக்குத் தேவையான சாதனங்களைத் தயாரித்தல். தனிப்பட்ட வேலைத்தாள்கள் — சிறு கதைப் புத்தகங்கள், விளம்பரங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளிலுள்ள குழந்தைப் பகுதிகளின் தொகுப்பு.

(ii) **வாசிப்பதன் நோக்கம்:** விஷய ஞானம், சந்தோஷம், ஆத்மாவேசம், பாஷாபிவிருத்தி.

(iii) **செய்யுள்:** (1) சிசுப்பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், அபிநயப் பாடல்கள், எளிய நாட்டுப் பாடல்கள், விடுகதைகள். (2) சுலபமான விருத்தாந்தப் பாடல்களும் வருணனைப் பாடல்களும். (3) செய்யுளை வாசித்தல்—அடிகளை சந்தத்துடன் பாடுவது ஒரு லட்சணம். (4) செய்யுள் போதிக்கும் முறை. முழுச் செய்யுளையும் நேர் முகமாக அறிமுகம் செய்வித்தல். செய்யுளின் நேரான முறையிடு. தேவைக்கு அதிகமான வியாக்கியானங்களையும் இலக்கணத்தையும் கற்பித்துச் செய்யுளை பிரித்துப் போதிக்கும் முறையைத் தவிர்த்தல். சந்தத்தை இரசிப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் பயிற்சி யளித்தல். மனப்பாடம் செய்வதற்குகந்த பகுதிகளை ஆராய்ந்தெடுத்தல்.

(iv) உரை நடை: உசிதமான பகுதிகளை ஆராய்ந் தெடுத்தல். நகைச் சுவையின் அவசியம். வசீகரிக்கும் நடை—தகுந்த சித்திரங்கள்—அழகிய அமைப்பும் அச்சும்.

(v) படிப்பதற்குத் தகுந்த சாதனங்கள்: (1) சுலபமான பழக்கத்திலுள்ள பொருள்களைப் பற்றியவை, உரை யாடல்கள், சிறு நாடகங்கள். (2) விருத்தாந்தம், கற்பனை, வாழ்க்கை வரலாறு, வருணனை சம்பந்தமான இலக்கி யம். (3) உல்லாசமான படிப்புக்கான புத்தகங்கள்— சஞ்சிகைகளும் வர்த்தமானத் தாள்களும்.

6. இலக்கணம்: பிரயோக இலக்கணம். வகுப்புப் பாட புத்தகங்களின் மூலமாக ஆகமன முறையில் கற்பித் தலும், பின்னர் நிகமன முறைப் பிரயோகங்களும். தாய் மொழியின் இலக்கண பரிபாஷைக்கும் ஆங்கில மொழி யின் இலக்கண பரிபாஷைக்கும் உள்ள பரஸ்பர சம்பந்தம்.

7. எழுத்து: (i) பொதுவான ஆலோசனைகள்— (1) எழுதுவதற்கு ஆயத்தமாயிருத்தல். வாசிப்புக்குப் பின்னர் எழுத்து. (2) எழுத்துக்களின் அழகும் பாகங் களின் பொருத்தமும். (3) எழுதுவதில் வேகமும் தெளி வும். (4) பார்த்து எழுதுதல்.

(ii) கட்டுரை: வாய்மொழிக் கட்டுரையைத் தொடர்ந்து எழுத்துக் கட்டுரை—சுயமான சொல்வன்மையின் அவசி யம் — சம்பாஷணை, உரையாடல், மாணவர்களால் பொறுக்கி எடுக்கப்பட்ட பழக்கமான பொருள்களைப் பற்றிய விரிவுரைகள். (உ-ம்) ஒரு மழைநாள் அனுபவம், ஒரு பொருட்காட்சி சாலையைப் பார்வையிட்ட வரலாறு, அலைக்களம் போன்றவை. [எழுத்துப்பிழை, நிறுத்துக் குறிகள், கையெழுத்து—கவனம் பெறவேண்டும்.]

*நானாவிதமான சுயேச்சைக் கட்டுரைகளில் படிப் படியான அபிவிருத்தி—விருத்தாந்தம், கற்பனை, வரு ணனை, விவாதம். வாக்கிய அமைப்பு, பத்தி ஒழுங்கு,

எழுத்திலக்கணம், நிறுத்துக்குறிகள், கையெழுத்து.* தாய்மொழியில் விசேஷச் சிறப்பு வாய்ந்த சொற்றொடர்களும் அவற்றின் உபயோகமும்.

(iii) **கடிதம் எழுதுதல்:** விலாசதாரையும் விஷயத்தையும் அனுசரித்து, கடிதங்களின் அமைப்பும் நடையும் மாறுபடுதல்.

(iv) **ஆக்கச் சொல்வன்மை:** கதை எழுதுதல்; கற்பனை அனுபவங்கள்—ஒன்று அல்லது இரண்டு அங்கங்கள் கொண்ட சிறு நாடகங்கள் எழுதுதல். [பிரதமப் பயிற்சி வகுப்புக்கு ஒற்றையங்க நாடகங்கள்.]

(v) **கட்டுரைகளைச் சீர்திருத்துதல்:** பொதுப் பிழைகளும் அவற்றை நிவிர்த்திக்கும் முறைகளும்.

குறிப்பு : * இக்குறியிட்டவை பிரதமப் பயிற்சி வகுப்புக்கு இல்லை.

‡ இக் குறியிட்டவை உயர்நிலைப் பயிற்சி வகுப்புக்கு இல்லை.

முதற் பாகம்

1 தமிழ் இலக்கிய வரலாறு

முன்னுரை

சர்வ வல்லமையுள்ள பரம்பொருளாற் படைக்கப்பட்டு, உலகின்கண் பலகோடியாக வியாபித்துள்ள உயிர் வகைகள் யாவும், தங்களுடைய சக்திக்கு இயன்றமட்டில் ஒலி வேறுபாட்டால், தமது உள்ளத்தெழும் கருத்துக்களை ஒருவாறு வெளிவிட முயல்கின்றன. ஆனபோதிலும், மானிட சமூகத்தில் மட்டுமே, இந்த முயற்சி, சிறப்பெய்திப் பெரும்பயனை அளித்துவருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இவ்வரிய திறமை, ஒருவருக்கொருவர் மனம்விட்டு உள்ளங்கள் கலப்பதன் மூலமாக, மக்கள் பொதுவாக அறிவைப் பெருக்கிக்கொள்ளுவதற்குத் தக்க கருவியாக அமைந்துள்ளது; மேலும், வேறெந்த உயிரைக்காட்டிலும் சிறப்பும் சீரும் பெற்று, மேன்மையுடன் வாழ்வதற்கேற்ற தனிச் சிறப்பை மக்களுக்கு இத்திறமை அளிக்கின்றது. "அரிது, அரிது மானிடராதல் அரிது" என்ற திருவாக்குக்கு இத்திறமையே காரணம். உலகில் தோன்றியுள்ள எல்லா உயிர் வகைகளும், தமது உள்ளக் கருத்தை ஒலியின் மூலம் புலப்படுத்துவதில் சிறிதளவு ப'பன் அடைந்து வருகின்றன என்பது உண்மையே· ஆயினும், அவ்வுயிர் வகைகளின் தன்மைக்கு ஏற்றபடி இவ்வொலி முயற்சியை, அவை சுருக்கியும் பெருககியும் கையாளுகின்றன. சகல சீவராசிகளும் உயிர்வாழ்வதற்குப் பஞ்சபூதங்களும் இன்றியமையாதவை; அதுபோலவே கோபம், தாபம், காமம், இன்பம், துன்பம், பசி, தாகம் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளாகிய உள்ளக் கிளர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றல், மக்கட்கு இன்றியமையாதது. இதன் காரண'மாகவே, எல்லாச் சீவராசிகளிடத்திலும், இவ்வொலி முயற்சி காணப்படுகிறது. உலகம் தோன்றிய

காலம்முதல், உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும் இம்முயற்சியானது நிகழ்ந்து வருகின்றது; ஆனால், அது சீவராசிகளின் இனத்தையும் வன்மையையும் அனுசரித்துச் சுருக்கமும் பெருக்கமும் அடைந்து, அந்தந்தச் சமூகங்கட்குச் சிறுமையும் பெருமையும் அளித்து வருகின்றது. இம்முயற்சியில் வெற்றிகண்ட உயிர் வகைகளை உயர்ந்த நிலையிலும், இம்முயற்சி குறைந்தும் அறவே இல்லாமலும் உள்ளவைகளைத் தாழ்ந்த நிலையிலும் வைத்து, பாகுபடுத்தி வழங்கக்கூடிய பெயர் வேறுபாடுகள். ஒரு மொழியில் இருப்பின், அவை, அந்நாட்டினரின் உயர்ந்த பண்பாட்டுக்குச் சிறந்த சான்றுகளாகும். இவ்வாறு, கருத்துணரும் திறமையும், அதனை வெளிப்படுத்தும் சொல் வன்மையும் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாதலின், இத்திறமைகளைப் பெற்றுள்ள மக்களை உயர்குலமாகவும், மக்களல்லாத கருத்துணர்வும் சொல் வன்மையும் இல்லாத பிற உயிர்களையும், உயிரற்ற பொருள்களையும் தாழ்ந்த குலமாகவும் பாகுபாடு செய்வது, அறிவு வளர்ச்சியின் பயனேயாகும்.

இவ்வகைச் சிறந்த முயற்சியும், அதற்கேற்பக் கருவிகளும், அக்கருவிகளை இயக்குவதற்குத் தேவையான சிந்தனைகளும் முதிர்ந்தவர், மக்களே. மக்கள் அடைந்துள்ள எல்லாச் சிறப்புக்களிலும் சிந்தனைகளை வெளிப்படுத்தும் மொழிவன்மையே சிறந்ததாகும்.

மொழி வன்மையின் சிறப்பு

இதுவே, மக்கட்குலத்துக்கு இறைவன் அருளிய பெரும் பேறு. சிந்தனைகளும், மொழிவன்மையும ஆண்டவன் அருளிய இரு அரிய கருவிகளெனப் பெரியோர் போற்றியிருப்பது ஈண்டுக் கவனித்தற்பாலது. "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்..." என்றதனால், மக்கட் பிறப்புக்குப் பெருமையளிப்பவை இவ்விரு திறமைகளும் எனப் பாராட்டினார் ஒரு பெரியார். உலகில் வாழும் அற்ப சீவராசிகள் முதல் ஆண்டவன் ஈறாகவுள்ள எல்லாப் பொருள்களையும் அறிந்துகொள்ளுவதற்குச் சிந்தனைகள் எவ்வாறு அவசியமோ, அவ்வாறே அவ்வறிவைப் பலப்படுத்திப் பெருக்குவதற்குச் சொல்வன்மையும் இன்றியமையாதது. "சிறந்த உண்மைப் பொருள்களைத் தக்க

சொற்களால் நன்கு விரிக்க வல்ல மொழிகளே, உலகிற் பெருமையுற்று விளங்குவனவாம்.'' ஆனால், உலக வழக்கிலுள்ள எல்லா மொழிகளும், உயர்ந்த உண்மைகளைச் சிறந்த சொற்களால் விளக்கும் திறமையுடையன எனச் சொல்ல முடியாது. அந்தந்த மக்களின் அறிவு நிலைக்கேற்ப மொழிகளும் பலவாறிருக்கின்றன. பல நாட்டுச் சரித்திரங்கள் வாயிலாகவும், பல வரலாறுகளாலும், மக்கள் இவ்வுலகிற்றோன்றிய நாள்முதல் பலமொழிகள் பிறந்து, செழித்துத் தங்கள் நாடுகட்குப் பெருமையளித்து வந்திருத்தலைக் காண்கிறோம். அறிவு வளர்ச்சி குன்றியுள்ள நாடுகளிற்றோன்றிய பல மொழிகள், வளர்ச்சி பெறாது ஒழிந்ததையும் நாம் அறிவோம்; வளப்பமும், செல்வமும், அறிவும், நாகரிகமும் முதிர்ந்த பல நாட்டினர் வழங்கிவந்த சில பண்டை மொழிகளும், அந்நாட்டவருடைய நிலைமை தாழ்ந்து பெருமை குன்றிய காலத்து நிலைகுலைந்து, சிறுமைபெற்று, பேச்சு வழக்கு அற்று, நூல்கள் வாயிலாக மட்டும் நிலவி வருவதை நாம் அறிவோம். ஆனால், பண்டை நாள்முதல் பற்பல சிறப்புக்களுடன் இன்றும் வழங்கிவரும் மொழிகள் மிகச் சிலவே. அவற்றுள், தமிழ் மொழியும் ஒன்று. நந்தமிழ் நாட்டின் பண்டைச் சரித்திரத்தை ஆராயப்புகின், இம்மொழியில் பரந்துள்ள எண்ணிறந்த இலக்கிய இலக்கண நூல்கள் வாயிலாக, இவ்வுண்மையை உணர்கினறோம். இம்மொழியின் பெருமையும், இதனை வழங்கி வந்தவரின் சிறந்த பண்பாடும், வளர்த்த புலவர்களின் அறிவு நுட்பமும், இலக்கியத் திறமையும், பின்வரும் வரலாற்றின் மூலம் அறியலாகும்.

'' வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து'' என்றார், தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதப் புகுந்த ஆசிரியர் பனம்பாரனார். ஆகவே, தமிழ் நாட்டுக்கு எல்லை வடக்கே வேங்கடமலையும் (திருப்பதி), தெற்கே குமரியும், கிழக்கிலும் மேற்கிலும் கடலும் என்பதாயிற்று. தெற்கெல்லை குமரியெனவே, தற்காலத்தில் தென்முனையாக விளங்கும் கன்னியாகுமரி தானே என்று பலரும் கருதக் கூடும்

பண்டைத் தமிழ் நாட்டின் எல்லை

ஆனால், அதுவன்று என்பது "பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்ற சிலப்பதிகார அடிகளை நோக்குவார்க்கு நன்கு புலனாகும். கன்னியாகுமரிக்கும் தென்பால் நூற்றுக் கணக்கான காத தூரம் வரை நிலப்பரப்பு இருந்தது என்பதும், அப்பரப்பிலே தான் குமரிமலையும், பஃறுளி யாறும், பலமலைத் தொடர்ச்சிகளும் இருந்திருக்கவேண்டு மென்பதும், ஆங்குத் தான் தலைச்சங்கமும், இடைச்சங்கமும் தோன்றி விளங்கி மறைந்தன என்பதும் ஆராய்ச்சிகளின் மூலம் அறியப்படுகின்றன. இந்த நான்கெல்லைக் குட்பட்ட பெரிய நிலப்பரப்பே '**தமிழகம்**' எனப் பெயர் பெற்று விளங்கி வந்தது. ஆனால், அத்தமிழகம் இப்பொழுது எல்லையில் மிகச்சுருங்கிவிட்டது. இந்த நிலப்பரப்பில் வழங்கி வந்த மொழிக்குத் 'தமிழ்' என்றும், இம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்க்குத் 'தமிழர்' என்றும் பெயர்கள் வழங்கலாயின.

'தமிழ்' என்ற சொல்லுக்கு 'இனிமை' என்பது பொருள். இச்சொல், இனிமையாகவே ஒலிக்கின்றது. இம்மொழிக்கு இப்பெயர் சாலவும் பொருந்தும். இம்மொழியை ஆதியில் வகுத்தவர் சிவபெருமான் என்றும், வளர்த்தவர் அகத்தியர் என்றும் புராண வரலாறுகள் கூறுகின்றன. இம்மொழியில் இயற்றப்பட்டுள்ள பழமையான நூல்களை ஆராய்ச்சி செய்யுங்கால், இது சுமார் பன்னீராயிரம் ஆண்டுகட்கு முன்னரே சிறந்த இலக்கிய இலக்கணப் பகுதிகளைப்பெற்று விளங்கியிருந்தது என அறிகிறோம். ஆதியில் தமிழர்கள் யாவரும் 'தமிழ்' என்ற ஒரே மொழியின் மூலம் அளவளாவி வந்தனர். ஆனால், அவர்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களில் குடியேறிய பின்னர், அவர்களுடைய மொழி வெவ்வேறு வகைகளாக மாறுதலடைந்து பல பெயர்களைப் பெற்றது. அவ்வாறு தமிழின் வழிமொழிகளால், தனித் தனியே நிலைபெற்ற மொழிகளுள் தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம், ஆகிய நான்கும் முக்கியமானவை.

தமிழின் தொன்மை

இந்த உண்மையைப் பின்வரும் பாடல் வற்புறுத்தி யிருப்பதைக் காணலாம்.

'பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருண்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே'

— மனோன்மணீயம்

தமிழர் நாகரிகமும் மொழி வளர்ச்சியும்

பண்டைக்காலத் தமிழரின் நாகரிகம் மிகச் சிறந்து விளங்கியிருந்தது. வேளாண்மையில் அவர்கள் சிறப்புற்றிருந்தனர்; அரசாட்சி செய்வதிலும் திறமை பெற்றிருந்தனர்; தங்களுக்குள்ளாகவே, தலைவனைத் தேர்ந்தெடுத்து அமைதியாக ஆண்டனர். நாட்டில் நிலவிய அமைதியின் காரணமாக, மொழி ஓங்கி வளரலாயிற்று. தமிழில் பல நூல்கள் இயற்றப்பட்டன. பின்னர், துரானியர்களோடும், ஆரியர்களோடும் வாணிபத்தின் மூலமாகவும், பிற தொடர்புகளினாலும் கூட்டுறவு ஏற்பட்டதில் பல சொற்கள் அவர்களுடைய மொழிகளிலிருந்து தமிழில் கலந்துவிட்டன. அக்காலத்தில் நூல்கள் யாவும் ஏடுகளில் எழுதப்பட்டு வந்தன. பேச்சுத் தமிழும், எழுத்துத் தமிழும் என்றும் ஒன்றாக இருந்ததில்லை.

தமிழ் இலக்கியப் பிரிவுகள்

தமிழ் இலக்கியத்தை இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். 'இயல்' என்ற பிரிவில் தமிழில் உள்ள செய்யுள் நூல்களும், உரைநடை நூல்களும் அடங்கியவை. இப்பிரிவில் இலக்கிய இலக்கணங்கள், யாவும் அடங்கும். 'இசை' என்பது, தாளத்துடன் கூடிப் பாடுவதற்கு ஏற்றவாறு அமைந்த பாடல்களும், அவற்றின் இலக்கிய இலக்கணங்களுமாகும். கீர்த்தனங்கள், கும்மி, ஆனந்தக்களிப்பு, தெம்

பாங்கு முதலான பாடல்கள், இப்பிரிவில் அடங்கியவை. இயற்றமிழே ஆதியில் தோன்றியது ; அதன் பின்னரே, இசைத் தமிழ் உண்டாயிற்று; பின்பு, நாடகப பிரிவு ஏற்பட்டது. நாடகத் தமிழுக்கு இயற்றமிழும் இசைத் தமிழும் அவசியம். பிற்காலத்தில் மதசம்பந்தமாகக் குறுகிய நோக்கத்தால், இசைத் தமிழும் நாடகத் தமிழும் நூல் வல்லோர்களால் புறக்கணிக்கப்பட்டன. 'சிலப்பதிகாரம்' என்ற நாடகக் காப்பியம் மட்டும் இன்றும் தலைசிறந்து நிற்கின்றது. பிற்காலத்தில் தோன்றிய முக்கூடற்பள்ளு, அருணாசலக் கவிராயருடைய இராமநாடகம், குமரகுருபர சுவாமிகளுடைய மீனாட்சியம்மை குறம், திரிகூடராசப்ப கவிராயருடைய திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகியவை இப்பிரிவைச் சேர்ந்தவை.

தமிழ் இலக்கிய வளர்ச்சியின் காலப் பிரிவுகள்

மேலே சொல்லப்பட்ட மூன்று பெரும் பிரிவுகளைக்கொண்ட தமிழ் மொழியில் இலக்கிய வளர்ச்சிக் காலத்தைச் சுமாராக ஆறு பிரிவுகளாகப் பிரிக்கக்கூடும்.

(1) சங்க காலம்—சுமார் கி. பி. 100 வரை.

(2) புத்த சமண காலம்—சுமார் கி. பி. 100 முதல் கி. பி. 600 வரை.

(3) சமய மறுமலர்ச்சிக் காலம்—சுமார் கி. பி. 600 முதல் கி. பி. 1110 வரை.

(4) இலக்கிய மறுமலர்ச்சிக் காலம்—சுமார் கி. பி. 1110 முதல் கி. பி. 1400 வரை.

(5) ஆதின கர்த்தர்களின் காலம்—சுமார் 1400 முதல் கி. பி. 1700 வரை.

(6) நவீன காலம்—கி. பி. 1700 முதல் இன்றுவரை.

இக்கால வரையறையைப் பொதுவாக நோக்குமிடத்து, சமய சம்பந்தமான நிகழ்ச்சிகளை யநுசரித்தே தமிழ் இலக்கியம் வளர்ந்திருக்கிறது என்றும், அரசர்

களாலும் ஆதீனகர்த்தர்களாலும் செல்வர்களாலும் தமிழ் மொழியும் தமிழ்ப் புலவர்களும் ஆதரிக்கப்பட்டு வந்தமையால், அரசியல் வேற்றுமைகட்கு இடையேயும் தமிழ் வளம் குன்றவில்லை என்றும் அறியலாம். மேலும், கி. பி. 1700 ஆண்டுவரை, தமிழ்மொழி செய்யுள் நடையிலேயே வளர்ந்து வந்தது என்பதும், உரைநடை, இரண்டு நூற்றாண்டுகளாகத்தான் பரவி வருகின்றது என்பதும் புலனாகின்றன. இனி, அவ்வக்காலத்திய தமிழ் நூல்களின் தன்மைகளை ஆராய்வோம்.

(1) சங்க காலம்

சங்ககாலமாவது, சுமார் கி. பி. 100 ஆண்டுகள் வரை என்னலாம். இக்காலம் சரித்திர ஆராய்ச்சிக்குப் புறம்பானது. இக்கால நூல்களிலிருந்து பலஅரிய விஷயங்களை உணரலாகும். இக்காலத்தில் மூன்று சங்கங்கள் தமிழை வளர்த்து வந்தன. இவை முதல், இடை, கடைச் சங்கங்கள் எனப் பெயர் பெறும். இம் மூன்று சங்கங்களையும் பற்றிய வரலாறு நக்கீரனார் இயற்றிய ‘இறையனாரகப் பொருளுரை’ என்ற நூலில் கூறப்பட்டிருக்கின்றது

முதல் சங்கம்

முதற் சங்கத்தில் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் புலவர் அங்கத்தினராக இருந்தனர் என்றும், அவர்களில் அகத்தியர், முருகவேள், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள், முரஞ்சியூர் முடிநாகராயர் ஆகியோர் முக்கியமானவர் என்றும், இச்சங்கம் 4,440 ஆண்டுகள் தமிழ்த் தொண்டாற்றி வந்தது என்றும், காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பது பாண்டிய அரசர்கள் காலத்தில் நடைபெற்று வந்தது என்றும் அறிகின்றோம். இதன் இருக்கை, கடலால் கொள்ளப்பட்ட மதுரை. இக்கால நூல்கள் யாவும் செய்யுட்களே. அவற்றில் சில முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்பன. இக்காலத்து முக்கிய நூல் அகத்தியம்.

இடைச்சங்கம், 3700 ஆண்டுகள் நடைபெற்றது. கடலில் மூழ்கிய கபாடபுரம் அல்லது ஆலவாய் இதற்கு இருப்பிடமாயிருந்தது. இதில் 59 புலவர் அங்கத்தினர்: 3,700 நூல் வல்லோர் கவிபாடினர். இக்காலத்திய முக்கிய நூல்கள் மாபுராணம், பூதபுராணம், வெண்டாளி, வியாழமாலே, தொல்காப்பியம் என்பன. இச்சங்கம், 59 பாண்டிய மன்னர் காலத்தில் வேலே செய்து வந்தது.

இடைச் சங்கம்

கடைச்சங்கம், 1850 ஆண்டுகள் நடைபெற்று வந்த தெனத் தெரிகின்றது. இதன் இருப்பிடம் மதுரை. இதன் அங்கத்தினர் நாற்பத்தொன்பதின்மர்; 449 புலவர், நூல்கள் இயற்றினர். இது, முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி ஈறுக 49 பாண்டிய அரசர்கள் காலத்தில் நன்கு நடத்தப்பட்டு வந்தது. இதன் தலேவர் நக்கீரனுர். இவருடன் நூல்களே ஆராய்ந்தவர்கள் சிறுமேதாவியார், சேந்தம் பூதனுர், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறனுர் ஆதியோர். இக்காலத்திய முக்கிய நூல்கள் முத்தொள்ளாயிரம், பேரிசை, கூத்து, சிற்றிசை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென்கீழ்க்கணக்கு முதலானவை. 'கல்லாடம்' என்ற சிறந்த நூலும் இக்காலத்தியதே. இதை இயற்றியவர் கல்லாடனுர். இஃது, அகப்பொருட் பகுதிகளே அகவற்பாக்களால் தெளிவாக உரைக்கின்றது.

கடைச் சங்கம்

இந்த நூல்களுள் கடல்கொண்டவைகளும், அழிந்தனவும் போகத் தற்காலம் கிடைப்பன 'அகத்தியம்' என்ற தலேச் சங்க கால நூலின் சில சூத்திரங்களும், 'தொல்காப்பியம்' என்ற இலக்கண நூலும், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கிழ்க் கணக்கு என்ற நூல்களுமே. பின்வரும் பாடல்கள் சங்ககால நூல்களின் பெயர்களே எடுத்துக் காட்டுகின்றன.

சங்ககால நூல்கள்

நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறு நூ (று)
ஒத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்துங் கலியோ டகம்புறமென் (று)
இத்திறத்த வெட்டுத் தொகை.
முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து
நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு.

இம்மூன்று சங்கங்களும் தொடர்ந்து நடைபெறவில்லை; இடையிடையே பல்லாண்டுகள் சங்கம் இருந்ததாகவே தெரியவில்லை. சங்ககாலப் பெரியார்களுள் **அகத்தியர்** முதன்மையானவர். இவரைப்பற்றிப் பல வர

சங்ககாலப் பெரியார்— அகத்தியரும் தொல்காப்பியரும்

லாறுகள் வழங்கி வருகின்றன. இவருக்குக் 'குறுமுனி' என்ற பெயரும் உண்டு. இம்முனிவர், விந்தியமலையை அடக்கிய காரணத்தால், அகத்தியர் எனப் பெயர் பெற்றனர் என்பர். மக்கள் வடநாட்டினின்றும் தென்னாடு புகுதற்கு விந்தியமலையின் அடவிகள் பாதையின்றி அடைத்திருந்தபோதிலும், தமது அறிவாலும் திறமையாலும் அம்மலையைக் கடந்து ஈண்டு வந்தனர் அகத்தியர். தென்னாட்டில் புகுந்த ஆரியருள் இவர் தலைசிறந்தவர். இவர் மனைவியின் பெயர் **உலோபாமுத்திரை**. இவர், வடமொழியிலும் தமிழ்மொழியிலும் மிக வல்லவர். இவரிடத்தில் பன்னிரண்டு சீடர்கள் இலக்கணம் பயின்றனர். இவர் எழுதிய இலக்கண நூலுக்கு 'அகத்தியம்' எனப் பெயர். இவருடைய பிரதம சீடர் **தொல்காப்பியர்** தொல்காப்பியர், ஜமதக்கினி முனிவருடைய சந்ததியார் என்று வரலாறுகள் கூறுகின்றன. தொல்காப்பியர், '**தொல்காப்பியம்**' என்ற இலக்கண நூலின் ஆசிரியர். இந்நூல் எழுத்து சொல், பொருள் என்ற மூன்று பிரிவுகளையுடையது; 1612 சூத்திரங்களைக் கொண்டது.

சங்கங்கள் செய்த இலக்கியத் தொண்டு

இச்சங்கங்கள் தமிழ் இலக்கியத்திற்குச் சிறந்த முறையில் தொண்டு புரிந்து வந்தன; காவியங்களின் குணதோஷங்களை ஆராய்ந்து அரங்கேற்றி வந்தன. அதனால், தமிழ் இலக்கியத்தின் பெருமை காப்பாற்றப் பட்டு வந்தது. இக்கால நூல்கள் யாவும், செய்யுள் நடையிலே இருப்பது கவனிக்கத் தக்கது.

(2) புத்த சமண காலம்

புத்த சமண காலம், கடைச்சங்கத்தின் பிற்காலம் என்று கருதப்படுகிறது. இக்காலத்தில்தான் ஐம்பெருங் காவியங்களாகிய **சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி** என்பவை இயற்றப்பட்டன. இவற்றுடன் ஐந்து சிறு காவியங்களாகிய நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணன் கதை என்பவைகளும் இயற்றப்பட்டன. இப்பத்து காவியங்களும், பௌத்த சமண சமய ஆசிரியர்களால் பாடப்பெற்றவை; இவை சிறந்த கற்பனை அலங்காரங்களுடன் நவரசங்களும் ததும்ப அரிய நீதிகளுடன் விளங்குகின்றன. திவாகரம் பிங்கலம், என்ற நிகண்டுகளும் இக்காலத்தவைகளே. இக்காலத்திய சமணநூல் வல்லார் வடமொழியிலும், அதன் இலக்கணத்திலும் சிறந்த பயிற்சி பெற்றிருந்ததனால், தமிழ் நூல்களில் அதிகமான வடசொற்களைக் கலந்துள்ளனர். சில ஆழ்வார்களும் இக்காலத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்களுடைய பிரபந்தங்களும் இக்காலத்தைச் சேர்ந்தவை.

கி. பி. 600 வரை தமிழில் உரை நடை

கி. பி. 150-ஆம் ஆண்டுக்கு முன்னதாகத்தான் முதன் முதல் தமிழ் இலக்கியத்தில் உரைநடை தோன்றியது. பல காவியங்களுக்கு உரை எழுதிய பேராசிரியர்கள் மட்டும் சிறிதளவு உரைநடையைப் பின்பற்றினர். தனிப்பட்ட உரைநடை நூல்கள் பதினேழாம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் இலக்கியத்தில் இல்லை. பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை, சிலப்பதிகாரம் என்ற நூல்களில்

ஆங்காங்கு உரைநடையும் தழுவப்பட்டிருக்கிறது. முழு தும் உரை நடையிலே இயற்றப்பட்ட நூல்கள் அக் காலத்தில் இல்லாதபடியால், செய்யுள்களினிடையே எழுதப்பட்டிருக்கும் உரைநடைப் பகுதிகளும் ஒருவகைச் செயயுள் என்றே இலக்கண ஆசிரியர்கள் கருதி வந்த னர். ஆகவே, இப்பகுதிகளுககு 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப் பெயரளித்தனர். பெருந் தேவனுர் பாரதத்தில் ஆங்காங்கு இவ்வகை உரைநடைப் பகுதிகள் காணப்படுகின்றன. 'தகடூர் யாத்திரை' என்ற நூல் பொன்முடியார், அரிசிற்கிழார் என்ற இரு புலவர்களாலும் இயற்றப்பட்டது. தகடூர்ச் சிற்றரசனு கிய அதியமான் என்பவன்பேரில் சேரமான் போர் தொடுத்ததைப் பற்றிய வரலாறு இதில் கூறப்பட்டுள் ளது. இந்நூலில் ஆங்காங்கு சிறந்த உரை நடைப் பகுதி கள் காணபபடுகின்றன. தகடூர் என்பது சேலம் ஜில்லா விலுள்ள தருமபுரி என்ற ஊர் எனத் தெரிகின்றது. சிலப்பதிகாரம், இளங்கோவடிகள் என்பவரால் இயற்றப் பெற்றது. இவர் சேரன் செங்குட்டுவனுடைய சகோ தரர். இவர் காலத்தில் இருந்த புலவர் சித்தலைச் சாத்த னர். இந்நூலில் உரைநடைப் பகுதி வெகு குறைவு. இதில் 'உரைபெறு கட்டுரை' என்ற பிரிவில் மட்டும் உரைநடை உண்டு; நடை அழகு வாய்ந்தது; எதுகை மோனைகளுடன் கூடியது. நக்கீரருடைய 'இறையனுரகப் பொருளுரை' இக்காலத்தியதே.

சமண நூலாசிரியர்களுடைய காலத்தில் 'மணிப்ர வாளம்' என்ற இருமொழி நடை பிரபலமாயிற்று. இந் நடையில் வடமொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்துள்ளன. ஸ்ரீ புராணம், கத்ய சிந்தாமணி என்ற நூல்கள் இந்த நடையில் எழுதப் பட்டவை. இவை சமண சமய நூல்கள். கத்திய சிந்தா மணி என்பது திருத்தக்கத் தேவர் இயற்றிய சீவக சிந்தாமணிக்கு முதல் நூல் எனக் கருதப்படுகின்றது.

இரு மொழி நடை

சமண நூல்கள் இயற்றப்பட்ட காலத்தில், சமண பௌத்தமதக் கொள்கைகள் மக்களிடையே செல்வாக்குடன் பரவியிருந்தபடியால், நாட்டில் சைவ வைணவ சமயங்கள் குன்றின. மக்களிடையே மதப்பற்றுத் திரும்பவும் வேரூன்ற வேண்டி, சைவ வைணவப் பெரியார் பலர் தோன்றிச் சமயஸ்தாபனம் செய்தனர். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனர் ஆகிய மூவரும் அநேக தேவாரப் பதிகங்கள் பாடியுள்ளனர். இவை இசைத்தமிழ் நூல்கள். வைணவ சமய குரவர்களான ஆழ்வார்களும் இக்காலத்தில் அநேக திவ்யப்பிரபந்தங்களைப் பாடியருளினர். இவைகள் பின்பு 'நாலாயிரப் பிரபந்தம்' என்று தொகுக்கப்பட்டன. நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கல விருத்தி என்ற நூல்களெல்லாம் இக்காலத்திலேதான் தோன்றின.

(3) சமய மறுமலர்ச்சிக் காலம்

இலக்கிய மறுமலர்ச்சிக் காலந்தான் தமிழ்மொழியின் தலைசிறந்த காலம்; கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூட்டத்தர் ஆகியோர் வாழ்ந்த காலம். கம்பர் இயற்றிய இராமாயணம் ஒரு சிரஞ்சீவி நூல். ஒட்டக்கூத்தர் இராமாயணத்தில் 'உத்தர காண்டம்' இயற்றியுள்ளார். இவர் கோவை, உலா, அந்தாதி என்ற பிரபந்த வகைகளை இயற்றுவதில் வல்லவர். புகழேந்தியின் நளவெண்பா 425 பாக்களையுடையது. 'வீரசோழியம்' என்ற இலக்கணமும் கந்தபுராணமும், பெரிய புராணமும், பட்டினத்துப் பிள்ளையார் பாடல்களும் இக்காலத்தவைகளே.

(4) இலக்கிய மறுமலர்ச்சிக் காலம்

இயற்கை வனப்பையும், மக்களுடைய இயல்பையும், அக்காலத்திய பழக்க வழக்கங்களையும் எடுத்துக் கூறும் சங்ககால நூல்களுக்குப் பின்பு, பல சமய நூல்கள் வெளிவரத் தொடங்கின. கி. பி. பதினோராம் நூற்றாண்டிலிருந்து ஊகமும் மனோபாவமும் நிறைந்து, அணிகள் பலவும் மேவிய நூல்கள் பல வெளிவரத் தொடங்கின. இக்காலத்தில் காவியங்களுக்கு உரையெழுதும்போது மட்டும்

இக்கால நூல்கள்

உரைநடை உபயோகிக்கப்பட்டது. இக்கால வசன நூல்களில் முக்கியமானவை—(1) நக்கீரருடைய இறையனாரகப் பொருளுரைக்கு உரையெழுதிய முசிறி நீலகண்டனார். (2) தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய இளம்பூரணர். (3) தொல்காப்பியத்திற்கு பின்னும் ஒரு உரையெழுதிய கல்லாடர். (4) தொல்காப்பியம், திருக்கோவையார், குறுந்தொகை ஆகிய நூல்களுக்கு உரையெழுதிய பேராசிரியர். (5) தொல்காப்பியம், கலித்தொகை, பத்துப்பாட்டு, சிந்தாமணி என்ற நூல்களுக்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர். (6) திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர். (7) 'வீரசோழியம்' என்ற நூலுக்கு உரையெழுதிய பெருந்தேவனார். (8) சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார். பேராசிரியருடைய நடை, இலக்கணப் பாங்குடன் சுலபமானதாக அமைந்தது. நச்சினார்க்கினியருடைய உரைநடை மிகச் சிறந்தவை; நடையின் அழகிய அமைப்பின் காரணமாக இவருக்கு 'அமுதவாயர்' எனப் பெயர் வழங்கிற்று. பரிமேலழகருடைய நடை சுருக்கமானது, உபயோகமற்ற சொற்களே இல்லாதது.

தமிழ்ச் சங்கங்கள் மறைந்த பின்னர், பல சிற்றரசர்களின் ஆதரவினால், தமிழ் வளர்ச்சியடைந்து வந்தது.

(5) ஆதீன கர்த்தர்களின் காலம்

பின்னர், பல ஆதீனகர்த்தர்களும் தமிழ் மொழியையும் தமிழ் வல்லோரையும் ஆதரித்து வந்தனர். இக்காலத்தில்தான் சேர மன்னர்களாகிய வரதுங்கராம பாண்டியரும் அதிவீரராம பாண்டியரும் கூர்மபுராணம், திருக்கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி, நைடதம் என்ற நூல்களை இயற்றினர். வில்லிபுத்தூரார் பாரதம் பாடினார். அருணகிரிநாதர் திருப்புகழ் அருளினார். பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் இயற்றினார். அருணந்தி சிவாசாரியாரும், உமாபதி சிவாசாரியாரும் சைவசித்தாந்த சாத்திரங்களை வெளியிட்டனர். மயிலேறும் பெருமாள் பிள்ளை, சங்கர நமச்சிவாயப் புலவர், வைத்தியநாத தேசிகர் ஆகியோர் இயற்றிய நூல்களெல்லாம் ஆதீன கர்த்தர்களின் ஆதரவில் எழுதப்பட்டன.

சிவஞான முனிவர் எழுதிய நூல்கள் நவீன காலத்தவை. சிவப்பிரகாச சுவாமிகளுடைய 'பிரபுலிங்க லீலை' கற்பனைக்கு ஊற்று என்று கருதப்படு

(6) நவீன காலம்

கின்றது. குமரகுருபர சுவாமிகள் இயற்றிய மீனாக்ஷியம்மை பிள்ளைத் தமிழ், நீதி நெறி விளக்கம் என்ற நூல்களும், தாயுமானர் பாடல்களும், பிள்ளைப் பெருமாளையங்கார் பாடியருளிய அஷ்டப் பிரபந்தமும், சைவ எல்லப்ப நாவலருடைய அருணசலப் புராணமும், வீரமா முனிவர் இயற்றிய தேம்பாவணியும் இக்காலத்தவை.

ஆதின கர்த்தர் காலத்திலும் நவீன காலத்திலும் உரை நடை

உரையாசிரியர்களுடைய வசன நடைக்குப் பிறகு பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவ மடாலயங்களின் சார்பாக, கண்டன நூல்கள் சில உரைநடையில் வெளியிடப்பட்டன. இடைக்காலத்தில் தத்துவ போதக சுவாமியார் எனப் பெயர் புனைந்த ராபர்ட்டிநொபிலிபஸ் (Robert De Nobilibus) என்ற கிறிஸ்து மதப் பாதிரியார் தமிழ் கற்றுப் பல தமிழ் நூல்களை எழுதினர். மயிலேறும் பெருமாள் பிள்ளை, வைத்தியநாத தேசிகர், சுவாமிநாத தேசிகர், சங்கர நமச்சிவாயப் புலவர் ஆகியோர் இலக்கணத்திற்கு உரை எழுதினர். 'பெஸ்கி' என்ற பாதிரியார் 'வீரமா முனிவர்' என்ற புனைபெயருடன் பல வசன நூல்களை எழுதினர்; அவற்றுள் வேதியரொழுக்கம் என்பன சிறந்தது. இவருடைய தமிழ் நடையில் வட சொற்களின் கலப்புக் குறைவு. ஜீவன் ததும்பும் நடையில் எழுதுவதில் வல்லவர்; நடையோ சோர்வற்றது. சிவஞான முனிவருடைய நடை வன்மையானது; ஏற்ற சொற்களால் அமைந்தது. விசாகப் பெருமாளையரும் சரவணப் பெருமாளையரும் 19–ஆம் நூற்றாண்டில் உரைநடை எழுதுவதில் சிறந்து விளங்கினர். விசாகப் பெருமாளையர் 'பாலபோத இலக்கணம்' என்ற சிறுவர்க்கான நூலையும், 'கல்விப் பயன்' என்ற கட்டுரை ஒன்றனையும எழுதியுள்ளார். சரவணப் பெருமாளையர்

யாப்பிலக்கண நூல் ஒன்றும், அணியைப் பற்றிய நூல் ஒன்றும் எழுதியுள்ளார்.

வித்துவான் தாண்டவராய முதலியார் வில்லிய நல்லூரில் பிறந்தவர். இவர் தொல்காப்பியத்தை நன்கு ஆராய்ந்தவர்; பல மொழிகளை நன்கு கற்றறிந்தவர்; அரசாங்க அலுவலாளராக விருந்தவர். இவர் பஞ்சதந்திரம் கதாமஞ்சரி, என்ற நூல்களை எழுதினர்; பல நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தார். பஞ்ச தந்திரம், ஒரு சிறந்த கற்பனைத் திறனமைவாய்ந்தது. தமிழில் இந்நூல் முதன் முதலாக வீரமார்த்தாண்ட தேவரால் பாடல்களாக இயற்றப்பட்டது. இதைப் பலருக்கும் பயன்படும்படி உரைநடையில் தாண்டவராய முதலியார் எழுதினர். பஞ்ச தந்திரத்தில் பல சன்மார்க்க நெறிகள் மக்களுக்குக் கதைகள் வாயிலாக உணர்த்தப்படுகின்றன; பல சிறு கதைகளின ஊடே நெருங்கிய தொடர்புகொண்ட ஓர் ஐக்கிய பாவம் பரவிச் செல்லுகின்றது; இதிலுள்ள சம்பாஷணைகளில் யுக்தியுடன் கூடிய ஆலோசனைகள் பல உள்ளன; இதில் பழமொழிகளும் விசேஷச் சொற்றொடர்களும் அடிக்கடி உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன; அடிக்கடி நகைச்சுவை தோன்றுகின்றது; நடை இலக்கண வழுவின்றித் தெளிவும் பெருமையும் மிகுந்துள்ளது; தமிழ்ச் சொற்களும வடசொற்களும் பொருத்தமாக அமைந்துள்ளன; நடை சிறிது சிறிதாகக் கடினத் தனமை யடைகின்றது. இந்நூலின் ஆசிரியரைத் தற்காலத் தமிழ் நடையின் தந்தை என்னலாம். யாவருக்கும் இன்பம் அளிக்கக்கூடிய சிரஞ்சீவி நூல்களில் பஞ்ச தந்திரமும் ஒன்று.

பஞ்ச தந்திரம்

வசன நடையில் சிறந்த புலமை வாய்ந்த ஆறுமுக நாவலர், யாழ்ப்பாணத்தில் நல்லூர் என்றவிடத்தில் 1823–ஆம் ஆண்டு பிறந்தார்; ஆங்கிலம், தமிழ், கணக்கு எனபனவற்றைத் திறமையுடன் கற்ருர்; திரு. பெர்ஸிவல் என்பவருடைய தூண்டுதலின் பேரில் கிறிஸ்துவர்களுடைய வேதமாகிய 'பைபிள்' (Bible) என்ற நூலைத் தமிழ் வசன

ஆறுமுக நாவலரும் அவருடைய நூல்களும்

நடையில் மொழி பெயர்த்தார்; இளமையிலேயே சைவ சித்தாந்த நூல்களில் திறமையடைந்து, திருவாவடு துறைத் தம்பிரான் அவர்களால் 'நாவலர்' என்ற பட்டப்பெயர் சூட்டப் பெற்றூர்; சிதம்பரத்திலும், யாழ்ப்பாணத்திலுள்ள 'வண்ணூர் பண்ணே' என்றவிடத்திலும் இரண்டு பாடசாலைகள் நிறுவினூர்; சென்னையிலும் பல விரிவுரைகள் ஆற்றினூர்; ஓர் அச்சுயந்திரசாலை வைத்துப் பல நூல்களையெழுதி அச்சேற்றினூர்.

இராமலிங்க சுவாமிகளும் இக்காலத்தவரே. இவர் எழுதிய மனுமுறைகண்டவாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூல்கள் மிகச் சிறந்தவை. மழவை மகாலிங்க அய்யர் ஒரு சிறந்த ஆரம்ப இலக்கண நூல் இயற்றியுள்ளார். இப்பொழுது அச்சுயந்திரத்தின் உதவியால் எண்ணிறந்த வசன நூல்கள் வெளி வருகின்றன. தாமோதரம் பிள்ளை, பேராசிரியர் சுந்தரம்

வேறுபல வசன நூல் ஆசிரியர்கள்

பிள்ளை, சபாபதி நாவலர், சூரியநாராயண சாஸ்திரியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஆகியோர் பல உரைநடை நூல்களை எழுதியுள்ளனர். இவர்களுள் மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்களே தமிழ் நாட்டிற்குப் புதிய இலக்கியமாகிய 'நவீனம்' என்ற நூற்பிரிவை இயற்றினூர். இவர் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நவீனமே தமிழ்நாட்டில் முதன்முதலில் தோன்றியதாகும் இதன் பின்னர், பல நவீனங்கள் தோன்றிய போதிலும், அவற்றுள் சுவை குன்றூத சிறப்பு வாய்ந்தவை இராஜமையர் எழுதிய 'கமலாம்பாள் சரித்திரமும்' மாதவையா எழுதிய 'பத்மாவதி'யுமே. பின்னர், பல நாட்டு நவீனங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. அவற்றுள் வங்காளியிலிருந்து மஹேசகுமார சர்மா மொழிபெயர்த்த பங்கிம் சந்திரருடைய 'வந்தே மாதரம்' என்ற சரித்திர சம்பந்தமான நவீனம் பெருமை வாய்ந்தது.

சமீப காலத்தில் தமிழ்த்தொண்டு புரிந்த பெரியார்களில் கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார், மகா

மகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் ஆகிய இருவரும் முககியமானவர்கள். பிள்ளைப் பாடல்களையும் கவிதைகளையும் திரு. தேசிக விநாயகம் பிள்ளை, வெ. இராமலிங்கம் பிள்ளை, யோகி சுத்தானந்த பாரதியார் ஆகிய பெரியோர்கள் இயற்றி வருகின்றனர். பாரதிதாசனும் கம்ப தாசனும் இத்தன்மையவர்களே. நகைச் சுவையுடன் வாழ்க்கைக் காட்சிகளைச் சித்திரிக்கின்றவர்களும், எளிய நடையில் பல அறிவியற் கட்டுரைகளை எழுதி வருபவர்களும் பலர் தோனறித் தமிழ் வசன நடையைச் செழிப்புறச் செய்திருக்கினறனர். நாகரிக வளர்ச்சியினுலும், சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருபபதாலும தமிழின் செழுமையைப் பலரும் அநுபவிக்கும் வகையில் எளிய நடையில் சொல்நயம் பொருள்நயம் குன்ருது எழுதக்கூடிய எழுத்தாளர்கள் பலர் தோன்றியுள்ளனர். தமிழில் பல பத்திரிகைகளும், தினசரித்தாள்களும் தோன்றித் தமிழர்களுக்கு நல் விருந்து அளித்து வருகின்றன. தமிழ் மொழி மேன் மேலும் புது வன்மை பெற்று, பல துறைகளில் பயன் பட்டு, எல்லா மொழிகளுக்கும் திலகம்போல் விளங்கும் என்பதற்கு அறிகுறியாகப் பல சின்னங்கள் தோன்றி யிருக்கின்றன.

சமீப கால நூல் வல்லோர்

தமிழ் இலக்கிய வளர்ச்சியை ஆராயுங்கால், சமீப காலம வரையில் உரைநடைக் குறைவுக்குக் காரணங்கள் புலனுகும். 'பண்டைக் காலத்தில் எல்லா நூல்களும் செய்யுள் நடையிலே எழுதப்பட்டு வந்தன. பிற பாஷை இலக்கியங்களிலும் வசன நடைக்கு முன் செய்யுள் நடையே தோன்றி யுள்ளது அறியற்பாலது. ஆகவே, இவ்வுண்மை பலமொழிகளுக்கும் பொதுவானது எனத் தெரிகின்றது. பாலர் முதல் விருத்தர் ஈருக எல்லோருக்கும் இயல்பாகவே சந்த உணர்ச்சி பரவியிருப்பதால், செய்யுள் நடையே பெரிதும் போற்றப்பட்டு வந்திருக்கலாம். மேலும், மொழிதோன்றிப் பலகாலம் சென்ற பிறகே எழுத்துக்கள் ஏற்பட்டன. பல சாத்திரங்

பண்டைக்காலத்தில் உரை நடைக் குறைவுக்குக் காரணங்கள்

களைச் செவ்வையாகக் கற்கவும், கற்றதை நிலைநிறுத்தவும் தேவையான மனப்பாடம் செய்வதற்குச் செய்யுள் நடையே ஏற்றது. பின்னும், அக்காலத்தில் காகிதமும் அச்சியந்திரமும் தோன்றவில்லை. 'சுவடிகள்' என்று சொல்லப்படும் பனையோலை ஏடுகளில் எழுத்தாணியைக் கொண்டு நூல்கள் எழுதப்பட்டு வந்தன. பனையோலையில் விரிவாக எழுதுவது சிரமமாகையால், சுருக்கமாக எழுதுவதற்கு ஏற்ற செய்யுள் நடையே வழக்கமாக உபயோகப்படுத்தப்பட்டு வந்தது. மேலும், தொன்றுதொட்டு நூல்களை ஆசிரியர் முன்னிலையில் பாடங்கேட்கும் முறை அக்கால வழக்கு. ஆகையால், சுருக்கமாக ஏடுகளின் மூலமாகவும், வாய்மொழியாகவும் செய்யுள் வடிவில் அமைந்த பொருள்களைக் கற்றுவந்தனர். ஆகையால், உரைநடை மிகக்குறைவாக இருந்தது.

உரை நடையின் சிறப்பு

சாமானிய மக்களிடையே கல்வி பரவவேண்டுமானால், அதற்கு உரைநடையே தகுந்த கருவி. மேலும், ஜனநாயகக் கொள்கை பரவிவரும் இந்நாட்களில், ஒவ்வொருவரும் சிறந்த வகையில் சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டுமானால், அவர்களுக்கு உரைநடை நூல்களே உதவக்கூடியவை. ஆகவே, இக்காலத்தில் பல்வேறு துறைகளிலும் நாட்டு மக்களின் அறிவு பெருகுதற்கேற்ற முறையில் தமிழில் பல உரைநடை நூல்கள் பல்கிப் பெருகிப் பெருந்தொண்டாற்றி வருகின்றன.

சில உரை நடைகள்

இதுகாறும் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் வரலாற்றை ஆராய்ந்தோம். இப்பொழுது தமிழ் வசன நடையில், எவ்வாறு ஆரம்பத்திலிருந்து இன்றுவரை மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்று கவனித்தல் அவசியமாகும். நச்சினார்க்கினியர் முதல் திரு. வேதநாயகம் பிள்ளை ஈருகக் கையாண்டு வந்த வசனநடைகளை ஈண்டு கொடுக்கப்பட்டுள்ளன.

1. **நச்சினார்க்கினியர்:** செந்தமிழ் செவ்விய தமிழ். முந்துநூல், அகத்தியமும், மாபுராணமும் பூதபுராணமும்

இசைநுணுக்கமும். அவற்றுட்கூறிய இலக்கணங்களா
வன. எழுத்துச் சொற்பொருள் யாப்பும் சந்தமும் வழக்
கியலும் அரசியலும் அமைச்சியலும் பார்ப்பனவியலும்
சோதிடமுங் காந்தருவமும் கூத்தும் பிறவுமாம். புல
மென்ற திலக்கணங்களை. பனுவலென்ற தவ்விலக்கணங்
களெல்லா மகப்படச் செய்கின்றதோர் குறி. அவை தம்
முட் கூறுகின்ற வுரைச் சூத்திரங்களானு மரபியலானு
முணர்க. பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம்
ஆண்டு வீற்றிருந்தானாதலினவனு மவனவையிலுள்
ளோரு மறிவுமிக்கிருத்தலினவர்கள் கேட்டிருப்ப அதங்
கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கு விடை கூறினார்.
அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி நீர் தொல்
காப்பியன் செய்த நூலைக் கேளற்கவென்று கூறுதலா
னுந் தொல்காப்பியனாரும் பல்காலுஞ் சென்று யான்
செய்த நூலை நீர் கேட்டல் வேண்டுமென்று கூறுதலானு
மிவ்விருவரும் வெகுளாம லிந்நூற்குக் குற்றங்கூறி விடுவ
லெனக் கருதி யவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடை
கூறுதலினரிறபவென்றார். அவர் கேளன்மி னென்றற்
குக் காரணமென்னை யெனின் தேவரெல்லாருங் கூடி
யாஞ்சேர விருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசை
யுயர்ந்ததற்கு அகத்தியனாரே யாண்டிருத்தற் குரியரென்
றவரை வேண்டிக்கொள்ள வவருந் தெனறிசைக்கட்
போதுகின்றவர், கங்கையாருழைச் சென்று காவிரியாரை
வாங்கிக்கொண்டு பின்னர் யமதக்கினியாருழைச சென்று
அவர் மகனார் திரணதூமாக்கினியாலரை வாங்கிக்கொண்டு
புலத்தியனாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார்
உலோபாமுத்திரையாரை யவர் கொடுப்ப நீரேற்றிரீஇப்
பெயர்ந்து துவராவதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடி
யண்ணல் வழிக்கண்ணரசர் பதினெண்மரையும் பதி
னெண்கோடி வேளிருள்ளிட்டாரையு மருவாளரையுங்
கொண்டுபோந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதி
யிலின் கணிருந் திராவணனைக் கந்தருவத்தாற்பிணித்
திராக்கதரை யாண்டியங்காமை விலக்கித் திரணதூமாக்
கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி நீர் சென்று
குமரியாரைக்கொண்டு வருகவெனக்கூற, வவருமெம்
பெருமாட்டியை யெங்ஙனங்கொண்டு வருவலென்றார்க்கு

முன்னுகைப் பின்னுக நாற்கோல் நீளமகல நின்றுகொண்டு வருகவென்றூர்க் கவரு மங்ஙனங்கொண்டு போயவழித் தொல்காப்பியனர் கட்டளையிறந்து சென்றோர் வெதிர்ங் கோலை முறித்து நீட்டவது பற்றியேறினூது குற்ற மென்று அகத்தியனர் குமரியாரையும் தொல்காப்பிய ஞரையுஞ் சுவர்க்கம் புகாப்பிரெனச் சபித்தார். யாங்க ளொரு குற்றமுஞ் செய்யாதிருக்க வெங்களைச் சபித் தமையானெம் பெருமானுஞ் சுவர்க்கம் புகாப்பிரென வகத்தியனுரையுஞ் சபித்தார் அதனுனவர் வெகுண்டா ராதலினவன் செய்த நூலைக் கேளற்க வென்றூர்.

2. **அடியார்க்கு நல்லார்;** இனி, இதன் செய்யுள் காதையென்று வழங்குதலிற் கதையை யுடையது காதை யாமாதலின், வெண்பா, வெண்கலிப்பா வென்னும் இவற் ரூேடு சிறுபான்மையான் ஒருசார் கொச்சகக்கலி மயங்கி வருதலானும், காண்டமெனக் குறிபெறுதலானும் இத னைக் கதையென்றல் வலியுடைத்தென்பார்க்கு அற் றன்று; கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக் கூறுவது; என்னை? "கதையெனக் கருதல்செய்யான் மெய்யெனத் தானுங்கொண்டான்" என்றமையானும், வழக்கினுள்ளும் இஃது ஒரு கதையென்பவாகலானும், "நாடகக் காப்பியம்" என்றலானும் கதையென்பதல்லது. இனி, அது நல்ல புலவராற் பொருளொடு புணராப் பொய்ம் மொழியால் நாட்டப்பட்டு வருவதாகலின், இஃது அவ்வாறன்றி **யோனி** யென்னும் நாடகவுறுப்பும் நாடக முந்தழுவி, உள்ளோன் றலைவனுக உள்ளதோர் பொருள் மேற்சித்தரிக்கப்படாது பட்டாங்கு கிளந்து பலவினப் பாட்டான் வருதலின், ஈது அன்னதன்றென்பார்க்குக் காப்பியமென்றலுமாம்.

3. **பரிமேலழகர்:** இந்திரன் முதலிய இமையவர் பதங் களும் அந்தமி லின்பத தமிழில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள் நான்கு; அவை—அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள் வீடென் பது சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறபபடுவதல்லது,

இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன் ஏனை மூன்றுமேயாம். அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அஃது—ஒழுக்கம் வழக்குத் தண்டமென மூவகைப்படும்.

4. **நக்கீரர்:** அக்காலத்துப் பாண்டிநாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றது. செல்லப் பசி கடுகுதலும், அரசன் சிட்டரையெல்லாங்கூவி, "வம்மின் யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னையுள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து எல்லோரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்தபின்றை அரசன், இனி நாடு நாடாயிற்றாகலின், நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று, "என்னை! எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேமெனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயின் அழனிறக்கடவுள் சிந்திப்பான்: "என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அது தானும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

5. **வித்துவான் தாண்டவராய முதலியார்:** ஒரு காட்டில் சதுரதந்தன் என்னும் அரச யானை பல யானைகளோடு கூடிக்கொண்டிருக்கும்போது அங்கே மழை பெய்யாமல் ஆறு, ஏரி, குளம், குட்டை, கசங்களெல்லாம் வற்றிப் போக அப்போது யானைகளெல்லாம் துக்கித்துச் சதுரதந்தனைப் பார்த்து, "சுவாமி! நாங்களெல்லாந் தாகத்தின் பொருட்டுச் செத்தாற்போலானோம்; சிலர் தண்

ணீர்க்காகச் செத்தார்களாகையால் மிகவும் தண்ணீருள்ளவிடம் தேடிப்போயிருப்போமானால் எல்லாரும் சுகமடைவோம் என, இவற்றின் பேச்சைக் கேட்டுத் தன் மனத்தில் யோசித்து, 'இதற்கு ஐந்துநாளைப் பயணத்திலொரு பெரிய மடு பாதாள கங்கையினால் நிறைந்திருக்கின்றது. அங்கே போனால் எல்லார்க்கும் மிகவும் தண்ணீர் கிடைக்கும்' என்றிப்படி உறுதி செய்துகொண்டு அப்படியே அங்கே போய்த் தெளிந்த நீரைக் கண்டு அந்தி வரைக்கும் சலக்கிரீடை செய்துகொண்டிருந்து கரையில் வந்திருந்தன.

6. **இராமலிங்க சுவாமிகள் :** இன்றைக்கு என் புத்திரன் செய்த கொடுங் கொலையாகிய பாதகத்துக்குப் பரிகாரஞ் செய்து, இலேசாகவிட்டு, நானே மற்றொருவன் இதைப் பார்க்கினுஞ் சிறிய கொலையொன்று செய்யக்கண்டு, அவனைக் கொலை செய்விப்பேனானால், 'தருமமறியாத இவ்வரசன் தனக்கொன்று பிறர்க்கொன்று செய்கிறான்' என்று பார்த்தவர்களெல்லாம் பழித்துப் பேசுவார்களே அல்லது 'தன் வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாது விடாது' என்பதுபோல என் புத்திரன் செய்த கொலை யென்று புத்திராபேக்ஷையால் அடக்கிக் கொள்வேனானால்; அதுபற்றி வரும் பழி பாவங்கள் என்னை அடையாமலிருக்குமோ? ஆதலால் இப்பசுவானது அருமையான இளங்கன்றை இழந்து வருந்துகின்றதைத் தவிர்க்க வலியில்லாதவனாகிய நானும், இந்தப் பசுவைப் போல நெடுநாளாக வருந்தி அருமையாகப் பெற்ற என் புத்திரனைப் பழிக்குப் பழியாகக் கொன்று வருத்தங் கொள்வதே தகுதி.

7. **ஆறுமுக நாவலர் :** அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராய்த் திருவவதாரஞ்செய்து மற்ற நாயன்மாரைத் துதித்துத் திருத்தொண்டத்தொகை பாடியருளினவர், சிவபெருமானுடைய பிரதிவிம்பமாய்த் தோன்றினவரும், பிரம விட்டுணுக்களாலும் அணுகலாற்றாத ஆலகால விஷத்தைத் தமது உள்ளங்கையில் கொண்டருமாகிய ஆலால சுந்தரரே. அவருக்குத் திருத்தொண்டத்தொகை பாடும்பொருட்டு அடியெடுத்துக்

கொடுத்தருளினவர் வான்மீகநாதராகிய சிவபெருமானே. அச்சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானால் அனுப்பியருளப்பட்ட வெள்ளையானை மேற்கொண்டு பிரம விட்டுணுக்கள் முதலாயினோர் சேவிபபத் திருக்கயிலாச மலையை அடையும்பொழுது, அவரைத் தூரத்தே வணங்கி அவருடைய சரித்திரத்தையும் அவருடைய திருத்தொண்டத் தொகையிலே துதிக்கப்பட்ட மற்றை நாயன்மார்களுடைய சரித்திரத்தையும் இருடிகளுக்குச் சொல்லியருளினவர், சிவபெருமான் சிதம்பரத்திலே கனகசபையிலே எல்லாருக்கும் ஆனந்த நிருத்தந் தரிசிப்பித்தற்கு மூலகாரணராயுள்ள வியாக்கிரபாத மகா முனிவருடைய திருக்குமாரரும், சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற்கடலை யுண்டவரும், கிருஷ்ணருக்குச் சிவதீக்ஷை செய்து சிவபூசை யெழுந்தருளப் பண்ணிக் கொடுத்த சைவாசாரியருமாகிய உபமன்னியு மகாமுனிவரே.

8. **வேதநாயகம் பிள்ளை:** எங்கள் வீடுகளுக்குப் பின்புறத்தில் எண்ணிக்கையில்லாத பல விருஷங்கள் நிறைந்த சிங்காரத் தோட்டமும், பூஞ்சோலைகளும், தாமரைத் தடாகங்களும் இருந்தன. நாங்கள் படிக்கிற நேரம் போக மறற நேரங்களில் இந்திரனுடைய கற்பகச் சோலைக்குச் சமமான அந்தச் சிங்காரத் தோட்டத்தில் விளையாடுகிறது வழக்கம். 'அவப்பொழுதிலும் தவப் பொழுது' என்பதுபோல் விளையாடுகிற நேரத்தையும் ஞானம்பாள் தர்ம விஷயங்களில் உபயோகப்படுத்தி வருவாள் எப்படியெனில், சிங்காரத் தோட்டத்தில் பழுத்திருக்கிற மாங்கனிகள், தேங்கனிகள், வாழைக்கனிகள், பலாக்கனிகள், விளாங்கனிகள் முதலியவைகளைப்பறித்து ஏழைகளுக்குக் கொடுத்து வருவாள். அந்தத் தோட்டத்தில் இருக்கிற பக்ஷிகளை, ஒருவரும் பிடிக்காமலும், உபத்திரவஞ் செய்யாமலும், ஞானம்பாள் பாதுகாத்து வந்தபடியால், அவைகள் மேன்மேலும் பெருகி, அவளைக் கண்டவுடனே ஆடிப்பாடிக் குதித்து விளையாடி, மகோற்சவம் கொண்டாடும். சாதுக்களைக் கண்டால் சந்தோஷப்படாதவர் யார்?

2 தமிழ் இலக்கணச் சுருக்கம்

(i) **எழுத்துக்களும் அவற்றின் வகையும்:** ஒருவர் உள்ளக் கருத்தைப் பிறர் அறியும வகையில் வெளியிடுதலே மொழியின் உபயோகம் ஆகும். கருத்துக்களை நாம் முழு வாக்கியங்கள் வாயிலாக வெளியிடுகிறோம். (உ-ம்) இராமன் கோயிலுக்குச் சென்றான். இது ஒரு வாக்கியம். இது ஒரு முற்றுப் பெற்ற கருத்தைத் தெரிவிக்கின்றது; மூன்று சொற்களாலானது. ஒவ்வொரு வார்த்தையை உச்சரிக்கும பொழுதும் அநேக ஒலிகள் உண்டாகின்றன. சொற்களுக்கு இந்த ஒலிகளே முதற் காரணம். சொல் லுக்கு முதற் காரணமாக நின்று ஒலிக்கும் ஒலியே எழுத்து எனப்படும்.

அவ்வெழுத்து முதலெழுத்து, சார்பெழுத்து என இரு வகைப்படும். இவற்றுள் முதலெழுத்து உயி ரெழுத்து எனவும், மெய்யெழுத்து எனவும் இரு பிரிவுகளை யுடையதாம்.

> உயிரும் உடம்பும் ஆம் முப்பதும் முதலே - நன். சூ. 59.
>
> அம் முதல் ஈராறு ஆவி கம் முதல்
>
> மெய் மூவாறென விளம்பினர் புலவர் - நன். சூ. 63

அகரமுதல் ஔகார விறுதியாகவுள்ள பன்னிரண் டும் உயிரெழுத்துக்களாம். க் முதல் ன் இறுதியாகவுள்ள பதினெட்டும் மெய்யெழுத்துக்களாம். அவற்றுள்.

> அ, இ, உ, எ, ஒ, க்குறிலைந்தே - நன். சூ. 64
>
> ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நெடில் - நன். சூ. 65
>
> அ, இ, உ ம்முதல் தனிவரிற் சுட்டே - நன். சூ. 66

அ, இ, உ, எ, ஒ என்பவை குறுகிய ஓசை யுடையன வாதலால், குறில் என்றும், குற்றெழுத்துக்கள் என்றும் கூறப்படும். ஆ, ஈ, ஊ, ஏ ஐ ஓ, ஔ என்பவை நீண்ட ஓசையுடையனவாதலால் நெடில் என்றும், நெட்டெழுத் துக்கள் என்றும் கூறப்படும். அ, இ, உ, என்ற மூன்று

எழுத்துக்களும் பொருள்களைச் சுட்டிக்காட்டும் பொழுது சுட்டெழுத்துக்களாம். (உ - ம்) அக்கடவுள், இப்பையன் உப்பக்கம் (பின்புறம்). 'அ' தூரத்திலுள்ள பொருளை யும். 'இ' சமீபத்திலுள்ள பொருளையும், 'உ' இடை, பின், மேல் உள்ள பொருளையும் குறிக்கும்.

எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ யிரு வழியும் வினவாகும்மே —நன். சூ. 67

எ, யா, என்ற எழுத்துக்கள் சொல்லுக்கு முதலி லும், ஆ, ஓ கடைசியிலும், ஏ முதலிலும் கடைசியிலும் நின்று வினைப்பொருளைத் தரும்போது வினவெழுத்துக் களாம் (உ - ம்) எது? இராமனா? வேலனோ? ஏது? கந்தனே? ஏகார வினா ஒரு சொல்லின் கடைசியில் வரு வது. இப்பொழுது பேச்சு வழக்கில் இல்லை; செய்யுள் வழக்கில் மாத்திரம் இருக்கிறது.

சார்பெழுத்துக்கள், உயிர்மெய் முதலாகப் பத்தாம்.

உயிர்மெய் ஆய்தம் உயிரளபு ஒற்றளபு
அஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும் —நன். சூ. 60

பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், பதினெட்டு மெய்யெழுத்துக்களின்மேல் தனித்தனி ஊர்ந்து வரலால் உயிர் மெய் எழுத்துக்கள் இருநூற்றுப்பதினாறும். $(12 \times 18 = 216)$ மெய்யெழுத்துக்களில்.

வல்லினம் க் ச் ட் த் ப் ற் என ஆறு;
மெல்லினம் ங் ஞ் ண் ந் ம் ன் என ஆறு;
இடையினம் ய் ர் ல் வ் ழ் ள் என ஆறு;

வன்மையான (கடின) ஓசையுடையவை வல்லினமென் றும், மென்மையான ஓசையுடையவை மெல்லினமென்றும்' இரண்டுமின்றி நடுத்தரமான ஓசையுடையவை இடை யினம் என்றும் சொல்லப்பெறும்.

(ii) **சொல்:** **பெயர், வினை, இடை, உரி** எனச் சொற்கள் நான்கு வகைப்படும்.

1. பெயர்ச்சொற்கள் பொருள், இடம், காலம், சினை (அவயவம்), குணம், தொழில் ஆதியவற்றைக் குறிக்கும்போது அவ்வப்பெயர்களாம்.

(உ-ம்)	முருகன்	...	பொருட்பெயர்
	மதுரை	...	இடப்பெயர்
	வருஷம்	...	காலப் பெயர்
	கண்	...	சினைப்பெயர்
	நன்மை	...	குணப்பெயர்
	படித்தல்	...	தொழிற் பெயர்

முற்கூறிய பெயர்கள் ஏதேனும் ஒரு காரணம் பற்றி வழங்குவனவாயின் காரணப் பெயர்கள் எனவும், யாதொரு காரணமும் புலப்படாமல் முன்னோர் இட்ட பெயரையே கொண்டு வழங்குவன ஆயின் இடுகுறிப் பெயர்கள் எனவும் சொல்லப்படும்.

(உ-ம்)	பறவை, நாற்காலி	...	காரணப் பெயர்
	மரம், கல்	...	இடுகுறிப் பெயர்

2. தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல்லாம். தொழில் முற்றுப் பெற்றதாய் எழுவாயைத் தெரிவிக்கக் கூடிய சொல் வினை முற்றாம். (உ-ம்) அரசன் கோயிலைக் கட்டினான்.

வினை முற்றில் பலவகை உள.

(1)	உடன்பாட்டு வினை	எதிர்மறை வினை
	(உ-ம்) உண்டான்	உண்டிலன்
(2)	தன் வினை	பிறவினை
	(உ-ம்) படித்தான்	படிப்பித்தான்
(3)	செய்வினை	செயப்பாட்டு வினை
	(உ-ம்) புகழ்ந்தான்	புகழப்பட்டான்
(4)	செயப்படுபொருள் குன்றாவினை	செயப்படுபொருள் குன்றியவினை
	(உ-ம்) படிக்கிறான்	ஓடுகிறான்

தொழில் முற்றுப்பெறுது குறைந்து நிற்கும் சொல் எச்சம் எனப்படும். அது பெயரைக்கொண்டு முடிவ தாயின் பெயரெச்சம் என்றும், வினையைக் கொண்டு முடிவதாயின் வினையெச்சம் என்றும் கூறப்படும். (உ-ம்) படித்த பையன், படித்துத் தேர்ந்தான்.

3. திணை - பகுப்பு : நன்மை தீமைகளைப் பகுத் துணரும் தன்மை வாய்ந்தவற்றை உயர்திணை என்றும், பகுத்தறிவில்லாத உயிருள்ளவற்றையும, உயிரில்லாத வற்றையும் அஃறிணை என்றும் கூறுவர்.

(உ-ம்)	உயர்திணை	...	கோவிந்தன்
	அஃறிணை	...	அல் திணை—மாடு, மரம், கல்

4. பால் - பிரிவு (Gender) : பால் ஐந்து வகை யினதாம்.

(உ-ம்)	ஆண்பால்	...	இராமன்
	பெண்பால்	...	சீதை
	பலர்பால்	...	மாணவர்கள்
	ஒன்றன்பால்	...	மரம்
	பலவின்பால்	...	மரங்கள்

முதல் மூன்று பால்களும் உயர்திணை ; பின் இரண்டு பால்களும் அஃறிணை.

5. எண் - Number : எண் என்பது பொருளின் அளவாகும் ; அது இரு வகைப்படும்.

(1) ஒன்றைக் குறிப்பது ஒருமை. (உ-ம்) புத்தகம், மனிதன், அவன்.

(2) ஒன்றுக்கு மேற்பட்டதைக் குறிப்பது பன்மை. (உ-ம்) புத்தகங்கள், அவர்கள், மனிதர்கள்.

ஆண், பெண், ஒன்றன் பால்கள் ஒருமையாம் ; பலர் பால், பலவின்பால்கள் பன்மையாம்.

6. இடம் – Person: இடம் என்றல் ஸ்தானம்; அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

தன்மை (I Person)—யான், நான், யாம், நாம், நாங்கள்

முன்னிலை (II Person)—நீ, நீர், நீங்கள்

படர்க்கை (III Person)—அவன், அவள், அவர், அது அவை.

தன்மை, முன்னிலை யிடங்களில் ஒருமை, பன்மை மட்டும் உண்டு; படர்க்கையாயின் திணை, பால் யாவும் உண்டு.

7. வேற்றுமை - Case: வேற்றுமை எட்டாம். சொற்களின் பொருளை வேறுபடுத்தும் உருபுகளுக்கு வேற்றுமையுருபுகள் என்று பெயர்.

முதல் வேற்றுமைக்குத் தனியே உருபு இல்லை. இயல்பான பெயர்ச் சொல்லே முதல் வேற்றுமையாம். இது எழுவாயாக வரும்; ஆதலின் இந்த எழுவாய் வேற்றுமை (Nominative Case) என்பர்.

இரண்டாவதன் உருபு ஐ; இது செயப்படு பொருளாக வரும் (Objective Case).

மூன்றாவதன் உருபு ஆல், ஓடு, உடன் முதலியனவாம். இது, கருவி முதலான பொருள்களில் வரும் (Instrumental Case).

நான்காவதன் உருபு கு. இது கொடை முதலான பொருள்களில் வரும் (Dative Case).

ஐந்தாவதன் உருபு இன், இல், இருந்து என்பன. இது நீங்கல், ஒப்பு, எல்லை ஏது என்ற பொருள்களில் வரும் (Ablative Case).

ஆறாவதன் உருபு அது உடைய என்பன. இது உடைமைப் பொருளில் வரும் (Possessive Case).

ஏழாவதன் உருபு (Locative Case) இல், கண், இடம் முதலியனவாம். இது இடப் பொருளை உணர்த்தும்.

எட்டாம் வேற்றுமைக்குத் தனியே உருபு இல்லை (Vocative Case). பெயர்ச் சொல்லின் முடிவில் கெடுதல், திரிதல் முதலியவைகளால் விளிப் பொருளை உணர்த்தும். (விளி = அழைத்தல்).

(உ-ம்) 1. இராமன் வந்தான்
2. கண்ணன் இராமனைக் கண்டான்
3. இராமனால் பாடம் படிக்கப்பட்டது
4. இராமனுக்குப் பணம் கொடு
5. இராமனிடத்திலிருந்து இவன் வருகிறான்
6. இராமனுடைய வீடு இது
7. இராமனிடத்தில் புத்தகம் இருக்கிறது
8. இராமா! வா!

8. காலம்—Tense: ஒரு தொழில் தொடங்கி முற்றுப் பெற்றதை இறந்தகால மென்றும், முற்றுப் பெறாது நிகழ்ந்துகொண்டிருப்பதை நிகழ்காலமென்றும் தொடங்காமலே இருப்பதை எதிர்காலம் என்றும் கூறுவர்.

இறந்த காலம் - Past Tense - படித்தான்

நிகழ் காலம் - Present Tense - படிக்கிறான்

எதிர் காலம் - Future Tense - படிப்பான்

வினைகளுக்குக் காலம் உண்டு; வேற்றுமை இல்லை. பெயர்களுக்கு வேற்றுமை உண்டு; காலம் இல்லை.

(1) தன்மை வினைமுற்று:

	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்.
ஒருமை:	நடந்தேன்	நடக்கிறேன்	நடப்பேன்.
பன்மை:	நடந்தோம்	நடக்கிறோம்	நடப்போம்.

(2) முன்னிலை வினைமுற்று:

ஒருமை:	நடந்தாய்	நடக்கிறாய்	நடப்பாய்.
பன்மை:	நடந்தீர்	நடக்கிறீர்	நடப்பீர்.

(3) படர்க்கை வினைமுற்று :

ஆண்பால் :	நடந்தான்	நடக்கிறான்	நடப்பான்.
பெண்பால் :	நடந்தாள்	நடக்கிறாள்	நடப்பாள்.
பலர்பால் :	நடந்தார்	நடக்கிறார்	நடப்பார்.
ஒன்றன்பால் :	நடந்தது	நடக்கின்றது	நடப்பது.
பலவின்பால் :	நடந்தன	நடக்கின்றன	நடப்பன.

9. **ஆகு பெயர் :** ஒரு பொருளின் பெயர் அதற்குத் தொடர்புடைய மற்றொன்றிற்கு ஆகி வருமானால், அது ஆகு பெயர் ஆம்.

(உ-ம்) வண்ணான் **வெள்ளை** கொணர்ந்தான் என்று கூறும் போது வெள்ளை என்னும் நிறத்தைக் குறிக்கும் சொல் தனக்குத் தொடர்புடைய ஆடை என்னும் பொருளை உணர்த்திற்று. வெள்ளை என்பது பண்பு (குணம்); ஆதலின் இதனைக் குணம் பற்றி வந்த ஆகுபெயர் என்பர்.

தாமரை முகம்: தாமரை என்பது தண்டு, இலை, பூ, காய் முதலிய எல்லாவற்றுடனும் சேர்ந்த ஒரு பொருளைக் குறிக்கு மாயினும், இங்கு அவற்றையெல்லாம் உணர்த்தாமல் மலரையே உணர்த்திற்று. ஆகவே, இதனை முதலாகு பெயர் அல்லது பொருளாகு பெயர் என்பர். (The whole for the part).

வெற்றிலை நட்டான்; வெற்றிலை என்பது தனி இலையைக் குறிப்பது. அது இங்கு நட்டான் என்னும் சொல் குறிப்பால் தனக்குத் தொடர்புடைய கொடியை யுணர்த்திற்று, (The part for the whole.)

10. **திசைச் சொல் - வட சொல் :** மக்கள் தம் கருத்தைப் பிறருக்கு அறிவிக்கவேண்டி எழுந்த பல்வேறு ஒலி வடிவங்களே சொற்களெனப்பட்டுப் பெருகி, இலக்கண வரம்புகளுடன் பாஷை என வழங்கற்கு முதற்காரண மாயின என்பது அறிஞர் கருத்து. காலப் போக்கில் மக்கள் வாழ்க்கையில் பற்பல மாறுதல்களும் மேற்கொள் களும் தோன்றுவது போலவே, பாஷைகளிலும் பிற பாஷைச் சொற்கள் கலந்து விடுவது இயற்கை. ஆகவே, அவ்வப்போது அவற்றிற்கேற்ற இலக்கணங்களை இயற்றிச் செப்பனிடுவதே ஒரு மொழியின் வளர்ச்சிக்கு அறிகுறியாகும்.

தொன்றுதொட்டு வழக்கிவரும் தமிழ்ப் பாஷையி லும் முற்கூறியவாறு பலவகையான பிறபாஷைச் சொற் கள் கலந்து விட்டன. அவற்றுள், பெரும்பாலன வட சொற்களெனப்படும் சம்ஸ்கிருத பதங்கள். ஆகவே, சம்ஸ்கிருத பாஷையிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்களை வடசொற்கள் என்றும், அவையல்லாத பிற திசைப் பாஷைகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்களைத் திசைச் சொற்கள் என்றும் கூறுபடுத்தித் தமிழ் இலக்கணம் வகுக்கப்புட்டுள்ளது.

(உ-ம்) வடசொல் — காரணம், கமலம்
திசைச்சொல் — ஸ்டேஷன், செப்புதல்

(iii) புணர்ச்சி :

1. சொற்கள் ஒன்றோடொன்று சேர்ந்து நிற்றற்குப் புணர்ச்சி என்று பெயர். அவற்றில் முதலில் நிற்கும் மொழியை நிலைமொழி யென்றும், பின் வந்து சேரும் மொழியை வருமொழி யென்றும் கூறுவர்.

2. புணர்ச்சி இருவகைப்படும்—(i) வேற்றுமைப் புணர்ச்சி, (ii) அல்வழிப் புணர்ச்சி. சொற்கள் தொடர்ந்து நிற்குமிடத்து, இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடியவுள்ள ஆறு வேற்றுமைகளுள் ஏதேனு மொன்றின் பொருளைக் குறிக்குமாயின், அது வேற்றுமைப் புணர்ச்சியாம்; அவையல்லாத பிற பொருளைக் குறிக்குமாயின் அல்வழிப் புணர்ச்சியாம்.

(உ-ம்) பொன்னன் வீடு — வேற்றுமைப் புணர்ச்சி
பொன்னன் நல்லவன் — அல்வழிப் புணர்ச்சி

வேற்றுமை யைம்முத லாறும் அல்வழி
தொழில் பண்புவமையும்மை யன்மொழி
எழுவாய் விளி யீரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக் கெனவீ ரேழே. -நன். சூ. 152

3. **வேற்றுமைப் புணர்ச்சி** :—மொழிகள் தொடரும் போது உருபுகள் தொக்கு (மறைந்து) நின்று பொருள் தருமாயின் தொகைநிலை யென்றும், உருபுகள் வெளிப் படையாய் நின்று பொருள் தருமாயின் தொகா நிலை என்றுங் கூறுவர்.

(உ-ம்) தொகைநிலை	தொகாநிலை
1. மரம் வெட்டினன்	மரத்தை வெட்டினன்
2. வாள் வீசினன்	வாளால் வீசினன்
3. கந்தன் தந்தை	கந்தனுக்குத் தந்தை
4. மலைவீழ் அருவி	மலையின் வீழ் அருவி
5. வேலன் வீடு	வேலனது வீடு
6. மரம் ஏறினன்	மரத்தில் ஏறினன்

4. **அல்வழிப் புணர்ச்சி :** வேற்றுமையல்லாத வழியில் சொற்கள் தொடர்ந்து நிற்றல்: தொகைநிலை ஐந்தும், தொகாநிலை என்பதுமாகப் பதினைகாம்.

தொகைநிலை ஐந்து :

1. வினைத் தொகை — தின்பண்டம் (தின்ற, தின்கின்ற, தின்னும் என முக்காலத்திற்கும் வரும்
2. பண்புத்தொகை — செந்தாமரை (செம்மையாகிய தாமரை)
3. உவமைத் தொகை — மதிமுகம் (மதிபோன்ற முகம்)
4. உம்மைத்தொகை — இராப்பகல் (இரவும் பகலும்)
5. அன்மொழித் தொகை—பூங்குழல் வந்தாள் (பூவையுடைய கூந்தலையுடையவள்)

தொகாநிலை என்பது :

1. எழுவாய்த் தொடர் — மன்னன் வந்தான்
2. விளித் தொடர் — இராமா ! வா !
3. பெயரெச்சத்தொடர் — படித்த பையன்
4. வினையெச்சத்தொடர் — வந்து போனன்
5. தெரிநிலை வினைமுற்றுத் தொடர் — சென்றன் வேலன்
6. குறிப்பு வினைமுற்றுத் தொடர் — பெரியவன் வேலன்
7. இடைச்சொற்றொடர் — மற்றொன்று
8. உரிச்சொற்றொடர் — நனி புகழ்ந்தான்
9. அடுக்குத் தொடர் — பாம்பு பாம்பு

5. எழுத்துப் புணர்ச்சி இருவகைப்படும்—இயல்பு, விகாரம். சொற்கள் வேற்றுமை வழியிலேனும், அல்

வழியிலேனும் புணரும்பொழுது இயல்பாகவாயினும், விகாரமாக வாயினும் புணரும்.

விகார மனைத்தும் மேவல தியல்பே. —நன். சூ. 153

தோன்றல், திரிதல், கெடுதல் ஆகியமூவகை விகாரங்களையும் பெறாது புணர்வது இயல்பு புணர்ச்சியாம்.

மழை + பெய்தது = மழை பெய்தது
கந்தன் + பெருமை = கந்தன் பெருமை

உயர்திணைப் பெயர்களுக்கு முன்வரும் வல்லினம் இயல்பாம்.

நம்பி + பெரியவன் = நம்பிபெரியவன்
நம்பி + சிறியவன் = நம்பிசிறியவன்

ஈற்றியா வினாவிளிப் பெயர்முன்வலி இயல்பே.
—நன். சூ. 110

இறுதியில் வருகின்ற ஆ, ஓ, ஏ, என்னும் வினாவெழுத்துக்களுக்கு முன்வரும் வல்லினம் இயல்பாம்.

கந்தனா + படித்தான் = கந்தனா படித்தான்
கிருஷ்ணனோ + சென்றான் = கிருஷ்ணனோ சென்றான்
வேலனே + தந்தான் = வேலனே தந்தான்

யாவென்னும் வினாவெழுத்துக்கு முன்வரும் வல்லினம் இயல்பாம்.

யா + தீயன = யாதீயன
யா + பெரியன = யாபெரியன

விளிப்பெயர் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

இராமா ! + கொள் = இராமா கொள் !
முருகா ! + தா = முருகா தா !

ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை
ஏவல்முன் வல்லின மியல்பொடு விகற்பே.
—நன். சூ. 161

உயிரெழுத்துக்களையும் யகர, ரகர, ழகரங்களையும் ஈற்றிலுடைய முன்னிலை வினைகட்கு முன்வரும வல்லினம் இயல்பாம்.

வந்தனை + கொற்றா = வந்தனை கொற்றா
வந்தாய் + கொற்றா = வந்தாய் கொற்றா
வந்தீர் + கொற்றரே = வந்தீர் கொற்றரே.

உயிரெழுத்துக்களையும், யகர ரகர ழகரங்களையும் ஈற்றிலுடைய ஏவல் வினைகட்கு முன்வரும் வல்லினம் இயல்பாம்.

வா + கந்தா = வாகந்தா
செய் + சாத்தா = செய்சாத்தா
பார் + தேவா = பார்தேவா
வாழ் + புலவா = வாழ்புலவா
(நட + கொற்றா—நடக்கொற்றா என வருதலும் உண்டு.)

6. **இஈ ஐவழி யவ்வும் ஏனை**
உயிர்வழி வவ்வும் ஏ முன்னிவ் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்.

—நன். சூ. 162

நிலைமொழி யீற்றிலுள்ள இகர, ஈகார, ஐகாரங்களின் முன் உயிர் வந்தால், 'ய்' என்ற உடம்படு மெய் தோன்றும்.

குறிப்பு:—இரண்டு உயிர்கள் சேர்ந்து ஒலிக்கமாட்டா. ஆகவே, அவ்விரண்டு உயிர்களையும் உடம்படுத்தும் (ஒன்று சேர்க்கும்) மெய் உடம்படுமெய் ஆம்.

மணி + அடி = மணியடி
தீ + யெரி = தீயெரி
வாழை + இலை = வாழையிலை

நிலைமொழி ஈற்றிலுள்ள அ, ஆ, உ, ஊ, ஓ ஆகிய எழுத்துக்களுக்கு முன் உயிர் வந்தால், 'வ்' என்ற உடம்படுமெய் தோன்றும்.

விள + உயரம் = விளவுயரம்
மா + இலை = மாவிலை
மரு + இதழ் = மருவிதழ்
பூ + ஆடை = பூவாடை
கோ + அழகு = கோவழகு

நிலைமொழி யீற்றிலுள்ள ஏகாரத்திற்கு முன் உயிர் வந்தால், 'ய்', 'வ்' என்ற இரண்டு உடம்படு மெய்களும் தோன்றும்.

சே + அடி = சேவடி
அவனே + அழகன் = அவனேயழகன்

எகர வினாவிற்கும் சுட்டெழுத்துக்களுக்கும் முன்னே உயிரும் யகரமும் வந்தால், 'வ்' தோன்றும.

எ + அணி = எவ்வணி
எ + யானை = எவ்யானை
அ + அணி = அவ்வணி
இ + அணி = இவ்வணி
அ + யானை = அவ்யானை
இ + யானை = இவ்யானை

எகர வினாவிற்கும் சுட்டெழுத்துக்களுக்கும் முன்னே பிற எழுத்துக்கள் வரின் வந்த எழுத்துக்கள் மிகும்.

எ + பையன் = எப்பையன்
அ + குதிரை = அக்குதிரை
இ + சேனை = இச்சேனை

உயிர்வரி னுக்குறள் மெய்விட்டோடும்
யவ்வரி னிய்யா முற்றுமற் றொரேரவழி, —நன். சூ.164

குற்றியலுகர வீற்று மொழிகளின்முன் உயிர் முதன் மொழி வந்தால், நிலைமொழியீற்று உகரம் கெடும்.

வரகு × அருமை = வரகருமை

குற்றியலுகர வீற்று மொழிகளின் முன் யகர முதன் மொழி வந்தால், நிலைமொழி யீற்று உகரம் இகரமாக மாறும்.

நாடு + யாது = நாடியாது

முற்றியலுகரங்களும் சிலவிடத்து உகரங்கெட்டுப் புணர்தலுமுண்டு ; உகரம் இகரமாதலும் உண்டு.

கதவு + அருமை = கதவருமை
கதவு + யாது = கதவியாது

[குறிப்பு:—மொழியிறுதியில் தனிக் குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்களுக்குப் பின்னே வல்லின மெய்யின்மேல் ஏறிநிற்கும் உகரம் குற்றியலுகரமாம்]

இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
கசதப மிகும் விதவாதன மன்னே. —நன். சூ. 165

நிலைமொழி ஈறான அகரத்திற்கு முன் வரும் வல்லினம் மிகும்.

படிக்க + சென்றான் = படிக்கச்சென்றான்
மர(ம்) + பலகை = மரப்பலகை

மாப்பெயர்களுக்கு முன் வல்லெழுத்து வரின் அதன் இனவெழுத்து வருதலுமுண்டு.

மா + காய் = மாங்காய்

பெயரெச்சங்களின் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

வந்த + பையன் = வந்தபையன்
பெரிய + சாத்தான் = பெரியசாத்தான்

பலசில வெனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும், அகரம் ஏக
லகரம் றகர மாதலும் பிறவரின்
அகரம் விகற்ப மாதலு முளபிற. —நன். சூ. 170

பல என்பதற்கு முன் பல என்னும் சொல்வரின் இயல்பாதலும், மிகுதலும், ஈற்று அகரம் நீங்க லகரம் றகரமாதலும் உண்டு.

பல + பல = பலபல ; பலப்பல ; பற்பல.

பல என்பதற்கு முன் பிற சொற்கள் வரின் இயல்பாதலும், அகரம் நீங்கலும் உண்டு.

பல + கலை = பலகலை ; பல்கலை

சில என்பதற்குமுன் சில என்னும் சொல்வரின் இயல்பாதலும், மிகுதலும், அகரம் நீங்க லகரம் றகர மாதலும் உண்டு.

சில + சில—சிலசில ; சிலச்சில ; சிற்சில

சில என்பதற்கு முன் பிறசொற்கள் வரின் இயல்பாதலும் அகரம் நீங்கலும் உண்டு.

சில + வளை = சிலவளை ; சில்வளை

குறியதன் கீழாக் குறுகலு மதனொடு
உகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்—நன். சூ. 172

குற்றெழுத்தை யடுத்து வருகின்ற நிலைமொழியீற்று 'ஆ' காரம் செய்யுளில் குறுகலும் உகரமேற்றலும், இயல்பாதலும் உண்டு.

நிலா = நில, நிலவு, நிலா

அல்வழிப் புணர்ச்சியில் இகர ஐகார வீற்று மொழிகளின் முன் வரும் வல்லினம் இயல்பாகவும் மிக்கும் புணரும்.

1. புலி + சிறிது = புலிசிறிது
   யானை + பெரிது = யானைபெரிது
2. மார்கழி + திங்கள் = மார்கழித்திங்கள்
   பனை + கை = பனைக்கை

மூன்றா றுருபெண் வினைத்தொகை சுட்டீறு
ஆகு முகர முன்ன ரியல்பாம். – நன். சூ. 176

மூன்றனுருபாகிய ஒடு, ஆறனுருபாகிய அது என்பவற்றிற்கு முன்வரும் வல்லினம் இயல்பாம்.

கந்தனொடு + சென்றான் = கந்தனொடு சென்றான்
வேலனது + தோட்டம் = வேலனது தோட்டம்

எண்ணுப் பெயர்கட்கு முன்வரும் வல்லினம் இயல்பாம்.

ஏழு + கடல் = ஏழுகடல்
இரு + தலை = இருதலை

வினைத் தொகையில் முற்றுகர வீருகிய வினை முன் வரும் வல்லினம் இயல்பாம்.

சுடு + தீ = சுடுதீ
அடு + களிறு = அடுகளிறு

சுட்டுப் பெயர்கட்கு ஈருகிய முற்றிய லுகரத்தின் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

அது + கண்டான் = அதுகண்டான்

வன்றொட ரல்லன முன்மிகா அல்வழி—நன். சூ. 181

அல்வழிப் புணர்ச்சியில் வன்றொடர்க் குற்றியலுகர மல்லாத மற்றைய தொடர்களுக்கு முன்வரும் வல்லினம் இயல்பாம்.

வீடு + பெரிது = வீடுபெரிது
எஃது + கூரிது = எஃதுகூரிது
மிளகு + கரிது = மிளகுகரிது
பந்து + தந்தான் = பந்துதந்தான்
எய்து + கொன்றான் = எய்துகொன்றான்

நெடிலொ டுயிர்த்தொடர்க் குற்றுக ரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே —நன்.சூ. 183

நெடிற்றொடர், உயிர்த்தொடர் குற்றியலுகரங்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் இரட்டித்து நிற்கும்.

வீடு + வாயில் = வீட்டுவாயில்
முரடு + குதிரை = முரட்டுக்குதிரை

சில மென்றொடர் மொழிகள் வேற்றுமைப் புணர்ச்சியில் தம்மினமாகிய வன்றொடராக மாறும்.

இரும்பு + பாதை = இருப்புப்பாதை
நஞ்சு + பொய்கை = நச்சுப்பொய்கை

பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்-நன். சூ. 200

பூ என்னும் சொல்லின் முன் இனமாகிய மெல்லெழுத்துத் தோன்றும்.

பூ + சோலை = பூஞ்சோலை
பூ + கொடி = பூங்கொடி

வேற்றுமை யாயின் ஐகா னிறுமொழி
ஈற்றழி வோடும் அம்மேற்பவு முளவே—நன். சூ. 202

ஐகாரவீற்றுச் சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் ஈறு அழிதலோடு 'அம்' என்ற சாரியையும் பெற்றுவரும்.

எலுமிச்சை + பழம் = எலுமிச்சம்பழம்
தாழை + பூ = தாழம்பூ

உடல் மேலுயிர்வந் தொன்றுவ தியல்பே-நன். சூ. 204

நிலைமொழி ஈற்று மெய்யின்மேல் வருமொழி முதலிலுள்ள உயிர் சேர்ந்து நிற்பது இயல்பு புணர்ச்சியாம்.

நிலம் + உயர்ந்தது—நிலமுயர்ந்தது
ஆல் + இலை—ஆலிலை

தனிக்குறில் முன்னொற் றுயிர்வரி னிரட்டும். நன். சூ. 215

தனிக்குற்றெழுத்துக்குப் பின் நிற்கும் மெய்யெழுத்து வருமொழி முதலில் உயிர்வரின் இரட்டிக்கும்.

கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்
மண் + அகம் = மண்ணகம்

நிலைமொழி ஈற்று ணகரம் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் டகரமாகத் திரியும்.

மண் + குடம் = மட்குடம்
கண் + களிறு = கட்களிறு

நிலைமொழி ஈற்று னகரம் வேற்றுமைப் புணர்ச்சியில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் றகரமாகத் திரியும்.

பொன்+குடம்=பொற்குடம்
பொன்+தேர்=பொற்றேர்

மவ்வீறு ஒற்றொழிந்து உயிரீறு ஒப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும். —**நன். சூ.** *219*

மகரவீற்று நிலைமொழிகள் புணரும்போது ஈற்று மெய்(ம்) கெட்டு உயிரீறாக நின்று புணரும்.

நில(ம்)+பனை=நிலப்பனை
நில(ம்)+வலயம்=நிலவலயம்

மகரவீற்று நிலைமொழிகள் வருமொழி முதலின் இனவெழுத்தாகத் திரிதலும் உண்டு.

நிலம்+சிறிது=நிலஞ்சிறிது
பணம்+தந்தான்=பணந்தந்தான்

யகர, ரகர, ழகர வீற்று மொழிகளின் முன் அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம் வந்தால் இயல்பாம்.

காய்+சிறிது=காய்சிறிது
வேர்+பெரிது=வேர்பெரிது
வீழ்+கடிது=வீழ்கடிது

யகர, ரகர, ழகர வீற்று மொழிகளின் முன் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வந்தால் மிகும்.

நாய்+கால்=நாய்க்கால்
தேர்+தட்டு=தேர்த்தட்டு
ஊழ்+பயன்=ஊழ்ப்பயன்

லகர, ளகர, வீற்று மொழிகளின் முன் வல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் லகரம் றகரமாகவும் ளகரம் டகரமாகவும் திரியும்.

பால்+குடம்=பாற்குடம்
கள்+குடம்=கட்குடம்

லகர, ளகர வீற்று மொழிகளின் முன் மெல்லினம் வந்தால், லகரம் ணகரமாகவும் திரியும்.

நெல் + மலை = நென்மலை
வாள் + மாண்பு = வாண்மாண்பு

னகர, லகர வீற்றுமொழிகட்கு முன் வருமொழி முதலில் தகரம் வருமானல், நிலைமொழி யீறு வருமொழி முதல் இரண்டும் றகரமாகத் திரியும்.

பொன் + தேர் = பொற்றேர்
கல் + தேர் கற்றேர்

ணகர, ளகர வீற்று மொழிகட்கு முன் வருமொழி முதலில் தகரம் வருமானல் அத்தகரம் டகரமாகத் திரியும்.

எண் + தோள் = எண்டோள்
முள் + தீமை = முட்டீமை

வேற்றுமை உருபேற்கும்போது சாரியை ஏற்றல்:

மகரவீற்றுச் சொற்கள் வேற்றுமை உருபேற்கும் போது அத்து என்ற சாரியை பெறும்.

மரம் + ஐ = மரத்தை

வகரவீற்றுச் சுட்டுப்பெயர்கள் அற்று என்ற சாரியை பெறும்.

அவ் + ஐ = அவற்றை

(iv) எழுவாய்—பயனிலை:

பல சொற்கள் தொடர்ந்து நின்று முற்றுப்பெற்ற பொருளைத் தருவது வாக்கியமாம். வாக்கியம் எழுதுவதற்கு இடமாயிருக்கும் சொல்லே எழுவாயாகும். இவ் வெழுவாயைக் கருத்தா (செய்பவன்) என்றும், குறித்த தொழிலைச் செய்வதற்கு முதலாதலின் வினைமுதல் என்றும் கூறுவர்.

ஏவுதற் கருத்தா, இயற்றுதற் கருத்தா எனக் கருத்தாவில் இருவகை யுண்டு.

(உ - ம்) அரசன் கோயிலைக் கட்டினன்—ஏவுதற் கருத்தா
தச்சன் கோயிலைக் கட்டினன்—இயற்றுதற் கருத்தா

எழுவாய் :—பயனிலையைக் கண்டறிந்து, உயர்திணையாயின் யார், எவள், எவன், என்றும், அஃறிணையாயின் எது, எவை என்றும் வினவினல், அதற்கு வரும் விடையே எழுவாயாகும்.

(உ - ம்) முருகன் வேலை செய்தான்
பசு புல்லைத் தின்றது

செய்வினையில் கருத்தா முதல் வேற்றுமையிலும் செயப்பாட்டு வினையில் மூன்ரும் வேற்றுமையிலும் வரும்.

(உ - ம்) கோவிந்தன் வீட்டைக் கட்டினன்
கோவிந்தனல் வீடு கட்டப்பட்டது

பயனிலை :—வாக்கியத்தில் பொருள் முற்றுப்பெற்றதைத் தெரிவிக்கும் சொல்லே பயனிலை எனப்படும். வினைச்சொற்கள் மட்டுமன்றிப் பெயர்ச் சொற்களும் வினச் சொற்களும் பயனிலையாக வருதலுண்டு.

(உ - ம்) கிருஷ்ணன் மாம்பழம் வாங்கினன் - வினைப்பயனிலை
கந்தன் இவன் - பெயர்ப்பயனிலை
கோபாலன் எவன்? - வினப்பயனிலை

(v) **அணிகள் :**—

1. **உவமையணி :**—ஒரு பொருளின் சிறப்பை மற்ருெரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவதை உவமையணி என்பர். எடுத்துக்கொண்ட பொருளை **உபமேயம்** என்றும், ஒப்பிடும் பொருளை **உபமானம்** என்றும் சொல்வர். 'போல' முதலியவை உவமை உருபுகளாம்.

(உ-ம்) மதிமுகம்—முகம் சந்திரன்போல வசீகரமானது.

இதில்,

உபமேயம்	-	முகம்
உபமானம்	-	சந்திரன்
உவம உருபு	-	போல
பொதுத்தன்மை	-	வசீகரமானது

இங்ஙனம் நான்கு வகையான அம்சங்களும் உவமையில் தோன்றும்.

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று.

2. **உருவகவணி**:—முற்கூறிய உபமான உபமேயங்களில் உபமானத்தின் தன்மையை உபமேயத்தினிடத்தில் அமைத்துச் சொல்வது உருவக அணியாம்.

(உ-ம்) முகமதி—முகமாகிய சந்திரன்

இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை யெருவட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

3. **உயர்வு நவிற்சியணி**:—வருணிக்கத் தொடங்கிய பொருளின் தன்மையை உயர்வுபடுத்திக் கூறுவது உயர்வு நவிற்சி யணியாம்.

(உ-ம்) மதி முட்டுவ மாடம்—[நகரின் மாடமாளிகைகள் தம் உயர்ச்சியால் சந்திரனைத் தொடுகின்றன]

பொன்கொண் டிழைத்து மணியைக்கொடு பொதிந்த
மின்கொண் டமைத்த வெயிலைக்கொடு சமைத்த
என்கொண் டியற்றிய வெனத்தெரி கிலாத
வன்கொண் டல்விட்டு மதிமுட்டுவ மாடம்.

(vi) யாப்பிலக்கணம் (Prosody):

கற்றுவல்ல கவிகள் ஒரு பொருளைக் குறித்துப் பலவேறு சொற்களால் நயம்பட அணிகளுடன் செய்யும் பாடல் செய்யுளாகும். சொற்களால் யாக்கப்படுதலின் (கட்டப்படுதலின்) யாப்பு எனவும் படும்.

இதற்கு எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என ஆறு உறுப்புக்கள் (அவயவங்கள்) உண்டு.

எழுத்து — முதலெழுத்தும் சார்பெழுத்துமாகியவை.

அசை — எழுத்தினல் ஆக்கப்பட்ட செய்யுள் அடியின் உறுப்பு. இது நேரசை, நிரையசை என இரு வகைப்படும்.

[நேரசை—ஒரு குறிலாவது ஒரு நெடிலாவது தனித்தாயினும் ஒற்றடுத்தாயினும் வருவது. நிரையசை—குறிலிணையாவது குறில் நெடிலாவது தனித்தாயினும் ஒற்றடுத்தாயினும் வருவது.]

சீர் — அசைகள் சிறுபான்மை தனித்தும், பெரும்பான்மை இரண்டு முதல் நான்கு வரையில் தொடர்ந்தும் வருவது. அவை ஓரசைச்சீர் ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு.

தளை — நின்ற சீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை கூடி நிற்பது.

அடி — தளைகள் ஒன்றும் பலவும் அடுத்து வருவது.

தொடை — பல அடிகளிலேனும் பல சீர்களிலேனும் எழுத்துக்கள் ஒன்றிவரத் தொடுப்பது.

எதுகை, மோனை என்பவை இவ்வுறுப்பின் பிரிவுகள்.

எதுகை — செய்யுளில் ஒவ்வோர் அடியிலும் முதலெழுத்து ஒரே அளவினதாயிருக்க, அதற்குப் பின்னுல் வரும் எழுத்துப் பெரும்பாலும் ஒரேவிதமாக வருவது.

மோனை — அடி ஒவ்வொன்றிலும் முதற்சீரின் முதலெழுத்து மற்ற சீர்களின் முதலெழுத்தோடு ஒன்றி வருவது.

இயற்றப்பெறும் பாடல்கள் வெண்பா, ஆசிரியப்பா வஞ்சிப்பா, கலிப்பா என நான்கு பெரும் பிரிவுகளை யுடையன. அவை ஒவ்வொன்றும் துறை, தாழிசை விருத்தம் என்னும் பேதங்களால் பல வகைப்படும்.

———

3. தமிழும் ஆசிரியரும்

தமிழ்ப் பயிற்சியின் அவசியம்

இக்காலத்தில், அறிஞர் பலர் தமிழ் மொழி வளர்ச்சியில் பெரிதும் கருத்துச் செலுத்தி வருகின்றனர். கற்றவர்க்கே யன்றி மற்றவர்க்கும் பயன்படும வகையில் பல சாத்திரங்கள் தமிழில்வெளிவந்து கொண்டிருக்கின்றன. இத்துறையில் அரசியலாரும் பெரிதும் கவனம் செலுத்தி வருகின்றனர். நந் தமிழ் நாட்டிலுள்ள பல கல்விச்சாலைகளிலும் தமிழ்மொழியின் வாயிலாகவே எல்லாப் பாடங்களும் போதிக்கப்பட்டு வருகின்றன. ஆரம்பப் பாடசாலையில் தமிழுக்கு முதன்மையான இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக்கல்வியின் நோக்கத்தை ஸ்திரப்படுத்தி அதற்குகந்தவாறு தமிழ்ப் போதனையின் அவசியத்தைத் தெளிவுபடுத்திப் புதிய பாடத்திட்டம் வழங்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய போற்றத் தக்க நிலைமை நீடித்து, மேலும் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால், ஆசிரியர்கள் சில முக்கியமான விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். தமிழில் நன்றாகப் பேசவும் எழுதவும் திறமை வாய்ந்த மக்களை நமது கல்வி முறையின மூலம் உற்பத்தி செய்யவேண்டும். பண்டை நூல்களின் சிறபபை ஆராயவும், புத்தம் புது நூல்களை வெளியிடவும், உணர்ச்சி ததும்பும் இனனிசைப் பாடல்களை இயற்றவும், புது இயக்கங்களைப் பிரசாரம் செய்யவும், வெளிநாட்டுச் செய்திகளை அறிந்து பிறருக்கு வெளியிடவும் தமிழில் சிறந்த பயிற்சி அளிக்கவேண்டும்.

தமிழ்ப் போதனையின் தற்கால நிலைமை

ஆனால் தற்போதைய நிலைமை அவ்வளவு திருப்திகரமானதன்று. தாய்மொழி மூலமாகத்தான் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை வேரூன்ற வேண்டும். மாணவர்கள் தமிழ் மொழியில் சிறந்த திறமை பெற வேண்டுமானால், தமிழ் கற்பிக்கும் முறைகள் சிறந்தவைகளாக இருக்கவேண்டியது அவசியம். பொது மக்களிடையே தாய்மொழியைச் சிறந்த முறைகளில் கற்பிக்கவேண்டிய

அவசியத்தைப் பற்றிப் பிரசாரம் செய்யவேண்டும். போதனு முறைகளில் பல நாடுகளில் கண்டு ஆராய்ந்து அறியப்படும் உண்மைகளைத் தமிழ்ப்போதனையில் பிரயோகம் செய்வதற்குத் தகுந்த அறிவையும் ஆற்றலையும் ஆசிரியர்கள் பெறவேண்டும். இந்திய நிலைமைக்கு ஏற்ற வாறு முறைகளை மாற்றியமைக்க வேண்டும் என்பது உண்மையே. ஆனபோதிலும், பற்றுதலுடனும் தைரியத்துடனும் புதிய முறைகளைக் கையாளவேண்டும். இது காறும் இருந்தவாறில்லாமல், ஆரம்பப் பாடசாலை ஒரு கவர்ச்சி மிகுந்த இடமாகவும், அதில் தமிழ் ஒரு புதிய பாடமாகவும் இருக்கும் வண்ணம் ஆசிரியர்கள் உழைத்தால், உண்மை வாழ்க்கையில் பாடசாலையானது ஒரு முக்கியமான ஸ்தாபனமாக மாறுவதை நாம் காணலாம்.

ஆசிரியர்களுக்குச் சில குறிப்புகள்

தமிழ் வளர்ச்சியடைய வேண்டுமானுல், சில முக்கியமான குறிப்புகளை ஆசிரியர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். முதலில், ஆசிரியர்கள் குழந்தைகளுடைய மனோபாவத்தை நன்கு அறிந்துகொள்ள வேண்டும். இதற்கு உளநூல் பற்றிய விஷயங்களில் ஆசிரியருக்குப் பயிற்சி இருக்க வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் குழந்தைகளுடைய விருப்பு, உற்சாகம், மனோநிலை, மனப்பான்மை, ஊக்கம் ஆகியவற்றை அறிவது, உளநூல் கற்பதன் மூலம் பெறும தேர்ச்சியினுல்தான். இக்காலத்தில் அநேக ஆராய்ச்சிகளின் மூலமாகவும், சோதனைகளின் மூலமாகவும் மொழிப்போதனையை அறிஞர்கள் ஒருவாறு திட்டப்படுத்தியிருப்பதால், இவ்வுண்மையை நமது வகுப்பறைகளில் பிரயோகிக்க வேண்டும். குழந்தைகள் தங்களுடைய பிற்கால வாழ்க்கையில் சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக வாழ்வதற்குத் தேவையான அளவு தமிழ்ப்பயிற்சி பெற்றபோதிலும், அப்பயிற்சியின் மூலம் அவர்கள் ஓய்வு நேரங்களில் தமிழ் இலக்கியச் சுவையை இனிமையாக அநுபவிப்பதற்கு மொழிப் பயிற்சி சாதகமாக இருக்க வேண்டும். வெறுப்புடன் கூடிய மனப்பான்மையுடன் மொழியைப் போதிக்காமல் குழந்தைகளுக்கு ஆர்வமும்

உற்சாகமும் எழும் வகையில் முறைகள் அமைய வேண்டும்.

ஆனால் மேற்கூறிய தேவைகள் யாவற்றையும்விட ஆசிரியர்களின் அறிவு வளர்ச்சியே முக்கியமான தாகும்.

ஆசிரியர்களின் அறிவு வளர்ச்சி

குழந்தைகளுக்குத் தேவையான தமிழறிவுக்கு அதிகமாகவே ஆசிரியர்களுக்குத் தமிழில் தேர்ச்சியிருப்பது அவசியம். தெளிவான நடையில் குழந்தைகளுடன் இனிமையாகச் சம்பாஷிப்பதற்கும், நல்ல சப்தத்துடன் பாடல்களைப் பாடுவதற்கும், சிறந்த இலக்கியப் பிரிவுகளைப் போதிப்பதற்கும் தேவையான அறிவும் ஆற்றலும் ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டும். இதற்குப் பல நூல்களை ஆசிரியர்கள் படித்துப் போதிய திறமையை அடைய வேண்டும். எல்லாரும் சிறந்த திறமையை அடைய முடியாமலிருக்கலாம்; ஆனால், குறைந்த அளவு தேவையான அறிவை வளர்க்கவேண்டியது அவசியம்.

ஆசிரியர்களின் அறிவு வளர்ச்சிக்குத் தகுந்த பல நூல்களை அவர்கள் படித்துணர வேண்டியது முக்கியம்.

ஆசிரியர்களுக்குத் தேவையான புத்தகங்கள்

தமிழில் பிழையின்றித் தெளிவாகப் பேசவும் எழுதவும் சக்தி பொருந்தியவர்களாகவும், நிரம்பிய அறிவுடையவர்களாகவும், ஆசிரியர்கள் இருக்க வேண்டும். தமிழில் இருக்கும் சிறந்த வசன நூல்கள், சிறு கதைகள், பரம்பரைக் கதைகள், புராணக் கதைகள், விடு கதைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், வகுப்புகளுக்கேற்ற பாடல்கள், நாடகங்கள், ஸ்தல புராணங்கள், பழம் பாடல்கள் முதலியவற்றை ஆசிரியர்கள் படித்தறிய வேண்டும். ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒரு தமிழ் அகராதி அவசியம். பல நாடோடிப் பாடல்கள், பரம்பரை வரலாறுகள், செவிலிப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள் ஆகியவற்றையும ஆசிரியர்கள் தொகுத்துக்கொள்ளுதல் நலம். எழுதும்போது தமது சொந்த நடையில் கருத்துக்களை ஒழுங்குபடுத்தியும், இலக்கணப் பிழையின்றியும் எழுதப் பழகவேண்டும்.

சுருங்கச்சொல்லின் ஒரு நல்லாசிரியர் குழந்தைகளின் அறிவு நிலையை மதிப்பிடக் கூடியவராகவும், அவர்களிடம் உண்மையான அன்பு பூண்டவராகவும், அவர்களுடைய அன்பைக் கவரக்கூடியவராகவும், தெளிவான எழுத்து வன்மையும் பேச்சு வன்மையும் உடையவராகவும், நிரம்பிய அறிவு பெற்றவராகவும் இருந்தாலன்றி, அவரால் தமிழ் மொழியை நன்கு போதித்தல் முடியாது.

நல்லாசிரியரின் இலக்கணம்

குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவொ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே நன். சூ. 26

---

4. கட்டுரை விளக்கம்

ஒருவருடைய மனத்தில் இயற்கையாகத் தோன்றும் எண்ணங்களைக் கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. கட்டுரை என்பது யாதாயினும் ஒரு தலைப்பைப் பற்றி நன்ருகச் சிந்தித்து அதைப் பல பிரிவுகளாக வகுத்துக் கொண்டு விளக்குதல் எனப் பொருள்படும். ஒருவர் ஒரு பொருளைப்பற்றிச் சிந்திக்கும்போது, இவருடைய மனத்தில் அநேக கருத்துக்கள் தோன்றும். அவற்றை வாய்மொழி மூலமாகவேனும், எழுத்து மூலமாகவேனும் வெளிபடுத்தலாம். அப்பொழுது அவரவருடைய சுயமான சொல்வன்மையை உபயோகிக்க நேரிடுகின்றது. ஆகையால், கட்டி (அல்லது அமைத்து) உரைக்கப்படும் (வெளிப்படுத்தப்படும்) தன்மையால் அதற்குக் 'கட்டுரை' எனப் பெயர் உண்டாயிற்று. மாணவர்களைப் பொறுத்த அளவில் 'கட்டுரை' என்ப

'கட்டுரை' என்ருல் என்ன?

தைச் 'சுயமான சொல்வன்மையில் பயிற்சி' என்று சொல்லலாகும்.

சிறந்த கட்டுரையின் பண்புகள்

ஒரு கட்டுரை, ஒரே பொருளைப்பற்றியதாக இருக்க வேண்டும்; அதன் பல அங்கங்களிலும் ஒரு ஐக்கிய பாவம் ஊடுருவிச் செல்ல வேண்டும். எழுத வேண்டிய விஷயத்தைப்பற்றித் தெளிவான கருத்துக்கள் வேண்டும்; அவற்றை முன்னணியில் வைத்துச் சிந்தனைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். எழுதவேண்டிய விஷயத்தைத் தழுவாத அம்சங்களைக் கட்டுரையில் சேர்க்கக்கூடாது; ஆனால், அநேக வழிகளில் அவ்விஷயத்தை ஆராய்ந்து விளக்குதல் அவசியம். சிந்தனைகளை ஒழுங்குபடுத்துவதுடன், குறித்த ஒரு முடிவையும் அடையவேண்டும்; சம்பந்தமில்லாத சில கருத்துகளைமட்டும் குறிப்பது கட்டுரையாகாது. எழுதும் முறையிலும் ஒரு ஐக்கிய பாவம் பிரதிபலிக்க வேண்டும். 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்ற மேற்கோளைத் தழுவ வேண்டும். கட்டுரைக்கு ஏற்றபடி நடையும் அமைய வேண்டும். சிநேகபாவமான கடிதங்களில் சம்பாஷணைக்குகந்த நடை அவசியம்; அது இயல்பாகவும் சுலபமானதாகவும், வழக்கிலுள்ளதாகவும் இருக்க வேண்டும்; ஆனால், கொச்சையான பாஷையைத் தவிர்க்க வேண்டும். வாக்கியங்கள் இயல்பாகவும் சுலபமானதாகவும் அமைய வேண்டும்; எழுதப்புகும் பொருளைப்பற்றித் தெளிவான அபிப்பிராயங்கள் இருந்தால், தகுந்த சொற்றொடர்கள் மூலம் அவை பிரதிபலிக்கும். மற்றும் கட்டுரை எழுதுபவருடைய பிரத்தியேகமான உணர்ச்சிகளும் அபிப்பிராயங்களும் கட்டுரையில் பிரதிபலிக்க வேண்டும். ஆகவே, குறித்த பொருளைப்பற்றிக் குறித்த காலத்தில் சுருக்கமாக, குறிக்கப்பட்ட அளவுக்குள், எளிமையும் தூய்மையும் இனிமையும் பொருந்திய செந்தமிழ் நடையில் எழுதப்படுவதே சிறந்த கட்டுரையாகும்.

கட்டுரைகளில் பல வகைகள் உண்டு. அவை, விருத்தாந்தம், வருணனை, சிந்தனை, கற்பனை, விளக்கம், விவா

தம் என்பன. இவை ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத தனிப் பிரிவுகள் அல்ல; பிறவகைகளின் பல அம்சங்கள் ஒவ்வொரு வகையிலும் காணப்படும்.

கட்டுரைகளின் வகைகள்

1. **விருத்தாந்தக் கட்டுரை :**—யாதாயினும் ஒரு பொருளைப்பற்றிய வரலாற்றை எடுத்துரைப்பதே விருத்தாந்தக் கட்டுரையாகும். பெரியார்களின் வாழக்கை வரலாறுகள், பிரயாணக் குறிப்புகள், சரித்திர சம்பந்தமான வரலாறுகள, தெருச்சண்டை-பூகம்பம் போன்ற சம்பவங்கள் ஆகியவை இவ்வகையைச் சேர்ந்தவை. இவை சிறுகதைகள் அல்ல; விருத்தாந்தத்திலும் சிந்தனை கலந்தவை. இவ்வகைக் கடடுரைகளை எழுதும்போது, நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகக் குறிப்பிடவேண்டும்.

வருணனைக் கட்டுரை :—இது ஒரு பொருளை அல்லது இடத்தைப்பற்றிய வருணனையாக இருப்பது. (உ-ம) பிராணிகள், தாவரங்கள், நகரஙகள், தேசங்கள், இயற்கைச் சம்பவங்கள், ஆகாய விமானம், காட்சிகள், முதலியவைகளைப்பறறிய வருணனைகள். காட்சிகளையோ பொருள்களையோ நேரில் பார்ப்பதுபோல மனக் கண்ணால் காணக்கூடிய முறையில் கட்டுரையின் அமைப்பு இருக்க வேண்டும். ஒரு பொருளின் இயற்கைத் தோற்றம், உருவம், பரிமாணம், உபயோகம், அமைப்பு முதலியவை இவ் வகைக் கட்டுரையில் விளக்கப்படும்.

3. **சிந்தனைக் கட்டுரை:**—ஒரு பொருளைப்பற்றித் தோன்றும் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் கட்டுரை இவ் வினத்தைச் சோந்தது; விஷயங்கள் நீதிநெறிகளைப்பற்றியனவாகவும், பலவகைக் குணஙகளை விளக்குவனவாகவும் இருக்கும். (உ-ம) உண்மை, தேசபக்தி, கைத்தொழில் ஊக்கம், இன்சொல் போன்றவை. தத்துவ சாஸ்திர விஷயங்களும், மத விஷயங்களும் இத்தன்மையனவே.

4. **கற்பனைக் கட்டுரை :**—ஒருவர் தமது கற்பனை சக்தியினால், தாமாக ஒரு பொருளைப்பற்றிச் சிந்தித்து, அதைப்பற்றி உண்மையேபோல் எழுதுவது இவ்வினத்

தைத் சார்ந்தது. இதில் பாவனைகள் அதிகமாக இருந்த போதிலும், அவை உண்மை அநுபவங்கள் என்றே நினைக்குமபடி எழுத வேண்டும். (உ-ம) ஒரு மழைத்துளியின் சுயசரிதை, எனக்கு நூறு ரூபாய் பரிசு கிடைத்தால் என்ன செய்வேன், நான் அரசனாக இருந்தால் எவ்வாறு பரிபாலனம் செய்வேன்.

5. **விளக்கக் கட்டுரை:**—ஒரு விஷயத்தை விளக்குவது இவ்வகையைச் சேர்ந்தது. (உ-ம) தொழிற்சாலைகள், கைத்தொழில், உரைநடை, கம்பர் கவிநயம் போன்றவை.

கட்டுரைகள் எழுதும்முறை

கட்டுரை எழுதுவதற்குத் தடையாக இருக்கக் கூடியது, பெரும்பாலும் பொருள்களைப்பற்றிய கருத்துக்களின் குறைவேயாகும். ஒரு பொருளைப்பற்றி எழுதுவதற்குப் பரந்த ஞானமும், நிறைந்த அனுபவமும், சிறந்த கருத்துக்களும் இருத்தல் அவசியம். ஊன்றிக் கவனிக்கும் தன்மையிலும், பல நூல்களைப் படிப்பதனாலும், பலவகையான எண்ணங்கள் தோன்றுவதுடன் பலவகைச் செய்திகளையும் ஒருவன் அறியக்கூடும். சிறந்த கட்டுரைகள் எழுதவேண்டுமானால், உயர்ந்த நூல்களைப் படித்து இன்புறவேண்டும்; உயர்ந்த எண்ணங்களையும் திருத்தமான விஷய ஞானத்தையும் பெறவேண்டும். ஆனால், புத்தகங்களினின்று மட்டும் ஞானம் பெறமுடியாது. நம்மைச் சுற்றியுள்ள வாழ்க்கையில் நடைபெறும் பல சம்பவங்களைப் பார்த்தும் கேட்டும் அனுபவித்தும் அறிவுப்பெருக்கம் அடையலாம். தினந்தோறும் வாழ்க்கையில் நாம் காணும் விஷயங்களைப் பற்றிச் சிறு கட்டுரைகளை எழுதிப் பழக வேண்டும். மேலும், பிறருடைய சம்பாஷணைகளைக் கவனித்தும் சம்பாஷணைகளில் கலந்துகொண்டும் நமது அறிவை விசாலப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எந்தப் பொருளைப்பற்றியும் கட்டுரை எழுதுவதற்கு முன்னால் அதைப்பற்றி தெளிவும் திருத்தமுமான கருத்

துக்களைச் சிந்திக்கவேண்டும். விஷயத்திற்குப் பொருந்தாத குறிப்புக்களைச் சேர்க்கக் கூடாது. ஆகையால், தீர்க்கமான ஆலோசனையின் பேரில், பொருத்தமான விஷயங்களை மட்டும் கட்டுரையில் சேர்க்கவேண்டும். சில தலைப்புக்களைப்பற்றி எழுத வேண்டுமானால், பல புத்தகங்களைப் படித்துக் கருத்துக்களைச் சேகரம் செய்யவேண்டும். பல விஷயங்களைச் சிந்திக்கும்பொழுது அவ்வப்பொழுது தோன்றும் எண்ணங்களைக் குறித்துக்கொள்ளவேண்டும். குறித்துக்கொண்டவற்றைப் பினனும பரிசிலனை செய்து நீக்கவேண்டியவற்றை நீக்கிச் சேர்க்கவேண்டியவற்றைச் சேர்த்து, திட்டமான குறிப்புக்களை நிர்ணயித்துககொள்ள வேண்டும். பின்னர், அவற்றை ஒழுங்குபடுத்திக் குன்றக்கூறல், மாறுபடக் கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல் போன்ற குறைகள் இன்றித் தொடக்கமும் முடிவும் சரியாக அமையும் வண்ணம் செய்துகொள்ள வேண்டும். குறிப்புக்களை நிர்ணயித்த பிறகு, ஒவ்வொரு குறிப்பையும் ஒரு பத்தியில் விளக்கவேண்டும்.

குறிப்பான ஆயத்தம்

ஒரு கட்டுரையை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். (1) விஷயததை அறிமுகம் செய்வித்தல் அல்லது பீடிகை: இது சுருக்கமாக இருக்கவேண்டும். ஆனால், இப்பகுதி, தலைப்புக்குப் பொருத்தமாகவும், கவனத்தைக் கவரக்கூடியதாகவும் இருக்கவேண்டும். (2) விஷயப்பகுதி: இதுவே கட்டுரையின் முக்கியமான பகுதி. சில குறிப்புக்களை வெகு விரிவாகவும், சிலவற்றை வெகு குறைவாகவும் விளக்கக்கூடாது. பத்திகளை ஒழுங்காக அமைக்கவேண்டும். ஒரு பத்திக்கும் மற்றொரு பத்திக்கும் தொடர்பு வேண்டும். (3) முடிவு: தொடக்கம் கவனத்தைக் கவரும் வகையில் இருக்கவேண்டியது போல, முடிவும் திருபதியளிக்கவேண்டும். நடை இயற்கையாகவும், சுருக்கமாகவும், சுலபமாகவும் நேர்மையாகவும் அமையவேண்டும்.

கட்டுரையின் பிரிவுகள்

நாம் எழுதும்பொழுது பலவித எழுத்துப் பிழைகள் சாதாரணமாக உண்டாகின்றன. எழுத்து, சொல்

சொற்றொடர்களைப் பற்றிய இலக்கண அறிவு ஆரம்பத்தில் ஏற்பட்டாலன்றிப் பிழையின்றி எழுதமுடியாது. நாம் எழுதுவதில் தோன்றும் பிழைகள் எத்தன்மையன வென்பதை அறியவேண்டும்.

சில எழுத்துப் பிழைகள்

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள், நகர ணகர னகரங்களின் வேறுபாடுகள், ரகர றகரங்களின் வேற்றுமைகள், லகர ழகர ளகரங்களின் பிரயோகங்கள் ஆகியவற்றைத் திட்டமாக உணரவேண்டியது அவசியம். ஆயினும், இக்குற்றங்களிற் பல, பழக்கத்தினால் பெரும்பாலும் நீங்கக்கூடியவை.

நிறுத்தக் குறிகள்

நாம் படிக்கும்போதும் எழுதும்போதும் வாக்கியங்களின் பொருள் நன்கு விளங்குமபொருட்டு, பொருத்தமான இடங்களில் சில குறிகளையிட்டு, நிறுத்தவேண்டிய இடங்களைக் காட்டுகிறோம். அவைகளுக்கு நிறுத்தற்குறிகள் என்று பெயர்.

(1) , காற்புள்ளி – இக் குறியிட்ட விடங்களில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(2) ; அரைப்புள்ளி – இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

3. : முக்காற்புள்ளி - இங்கு மூன்று மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

4. . முற்றுப்புள்ளி – இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகள் சிலவற்றை வெளிப்படுத்துங்காலையில் முற்றுப்புள்ளிக்குப் பதிலாக வேறு சில குறிகளை உபயோகப்படுத்துகிறோம்.

(5) ? வினாக்குறி - இது கேள்வியை உணர்த்துவது.

(6) ! வியப்புக்குறி - இது ஆச்சரியத்தைத் தெரிவிக்கும் குறி.

(7) "............—......" மேற்கோள் குறிகள்—பிறர் பேசுவதுபோல் எழுதும்பொழுது இக்குறிகள் உபயோகிக்கப்படுகின்றன.

குறிப்பு: ஒரு மாத்திரைக் குரிய அளவு, கண்ணிமைப்பொழுதும் கைநொடிப் பொழுதுமாம்.

பின்வரும் ஒரு உரைநடைப் பகுதியில் குறிகள் அமையாதவாறும், அவை அமைந்தவாறும் காட்டப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து குறியீடுகளின் அவசியத்தை எளிதில் உணரலாகும்:—

மீன்களையே மிகுதியுந் தின்று வளர்ந்த ஒரு கிழக் கொக்கானது குளக்கரையில் வந்து விசனமாய் உட்கார்ந் திருந்தது அப்போது அதி லிருந்த மீன்கள் கொக்கைப் பார்த்து நீ உன் ஆகாரத்தை விட்டுச் சும்மா உட்கார்ந் திருப்பானேன் சொல் எனக் கொக்கு நான் மீன் தின்பது மெய்தான் ஆயினும் இன் றைக்கு இங்கே செம்படவன் வந்து எல்லா மீன்களையும் பிடிக்க இருக்கிறதினால் என் னுடைய இரைகளெல்லாம் நிர் மூலமாய்ப் போகுமே யென்று ஏங்கிச் சும்மா யிருக்கிறேன் என்றது.

மீன்களையே மிகுதியுந் தின்று வளர்ந்த ஒரு கிழக் கொக்கானது, குளக்கரையில் வந்து விசனமாய் உட்கார்ந் திருந்தது. அப்போது, அதி லிருந்த மீன்கள் கொக்கைப் பார்த்து, 'நீ உன் ஆகாரத்தை விட்டுச் சும்மா உட்கார்ந் திருப்பானேன்? சொல், என, கொக்கு "நான் மீன் தின்பது மெய்தான்; ஆயினும் இன் றைக்கு இங்கே செம்படவன் வந்து எல்லா மீன்களையும் பிடிக்க இருக்கிறதனால், என் னுடைய இரைகளெல்லாம் நிர் மூலமாய்ப் போகுமே என்று ஏங்கிச் சும்மாயிருக்கிறேன்" என்றது.

வாக்கிய அமைப்பு :—ஒரு முற்றுப்பெற்ற கருத்தை வெளியிடும் சொற்களும் சொற்றொடர்களும் **வாக்கியம்** எனப்படும்.

எழுவாய்—பயனிலை

ஒவ்வொரு வாக்கியத்திலும் இரண்டு முக்கியமான பகுதிகள் உண்டு. அவை எழுவாய், பயனிலை என்பன. ஒரு வாக்கியத்தில் செயலைச் செய்பவனைத் தெரிவிக்கும் சொல் எழுவாய்; நிகழும் செயலைப்பற்றிக் கூறும் சொல் பயனிலை. ஒரே எழு

வாய்க்கு அநேக பயனிலைகளும், ஒரே பயனிலைக்குப் பல எழுவாய்களும் உண்டு.

வாக்கியங்களில் பயனிலைகளுக்குச் செயப்படு பொருள் வருவதும் உண்டு ; வராமலிருப்பதும் உண்டு.

செயப்படு பொருள்

செயப்படு பொருள் பெற்ற வினைக்குச் 'செயப்படு பொருள் குன்றாவினை' என்றும், மற்றது 'செயப்படுபொருள் குன்றிய வினை' என்றும் கூறப்படும். செயப்படுபொருளுக்கும் தழுவும் சொற்கள் உண்டு. செயப்படுபொருள் குன்றாவினை இருவகைப்படும். அவை: செய்வினை, செயப்பாட்டு வினை.

(உ-ம்) சிற்பி கோயிலைக் கட்டினான்.
கோயில் சிற்பியால் கட்டப்பட்டது.

வாக்கியங்கள் இருவகைப்படும். அவை தொடர் வாக்கியம், தனிவாக்கியம் என்பன. எழுவாய், பயனிலை

வாக்கிய வகைகள்

என்ற இரு உறுப்புக்களையும், சிலவற்றில் செயப்படு பொருளையும் பெற்ற வாக்கியம் 'தனிவாக்கியம்' எனப்படும். பல தனி வாக்கியங்களையும் தொடர்களையும் சேர்த்துக்கொண்டு பெருகிவரும் வாக்கியத்திற்குத் 'தொடர் வாக்கியம்' எனப் பெயர்.

(உ-ம்) 1. கந்தன் வீட்டுக்குச் சென்றான்—தனி வாக்கியம்

2. நீதிநெறி ஒன்றனையே பெரிதும் கடைப்பிடித்த மனுநீதிச்சோழன், தனக்கொன்று பிறர்க்கொன்று எனக் கருதாமலும், மந்திரிமார் சொற்கேளாமலும், தன் மகனுக்கு மரணத் தீர்ப்பு அளித்துப் பெரும்புகழ் பெற்றான்—தொடர் வாக்கியம்.

வாக்கியங்கள் சுருக்கமாக அமைவதே நலம். ஆனால் ஒரு கருத்தை விளக்கப் பல வாக்கியங்களை உபயோகிப்

வாக்கியங்களின் அமைப்பு

பது சிலாக்கியமன்று. அதுபோலவே பல கருத்துக்களை விளக்க நீண்ட வாக்கியங்களை அமைப்பதும் நன்றன்று. பண்டைக்கால உரை நடை நூல்களில் நீண்ட வாக்கியங்களையே நூலாசிரியர்கள் பெரிதும் கடைப்பிடித்து வந்திருப்பதைக் காண்கிறோம். அக்

காலத்தில் உரை நடை நூல்கள் குறைவாகையாலும், நூல்கள் செய்யுட்களிலேயே பெரும்பாலும் இயற்றப் பட்டு வந்தமையாலும் நூலாசிரியர்கள் வாக்கிய அமைப் பைப்பற்றி அதிகமாக ஆராயவில்லை. வீரமார்த்தாண்ட தேவர் எழுதியுள்ள "பஞ்ச தந்திர வசனம்" என்ற நூலிலும், இராமலிங்க சுவாமிகள் அருளிய "மனுமுறை கண்ட வாசகம்" என்ற நூலிலும் நீண்ட வாக்கியங்களைக் காணலாம். தற்காலத்தில் நீண்ட வாக்கியங்கள் அதிக மாக எழுதப்படுவதில்லை. பெரிய வாக்கியங்கள் எழுதப் புகுந்தால், முன்பின் கருத்து, வாக்கியப் பிரிவுகள், ஆரம்பம், முடிவு ஆகியவை முரணுகக் கூடும். ஆகை யால் சிறு சிறு வாக்கியங்களாக எழுத முயலுவதே நல்லது.

பத்தி ஒழுங்கு

தற்கால நூல்களில் ஒவ்வொரு அத்தியாயத்திலும் பல பிரிவுகள் காணப்படுவதையும், ஒவ்வொரு பிரிவின் முதல் வரியும் சிறிதளவு வலதுபுறம் தள்ளியிருப்பதையும் காணலாம். இப் பிரிவுகளுக்குப் பத்திகள் (Paragraphs) என்று பெயர். படிப்பதற்கு எளிதாக இருக்கும் பொருட்டே பத்திகள் அமைக்கப்படுகின்றன. ஒரு புதிய பத்தி ஆரம்பித்தால், அதில் காணும் விஷயம் வேறு என்று அறியவேண்டும். பத்திகளாகப் பிரிக்கப்படாத ஒரு கட்டுரையைப் படிப்பதற்கு கவர்ச்சி ஏற்படாது. பத்தி என்பது அநேக வாக்கியங்களால் தொகுக்கப்பட்டு, ஒரு பொருளைப்பற்றிய சம்பந்தமுள்ளதா யிருப்பது என்னலாம்; அல்லது, ஒரு பொருளை விளக்கக்கூடியவை யாயும், ஒன்றுக்கொன்று சம்பந்தமும் உள்ள அநேக வாக்கியங்கள் சேர்ந்தது என்றும் வரையறுக்கலாம். எண்ணங்களில் உண்டாகும் மாறுதல்களுக்கு ஏற்றவாறு பத்திகள் அமையவேண்டும். பத்திகளின் அளவைப் பற்றி ஒரு வரையறையும் இல்லை. அவை நீண்டும் குறுகி யும் இருக்கலாம்.

ஒரு பத்தியில் ஒரே ஐக்கியபாவம் நிரம்பியிருக்க வேண்டும். ஒரு வாக்கியம் எப்படி ஒரு கருத்தைத் தெரி

விக்கின்றதோ, அவ்வாறே ஒவ்வொரு பத்தியும் ஒரு விஷயத்தைப்பற்றிய தொடர்ந்த கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். பத்தியிலுள்ள ஒவ்வொரு வாக்கியமும் மற்றொன்றுடன் நெருங்கிய சம்பந்தம் கொண்டு இருப்பதுடன், பத்தியின் முக்கிய விஷயத்தைப் பற்றியதாகவே இருக்கவேண்டும். ஒரு பத்தியில் முதல் வாக்கியமும், கடைசி வாக்கியமும் வெகு முக்கியமான பகுதிகள். பத்திகள் ஒரே அளவுள்ளவைகளாக இராமல், நீண்டும் குறுகியும் இருப்பின் படிக்கச் சுவையளிக்கும்.

பத்திகளின் அமைப்பு

ஒருவர் கூறும் சொற்களை அவர் கூறியவாறே எடுத்துரைப்பின், அச்சொற்கள் 'நேர் கூற்று' எனப்படும். பிறர் சொற்களை மாற்றிப் படர்க்கை நிலையில் கூறினால், அதற்கு 'அயற்கூற்று' எனப் பெயர்.

நேர்கூற்றும் அயற்கூற்றும்

(உ-ம்) தகப்பனார், "கந்தா! நீ இன்று கோயிலுக்குச் சென்றாயா?" என்று கேட்டார் — நேர் கூற்று. தகப்பனார் கந்தனை, அவன் இன்று கோயிலுக்குச் சென்றானா என்று கேட்டார் — அயற்கூற்று.

நேர்கூற்றுச் சொற்களை உபயோகிக்கும் பொழுது "........." என்ற மேற்கோள் குறிகளிட்டு எழுதவேண்டும். அயற் கூற்றில் இக் குறியீடுகளை எடுத்துவிடல் வேண்டும்.

தனி வாக்கியங்களைப் பிழையறப் பேசவும் எழுதவும் பயின்ற பின், ஐக்கியபாவம் ஊடுருவிச் செல்லும்படியான பல வாக்கியங்கள் அடங்கிய கட்டுரைகளை எழுதப் பழகவேண்டும். ஆரம்ப நிலையில் குழந்தைகளுக்குக் கவர்ச்சியளிக்கக்கூடிய கட்டுரைகள் கதைகளே யாகும். ஆரம்ப வகுப்பிலுள்ள குழந்தைகளுக்கு எளிய கதைகளைச் சிறு சிறு வாக்கியங்களில் விளக்கிச் சொல்லுவதற்குப் பழக்கவேண்டும். இயல்பாகவே கதை

தொடர்ந்த வாக்கியங்கள்

கேட்பதில் குழந்தைகட்கு விருப்பம் உண்டு. பல சிறு கேள்விகளின் மூலமாக ஆசிரியர் குழந்தைகளுடைய உற்சாகத்தைக் கிளப்பவேண்டும். கதையைப் பெருக்கவும் சுருக்கவும் தேவையான முறைகளை ஆசிரியர் அனுசரிக்க வேண்டும். பல கதைகளை வாய்மொழியாகச் சொல்லிப் பழகிய பின்னர், அவற்றை மாணவர்கள் எழுதிப் பழகவேண்டும்.

கதை வகைகள்

கதைகளில் பல வகைகள் உண்டு. பிறர் சொல்லக் கேட்ட கதைகள், சுயமான கற்பனு சக்தியினுல் அமைக்கப்பட்ட கதைகள் என இரு முக்கியமான பிரிவுகள் உண்டு. பெருங் கதைகள், சிறு கதைகள் என்றும் பிரிக்கலாம். கற்பனைகளும், பல அனுபவங்களும் நிறைந்த கதைகளை 'நவீனம்' என்பர். சிறு கதைகள் ஒரு சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டவை. கொடுக்கப்படும் பல சிறு குறிப்புகளைக்கொண்டு சிறு கதைகளை எழுதப் பழகலாம். ஒரு கதையில் கடைசிப் பகுதியை மட்டும் கொடுக்காமல், அதை முடித்துப் பூர்த்தி செய்யுமாறு பரிசோதிக்கலாம். கதையின் முடிவையும் ஆரம்பத்தையும் கொடுத்து, நடுப்பாகத்தை எழுதச் செய்யலாம்.

பயிற்சிக்கேற்ற கதைகள்

நம்மிடையே பல கதைகள் வழங்கி வருகின்றன. தங்களுடைய அனுபவங்களை விளக்கக்கூடிய ஒன்றிரண்டு சம்பவங்கள் நிறைந்த கதைகளையே சிறு குழந்தைகள் பெரிதும் விரும்புவார்கள். ஆச்சரியம் நிரம்பிய கதைகள், தேவதைக் கதைகள் என்ற பலவற்றைக் குழந்தைகள் விரும்புவார்கள். மிருகங்களுடைய கதைகள் இன்னும் பிரீதியளிக்கும். குழந்தைகளின் மனோ நிலைமைக்கு ஏற்ற கதைகளை ஆராய்ந்து எடுக்க வேண்டும். நமமிடம் பல புராணக் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், மரியாதை ராமன் தெனுலிராமன் கதைகள், ராயர் அப்பாஜி கதைகள், அராபிக் கதைகள் என்ற பல கதைகள் இருக்கின்றன. இக் கதைகளால், குழந்தைகளுக்கு உற்சாகமும் ஆவலும் ஏற்படும். முதல்

இரண்டு வகுப்புக்களில் கதைகளை வாய் மொழியாகச் சொல்லச் செய்தும் மேல் வகுப்புக்களில் எழுதியும் பயிற்சியளிக்க வேண்டும்.

கடிதம் வரைதல்

தற்காலத்தில் கடிதம் வரைதல் ஒரு கலை என்று கருதப்படுகின்றது. தொலைவிலுள்ளவர்களுக்கு எழுத்து மூலமாகத்தான் நமது கருத்துக்களை அறிவிக்க முடியும். கருத்துக்களைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்; பிறர் மனத்தைக் கவரும் வகையில் எழுத வேண்டும். வாக்கியங்களின் அமைப்பும் அழகும் கவனிக்கப்பட வேண்டும். நேருக்கு நேராகப் பேசமுடியாத பல விஷயங்களைக் கடிதங்களின் மூலம் வெளியிடலாம். பல பெரியார்கள் எழுதியுள்ள கடிதங்களை ஊன்றிப்பார்த்தால், கடிதம் எழுதுவது ஒரு கலை எனத் தோன்றும். ஆங்கிலத்தில் செஸ்டர்பீல்டு பிரபு (Lord Chesterfield) தமது மகனுக்கு எழுதிய கடிதங்கள், சுவாமி விவேகாநந்தரின் கடிதங்கள், பண்டித ஜவஹர்லால் நேரு தமது குமாரி இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள் ஆகியவை இலக்கியச் சிறப்பு வாய்ந்தவை. இவ்வகைக் கடிதங்கள் தமிழில் வெகு குறைவு.

கடிதத்தின் அம்சங்கள்

நன்கு வரையப்பட்ட ஒரு கடிதத்தில் பல அம்சங்கள் உண்டு. எழுதும்பொழுது வலது புறத்து மூலையில் கடிதம் எழுதும் இடத்தின் பெயரும், எழுதும் தேதியும் குறிக்கவேண்டும். இடது புறத்து மூலையில் எழுதுபவரின் பெயரும் விலாசமும் எழுத வேண்டும். யாருக்குக் கடிதம் எழுதுகிறோமோ அவரை எவ்விதம் அழைப்பது என்று நிதானித்து இடது புறத்திலிருந்து எழுதவேண்டும். பின்னர், கடிதத்தில் எழுத வேண்டிய விஷயங்கள் கவனம்பெற வேண்டும். எழுதுபவருடைய கருத்துக்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் அழகாகவும் அமையவேண்டும். பிறகு கையெழுத்துக்கு முன்னால் வணக்கச் சொற்றொடர்கள் எழுதவேண்டும். விலாசமிட்டவரை அனுசரித்து இவை மாறுபடும்.

பலவகைக் கடிதங்கள்

கடிதங்கள் பலவகைப்படும்—உறவினர்களுக்கு, பெற்ரோர்களுக்கு, வியாபார விஷயமாக, விண்ணப்பங்கள் எனப் பலவகைகளாகப் பிரிக்கலாம். கீழே சில மாதிரிக் கடிதங்க்ள கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. பெற்ரோருக்குக் கடிதம் :—

R. சந்திரசேகரன், 18, வடக்கு மாசி வீதி,
மதுரை,
28-3.1942.

என் பிரியமுள்ள தகப்பனுருக்கு,

சந்திரசேகரன் செய்யும் நமஸ்காரம். அநேக நாட்களாக எனக்கு நீங்கள் கடிதமே எழுதவில்லை. அங்கு எல்லாருடைய நலத்தைப்பற்றியும் எனக்குக் கவலையாக இருக்கிறது. எனக்கு உங்கள் எல்லாரையும் பார்க்க வேண்டும் என்று ஆவலாக இருக்கிறது. சமீபத்தில் வரும் விடுமுறை நாட்களில் வரலாமென்று நினைக்கிறேன்

ஆனல், அங்கு நான் வருவதற்குமுன் என் நண்பன். கேதாரியுடன் அவனுடைய கிராமமாகிய குளத்தூருக்குப் போய்வரவேண்டும் என்று விரும்புகிறேன். என்னை வரும்படி அவன் வற்புறுத்துகிறுன். அங்குச் சென்று திரும்ப, எனது செலவுக்கு ரூபாய் பத்து அனுப்புமாறு கோருகிறேன்.

அன்புள்ள,
R. சந்திரசேகரன்.

விலாசம் :—
ஸ்ரீ கே. இராமநாதய்யர்,
இராமலிங்கபுரம்,
வராகனூர் போஸ்டு, மதுரை ஜில்லா.

(2) மகனுக்குக் கடிதம் :— இராமலிங்கபுரம்
K. இராமநாதய்யர், 1—4—42.

பிரியமுள்ள சந்திரனுக்கு,

அநேக ஆசிர்வாதம். நீ விரும்பியபடியே பத்து ரூபாய் மணியார்டர் செய்திருககிறேன். பெற்றுக்

கொண்டு குளத்தூருக்கு உன் நண்பனுடன் சௌக்கியமாகச் சென்று வா. ஆனால், உன்னைப் பார்க்க உன் தாயார், மணி, நான் எல்லோரும் ஆவலாயிருக்கிறோம். சீக்கிரம் வந்துசேர்வாய் என்று எதிர்பார்க்கிறோம். உன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்:—

உன் அன்புள்ள,
K. இராமநாதய்யர்.

விலாசம் :—
ஸ்ரீ R. சந்திரசேகரன்,
18, வடக்கு மாசி வீதி,
மதுரை.

(3) S. இராமச்சந்திரன்

49, ரங்கநாத முதலி தெரு,
வேலூர்.
15—4—45.

ஐயா,

கீழேகண்ட புத்தகங்களைத் தபால் பார்சல் மூலமாக எனக்கு அனுபபுமாறு கோருகிறேன். பணம் செலுத்திப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

1. பாலர் தமிழ் வாசகம்—*1* முதல் 5 புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் 15 பிரதிகள்.
2. செந்தமிழ் இலக்கியத்திரட்டு— 1, 2 புத்தகங்கள் ,, 28 ,,

தங்கள் உண்மையுள்ள,
S. ராமச்சந்திரன்.

விலாசம் :—
பழனியப்பா பிரதர்ஸ்,
புத்தக வியாபாரிகள்,
திருச்சிராப்பள்ளி.

(4) பழனியப்பா பிரதர்ஸ்,

திருச்சிராப்பள்ளி,
19—4—46.

ஐயா,

தாங்கள் கோரிய புத்தகங்களைத் தபால் மூலமாக இன்று அனுப்பியிருக்கிறோம் இத்துடன் விலைப்பட்டியும்

அடக்கம் செய்திருக்கிறோம். புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

தங்கள் உண்மையுள்ள,

* * * *

நிர்வாகி.

விலாசம் :

ஸ்ரீ S. இராமச்சந்திரன்,
49, ரங்கநாத முதலி தெரு,
வேலூர்.

(5) நண்பனுக்கு எழுதும் கடிதம் :—

எம். சோமசுந்தரம்

36, செல்லமையர் தெரு,
தியாகராய நகர்,
சென்னை. 29—7—45.

என் அன்பார்ந்த நண்பா,

சில முக்கியமான அலுவல்களை முன்னிட்டு அடுத்த ஞாயிற்றுக்கிழமை நான் அவ்விடம் வரவேண்டும் என்று இருக்கிறேன். நீ ஊரில் இருப்பாய் என்று எதிர்பார்க்கிறேன். அங்குள்ள என்னுடைய நிலங்களைப் பார்த்துப் பல மாதங்கள் ஆகிவிட்டபடியால், அவற்றைக் காண வேண்டும். என்னுடன்கூட முருகேசனும் வர ஆவலாயிருக்கிறான்; அவனையும் அழைத்து வருகிறேன்.

நீயும் உன் மனைவியும் குழந்தைகளும் சுகமே என்று எண்ணுகிறேன்.

உன் பதிலை எதிர்பார்க்கிறேன்.

உன் பிரியமுள்ள நண்பன்,
எம். சோமசுந்தரம்.

விலாசம் :—

திரு. விநாயக முதலியார்,
காட்டுப்பாக்கம்,
செங்கற்பட்டு ஜில்லா.

(6) P. தங்கசாமி

14, அருணாசலம் ரோடு,
இரத்தினசபாபதிபுரம்,
கோயமுத்தூர்,
28—12—45.

முனிசிபல் கமிஷனர்,
நகராண்மைக் கழகம்,
கோயமுத்தூர்.

ஐயா,

நான் குடியிருக்கும் அருணாசலம் தெரு புதிதாக அமைக்கப்பட்டது இதற்கு இன்னும் பல வசதிகள் ஏற்படவில்லை. தண்ணீர்க் குழாய்கள், வடிகால் வசதிகள், மின்சார விளக்குகள் முதலிய சௌகரியங்கள் எங்களுக்கும் கிடைக்கும்படி உடனே ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். தேவையான சுகாதார ஏற்பாடுகளும் செய்து கொடுக்குமாறு கோருகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
P. தங்கசாமி.

கடிதங்களின் அமைப்பு

மேலேகண்ட பல கடிதங்களின் அமைப்பைக் கவனிக்கவும். கடிதங்களில் அநாவசியமாகப் பீடிகை எழுதக் கூடாது. சொல்லவேண்டிய விஷயங்களை முதலிலேயே தெரிவிக்க வேண்டும். காலதாமதம் செய்து பல விஷயங்களைத் தெரிவித்த பின்னர், முக்கியமான விஷயத்தை எழுதுவது உசிதமில்லை.

நீண்ட கட்டுரைகளையும் கதைகளையும் சுருக்குவதும் சில குறிப்புக்களின் உதவியால் பெருக்குவதும் ஒரு வகைப் பயிற்சியாம். இவை சொந்த நடையில் இருக்கவேண்டும். செய்யுள் நடையில் இருப்பவற்றை உரைநடையில் பொருளும் நயமும் குறையாமல் எழுதப் பழக்கவேண்டும். சம்பாஷணைகள் எழுதுவதும் அவசியமே. இயல்பாகத் தோன்றும் உள்ளக் கருத்துக்களை சாதாரணப் பேச்சு நடையிலேயே வெளிப்படுத்த வேண்டும். பல சொற்களை அடுக்குவது சம்பாஷணையல்ல; பேசுகிறவர்களுடைய நிலைமைக்குத் தகுந்தபடியே சொற்களை அமைக்கவேண்டும்; வாக்கியங்களும் சிறு வாக்கியங்களாக இருக்கவேண்டும்.

சுருக்குதலும் பெருக்குதலும்

இரண்டாம் பாகம்

1. கல்வித்திட்டமும் தாய்மொழிப் பயிற்சியும்

மானிட வாழ்க்கையின் சிறப்புக்கு மொழியே முக்கியமான காரணமாகும். ஆதிகால மனிதன் இயற்கையுடன் இயைந்த ஏகாந்த வாழ்க்கையை நடத்தினன். அப்பொழுது மொழிக்கு அவசியம் ஏற்படவில்லை. பின்னர், மானிடர் கூட்டு வாழ்க்கையை மேற்கொண்டனர். அதன பலனாகத் தங்கள் உள்ளக் கருத்துக்களை ஒவ்வொருவரும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. முதன் முதலில் தமது உட்கருத்தை வெளிப்படுத்த மனிதர் பலவித சைகைகளையும், முகக்குறிகளையும், உடல் நிலைகளையும் உபயோகித்து வந்தனர். பின்னர், எல்லாச் சீவராசிகளைப் போன்றே மனிதனும் தனது உள்ளக் கருத்துக்களை ஒலிக்குறிகளின் மூலம் வெளிப்படுத்தினன். ஆயினும், பலவகைச் சைகைகளாலும், ஒலிக்குறிகளாலும் மட்டுமே உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களை மனிதன் வெளிப்

மானிட வாழ்க்கையும் தாய் மொழியும்

படுத்தக் கூடவில்லை. இதையுணர்ந்த மனிதன் தனது நீண்ட கால முயற்சியினால் சொற்களையும் சொற்றொடர் களையும் உண்டாக்கி, மொழியை வளர்த்தான். மானிட சமூகம் தோன்றியபொழுதே மொழி தோன்றவில்லை என்பது இதினின்றும் வெளிப்படையாகின்றது. பிற் காலத்தில் தோன்றி வளர்ந்த மொழி, சமூகவாழ்க்கைக்கு இன்றியமையாததாக விளங்குகின்றது. முதன்முதலில் பேச்சு வாயிலாகவே மொழி வளர்ந்து வந்தது. ஆனால், வாய்மொழியின் மூலம் தொலைவிலுள்ளவர்களுக்குக் கருத்துக்களை அறிவிக்க இயலவில்லை; பிற்காலச் சந்ததி களுக்குத் தேவையான பல அறிவு நூல்கள் நிலைத் திருக்கச் செய்ய முடியவில்லை. இக் குறையைத் தீர்க்க எழுத்துக்கள் தோன்றின. முதலில் எழுத்துக்கள் சித்திர உருவில் அமைந்திருந்தன; புராதன எகிப்திய எழுத்துக்கள் இவ்வகைப்பட்டவை. ஆனால், தனது ஆராய்ச்சித் திறமையினாலும், புத்தி சாதுரியத்தினாலும் மனிதன் ஒலிவடிவாக இருந்த எழுத்துக்களுக்கு வரி வடிவத்தை அளித்தான். இவ்வாறு எழுத்து வளர்ந்தது. இதையும் தன் வாழ்க்கைக்கு அனுகூலமாக மனிதன் ஏற்றுக்கொண்டான். ஆதியில் உலகமுழுதும் ஒரே மொழி இருந்திருக்க வேண்டும். பின்னர், மக்களின் கூட்டு வாழ்க்கை நிலைக்கத் தொடங்கியவுடன், போக்கு வரவு சாதனக் குறைகளாலும், இயற்கை மாறுபாடுகளா லும், பழக்கவழக்கங்களின் வேற்றுமையாலும், பல சமூகங் களுக்குள் தொடர்பு அற்றுப்போனபடியாலும், ஆங் காங்கு பல்வேறு மொழிகள் தோன்றின. ஒரு குழந்தை பிறந்ததுமுதல், தன் பெற்றோரிடமும் சுற்றத்தாரிடமும் சமூகத்திலுள்ளவர்களிடத்திலும், கேட்டும் பேசியும் பழகியும் வரும் மொழியைத் தாய்மொழி என்கி றோம். தாய்மொழியே குழந்தைகட்கு இயல்பான மொழி. கனவிலும் நனவிலும் அவர்கள் தாய்மொழியிலேயே சிந்திக்கின்றனர்; அவர்களுடைய உற்றாரிடத்திலும் மற்றாரிடத்திலும் பேச்சும், பாட்டும், உறவாடலும் தாய் மொழியிலேயே நடைபெறுகின்றன. ஆகையால், பாலப் பருவத்தில் கற்க வேண்டிய மொழி, தாய்மொழியே

யாகும். இதை நன்கு கற்ற பிறகே, குழந்தைகள் பிற மொழிகளைக் கற்கவேண்டும்.

சமூக வாழ்க்கைக்குத் தாய்மொழி இன்றியமையாதது. நமது உள்ளத்தில் உதிக்கும் கருத்துக்களைச் சொற்கள் பிரதிபலிக்கச் செய்கின்றன.

தாய் மொழியின் இன்றியமையாமை

நமது சிந்தனைகளை உருவாக்கித் தெளிவுபடுத்தத் தாய்மொழி உதவுகின்றது. சிந்தனைப் போக்குக்கு இன்றியமையாத கருவி, பொதுவாக மொழியும், சிறப்பாகத் தாய்மொழியுமாகும். மொழி வளர்ச்சியை அனுசரித்தே அறிவு வளர்ச்சியும் ஏற்படும்; மொழி வளர்ச்சியோ சிந்தனைப் போக்கைத் தழுவுகின்றது. ஆகையால், சிந்தனையும் மொழி வளர்ச்சியும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன; ஒன்றை நீக்கி மற்றொன்றை வளர்க்க முடியாது. ஆனால், சிந்தனைகள் தாய்மொழியில்தான் தோன்றக்கூடும்; வேற்று மொழிகளில் தோன்ற; ஏனெனில், குழந்தைகட்குத் தாய்மொழியில்தான் இயற்கையான பழக்கம் உண்டு. சிந்தனைகளை வளர்க்கவும், அறிவை விசாலிக்கவும், ஒருவர் கருத்துக்களை மற்றவர்க்கு அறிவிக்கவும், முன்னோர்கள் எழுதி வைத்த அறிவுக் களஞ்சியங்களை அறிந்துகொள்ளவும் தாய்மொழி உதவுகின்றது.

இவ்வாறு இன்றியமையாத தன்மை வாய்ந்த தாய்மொழி, கல்வி முறையில் பல தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. இத் தேவைகள் யாவை என்று அறிந்துகொள்வதற்கு, கல்வித் திட்டத்தின் நோக்கங்களும், தேவைகளும் என்ன என்பதை ஆராயவேண்டும்.

கல்வியும் தாய் மொழியும்

அறிஞர்கள் 'கல்வி'யைப் பலப்பல வகையாக விவரிக்கின்றனர். பொதுவாக, மானிட வாழ்க்கைக்கும் நாகரிக முதிர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் கல்வி இன்றியமையாதது. மானிடராய்ப் பிறந்த யாவரும் கல்வியின் பயனை எய்த வேண்டுமானால், அறிவு வளர்ச்சி பெறவேண்டியது அத்தியாவசியம்; இதைக் கல்வியின் மூலமே பெற இயலும். ஆனால் யாவரும் ஒரே சமமான கல்விப் பயனை அடைய முடியாது. அவரவர்

களுடைய மனோநிலை, சூழ்நிலை, மரபு நிலை, வாழ்க்கை நிலை ஆகியவைகளை யொட்டியே கல்விப் பயனை அடைய முடியும். ஆனால் பொதுவாகக் கூறுமிடத்து, யாவரும் ஒரு குறித்த நிலை வரையேனும் கல்விப் பயிற்சி பெற்றாலன்றி, வாழ்க்கையில் வெற்றி காண முடியாது. இந்த நிலையின் வரம்பு, கால நிலைக்கு ஏற்றபடி மாறுபடக்கூடும். ஒவ்வொருவரும் தமது தாய்மொழியில் தங்கள் கையெழுத்தைச் செய்யும்படியான கல்வியறிவு இருந்தால் போதுமானது என்று சமீபகாலம் வரை கருதப்பட்டு வந்தது. ஆனால் இதன்மூலம் அறிவு வளர்ச்சி ஏற்பட ஏதுவில்லாமலிருந்தது. மேலும் தீவிரமாக ஜனநாயக உணர்ச்சி பரவ ஆரம்பித்தது. இதன் காரணமாக சமூக வாழ்க்கையில் உயர்வு தாழ்வு என்ற தாரதம்மியம் குறையத் தலைப்பட்டது. எல்லோருக்கும் சமமான வசதிகள் வாழ்க்கையில் கிடைக்க வேண்டும் என்ற கொள்கை ஏற்பட்டது. இவ் வசதி கிடைப்பதற்குத் தாங்கள் அருகதையாக இருக்கவேண்டுமாகையால், குறைந்தபக்ஷம் ஒரு சமாசாரப் பத்திரிகையைப் படித்து, அதிலடங்கிய விஷயங்களைக் கிரகித்துக்கொள்ள வேண்டிய அளவுக்கேனும் யாவரும் கல்வி பயில வேண்டும் என்ற கொள்கையை அறிஞர் வகுத்தனர். ஆனால், இப்பொழுது இந்த நோக்கம் மேலும் விரிவடைந்துள்ளது. இதற்கு விஞ்ஞான வளர்ச்சியே முக்கிய காரணம். மனிதன் தனித்து வாழும் பிராணியல்லன்; சமூகத்துடன் நெருங்கிய தொடர்புடையவன். ஒருவன் தன் மட்டில் அறிவு வளர்ச்சி பெற்றால், மானிட வாழ்க்கையில் இலட்சியங்கள் பூர்த்தியாகா. ஆகையால் ஒவ்வொருவனும் தான் பிறந்த சமூகத்தில் ஒரு சிறந்த பிரஜையாக வாழ்வதற்குத் தேவையான கல்விப் பயிற்சியைப் பெறுவதே கல்வியின் நோக்கம் என்பது நவீன காலக் கருத்து. ஜனநாயக ஆட்சி முறையில் ஜாதிமத சம்பிரதாய வேற்றுமைகள் கிடையாததாலும், யாவருக்கும் சமமான வாழ்க்கை நிலையும் சந்தர்ப்பங்களும் அளிக்க வேண்டியிருப்பதாலும், எல்லோருக்கும் பொதுவான பல பண்புகளையுடைய ஒரு கல்வி முறையை அனுசரிப்பின், அத்தகைய கல்வி முறையின் மூலம் பல சமூகத் தலைவர்கள் தோன்றக்

கூடும். இதனால்தான் தொழிற் பயிற்சியுடன் கூடிய ஒரு கல்வித் திட்டம் அவசியம் என்று வற்புறுத்தப்படுகிறது. பின்னும், கிடைக்கப்பெறும் ஜனநாயக ஆட்சியைத் தகாத வழிகளில் செலுத்தாமலிருக்கவும், சமூக வாழ்க்கையைத் தூய்மைப்படுத்தவும், ஆழ்ந்தசிந்தனையை வளர்க்கத் தேவையான சக்தியுடையவர்களைப் படைக்கவும் இக்கல்வி முறை பயன்பட வேண்டும். ஒவ்வொரு பிரஜையும், உலக முன்னேற்றத்திற்கு உதவுவதுடன், தனது அறிவுப் பெருக்கத்திற்கு தேவையான கருத்துக்களையும பழக்கங்களையும் அனுபவங்களையும் கல்வி முறையின் மூலம் பெறவேண்டும். இவ்வகைத் திறமைகளை அளிப்பதற்குத் தாய் மொழியே சிறந்த கருவி; தாய் மொழி மூலமாகத்தான் இவ்வகைக் கல்வியைக் கற்பிக்க முடியும் தாய்மொழிப் பயிற்சியை அநுசரித்தே கல்வி முறையின் காரிய சித்தியை நிர்ணயிக்க முடியும்.

தாய்மொழிப் பயிற்சியின் அவசியம்

மனிதன் தன் மன வளர்ச்சிக்கு வேண்டியவாறு, நாகரிக வாழ்வின் பலன்களைச் சேமித்து, சந்ததிகளுக்கு வழங்க வேண்டும். இவ் வகைச் சேமிப்பை நமது முன்னோர்கள் நூல்களாக இயற்றி வைத்துள்ளனர். இதையே ஒரு சமூகத்தினரின் பொக்கிஷம் எனக் கருதல் வேண்டும். குழந்தைகள் தங்களுடைய சுய முயற்சியாலேயே உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்பது உண்மையேயானாலும், இதனால் காலமும உழைப்பும் சேதமாகும். முன்னோர் கண்டறிந்த உண்மைகள் தொகுக்கப்பட்ட நூல்களை ஆராய்வதால், பல காலம் ஆராய்ச்சி செய்து அவர்கள் கண்ட உண்மைகளை, குறுகிய காலத்தில் சந்ததிகளால் அடைய முடியும். ஆனால் முன்னோர்களின் கலைத் திறமைகள் யாவும் தாய்மொழியிலேயே உள்ளன. ஆகையால் கல்விப் பயிற்சிக்குத் தாய்மொழி இன்றியமையாத அஸ்திவாரம் என்பது வெளிப்படை. மேலும் பல நூல்களைப் படிப்பதன் மூலம கருத்துக்கள் பல தோன்றும்; சிந்தனைகள் தெளிவுபடும். இச் சிந்தனைகளை உருவகப்படுத்தித் தெளிவிக்கவும், அவற்றை நிலைநிறுத்தவும் தாய்மொழியில் சிறந்த பயிற்சி அவசிய

மாகின்றது. தாய்மொழியின் மூலமாகத்தான் எவனொருவனும் தன்னுடைய மனவெழுச்சிகளை வெளிப்படுத்த முடியும்; வேற்று மொழிகளில் நமது உள்ளக் கிளர்ச்சிகளை வெளிப்படுத்த இயலாது. தமிழனொருவன் தனக்கு இன்னல் நேரிடுங்காலத்து, 'ஐயோ! அப்பா!' என்று கதறுவானேயல்லாது 'alas, alas,' என்று ஆங்கிலத்தில் பிரலாபிக்கமாட்டான். தாய்மொழியிலுள்ள சிறந்த இலக்கிய நூல்கள் மனவெழுச்சியைத் தூண்டும் தன்மை வாய்ந்தவை. தாய்மொழியானது, பாடசாலையில் ஒரு தனிப்பட்ட பாடம் அன்று. மற்ற பாடங்கள் யாவற்றையும் தாய்மொழி மூலமாகவே கற்பிக்கிறோமாதலால், தாய்மொழி ஒரு கற்பிக்கும் கருவியாகும். எல்லாப் பாடங்களிலும் தாய்மொழி ஊடுருவிச் செல்லுகின்றது. ஆகையால் கல்விச் சாலைகளில் தாய்மொழி ஒரு தனிப்பட்ட பாடமாக மட்டும் இல்லை. தாய்மொழி மூலமாகச் சிந்தனைகள் விளக்கமடைவதுடன், கற்ற விஷயங்களைப் பிறருக்குத் தெரிவிப்பதற்கும் தாய்மொழி உதவுகின்றது. "கல்விப் பயிற்சிக்குத் தாய்மொழி ஓர் இன்றியமையாத சாதனம்! கல்வி நிலையங்களில் தாய்மொழியைக் கற்பிக்காமல் எந்தப் பாடத்தையும் கற்பிக்கமுடியாது! அதனுடன் வேறு பாடத்தைப் போதிக்காமல் தாய்மொழியைக் கற்பிக்க முடியாது. சுருங்கக்கூறின். ஒரு சிறந்த கல்வி முறையில் தாய்மொழிப் பயிற்சி மிக முக்கியமானது என்பது உண்மை. எவ்வகைக் கல்விப் பயிற்சிக்கும், தாய்மொழிப் போதனை இன்றியமையாத அஸ்திவாரம். தாய் மொழியில் பேச்சு வன்மையும், படிப்புத் திறமையும், எழுதும் ஆற்றலும் உண்டாகாது போனால், நுட்பமான சிந்தனைகளும் உட்கருத்துகளும் தோன்றமாட்டா. சமூக மூதாதையர் சேர்த்துவைத்த பரம்பரை நூல்களை ஆராய்ந்து அனுபவிக்கத் தாய்மொழி பெரிதும் உதவுகின்றது. இந்நூல்களின் மூலம் குழந்தைகள் சிறந்த பண்பாட்டைப் பெறுவதுடன், உயர்ந்த ஒழுக்கத்தையும் நேர்மையான வாழ்க்கை முறைகளையும் அடைகிறார்கள்; அழகுணர்ச்சி, இரசிப்புத் தன்மை, சிறந்த மனவெழுச்சி ஆகிய யாவும் குழந்தைகள் மனத்தில் உருப்படுகின்றன.

ஆனால் நம் நாட்டுக் கல்வித் திட்டத்தில் சென்ற பல ஆண்டுகளாக, தாய்மொழி புறக்கணிக்கப்பட்டு வந்தது. "பிழையறக் கற்ற பின்னரே வேற்று மொழிகளைப் போதனைக் குகந்த கருவிகளாக உபயோகிக்கக்கூடும்" என்ற உண்மையையும், தாய்மொழியில் சிறந்த பயிற்சியின் அவசியத்தையும் அறிஞர் சமீப காலத்தில் உணர்ந்தனர். தமிழ் மக்களாகிய நமக்குத் தாய்மொழி தமிழ். தமிழ் மொழியின் பெருமையை நாம் அறிவது அவசியம். 'அமிழ்தினும் இனியது' என்று இதனைச் சொல்லுவர். இது பண்டைப் பெருமை வாய்ந்தது; இலக்கண விரிவிலும், இலக்கியச் சிறப்பிலும் தனிப் பெருமை வாய்ந்தது. சொல் வளம், பொருள் வளம் பெற்றுப் பல கிளை மொழிகளையும் தோற்றுவித்த தென்மொழி, பேணுவாரற்று இதுகாறும் பதுங்கி நின்றிருந்தது. ஆனால் சில ஆண்டுகளாகப் பண்டைப் பெருமையை மீண்டும் அடைய முயலுகின்றது. எல்லாக் கல்விச்சாலைகளிலும் எல்லாப் பாடங்களும் தமிழ் மொழியின் மூலமாகவே போதிக்க வேண்டும் என்ற அரசியலாரின் உத்தரவு தமிழ் மொழிக்கு ஒரு உன்னத நிலையை அளித்திருக்கிறது. பல அறிவியற் கலைகளும் தமிழில் கற்பிக்கப்படுகின்றன. பல உயர்ந்த நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. தமிழ் கற்பிக்கும் முறைகளிலும் பயிற்சியளிக்கப்படுகின்றன. தமிழுக்கெனச் சர்வ கலா சாலைப் பட்டங்களும் வழங்கப்படுகின்றன. ஆயினும் இன்னும் தமிழ் மொழி சிறப்பெய்தவேண்டும். தமிழ் மடந்தை தன் அற்புத எழிலைப் பலர் அறியத் தெளிவு படுத்த வேண்டும். மாணவர்கள் தமிழ் மொழியில் உயர்ந்த பயிற்சியையும் சிறந்த தேர்ச்சியையும் அடைய வேண்டும்; தமிழில் நல்ல வாக்குவன்மையையும், எழுதும் திறமையையும் பெறவேண்டும். தமிழ் மொழியின் வாயிலாகச் சிந்திக்கும் திறமையை வளர்க்கவேண்டும். தமிழிலுள்ள பண்டை நூல்களைக் கற்பதன்மூலம் தெளிந்த சொல்வன்மை, நேர்மையான சிந்தனை, நல்லுணர்ச்சி, பூர்த்தியான மனவெழுச்சி, சன்மார்க்க நெறிகள் ஆகிய சிறந்த பண்புகளைக் குழந்தைகள் அடைவர்

தமிழும் கல்வித் திட்டமும்

ஆக்கவேலைகளில் குழந்தைகளின் மனத்தை ஈடுபடுத்தத் தமிழ் மொழிப் பயிற்சி உதவவேண்டும். குழந்தைகளுடைய மனிதத் தன்மை நன்கு மலரவும் கல்விப் பயிற்சியில் அவர்களுக்குக் கவர்ச்சி ஏற்படவும், தமிழ்ப் பயிற்சி உதவவேண்டும். தமிழ் இலக்கியம், காவியம் வாயிலாகச் சிறந்த மனவெழுச்சி உண்டாக வேண்டும். இத்தகைய நோக்கங்களைக் கொண்டு, கல்விச்சாலைகளில் தமிழ்ப்போதனையை உருப்படுத்தவேண்டும்.

தமிழ்ப் பயிற்சியின் நோக்கங்கள்

ஆகவே, தமிழ்ப் பயிற்சியின் நோக்கங்களைப் பொது நோக்கம். சிறப்பு நோக்கம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். **பொது நோக்கம்** :—தமிழில் திருத்தமாகப் பேசவும் எழுதவும் படிக்கவும் பயிற்சி அளித்தல். அப்பொழுதுதான் குழந்தைகட்குப் போதுமான மொழிப்பயிற்சி ஏற்படும். குழந்தைகளுடைய சொல்லகராதியைப் பெருக்குவதற்கு வகுப்புக்களில் கீழ்நிலையில் வாழ்க்கையில் உபயோகிக்கும் சொற்களை அறிவதும், உயர்நிலையில் அரிய இலக்கியங்களைப் படித்து இன்புறத் தேவையான சொற்களைப் பற்றிய அறிவைப் பெருக்குவதும் அவசியம். குழந்தைகள் தாமாகவே படிக்க அவர்களுடைய ஆவலைக் கிளப்ப வேண்டும். தமிழ் மொழிப்பற்றும் தேசாபிமானமும் விளைவிப்பது ஒரு முக்கியமான நோக்கம். குழந்தைகள் சிறந்த இலக்கியங்களைப் படித்து இன்புறப் போதுமான தேர்ச்சி அளிக்கவேண்டும். தமிழிலுள்ள பல நீதி நூல்களைப் படித்து நல்லொழுக்கத்தையும் தெய்வ பக்தியையும் வளர்க்க வேண்டும். **சிறப்பு நோக்கம்** :—அந்தந்த நிலையில் வகுக்கப்படும் லட்சியங்களே சிறப்பு நோக்கங்களாம். படிப்பு நிரந்தரமாக நிலைப்பதற்குத் தேவையான மொழிப் பயிற்சியை யளிப்பதே ஆரம்ப நிலையில் சிறப்பு நோக்கமாகும். முதல் மூன்று வகுப்புக்களில் சொல்லாட்சிப் பெருக்கமும், வாசிப்புப் பழக்கமும், பிழையற எழுதுவதும் தேவை. பின் இரண்டு வகுப்புக்களில் மேலும் சொல்லகராதிப் பெருக்கமும், கடிதமெழுதும் திறமையும், செய்தித் தாள்களைப் படிக்கும் பழக்கமும் தேவை. மேல்

நிலையில் பல நூல்களைப் படித்து இன்புறப் போதிய பயிற்சி தேவை.

2. சில போதனு முறைகள்

தமிழ் கற்பிக்க வேண்டிய முறைகள்

சிறந்த ஒரு கல்வித் திட்டத்தில் தாய் மொழியைத் தவிர வேறு முக்கியமான பாடம் இல்லை, கல்விச்சாலைகளில் குழந்தைகளை நாம் வாழ்க்கைக்குத் தயார் செய்கிருேம். வாழ்க்கைக்கு அறிவு வளர்ச்சி அத்தியாவசியம், அறிவு வளர்ச்சிக்கு மொழிப்பயிற்சியே சிறந்த சாதனம்; மொழியும் பொதுவாகத் தாய்மொழியாகவும், நமக்குத் தமிழ் மொழியாகவும் இருக்கவேண்டும். இன்றியமையாத இத்தமிழ் மொழியைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் முறைகள் சிறந்தவைகளாக இருக்கவேண்டும். கல்வித் திட்டத்தில் மொழி எவ்வாறு ஒரு கருவியோ அதுபோலவே மொழியைக் கற்பிக்க, முறைகள் கருவியாகும். கருவிகள் உயர்வாக இருந்தால் நமது வேலையின் திறமும் உயர்வாக இருக்கும். உயர்தரமான கருவிகள் இன்றி, மேல்தரமான வேலையைச் செய்ய முடியாது. முறைகளே கருவிகளான படியால் தமிழ் கற்பிக்க நாம் உபயோகிக்கும் முறைகள், நவீன போதனுமுறைக் கொள்கைகளுக்கு இணங்க அமையவேண்டும். ஏனெனில் பண்டை முறைகளைக் காட்டிலும நவீன போதனுமுறைகளே சிறந்தவை என்று ஆராய்ச்சியின் பயனுகவும், அனுபவ வாயிலாகவும் அறிகிருேம். இம் முறைகளின் பொதுப் பண்புகளை ஆராய்வதற்குமுன், பண்டைமுறைகளின் தனமையைப்பற்றியும், அவற்றில் உள்ள குறைகளைப் பற்றியும் அறிந்து கொள்ளல் வேண்டும். போதனையில் பண்டை முறைகளை நீக்குதல் மட்டும் போதாது; நீக்குவதற்கான காரணங்களையும் அறியவேண்டும்.

பண்டை முறைகளில் ஒவ்வொரு மாணவனுக்கும் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வந்ததனுலும், மனப் பயிற்சியே பெரிதும் போற்றப்பட்டு வந்தது ; பாடங்க

ளெல்லாம் செய்யுள்வடிவில் அமைந்திருந்தன. பண்டைய இலக்கிய, வைத்திய, சோதிட, சமய நூல்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே அமைந்துள்ளதை நாம் காணலாம். அச்சுத் தோன்ருத காலமாதலாலும், காகிதம் உபயோகத்தில் இருக்கவில்லையாதலாலும், உரைநடையில் எழுதுவதனுல் ஓலைச் சுவடிகள் பெருகும் என்பதாலும் செய்யுள் வடிவமே போற்றப்பட்டு வந்தது; செய்யுட்களை நெட்டுருச்செய்து பல நூல்கள் பரம்பரையாக வளர்க்கப்பட்டு வந்தன.

பண்டை முறைகளின் தன்மை

குழந்தைகளை மையமாக வைத்துக் கற்பிக்கவேண்டிய கலைத்திட்டத்தை, அவர்களின் மனநிலைச்கு இணங்க, அமைக்கவேண்டும். குழந்தைகளின் அறிவு ஏக காலத்தில் வளரமுடியாது; சிறுகச் சிறுக மலரவேண்டும். ஆகையால், அவர்களை வாழ்க்கைக்குத் தயார் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் சிறுகச் சிறுக அறிவைப் பெருக்க வேண்டி, அவர்களுடைய மனேபாவத்துக்கு ஏற்ற முறைகளில் பயிற்றுவிக்க வேண்டும். மனப்பயிற்சி தேவை யென்ருலும், கற்கும் பகுதிகளின் காரணகாரிய சம்பந்தங்களை உணர்ந்த பின்னரே இப்பயிற்சி பலன் தரும். குழந்தைகளுடைய அனுபவங்கள் வாயிலாகவே பல உண்மைகளைப் போதித்தல் வேண்டும். போதனையை வாழ்க்கையுடன் இணைக்க வேண்டும். குழந்தைகள் கல்வி நிலையங்களுக்குத் துள்ளிக் குதித்து முகமலர்ச்சியுடன் ஓடவேண்டும். சமூகத்தில் நன்கு சம்பாஷிக்கும் திறமை யுடையவர்களையும், எழுத்து வன்மை பெற்றவர்களையும், பல நூல்களைப் படித்து இன்புறும் மனநிலை உள்ளவர்களையும், கலைச் சாலைகளினின்றும் படைக்கவேண்டும். புதுமுறைகள் இவ்வகைத் திறமைகளை உண்டாக்கக் கூடியனவா என்று அறிவது அவசியம்.

நாம் செய்ய வேண்டுவன

புது முறைகளின் பொதுப் பண்புகள்

புது முறைகள் மேற்கண்ட பல பண்புகளை உண்டாக்கக் கூடியவை. குழந்தைகளின் உள்ளங்களின் தன்மைகளை இம்முறைகள் அடிப்படையாக்க் கொண்டுள்ளன. குருவியின் தலையில் பனங்காயை வைப்பது போன்ற கொடுமை இம்முறைகளில் பேணப்படவில்லை. உள நூல் கொள்கைகளை இம் முறைகள் தழுவுகின்றன. முதியவர்களின் அகக்கண்களால் குழந்தையுள்ளத்தைப் பார்க்கும் தவறு இம் முறைகளில் இல்லை. 'மனப்பாடம்' செய்வதற்குப் பதிலாக, பல அனுபவங்கள் வாயிலாகச் 'செய்து செய்து கற்றல்' இம்முறைகளில் வற்புறுத்தப்படுகின்றது. மொழி வளர்ந்த இயற்கை முறையிலேயே மொழிப் போதனை அமைவதை இம்முறைகள் ஆதரிக்கின்றன. மானிட சமூகம் பல்லாண்டுகள் பயின்ற மொழியை, சந்திகள் சில ஆண்டுகளில் கற்பதற்கு, சமூகத்தில் மொழி வளர்ச்சியடைந்த இயற்கையான வழியே ஏற்றது; இந்த வழியைப் புது முறைகள் வற்புறுத்துகின்றன. புது முறைகவில் குழந்தைகளின் மனிதத்தன்மை மலர்வதற்குச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. குழந்தைகள் பிறக்கும்போதே, சூனியமான மனநிலையில் இராமல் சில இயற்கைக் குணங்களுடன் பிறப்பதால், அவற்றை நல்ல முறையில் வளர்ப்பதே கல்வி முறையின் நோக்கம் என்ற கருத்துக்கிணங்க, புது முறைகளில் குழந்தைகளின் முன்னறிவும் மனவியல்பும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு ஓடியாட வசதியும், சுய முயற்சியால் அறிவு வளரச் சந்தர்ப்பங்களும், தாராளமான (ஆனால் ஒரு கட்டுக்குள்ளடங்கிய சுயேச்சையும் அளிக்கப்படுகின்றன. அசைவின்றி உட்காருவதும், மௌனப் பயிற்சியும் பாடசாலைகளிலிருந்து நீக்க வேண்டிய அவசியத்தைப் புது முறைகள் வற்புறுத்துகின்றன. கடுந்தண்டனை, பயம் போன்ற கொடுமைகளை இம்முறைகள் வெறுக்கின்றன. ஐம்புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற உறுப்புக்களின் தேர்ச்சியே கல்விப் பயிற்சிக்கு அஸ்திவாரம் என்பது புது முறைகளின் பொதுக்கொள்கை. இம்முறைகளில் உற்று

நோக்குவதிலும், நிதரிசனமாக உண்மைகளே உணருவதிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றன. வாய்மொழிப் பயிற்சிக்கும், ஆக்க வேலேகளுக்கும் இம்முறைகளில் முதலிடம் அளிக்கப்படுகின்றது. விளையாட்டுக்கள், உடற் பயிற்சி, சங்கீதம் முதலானவைகளுக்கும் இம்முறைகளில் இடம் உண்டு. இப்பொதுப் பண்புகள் பல நவீன போதனு முறைகளில் காணப்படுகின்றன. அவற்றில் விளையாட்டு முறை, நடித்தல் முறை, தனித்த முறை, சுய நோக்க முயற்சி முறை என்பன முக்கியமான முறைகள். ஆனுல் முறைகளே முடிவுகளல்ல. முறைகள் யாவும் நாம் அடையவேண்டிய முடிவுகளுக்குச் செல்லும் பாதைகள். முறைகளேப் பெருமைப்படுத்தி முடிவுகளே அலட்சியம் செய்யலாகாது.

ஆனுல் ஒரு பொருளேப் போதிக்க ஒரே முறையை நாம் பின்பற்றக்கூடும். இதனுல் போதனே உயிரற்றுப் போகும்; குழந்தைகள் அடையவேண்டிய பலன் ஏற்படாது. ஆகையால், தேவையான காலங்களில் முறைகளே மாற்றிக்கொள்ள வேண்டும். ஒரே முறையில் கற்பித்தால், கற்பித்த பொருளில் அடங்கிய கருத்துக்களே மாணவன் மறந்துவிட்டால், பின்னர் அவற்றை ஞாபகத்துக்குக் கொண்டுவர முடியாது. பல புலன்களின் வாயிலாகப் போதனே அளித்தால், பல முறைகள் அனுஷ்டிக்கப்படுவதுடன், கற்பித்த விஷயம் மனத்தில் வேரூன்றும்; அறிவும் நிலேத்து நிற்கும். ஆனுல் அநேக முறைகளே உபயோகிப்பது நன்மை பயக்கும் என்ருலும், ஒவ்வொரு பொருளேயும் பல முறைகளிலும் கற்பிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லே. ஏனெனில், ஒரு முறையிலும் பற்று உண்டாகாமல், மனக் குழப்பம் ஏற்படவும் அது ஏதுவாகும், அவ்வாறு நேரிடாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

ஒரு எச்சரிக்கை

விளையாட்டு முறை :—நவீன போதனு முறைகள் யாவற்றிலும் 'செய்து செய்து கற்றல்' என்ற கற்றல் விதியே பிரதானமானது. சுறுசுறுப்பாக இருப்பதே குழந்தைகளுக்கு இயற்கை. அவர்களுடைய சுறுசுறுப்பைக் கற்றலுக்கு நாம் வசியப்படுத்திக் கொள்ளவேண்டும். "'கல்வி' என்பது ஐம்புலன்களுடைய பயிற்சி" என்று பிரெஞ்சு நாட்டுப் பெரியாரான ரூஸோ வற்புறுத்தினர். 'பெஸ்டலோஸி' என்ற ஸ்விட்சர்லாந்து அறிஞர் 'இயற்கை நிலையில் கல்வி பயிற்றல்' நடைபெறவேண்டுமென்றும் 'உற்று நோக்குதல், செய்து கற்றல் முடிவுகளை ஒத்திட்டுப் பார்த்தல், நிதரிசன முறைப்போதனை' என்பவைகளையும் வற்புறுத்தினர். சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் ஜெர்மனியில் இருந்த 'பிரோபெல்' என்ற பேராசிரியர் தாம் நடத்தி வந்த கல்வி நிலையத்தைச் 'சிசுக்களின் நந்தவனம்' என்ற பொருளுடைய 'கிண்டர் கார்டன்' என்ற பெயரால் அழைத்தார். குழந்தைகள் தங்களுடைய இயற்கைப் பற்றுதல்களால் உண்டாகும் செய்கைகள் வாயிலாகவே திறமையுடன் கற்கமுடியும் என்ற கொள்கையை வகுத்து, இப்பெரியார்கள் கல்வி கற்பித்து வந்தனர். குழந்தைகளின் மூல ஆசைகள், சிசுப்பருவத்தில் விளையாட்டுக்களின் மூலமாகவே வெளிப்படுகின்றன. விளையாட்டுக்கள் குழந்தைகளுடைய சுபாவச் செயல்கள். அவர்கள் விளையாடும்பொழுது, தம்மையும் மறந்து விளையாட்டில் ஈடுபடுகிறார்கள்; கற்றுக் கொள்ளவேண்டிய பொருள்களை, விளையாட்டுக்களின் மூலமாக இயல்பாகவே கற்றுக் கொள்ளலாம். இம்முறையில் விளையாட்டு முக்கியமானது. பல விளையாட்டுக்களின் மூலம் கற்கவேண்டியவற்றைக் கற்பிக்கவேண்டும் என்பதே இம்முறையின் நோக்கம். விளையாட்டு மனப்பான்மை வேலையில் கவர்ச்சியை உண்டாக்குகிறது. இம்முறையில் குழந்தைகள் கற்பது 'ஏட்டுச்சுரைக்காய்' அல்ல. விளையாட்டுக்களின் மூலம தன்னம்பிக்கை, கூட்டுப் பொறுப்பு, ஒற்றுமை மனப்பான்மை முதலிய பண்புகள் பாலர்களிடம் உண்டாகும். பல வாழ்க்கைச் சம்பவங்களை வகுப்

சில பொதுப் பண்புகள்

பறையில் விளையாட்டுக்களைப் போன்று நடத்தலாம். கடைக் காட்சிகள், ஆபீஸ் அலுவல்கள், நியாயஸ்தலம் போன்றவற்றை விளையாட்டுக்களாக நடத்தக்கூடும். நடிப்பு, சம்பாஷணை, கடைவைத்தல், கைத்தொழில் போன்றவைகளை விளையாட்டாகவே நடத்துவதால், குழந்தைகள் பல உண்மைகளை அறிந்து கொள்ளு கின்றனர். மேலும் கைத்தொழிலின் அவசியத்தையும் உயர்வையும் அறிகின்றனர்.

பிரோபெல்லின் கொடைகள் : பிரோபெல் போன்ற பேரா சிரியர்கள் ஐம்புலப் பயிற்சியின் அவசியத்தை வற்புறுத் தும்போது பிரொபெல்லின கோட்பாடுகள் விளையாட்டு முறையே சிலாக்கியமெனக் கருதினர்கள். குழந்தைகள் வளரும் தாவரங்களுக்கு ஒப்பிடப்பட்டு, ஆசிரியர் தோட்டக்காரர்களாகக் கருதப்பட்டனர். 'சிசுக்களின் நந்தவனங்'களில், குழந்தைகளுக்கு இயற்கை வேகமான விளையாட்டுக்களின் வாயிலாகவும், ஐம்புலன்களின் பயிற்சி மூலமாகவும், கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. இதற்கென பிரோபெல் உபயோகித்த உபகரணங்களுக் குக் 'கொடைகள்' (gifts) என்று பெயர். ரூஸோ, பெஸ்ட லோஸி, பிரோபெல் என்ற இப் பெரியார்களின் முக்கிய நோக்கம் குழந்தைகளின் அறிவை விளையாட்டு முறையில் புலனுணர்ச்சிகளின் மூலம் விருத்தி செயவதுதான். குழந்தைகளின் சுறுசுறுப்பை 'விஷமம்' என்று கரு தாமல், அவை சரீர வளர்ச்சிக்குத் தேவையான இயக்கங் கள் எனக் கருதவேண்டும். சரீர வளர்ச்சிக்கு ஆட் டம், ஓட்டம், விளையாட்டு ஆகியவை இன்றியமையாத இயக்கங்கள். மணலிலும் தண்ணீரிலும் விளையாடக் குழந்தைகளுக்கு இயற்கையான ஆவல் உண்டு. 'கொடைகளை' உபயோகிப்பதன் நோக்கம் என்னவென் ருல், இக் கருவிகளை உபயோகித்துப் பல விளையாடல் களின் மூலம் அநேக விஷயங்களைக் குழந்தைகள் கற்க உதவுவதுதான். கட்டைகள், பந்துகள், அட்டைத் துண்டுகள் முதலியவைகள் பிரோபெல் என்ற அறிஞ ரின் 'கொடைகள்' இவற்றை உபயோகித்து, குழந்தை களே பல உருவங்களைச் செய்வதனுல். அவர்களுககு மனேசக்தி உண்டாகின்றது. 'கொடைகளை' உபயோ

இத்துப் பல உருவங்கள் செய்து கற்ற பின்பு, அவை போல களிமண்ணினால் உருவங்கள் செய்யலாம். ஆரம்ப நிலையில் பொருள்களைப் பார்த்தும், பிறகு பாராமலும் இதே உருவங்களைச் செயயலாம். அவ்வாறு செய்தால் தான் அவவுருவங்கள் மனத்தில் ஊன்றும். பிரொபெல்லின் கோட்பாடுகள் மூன்று—அவை (1) குழந்தைகளின் மனத்தைக் கட்டுப்படுத்தாமல் சுயேச்சையாக வளரவிடுவது. (2) சுயேச்சையான மனோ வளர்ச்சிக்கு ஏற்ற செய்கைகள். (3) பல செய்கைகளுக்கிடையில் ஒரு ஐக்கியபாவம் ஊடுருவிச் செல்லுதல் என்பனவாம்.

மாண்டிஸோரி முறை

பஞ்சேந்திரியங்கள் வாயிலாகவே குழந்தைகள் கல்வி கற்கின்றனராதலால் அவற்றைச் சரிவரப் பழக்குவதே குழந்தைகள் கல்வி பயிலச் சிறந்த சாதனம் என வற்புறுத்துகிறார் மாண்டிஸோரி என்ற இத்தாலிய அம்மையார். ஐம்புலன்களைப் பழக்கப் பல சாதனங்களை அம்மையார் கண்டு பிடித்திருக்கிறார், "ஐம்புலன்களாகிய ஐந்து வாயில்களே கல்வி புகும் மார்க்கங்கள் ; அவற்றைச் சரிவரப் பழக்குவதே கல்வி" என்பது இவ்வம்மையாரின் கோட்பாடு. இதுவும் ஒரு விளையாட்டு முறைதான்.

விளையாட்டு ஒரு மனப்பான்மை

குழந்தைகளுக்கு 'விளையாட்டு' இயற்கையான ஒரு இயக்கம். விளையாட்டும் உத்ஸாகமும் அவற்றில் ஈடுபாடும் குழந்தைகளுக்கு அதிகம். இதை ஒருவகை மனப்பான்மை என்று கூறலாம், பெரியவர்களுக்கும் இவ்வித மனப்பான்மை உண்டு ; ஆனால் குழந்தைகளிடம் இது அபரிமிதமாக உண்டு. பல மக்களும் மாக்களும் தங்களுக்கு நேரிடையாகப் பலன் அளிக்காத பல இயக்கங்களினால் மகிழ்ச்சியடைவதை நாம் பார்க்கிறோம். இவ்வியக்கங்களின் வாயிலாகக் கிடைக்கும் மகிழ்ச்சியே, அவர்கள் இவற்றில் ஈடுபடக் காரணம். இவ் வியக்கங்களையே விளையாட்டு என்கிறோம்.

விளையாட்டுக்கு மூலகாரணம் என்ன என்பதைப் பற்றிக் கருத்து வேற்றுமை உண்டு. குழந்தைகளுக்குத் தங்கள் தற்காப்புக்குத் தேவையான சக்திக்கு அதிகமான சக்தியிருப்பதனால் அச்சக்தி விளையாட்டுக்களின் மூலமாக வெளிப்படுகின்றது என்பது

விளையாட்டுக்கு மூல காரணம்

ஒரு சாரார் கருத்து. ஒரு நீராவியந்திரம், தேவைக்கு அதிகமாயுள்ள நீராவியை எப்படி வெளிவிடுகின்றதோ அம்மாதிரியே குழந்தைகளின் அதிக சக்தி விளையாட்டுக்களாக வெளிப்படுகின்றது. ஆனால், இது எப்போதும் உண்மையன்று. நோயாளிகளும, கிழவர்களும், பெண்பாலரும்கூட விளையாட்டை விரும்புகின்றனர். இவர்களுக்கு விளையாட்டு ஒரு பொழுதுபோக்கு. இவர்களுக்கு அதிக சக்தி இல்லை. ஆகையால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இக்கொள்கை உண்மையில்லை. மற்றொரு சாரார் "மனித வர்க்கத்தினர் ஆதிகாலத்தில் அடைந்த அனுபவத்தை, குழந்தைகள் குறுகிய காலத்தில் செய்கின்றனர்" என்று விளையாட்டுக்களைக் கருதுகின்றனர். பல நாகரிகமற்ற செயல்கள் விளையாட்டென்று கருதி இக்காலத்திலும் செய்யப்படுகின்றன—(உ-ம், மீன் பிடித்தல், வேட்டையாடுதல். பின்னுமொரு சாரார் 'விளையாட்டு' என்பதற்கு 'வாழ்க்கைக்கு ஆயத்தம்' எனப் பொருள் கொள்கின்றனர். குழந்தைகள் தங்களுடைய பிற்கால வாழ்க்கைத் தேவைகளுக்கு வேண்டிய காரியங்களை இளம் பருவத்திலேயே செய்து கற்கின்றனர் என்பது இவர்கள் கருத்து. விளையாட்டில் மூத்தவர்களைப்போல இளையவர்கள் நடிக்கிறார்கள். (உ-ம்) வண்டி அமைத்தல், வீடு கட்டுதல். ஆனால், இக் கொள்கையில் விளையாட்டு என்பது குழந்தைப்பருவ இயக்கம் என்றே சொல்லப்படுகிறது; ஆனால் வாழ்க்கையில் முதியவர்களும் விளையாடுகிறார்கள்; அவர்களுக்கு அது ஒரு பொழுது போக்கு. ஆகவே இக்கொள்கையும் விளையாட்டுக்கு மூலகாரணத்தைத் தெளிவாக்கவில்லை. உண்மையென்னவென்றால், இம்மூன்று கொள்கைகளும் விளையாட்டின் ஒவ்வொரு அம்சத்தையும விளக்குகின்றன.

ஒற்றுமை, தன்னம்பிக்கை, கட்டுப்பாடு, போலி வாழ்க்கை யாவும் விளையாட்டுக்களின் மூலம் அடையும் பலன்கள்.

விளையாட்டும் வேலையும்

விளையாட்டுக்கும் வேலைக்கும் அதிக வேற்றுமை உண்டு. வேலை என்பது வாழ்க்கையுடன இணைக்கப்பட்ட ஒரு புறம்பான செய்கை; ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தேவையை வேலை பூர்த்தி செயகிறது. ஆனால் விளையாட்டில் புறம்பான நோக்கம் இல்லை; தனிப்பட்ட ஒருவனுடைய மகிழ்ச்சியை உத்தேசித்தே விளையாட்டு நடத்தப்படுகிறது. வேலையில் ஈடுபட்டிருக்கும்போது மகிழ்ச்சி உண்டாவதில்லை; ஆனால், விளையாட்டு ஒரு விருப்பமான தொழில். விளையாட்டுக்காகவே விளையாட்டில் ஈடுபடுகிறோம். ஆனால் வேலையின் மூலம் பலன ஏற்பட்ட பிறகே மகிழ்ச்சி உண்டாகிறது. வேலைக்குப் பல புறம்பான கட்டுப்பாடுகள் உண்டு ; விளையாட்டில் விளையாடுபவர்களே பல கட்டுப்பாடுகளை உண்டாக்கிக் கொளளுகிறார்கள். "வேலை உண்மை வாழ்க்கையை அனுசரித்தது; விளையாட்டு பாவனை உலகத்தைச் சார்ந்தது." ஆயினும் நமக்கு இஷ்டமான வேலைகளுக்கும், ஒழுங்கான விளையாட்டுக்கும் அதிக வித்தியாசமில்லை. விளையாட்டுக்கும் வேலைக்கும் வித்தியாசம் மனப்பான்மையில் தான் என்பதே உண்மை. வேலையில் வெறுப்பு மனப்பானமை குன்றி, மகிழ்ச்சி மனப்பானமை அதிகரித்தால் **விளையாட்டு முறையில்** வேலை நடக்கின்றது எனக் கொள்ளலாம்.

'கற்றலில்' விளையாட்டுக்குள்ள இடம்

கற்றல் என்ற உயர்ந்த ஒரு வேலையில் மகிழ்ச்சி மனப்பான்மை தோன்றுவது மிகவும அவசியம் ; இன்றேல் அது ஒரு வெறுப்புத் தோன்றும் வேலையாகிவிடும். ஆனது பற்றியே நவீன போதனை முறைகளில் விளையாட்டுக்குச் சிறந்த இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளுக்கு விளையாட்டுக்களின் மூலம் கற்பித்தால், கற்றல் எளிதாகிறது. ஆகையால் பல பெரியோர்கள விளையாட்டு முறையைக் கையாண்டு வருகின்றனர். குழந்தகள்

விருப்பத்துடன், உத்ஸாகமாக, பள்ளிகட்குச் செல்லுகின்றனர். மாண்டிஸோரி, கிண்டர் கார்டன்போன்ற முறைகள் விளையாட்டுக்கும் கற்றலுக்குமுள்ள வித்தியாசத்தை அகற்றிவிட்டன. இயற்கையாகவே குழந்தைகளுக்கு ஏற்பட்ட கற்றல் முறை விளையாட்டுத்தான்.

இதுகாறும், குழந்தைகள் பாடசாலை வாழ்க்கைக்கு வெளியே தான் விளையாடவேண்டுமென்றும், பாடசாலை நேரத்தில் விளையாட்டை ஒழிக்கவேண்டு மென்றும், பலர் கருதி வந்தனர். விளையாட்டு என்பது குழந்தைகளின் வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு தீமை என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் நவீன காலத்தில் விளையாட்டு என்பது சிறந்த கல்விப் பயனை அளிக்கக் கூடிய ஒரு கற்றல் முறை என்று பெரியோர்களால் வரவேற்கப்படுகிறது.

விளையாட்டைப் பற்றிய பிழையான கருத்து

விளையாட்டுக்கள் ஒரு வகைப்பட்ட சுயமான பயிற்சிகள். அவற்றின் மூலம் 'கற்றல்' எளிதாக்கப்படுகிறது. கல்வியில் விருப்பம் ஏற்படுகிறது. வேலையில் கவர்ச்சி உண்டாகின்றது. சுயமான திறமை வெளிப்படுகின்றது. விளையாட்டு வீண் ஒரு பொழுது போக்கு அல்ல. அது இயற்கையின் பயிற்றல் முறை. ஓடி விளையாடுவது குழந்தைகளின் இயற்கைச் செல்வம். அது புலன்களுக்குப் பயிற்சியளிப்பதுடன், உடல் வளர்ச்சிக்கும் மனோ வளர்ச்சிக்கும் உதவுகின்றது. கீழ்ப்படிதல் ஒற்றுமை, ஒத்துழைப்பு, கடமை, உரிமை ஆகிய சமூகப் பண்புகளை விளையாட்டுக்கள் அபிவிருத்தி செய்கின்றன. களைப்பைப் போக்கி, உற்சாகமளித்து, நடத்தையையும் ஞானத்தையும் சீர்ப்படுத்தி, கைத்திறமையை விருத்தி செய்து, ஆக்கும் சக்தியை வெளிப்படுத்துவதில் விளையாட்டைப போன்ற இயககம் வேறொன்றுமில்லை. விளையாட்டின்மூலம் ஏற்படும் சக்தி, மாணவன் கல்வி கற்க உதவும். உற்சாகமான விளையாட்டு ஆரோக்கியத்தை

விளையாட்டு முறையினால் உண்டாகும் பலன்கள்

அளிக்கும். குழந்தைகளுடைய கற்பனை சக்தியை விளையாட்டுக்கள் வளர்க்கின்றன. விளையாட்டில் பாவனை மிகவும் முக்கியமான அம்சம். புதிய முறைகளில் விளையாட்டுக்கும் வேலைக்கும் பேதம் இல்லை. மிகக் கடினமான வேலையும் விளையாட்டின் வாயிலாகச் சுலபமாகச் செயயப்படுகின்றது; விருப்பத்துடனும் செய்யப்படுகின்றது. ஆனதுபற்றியே கல்விப் பயிற்றலுக்கு விளையாட்டு முறை ஏற்ற சாதனமாகும்; அதிலும் மொழி வளர்ச்சிக்கு ஏற்ற முறை இதுவே. இயற்கை மொழிக்கு இயற்கை முறையே ஏற்றது.

விளையாட்டு முறையும் பயிற்சியும்

ஆனால் விளையாட்டு முறை எந்த நிலையிலும் ஏற்றது என்று கருதுவது உசிதமல்ல. போதனைக்குகந்த சில உபாயங்கள் என்றே விளையாட்டுக்களைக் கருதவேண்டும். விளையாட்டுக்களின் வாயிலாகக் கற்ற கருத்துக்கள் வேரூன்றி நிலைக்க பயிற்சி முறைகள் தேவை. அவற்றை அறவே நீக்க முடியாது. பயிற்சிகள் இரசமற்ற வேலைகள் என்று கருதக்கூடும்; ஆனாலும் அவற்றை விளையாட்டு மனப்பான்மையில் செய்யலாம். கல்வி பயிலுவதற்கு விளையாட்டுக்கள் ஒருவகைச் சாதனங்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது.

தமிழ் கற்பிப்பதில் விளையாட்டுக்கள்

தமிழ் கற்பிப்பதில் பல விளையாட்டுக்களை உபயோகிக்கக்கூடும். தமிழ்ப் போதனையில் பல விளையாட்டுக்களைப் பற்றிய விவரங்களும், விளையாட்டுப் பயிற்சிகளின் விளக்கமும் மூன்றும் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன, அவற்றின் மூலம் குழந்தைகள் உற்சாகத்துடனும் ஆவலுடனும் தமிழ் கற்கக்கூடும்.

நடிப்பு முறை

இம் முறையின் கொள்கைகள்

இம் முறையும் விளையாட்டு முறையை அடிப்படை யாகக் கொண்டதே. மனத்தின் முக்கியமான சக்திகளில் கற்பனை அதி முக்கியமானது. கற்பனை ஊற்றின் பெருக்கு இன்றேல், எந்தக் கலையும் வளர்ச்சி பெறாது. கற்பனா சக்தியினால் செய்ய முடியாத காரியங்களைச் செய்யலாம்; காண முடியாதவற்றைக் காணலாம்; முன்னர்க் கண்டவற்றைத் திரும்பவும் நினைத்துப் பார்க்கலாம். குழந்தைகளின் விளையாட்டு உலகத்தில் பாவனைக்கும் உண்மைக்கும் அதிக வேற்றுமை இல்லை. குழந்தைகளின் கற்பனா சக்தி அபாரமானது. பாவனையுலகத்தில் நாற்காலி கப்பலாகவும், மரக்கட்டைகள் வண்டிகளாகவும், ஊஞ்சல் இரயில் வண்டியாகவும் கருதப்படும். பெற்றோர் போன்றும், அரசனாகவும், ஆண்டியாகவும், ஆசிரியராகவும், மிருகங்கள் போலவும், நடிப்பதில் குழந்தைகள் விருப்பம் அடைகின்றார்கள்.

இம்முறையின் விளக்கம்

நாடகங்களும் ஆடல் பாடல்களும் இக்காலத்தில் பாடசாலைகளில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. தமிழில் திருத்தமான உச்சரிப்பு, தெளிவடைந்த கருத்துக்கள், கோவையான சிந்தனைகள், உணர்ச்சி, அபிநயம் ஆகிய சக்திகள் வளர்ச்சி பெற நடிப்புக்கலை உதவுகின்றது. நாடகங்கள் வாயிலாக அறிவு வளர்கின்றது; மனம் மகிழ்ச்சி அடைகின்றது. குழந்தைகளுடைய மனம் அழகிய காட்சிகள், பலவித சப்தங்கள், ஆடல் பாடல்கள், நாட்டியம் முதலானவைகளில் இயற்கையாக லயிக்கின்றது. குழந்தைகளுடைய மனத்தை இயல்பாகக் கவரக்கூடிய சாதனங்கள் இவைகளே யாகும். ஆகையால் தமிழ்ப் போதனையில் ஆசிரியர் இவற்றை உபயோகிக்கவேண்டும். உற்சாகமும் கவர்ச்சியும் குன்றாத நடிப்பு முறையில், அநேக சந்தர்ப்பங்களில் ஒரு பொருளைத் திரும்பத் திரும்பக் கற்கச்

செய்வதால், குழந்தைகளின் மனத்தில் கற்ற பொருள்கள் வேரூன்றும். இவ்வாறு செய்வதால் மூளையில் சரியான இணைப்புக்கள் ஏற்பட்டு, ஞாபக சக்தி அதிகரித்து, கற்ற பொருள்கள் தேவையான காலத்தில் கவனத்துக்கு வரும்.

இம்முறையால் அடையும் பயன்கள்

தமிழ்ப் போதனையில் நாடக முறையை அனுசரிப்பதால் திருத்தமான உச்சரிப்பு, தெளிவான கருத்துக்கள், நேர்மையான சிந்தனைகள் மொழிப் பயிற்சி, அபிநயப் பயிற்சி ஆகிய பழக்கங்கள் உண்டாகின்றன. மேலும் குழந்தைகளின் கற்பனு சக்தி, மனோபாவம், ஞாபக சக்தி, உரையாடல் திறமை, உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றல், பாடும் திறமை ஆகிய பண்புகள் நடிப்பதன் மூலம் வெளிப்படக்கூடியவை.

நடிப்பில் பருவகால வேற்றுமைகள்

இளம் பருவத்தில் குழந்தைகள் பாவனை உலகத்தில் சஞ்சரிக்கின்றனர். கடை வைத்தல், போலீஸ்காரன், தபால்காரன், ரயில்வண்டி, பட்சிகளைப் போன்றும் மிருகங்களைப் போலும் சப்தம் செய்தல் - இவை போன்ற விளையாட்டுக்கள் முதல் வகுப்புக் குழந்தைகட்கு ஏற்றவை. இவற்றில் மொழி குறைவு; ஊமை நடிப்பு அதிகம். மழலைச் சொற்கள் சிறுகச்சிறுகத் திருந்த உதவவேண்டும். நான்காம் வகுப்பு வரையில் கதைகள் நடிப்பதில் ஆவல் அதிகம் இருக்கும். பண்டை வீரர்களின கதைகள், வனதேவதைகளின் கதைகள், மிருகங்கள் நடமாடும் கதைகள் ஆகியவற்றை நடிப்பதால் சுயமான பேச்சு வன்மையும், நடிபபுத் திறமையும், சொற்பயிற்சியும்,சந்த உணர்ச்சியும குழந்தைகளிடையே அபிவிருத்தியடையும்; மேல் வகுபபுக்களில் சிறு நாடகங்களையும் காட்சிகளையும இயற்றி, இலக்கியச் சுவைகெடாமல், தகுந்த இசையுடனும், நடிப்புடனும் நடிககப பழகக் கூடும். கதா பாததிரங்களுடைய மனோபாவங்களையும்

உணர்ச்சிகளையும் மாணவர்கள் நன்கு பிரதிபலிக்கச்
செய்யவேண்டும். மாணவர்களே உரையாடல்களையும் சிறு
நாடகங்களையும் எழுதும்படி தூண்டவேண்டும். இயற்
கையிலேயே நடிப்பில் திறமையுள்ள பிள்ளைகளை மட்டும்
நாடகங்களில் சேர்த்துக் கொள்வது போதாது; யாவருக்
கும் நடிக்கச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

நாடகங்களின் தன்மை

குழந்தைகள் நடிப்பதற்குரிய நாடகங்கள் சுருக்க
மாகவும் சுலபமாகவும், திட்டமான முடிவைக் கொண்ட
வைகளாகவும் இருக்கவேண்டும்.
குழந்தைகளின் அனுபவத்தை அனு
சரித்தவைகளாக நாடகங்கள் இருக்க
வேண்டும். நடிப்பதில் குழந்தைகளின்
அபிப்பிராயங்களை வரவேற்கவேண்டும். ஆசிரியருடைய
முன் கூட்டிய திட்டப்படியே பழக்குவது கூடாது; உச்
சரிப்பிலும் பேச்சிலும் தோன்றும் பிழைகளை ஆசிரியர்
அவ்வப்பொழுது திருத்த வேண்டும். குழந்தைகளின்
நாடகங்களை எழுதுவது நல்லது. குழந்தைகளின்
நட்பு சிறப்பாக இருக்கவேண்டும் என்று எண்ணுவது
பிழை. நாடக பாத்திரங்களுக்குத் தேவையான உடை
களைத் தயாரிப்பதிலும், பாட்டுக்களையும் வசனங்களையும்
அமைப்பதிலும், சிநேகபாவம் வளர்ப்பதிலும் குழந்தை
கள் ஈடுபடுவார்கள். நாடகம் நேர்த்தியாக இருக்க
வேண்டும் என்பது முக்கியமல்ல. ஆயத்தவேலைக்
குகந்த சந்தர்ப்பங்களை விட்டுவிடக் கூடாது. நாடகமும்
நடனமும் சிறந்த கலைகள்; கவிதா ரசம் பொருந்தியவை;
கவர்ச்சி யளிக்கக் கூடியவை. சிறப்பான பல அம்
சங்கள் பொருந்திய நாடகங்களை நடத்திக் காட்டுவது
பாடசாலைக்குப் பெருமை தரும். பிற்கால வாழ்க்கை
யில் மாணவர்கள் இரசிக்கக் கூடியவை நாடகங்களே.
ஆகையால் இயற்கை வேகங்களைத் தூண்டக்கூடிய நடிப்
புக் கலையைச் சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்கு
ஊட்டவேண்டும். ஆரம்பப் பாடசாலையின் வேலைகளில்
இதுவும் ஒன்றாகும்.

தனிப்பயிற்சி முறை

கல்வி கற்கும் குழந்தைகளின் திறமை ஒரே சீரான தல்ல. சிலர் தீவிர புத்தியுள்ளவர்களாகவும், சிலர் மந்த புத்தியுடையவர்களாகவும், பின்னும் சிலர் நடுத்தரமான அறிவு படைத்தவர்களாகவும் இருப்பர். சாதாரணமாக நமது பாடசாலைகளில் நாம் பொது வகுப்பு முறையை அனுஷ்டிக்கின்றோம். ஒரு வகுப்பிலுள்ள வேற்றுமைப்பட்ட திறமைகளுடைய குழந்தைகளுக்கு ஒரேவகையான போதனையை அளிக்கிறோம். புத்திகூர்மை உடையவர்களுக்கும் மந்தபுத்தி உள்ளவர்களுக்கும் ஒரே வகையான போதனையளிப்பதால் இரு சாராருடைய தேர்ச்சியும் தடைப்படும். மந்த புத்தியுள்ளவர்கள், தேர்ச்சிக் குறைவினால் அதைரியப் படுவார்கள்; புத்திசாலிக் குழந்தைகள் முன்னேறுவதற்கு வகையில்லாமலும் வேலை செய்யச் சந்தர்ப்பமில்லாமலும் பிறருக்ககாகக் காத்துக்காத்துச் சோம்பியும் திரிவார்கள். ஆனால் தனிப்பயிற்சி முறையில், ஒவ்வொரு மாணவனும் சீக்கிரமாகவோ தாமதமாகவோ தன்னுடைய திறமைக் கேற்றபடி கற்கலாம். இம்முறையில் குழந்தைகள் சுயமாகவே கற்கின்றனர்; தாங்களாகவே முயலுகின்றனர். பாடசாலையில் போதிக்க வேண்டிய சகல பாடங்களையும் இம்முறையில் கற்பிக்க முடியாது போகலாம். ஆனால் பெரும் பாகத்தை இம்முறையின் வாயிலாகப் போதித்தல் கூடும்.

இம்முறையின் கருத்து

குழந்தைகளின் திறமைகட்குத் தகுந்தவாறு வகுப்பு முறையில் போதிக்க முடியாது. மாணவர்களுக்குள்ளே அறிவின் ஏற்றத் தாழ்வுகளினால், ஒரேவகையான கல்வி முறை எல்லோருக்கும் ஒரே வகையான பலனை அளிக்க இயலாது; குழந்தைகளின் மனோ நிலையை இம்முறையில் கவனிப்பதற்கு இடம் இல்லை. தனிப்பட்ட மாணவர்களுடைய திறமைக்கும் ஊக்கத்துக்கும் இம் முறையில் கவனிப்புமில்லை. மாண

வகுப்பு முறையின் குறைகள்

வர்களின் தனிப்பட்ட தேவைகளை இம்முறையில் கவனிக்க முடியாது. மனப் பக்குவத்தின் வித்தியாசங்களினால், பிற்போக்காளருக்கும் முற்போக்கான குழந்தைகளுக்கும தேர்ச்சி குறைவுபடும். அரட்டை, சோம்பல், உற்சாகமின்மை, கருத்துக் குறைவு போன்ற குறைகள் வகுப்பு முறையில் அதிகம் உண்டாகும்.

வகுப்புத் தனிப் பயிற்சி முறை

ஆனால், தனிப்பயிற்சி முறையை முழுதும் பின்பற்ற முடியாது. ஏனெனில், ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு ஆசிரியர் இருந்தாலன்றி இம் முறை சிறந்த வெற்றி அளிக்காது; ஆனால் இது அசாத்தியம். ஆகையால் வகுப்புப் போதனையை நாம் கட்டாயம் கைக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்விரண்டு முறைகளையும் இணைத்து ஒருவகையான வகுப்புத் தனிப்பயிற்சி முறையில் கற்பிகக்கூடும். இதன் மூலம் வகுப்பு முறையின் குறைகளை நீக்கி, குறைந்த பொருட் செலவில் தனிப்பயிற்சி முறையை அனுசரிக்க முடியும். ஒவ்வொரு மாணவனுடைய ஆற்றலையும் மனப்போக்கையும் ஆசிரியர் கவனித்து அவ்வப்பொழுது தகுந்த மேற்பார்வையின் மூலம் தனிக்கவனம் செலுத்தலாம். ஒவ்வொரு வகுப்பிலும் எல்லாப் பாடங்களிலும் சிறந்த தேர்ச்சி ஒரு மாணவனுக்கு இருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு பாடத்துக்கு ஒரு வகுப்பிலும், மற்றொன்றுக்கு வேறொரு வகுப்பிலுமாகவும் படித்து வரலாம்.

இம் முறையை அனுசரிக்கும் வழி

வகுப்பறையில் தனிப்பயிற்சி வேலையின் அவசியமான பகுதியாகிய 'குறிப்புத்தாள்கள்' வாயிலாகப் பாடங்களைக் கற்பிக்கலாம். ஒவ்வொரு மாணவனிடத்திலும் ஒரு குறிப்புத் தாள் அட்டையும், ஆசிரியரிடம் ஒரு குறிப்பு விளக்க அட்டையும் இருக்க வேண்டும். ஒரு வகுப்பில் ஓர் ஆண்டில் செய்ய வேண்டிய வேலைத்திட்டத்தை ஆசிரியர் பல சிறு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்;

ஒவ்வொரு பிரிவையும் அநேக உட்பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு உட்பிரிவுக்கும் தனித்தனிக் குறிப்புத்தாள்கள் தயாரித்துக் கொள்ள வேண்டும். இக் குறிப்புக்களில், குழந்தைகளின் சிந்தனைகளைத் தூண்டக் கூடிய அம்சங்கள் இருக்கவேண்டும்; தங்களுடைய சுய முயற்சியால் கற்றுக்கொள்வதற்குத் தேவையான விளக்க உரைகளும், கேள்விகளும், அனுபவ வேலைகளும் இருக்கவேண்டும். வருஷ வேலை துவக்குங்காலத்தில், முதல் குறிப்புத்தாளைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். சிலர் குறிப்புத் தாளைச் சீக்கிரம் முடித்து விடுவர்; அவர்கள் மற்றவர்கட்குக் காத்திராமல், இரண்டாவது குறிப்புத்தாளை உபயோகிக்கவேண்டும். வகுப்பு முழுவதும் ஒரே குறிப்புத்தாளை ஒரே சமயத்தில் உபயோகிக்கமாட்டார்கள். ஆசிரியரிடம் உள்ள குறிப்பு விளக்க அட்டையில் குழந்தைகளின் பெயர்களுக்கு எதிரில் ஒவ்வொரு குறிப்புத் தாளையும் ஆரம்பித்த தேதியையும், முடித்த தேதியையும் குறித்துக்கொள்ள வேண்டும். மாணவர்களுடைய தனித்தனிக் குறிப்புத் தாள் அட்டைகளிலும் அவற்றைத் துவக்கிய தேதியும், முடித்த தேதியும் குறிப்பிடவேண்டும். குறிப்புத் தாள்களுக்கு 1, 2, 3.........என்ற தொடர்ச்சியான எண்கள் அளிக்கலாம். பின்வரும் மாதிரியில் குறிப்பு விளக்க அட்டை இருக்கலாம். தமிழ்ப்பாடகாலத்தில் இக் குறிப்புத் தாளகளை வகுப்பறையில் உபயோகிப்பதுடன், வீட்டிற்கும் எடுத்துச் சென்று வேலை செய்யலாம்.

மாதிரிக் குறிப்பு விளக்க அட்டை
வகுப்பு—5 பாடம்—தமிழ்

வரிசை எண்	மாணவன் சேர்க்கை எண்	மாணவன் பெயர்	குறிப்புத்தாள்களின் எண்களும் தேதிகளும்							
			1		2		3		4	
			ஆரம்ப தேதி	முடிவு தேதி	ஆ.தே.	மு.தே.	ஆ.தே.	மு.தே.	ஆ.தே.	மு.தே.
1	148	க. ராமசாமி	8-6-46	9-6-46	10-6-46	12-6-46	13-6-46	17-6-46	18-6-46	20-6-46
2	213	மு. ரங்கநாதன்	8-6-46	12-6-46	13-6-46	15-6-46	16-6-46	19-6-46	20-6-46	23-6-46
3	...	...	...	...	...	...	...	...	...	...
4	...	...	...	...	...	...	...	...	...	...

குறிப்புத்தாள்கள் பரிசோதனைக் கேள்வித்தாள்களல்ல. ஒரு பகுதியைப் போதித்த பின்னரே பரிசோதனைக்கு இடமுண்டு. போதனைக்கே அநுகூலமானவை இக் குறிபபுக்கள்; இக்குறிப்புத் தாள்களை உபயோகித்த பின்னரே பரிசோதனைக்கு இடமுண்டு.

குறிப்புத்தாள்களைப் பற்றிய விவரம்

குறிப்புத்தாள்களில் ஒரு குறிபபிட்ட நேரத்தில் மாணவன் செய்யவேண்டிய வேலை விவரிக்கப்பட்டிருக்கும்; மாணவனுடைய சிந்தனைச்சக்தியைத் தூண்டுவதற்கும், அவனாகவே பல பொருள்களைக் கண்டறியவும் தேவையான உதவியை இவை அளிக்கும்; முடிவுகளை மாணவனே கண்டறிவதற்கு அனுகூலமான கேள்விகள் இவற்றில் இருக்கவேண்டும்; ஆழ்ந்து படிப்பதற்குத் தேவையான குறிப்புக்களும், புத்தகசாலையிலுள்ள புத்தகங்களிலும் வகுப்புப் புத்தகத்திலும் கிடைக்காத சில சூசனைகளும் இவற்றில் உள. மாணவன் தனது சுயமுயற்சி வேலையைத் துவக்கவேண்டிய முறையும் இதில் விளக்கப்பட்டிருக்கும்; கடினப்பகுதிகளின் பொருள் விளக்கமும், சொல்விளக்கமும் இவற்றில் அடங்கியிருக்கும். நன்கு சிந்திப்பதற்கும் வாசிப்பதற்கும் என்னென்ன புத்தகங்களிலிருந்து விஷயங்களைக் கிரகித்துக்கொள்ளலாம் என்றும், என்னென்ன புத்தகங்களைப் படிக்க வேண்டுமென்றும் ஜாபிதா இருக்கும். இலக்கணக் குறிப்புக்களும், சொற்பயிற்சிகளும், கட்டுரைப் பயிற்சிகளும் இவற்றில் இருக்கும். இவைகளை ஆசிரியர் சர்வ ஜாக்கிரதையாகத் தயார் செய்யவேண்டும். ஆசிரியர் பிற புத்தகங்களையும், வகுப்புப் புத்தகங்களையும ஆராய்ந்து இவற்றைத் தயாரிக்கவேண்டும். மாணவர்களுடைய மனநிலைமையையும, விருப்பு வெறுப்புக்களையும ஆராய்ந்து இவற்றைத் தயாரிக்கவேண்டும். குறிப்புத் தாள்கள் சுருக்கமாக இருக்கவேண்டும்.

தமிழ்ப் போதனையில் இலக்கணப் பிரிவையும், கட்டுரைப் பிரிவையும் குறிப்புத்தாள்களின் மூலம் கற்பிக்கலாம். வசன பாடங்களையும் அவ்வாறே கற்பிக்கக் கூடும். படிக்கவேண்டிய பகுதிகளைப் படிக்கும் முறை

களைப்பற்றியும் குறிப்புத்தாள்கள் கூறும். வாசிக்க உதவவும், சிந்தனையைத் தூண்டவும் அவசியமான கேள்விகளைக் கொடுக்கலாம். கேள்விகளை முன் ஆயத்த வேலையாக உபயோகிக்கலாம். இவற்றை வருடத் துவக்கத்திலேயே பாட திட்டத்தை அனுசரித்துத் தயாரித்துக் கொள்ளவேண்டும். மாணவர்கள் குறிப்புத் தாள்களை உபயோகிக்கும்பொழுது, பொதுவாகத் தோன்றும் கடினப் பகுதிகளை எடுத்து வகுப்பு முழுவதுக்கும் ஆசிரியர் விளக்கலாம். குறிப்புத்தாளை மாணவன் நன்கு உபயோகித்துவிட்டானு என்று ஆசிரியர் அறிந்துகொள்ளவேண்டும். குறிப்புத்தாளை ஒரு மாணவன் முடித்தவுடன், ஆசிரியர் அவனைப் பல கேள்விகள் கேட்டு, அது நன்கு உபயோகப்பட்டிருக்கிறதா என்று கண்டறியவேண்டும். அதன் பிறகே அதை முடித்த தேதியைக் குறித்துக்கொள்ளவேண்டும். தன்னிடமுள்ள குறிப்பு விளக்க அட்டையின் உதவியால் ஆசிரியர் பிற்போக்குள்ள குழந்தைகளுக்குத் தனிக் கவனம் செலுத்தவேண்டும். பாடசாலைகளில் குறிப்புத் தாள்கள வைத்துக்கொண்டு வேலைசெய்யும் காலங்களில், ஆசிரியருடைய உதவி ஒரு மாணவனுக்குத் தேவையானல், எந்த நேரத்திலும் அவரிடம் தாராளமாக அவன் வந்து போக வசதி வேண்டும். ஒருவரைப் பார்த்து ஒருவர் 'காப்பி' அடிக்கும் பழக்கத்தை அறவே நீக்க முயல வேண்டும்; மாணவர்கள் கலந்து யோசிக்க அவகாசமும் சந்தர்ப்பமும் அளிக்கவேண்டும். புத்தக சாலையினின்று புத்தகங்கள் எடுத்துப் படிக்க வசதி அளிக்க வேண்டும். இம்முறையில் ஆசிரியர் ஒரு வழி காட்டியே யாவார்; மாணவர்கள் அவருடைய உதவியினுல் சிறந்த பயிற்சி பெறுவர்.

தமிழ் கற்பிப்பதில் குறிப்புத் தாள்கள்

மாணவர்கள் தங்களுடைய தனித் திறமைகட்கு ஏற்றபடி துரிதமாகவும் மெதுவாகவும் வேலை செய்வதற்கு இம முறை ஏற்றது. பிற்போக்கான பிள்ளைகள் மெதுவாக வேலை செய்யலாம். பொருள் அறிய முடியாவிட்டாலும் அறிந்ததுபோல் நடித்துக் கஷ்டபபட

வேண்டாம். துரிதமாகக் கற்கும் மாணவன் ஆண்டின் இறுதியில் வகுப்பு முறையில் கற்கக் கூடியவற்றைக் காட்டிலும் அதிகமான விஷயங்களைக் கற்பான். வேலையிலும் வெறுப் படையமாட்டான். பிற்போக்கானவர் கள் கற்ற வரையில் நன்கு கற்றுக் கொள்ளச் சந்தர்ப்பமுண்டு. அவர்களு டைய திறமைக்கேற்றபடி அபிவிருத்தி உண்டாவதால், வேலையில் விருப்பமும் பற்றுதலும் கொள்வர். பிறர் போதிக்கும் விஷயங்களைக் கேட்டுப் பயனடைவதற்கு மனேசக்தி அதிகமாகத் தேவையில்லை. ஆனல் சுய மாகப் பயிற்சி பெறும வேலையில் மனேசக்தி உபயோகிக் கப்படும்; வேலையும் அதிகமாகச் செய்ய முடியும்; மூளை, செயல், மனம் யாவும், சுறுசுறுப்பாகவே வேலை செய்யும். வகுப்பு முறையில் ஏற்படும் குறைகளை இம் முறையின் மூலம் நிவிர்த்திக்கலாம். இம்முறையில் குழந்தைகளு டைய வாழ்க்கைநிலை, மனப்பான்மை, வயது, மனே வளர்ச்சி ஆகியவற்றை அனுசரித்து, கற்றல் அபி விருத்தி அடைகின்றது. ஒவ்வொரு மாணவனுக்கும் பிரத்தியேகமாகக் கவனம் செலுத்த ஆசிரியருக்கு இம் முறையில் அவகாசம் உண்டு. மாணவர்களுடைய கஷ் டங்களை அறியவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இம் முறையில் கால விரயம் கிடையாது; மாணவர்கள வேலை யில் ஊக்கங்கொள்வர்; தொடர்ந்த பல பிரிவுகளில் வேலை செய்ய வேண்டியிருப்பதால், மாணவர்களுக்குக் கவர்ச்சி ஏற்படும். பிறர் கையையும் உதவியையும் எதிர் பார்த்து நிற்கும் மனப்பான்மை இம்முறையில் குறையும்; ஏனென்றால் சுயமுயற்சியாலேயே மாணவன் இம்முறை யில் கற்கிருன்.

இம்முறையினல் ஏற்படும் நன்மைகள்

இம்முறையைத் தழுவுவதில் சில கஷ்டங்களும் ஆக்ஷேபனைகளும் உண்டு. ஆசிரியர் சிரமபபட்டு உழைக்கவேண்டும். குறிப்புத் தாள்கள் தயார் செய்வது சிரமமான வேலை; அவற்றை அடிக்கடி புதுப்பிக்கவேண் டும்; மாணவர்களுடைய எழுத்து வேலையை அடிக்கடி திருத்தவேண்டிய அவசியம் உண்டு. மாணவர்களுடைய

அறிவு நிலைமையை வாய்மொழியாகப் பரிசோதிக்கவேண்டும். இவை கடினமான வேலைகள்; ஆயினும் மிக அவசியமானவை; ஏனென்றால், இவற்றின்மூலம் தேர்ச்சி அதிகரிக்கின்றது.

இம்முறையிலுள்ள கஷ்டங்கள்

இம்முறையை அதிக மாணவர்கள் இருக்கும் வகுப்புக்களில் அனுசரிப்பது கடினம். அதிகப்படியாக சுமார் 30 பிள்ளைகள் உள்ள வகுப்புக்கு இம்முறை சிலாக்கியமானது. மாணவர்களை அடிக்கடி சோதித்து, 'காப்பி அடிக்கும்' வழக்கத்தை நிறுத்தவேண்டும். அடிக்கடி பொது வகுப்புப் போதனையும் தேவை. கஷ்டங்களைப் பொருட்படுத்தாமல் மாணவர்களின் பயிற்சி அபிவிருத்தியடைய ஆசிரியர் உதவவேண்டும்.

டால்டன் திட்டம் என்பது இம்முறையை அஸ்திவாரமாகக்கொண்டது. அமெரிக்காவில் டால்டன் என்ற நகரில் **ஹெலன் பார்க்ஹர்ஸட்** என்ற அம்மையார் இம்முறையைத் தோற்றுவித்தார். இது ஒரு தனிப்பட்ட போதனு முறை எனக் கொள்வது சரியல்ல. இது போதனையில் ஒரு சீர்திருத்தம். இதில் கால அட்டவணைகளால் மாணவர்கள் கட்டுப்படுத்தப்படுவதில்லை.

தனிப்பயிற்சி முறையை அடிப்படையாகக் கொண்ட ஒரு முறை

எந்தப் பாடத்தையும், எந்நேரத்திலும் தேவையான கால அளவுவரையிலும், அதில் பற்றுள்ளவரையிலும், விரைவாகவோ மெதுவாகவோ, மாணவர்கள் கற்றுக்கொள்ளலாம். தன்னம்பிக்கையும், சுய முயற்சியும், இம்முறையினுல் பெருகும் மாணவர்கள் செய்யும் வேலைகள் நோக்கமும் பயனும் உடையனவாக இருக்கும்; படிப்புத் திறமையும், உண்மைப் பயனும் உண்டாகும். ஆனுல் இந்தத்திட்டத்தின்படி ஆசிரியர் அதிகமாக மாணவர்கள் முன் இருக்கத் தேவையில்லை. ஆசிரியர் இல்லாமலே கற்கக்கூடும் என்ற உணர்ச்சி மேலிடலாம். இம்முறையில் பணமும் காலமும், விரயமாகின்றன. ஆனுல் இம்முறையில் வகுப்பறைகள் ஆராய்ச்சிக் களங்களாக மாறுகின்றன. ஆசிரியர்கள் பரந்த ஆழ்ந்த சிறந்த அறி

வுடையவர்களாக இருக்கவேண்டும். குறிப்புத் தாள்களே இம்முறையின் உயிர்நிலை. தமிழ்ப் பாடத்தில் இம் முறையைப் பின்பற்றலாம்.

இம்முறையின் விளக்கம்

இம்முறை உயர்தர வகுப்புகட்கே பெரிதும் ஏற்றது. இம்முறையில் போதிக்கும் பாடசாலையில் வகுப்பறைகட்கு இடமில்லை; பாட அறைகளே உண்டு. (உ-ம்) தமிழ், கணக்கு, பூகோளம். ஒவ்வொரு பாட அறையிலும் அந்தப் பாட ஆசிரியருடைய பொறுப்பில் பல புத்தகங்களும், போதனைக் கருவிகளும் இருக்கும். பலதரப்பட்ட தேர்ச்சியுள்ள மாணவர்கள் ஒவ்வோர் அறையிலும் இருப்பர். அவர்கள் சுயமாகப் படிக்கவேண்டியவற்றிற்கு, முன்னதாகவே குறிப்புத்தாள்கள் அச்சிட்டு அவர்களுக்குக் கொடுக்கப்படும். ஒவ்வொருவனது தேர்ச்சியைக் காட்டும் குறிப்புச்சீட்டும் வைக்கப்படவேண்டும். ஒரு புதிய பாடத்தைப் படிக்க **முன் ஆயத்தத்தாளும், பின் சோதனைத்தாளும்** தயார் செய்வர். முதன் முதலில் பாடத்தைப் படித்து முன் ஆயத்தக் கேள்விகளுக்குப் பதில் இறுக்கவேண்டும்; படித்தபிறகு சோதனைத் தாள்களை உபயோகித்து விடை எழுதச் செய்யவேண்டும்.

சுயநோக்க முயற்சி முறை

இம்முறையைப் பற்றிய விளக்கம்

கல்வியின் நோக்கம் குழந்தைகளை வாழ்க்கைக்குத் தயார் செய்வது என்பது சரியாகுமானால், வாழ்க்கைச் சம்பவங்களைப்பற்றிப் பாடசாலைகளில் வாசிப்பதுமட்டும் போதுமானதாகாது; அச்சம்பவங்களைக் கல்விச் சாலைகளிலேயே நடத்திக் காட்டவேண்டும். பாடசாலை வாழ்க்கை உண்மை உலக வாழ்க்கையுடன் பல செய்கைகளின் வாயிலாக இணைக்கப்படவேண்டும். இச்செயல்கள், பாவனை உலகத்தைச் சார்ந்தவையாக இருப்பினும், வாழ்க்கையின் பல அம்சங்

களை உண்மைக்கு மாறுபட்டிராமல் கல்விச் சாலைகளில் புகுத்தப்படவேண்டும். பல செய்கைகளை மாணவர்கள் தாங்களாகவே அனுபவித்து அவற்றில் பழகுவதே சிறந்த முறையாகும். செய்கைகள் எவ்வாறு வாழ்க்கையில் இயற்கையாகவே செய்யப்படுகின்றனவோ, அவ்வாறே வகுப்பறைகளிலும் அவைகளைச் செய்து முடிக்க வேண்டும். இவ்வாறு குழந்தைகள் தாங்களாகவே ஒரு செய்கையைப்பற்றி ஆலோசித்து, இயற்கையான முறையில் அதைச் செய்து முடிப்பதற்குச் 'சுய நோக்க முயற்சி முறை' என்று பெயர். இம்முறையில் தமிழ் கற்பிப்பதனால் மாணவர்களுக்குக் கவர்ச்சியையும், தூண்டுதலையும் உண்டாக்கலாம். 'சொல்லிக் கேட்கும்' முறையில் போதனை அமையாது; தாங்களாகவே தேர்ந்தெடுத்த ஒரு செய்கையை இயற்கையான முறையில் ஆலோசித்து அபிவிருத்தி செய்து, செய்து முடிக்க வேண்டும். தாங்களாகவே செய்து அனுபவித்து, அறிந்துகொள்வது மாணவர்களுக்குப் பிரியமான காரியம், வாய்ப்பேச்சைவிட அனுபவம் உயர்ந்தது; பல அனுபவங்களே இம்முறையின் உயிர்நாடிகள். செய்ய வேண்டிய வேலைகள் உண்மை வாழ்க்கையின் பிம்பங்களாதலால், அவற்றை விளையாட்டுக்கள் என்றே மாணவர்கள் கருதுவார்கள்; ஆகையால் வேலையில் ஒரு பற்றுதலும் கவர்ச்சியும் அவர்களுக்கு உண்டாகிறது. மாணவர்களுக்கு விளையாட்டு மனப்பான்மை உண்டானபோதிலும் மனத்திலே ஊக்கம் உண்டாகிறது. இம்முறையில் நான்கு நிலைகள் உண்டு.

(1) மாணவர்கள் தங்களுடைய திறமைக்கும் நிலைமைக்கும் பொருத்தமான ஒரு காரியத்தைத் தாங்களாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளுவது.

(2) அத்தொழில் முடிவுபெறும் வகையில் வேலை செய்யவேண்டிய முறைகளைத் திட்டப்படுத்த எல்லோரும் கூடித் தீர்மானம் செய்வது.

(3) தொழிலைச் செம்மையாகச் செய்து முடிப்பது.

(4) செய்து முடித்த வேலையை மதிப்பிடுவது.

ஒவ்வொரு நிலையிலும் செய்யும் முயற்சி சம்பந்தமாகத் தாய்மொழி, பூகோளம், கணக்கு, இயற்கை, கைத்தொழில்போன்ற பல பாடப் பகுதிகளைக் கற்கச் சந்தர்ப்பம் உண்டாகும். இவ்வேலையின் வாயிலாகக் கல்வியின் முழுப் பயனையும் மாணவர்கள் பெற முடியும்.

தமிழ் கற்பிப்பதில் சுயநோக்க முயற்சி முறை

ஒரு வேலையை மாணவர்கள் தெரிந்தெடுத்து வழிவகைகளை ஆராய்ந்து திட்டம் வகுத்து, செய்துமுடித்து, மதிப்பிடுவதன் மூலம் அச்செய்கையில் உபயோகப் படுத்தும் பொருள்களின் பெயர்களை அறியலாகும். அப்பெயர்களை எடுத்தெழுதவும், செய்ய வேண்டிய செயல்களை முழு வாக்கியங்களில் எழுதிப்படிக்கவும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். மேல் வகுப்புக்களில், ஒரு தொழிலைக் கற்பதற்குத் தேவையான பல நூல்களைப் படிக்க நேரிடும். தொழிலைப்பற்றிய விளம்பரங்கள், கடிதங்கள், உரையாடல்கள், நாடகங்கள், செய்முறை விவரங்கள், கட்டுரைகள் முதலியன தயாரிக்கும் பொழுது மொழிப்போதனைக்கு இடம் உண்டு. மொழிப்பயிற்சியின் எல்லாப் பிரிவுகளையும் இம்முறையில் போதிக்க முடியாது. இம்முறையில் போதிக்க முடியாத பிரிவுகளைப் பிறமுறைகளில் போதிக்கவேண்டும்.

இம் முறையில் ஆசிரியர் ஒரு வழிகாட்டியே ஆவர். பிறருடைய கட்டாயத்தின் பேரில் ஒரு வேலையும் செய்ய வேண்டியதில்லை; தாங்களே தேர்ந்தெடுத்து ஒரு விருப்பமான வேலையை மாணவர்கள் செய்கின்றனர். பல

இம்முறையினால் உண்டாகும் பயன்கள்

தொழில்களில் மாணவர்களுக்குப் பயிற்சி ஏற்படும். சிந்தனைசக்தி அபிவிருத்தியடைவதால், அறிவு வளர்ச்சி உண்டாகிறது. இம்முறையினால் நல்ல மனப்பயிற்சி ஏற்படும்; நல்ல பொருள்களை இரசிக்கும் மனப்பான்மை வளரும். கற்றல் என்ற தொழிலுக்கு இம்முறை ஒரு கவர்ச்சியான தூண்டுகோல். 'வாழ்க்கையே கல்வி' என்ற உண்மையை இம்முறை வற்புறுத்துகின்றது. ஜனநாயகக் கொள்கையை இம்முறை

பேணுகின்றது. இதனால் சுயமுயற்சியும் தன்னம்பிக்கையும் உண்டாகும். மாணவர்கள் கல்வியை ஊக்கத்துடனும் பற்றுதலுடனும் கற்றுக் கொள்ளுகின்றனர். ஒத்துழைப்பும், ஐக்கிய பாவமும் இம்முறையினால் வளரும். கலைச்சாலையில் கற்பிக்கப்படும் எல்லாப்பாடங்களுக்கும் ஒரு தொடர்பு உண்டாகின்றது. இம்முறை 'செய்து கற்றல்' என்ற கொள்கையை அனுசரிக்கிறது.

இம்முறையிலுள்ள குறைகள்

இம்முறையில், கற்கும் தொழிலின் மூலம் அடையும் அறிவை, ஒரு வகையிலும் ஒழுங்குடன் பெற முடியாது; தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பகுதிகளை மட்டும் தான் கற்க முடியும். கால அட்டவணையும் பொருள் திட்டமும் இதில் இல்லை. சிறந்த தேர்ச்சி அடைய இவ்வகைத் திட்டத்தில் இடம் இல்லை. எல்லாப் பாடங்களையும் இம்முறையில் கற்க முடியாது. ஒரு தொடர்புமில்லாத பல பிரிவுகளையே இம்முறையில் கற்கக் கூடும். இம்முறை மிகுந்த பொருட்செலவை உண்டு பண்ணும்; எல்லாரும் சேர்ந்து ஒரே மனதாக ஒரு தொழிலைத் தேர்ந்தெடுப்பது துர்லபம். தொழில்களைக் குறித்த காலத்தில் செய்து முடிகக்கூடும் என்று சொல்லமுடியாது. ஆகவே, தனி முறையாக இம்முறையில் கற்பிக்க முடியாமற் போனாலும், இமமுறையுடன் பல்வேறு முறைகளை இணைத்துப போதிக்கக் கூடும். பல தொழில்களை மாணவன் கற்றால்தான் ஒரு நிலைக்கு அறிவு வளர்ச்சி உண்டாகும்.

வர்தாத் திட்டம்

இதைத் தொழில் முறைக் கல்வி என்று சொல்லலாம். இத்திட்டத்தின் மூலதத்துவமும் செய்கையே. இத்திட்டத்தைப் பற்றிய அபிப்பிராயங்களைக் காந்தியடிகள் மத்திய மாகாணத்திலுள்ள 'வர்தா' என்ற கிராமத்திலிருந்து வெளிப்படுத்தியதால் இப் பெயர் பெற்றது. ஒரு பிரயோசனமுள்ள கைத்தொழிலை மையமாக வைத்துக்கொண்டு, அதைச் சுற்றிப் போதனை அளிப்பதே இத்திட்டத்தின் முக்கியமான அம்சம். இத்திட்டத்

தில் பல சிறு வேலைகள் கிடையா; பாடசாலை வாழ்க்கை முழுதும் ஒரே தொழிலைத் திறம்படக் கற்கவேண்டும். வாழ்க்கையில் உபயோகமுள்ள ஒரு தொழிலின் மூலம் எல்லாப் பாடங்களையும் கற்றுக்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கம். ஆனால், இத்தொழிலைத் திறமையுடன் கற்றுக்கொள்ளவேண்டும். சுயநோக்க முயற்சி முறையைப் போல் தொழிலை மாணவர்களே தேர்ந்தெடுக்க முடியாது; ஏற்கெனவே நிர்வாகிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொழிலையே கற்றுக்கொள்ள வேண்டும். இத்தொழில் பாடசாலைப் பாடத்தில் மற்ற பாடங்களைப் போல் ஒரு பாடமாக இல்லை; இதுவே பாடசாலையின் வாழ்க்கைக்கு அஸ்திவாரம். இதை மையமாக வைத்தே கற்றல் நடைபெறும். இம்முறையில் இயந்திரம் இயங்குவதுபோல் தொழில் கற்பிக்கப்படமாட்டாது; அத்தொழிலின் பல பிரிவுகளையும் காரணகாரிய சம்பந்தங்களுடன் நன்கு கற்கவேண்டும். அத்தொழிலைச் செய்து உபயோகமான பல பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும்; அத்துடன் அறிவு வளர்ச்சியும ஏற்படும். இத்திட்டத்தின் அம்சங்கள் மூன்று. அவையாவன :—

(1) உபயோகமான கைத்தொழிலைக் கற்றல்.

(2) அத் தொழிலின் வாயிலாக அறிவுக் கிளர்ச்சி உண்டாக்குதல்.

(3) மூலத்தொழிலுடன் பல பாடங்களை இணைத்தல். இத்திட்டத்தையே அடிப்படையாகக் கொண்டு யுத்தப் பிற்காலக் கல்வித் திட்டத்தை 'சார்ஜெண்ட் கமிட்டி' யார் வகுத்து மத்திய இந்திய அரசாங்கத்திற்கு ஒரு திட்டம் சமர்ப்பித்திருக்கின்றனர். இம்முறையிலும் விளையாட்டு அம்சம் சிறிதளவு உண்டு. "கற்றல் என்பது புத்தகப் போதனை அல்ல; ஒரு தொழிலைச் சாஸ்திரீய முறையில் பயின்று அதைக் கற்கும் பொழுதே பல பாடங்களைக் கற்பது" என்பது இத்திட்டத்தின் நோக்கம். மாணவர்கள் செய்யும் சாமான்கள் உபயோகமுள்ளவைகளாகவும் விற்பனை செய்யக்கூடியவையாகவும் இருக்கவேண்டும் என்பதும், அதனால் கிடைக்கும் வரு

மானத்தினுல் கல்விச் சாலைகள் நடைபெற வேண்டுமென்பதும் இத்திட்டத்தின் கொள்கைகள். இது சார்ஜெண்ட் திட்டத்தில் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

வர்தா திட்டத்திற்கு மூலத் தொழில்கள்

அத்திட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழிலில் கற்றலுக்குத் தேவையான அநேக அம்சங்கள் நிறைந்திருக்கவேண்டும். சமூகப் பற்றுக்களும் செயல்களும் இத்தொழிலுடன் சம்பந்தப் பட்டிருக்க வேண்டும்; பாடசாலையில் கற்பிக்கப் படும் எல்லாப் பாடங்களுக்கும் இந்தக் கூட்டுறவு இருக்கவேண்டும்; கைத்தொழிலில் உள்ள சாதனைகளைக் கற்றலுக்கு நன்கு உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். ஆகையால் மூன்று மூலக் கைத்தொழில்கள் இத் திட்டத்திற்குத் தகுதியானவை. (1) விவசாயம் (2) நூல் நூற்றலும் நெய்தலும் (3) அட்டை வேலை மரவேலை, உலோக வேலை. இத்திட்டம் இந்நாட்டின் பல மாகாணங்களில் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது.

---

3. கிரகித்தலும் சொல்வன்மையும்

மொழிப் பயிற்சியில் இருபெரும் பிரிவுகள்

மானிட சமூகத்தின் நாகரிக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கருவி பாஷை. கருவி உயர்தரமாக இருந்தாலன்றி, அடையும் பயன் உயர்தரமாக விருக்காது. ஆகவே பாஷைப் பிரயோகம் உயர்தரமாக இருக்கவேண்டும். மாணவர்களுக்கு மொழிப் பயிறசியில் போதிய வல்லமை அளித்தாலன்றி அதைத் திறம்பட அவர்கள் வாழ்க்கையில் பிரயோகிக்க முடியாது. பல்லாண்டுகளாக வளர்ந்துள்ள ஒரு மொழியை மிகக் குறுகிய காலத்திற்குள் எவரும் முழுதும் கற்றுணர வியலாது. ஏதோ சில அம்சங்களில் சிலர் சிறந்த தேர்ச்சி பெறுவது சாத்தியமாகலாம். ஆனல், பெரும்பாலோர் உயர்ந்த தேர்வு

நிலையை அடைய முடியாது. ஆகையால் பெரும்பாலோர்க்குப் பயன்படும்படியான ஆரம்ப நிலையில் மொழிப் பயிற்சியில் கவனிக்கவேண்டிய அமசங்கள் எவை என்று நிர்ணயிக்கப்படவேண்டும். ஒரு மொழியில் தேர்ச்சி பெறவேண்டும் என்றால், அம்மொழியைப் பிரயோகப் படுத்துவதில் வன்மை என்று கொள்ளவேண்டும். ஆனால் மொழிப் பிரயோகம் எல்லாருக்கும் எளிதல்ல; ஒருவனுடைய மரபு, சூழ்நிலை, பயிற்சி முறை, மனப்பக்குவம் ஆகிய யாவும் மொழிப் பிரயோகத்தைப் பாதிக்கும். முறையான பயிற்சியின்மையினால், மனத்துள் கருத்துக்கள் தோன்ற; கருத்துக்கள் தோன்றினாலொழிய நமது எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்க முடியாது; மொழியைப் பிரயோகிக்க அறிந்தாலன்றி எண்ணங்கள் வெளிப்படா. நமது மனத்தில் தோன்றும் எண்ணங்களைப் பிறருககுத் தெரிவிக்கவும், பிறருடைய சிந்தனைகளை நாம் உணரவும் பாஷை பயன்படுகிறது; பிறருடைய சிந்தனைகளை உணரும் சக்தியைக் **கிரகித்தல்** என்றும், நம்முடைய கருத்துக்களைப் பிறருக்குத் தெரிவித்தலைச் **சொல்வன்மை** என்றும் சொல்லலாகும். மொழிப் பயிற்சியில் இவை இரண்டும் பெரும் பிரிவுகள்.

மனமானது ஒரு சூன்யமான பிரதேசம் அல்ல; அங்கே அறிவு வளர்ச்சிக்கு ஏற்றபடி கருத்துக்கள் தோன்றும். பல கருத்துக்களைக் கிரகித்துக் கொண்டாலொழிய மனத்தில் எண்ணங்கள் தோன்ற. பிறருடைய

கிரகித்தல்

கருத்துக்களைக் கிரகிப்பதற்கு மூன்று வழிகள் உண்டு. புலன் உணர்ச்சிகளால், அனுபவத்தின் மூலமாகக் கருத்துக்கள் தோன்றும்; அறிஞர்களுடைய கருத்துக்களுக்குச் செவி சாய்த்து அவற்றை நன்கு மனத்தில் பதிவுசெய்து [illegible]ம்போது, நாம் பல கருத்துக்களைக் கிரகிக்கின்[illegible]; பல நூல்களைப் படித்தறிவதாலும் நாம் பல கருத்துக்களைக் கிரகிக்கலாம். ஆகவே கிரகித்தல் [illegible] வகையில் நடைபெறும்; (1) புலன் உணர்ச்சி, (2) கேள்வியினால் தெ[illegible]து கொள்ளுதல், (3) பலநூல்களைப் படித்தறிதல். படிக்கத் தெரியாதவர்கள் கேள்வி

வாயிலாகப் பல கருத்துக்களைக் கிரகிப்பர். நம் நாட்டில் கேள்வி ஞானத்திற்கு தனிச் சிறப்பு உண்டு. சத் பிரசங்கங்களும், ஹரிகதா காலக்ஷேபங்களும் படிக்கத் தெரியாத பாமரமக்களுக்கு அறிவுப் பெருக்கம் ஏற்படுவதற்குகந்த வழிகளாகும். எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் பல நூல்களைப் படித்து அநேக விஷயங்களைக் கிரகிக்கலாம். புலன் உணர்ச்சிகளால் உண்டாகும் அனுபவத்தினல் அடையும் அறிவுவளர்ச்சி மிகச் சிறந்தது. அது சுயமாகக் கற்கும் முறையைச் சேர்ந்தது. அறிஞர்களுடன் அளவளாவுவதாலும் பல கருத்துக்களைக் கிரகிக்கக்கூடும்

சொல்வன்மை

ஆனல் நம்மனத்தில் தோன்றும் கருத்துக்களை அங்கேயே நிலைநிறுத்திவிடுவது பயனளிக்காது. பல வழிகளில் கிரகித்துள்ள கருத்துக்களைப் பிறருக்கு உதவும் வகையில் வெளிப்படுத்தவேண்டும். நம் கருத்துக்களைப் பிறருக்குத் தெரிவிக்காமலிருந்தால், நாம் வாழ்க்கையை நடத்தமுடியாது. ஆகையால், பேச்சு வாயிலாகவும், எழுத்து வாயிலாகவும் நமது மனக் கருத்துக்களைப் பிறருக்கு அறிவிக்கக்கூடும். பாஷையில் திறமை இல்லாதிருந்தால், நம் கருத்துக்களை வெளிபபடுத்த முடியாது. நாம் கற்ற விஷயங்களை மனப்பெட்டியில் அடைத்து வைக்கக்கூடாது; அவற்றைப் பிறருக்குப் பயன்படும் வண்ணம் வெளிப்படுத்தவேண்டும்; இன்றேல் துருப் பிடித்துப் போகும். கற்றவிஷயங்களை வெளிப்படுத்திஞல் தனக்கும் பிறர்க்கும் அறிவு ஊற்று உண்டாகும்; உள்ளடக்கி வைத்தால் ஒருவருக்கும் பயனில்லை. கிரகிக்கும் சக்தி அதிகரிப்பின், சிந்தனைசக்தி பெருகும். அதன் பயனுகக் கற்பனைசக்தி உண்டாகும்; கற்பனைசக்தி மூலமாக ஆக்க வேலைகளில் (Creati... ...படக்கூடும். ஆனல், இச்சக்தி தாய்மொழி ... ...யமாகும். ... கருத்துக்களை வெளியிடுவ... ...சொல்வ... அவசியம். சொல்வன்மையில் ... ...மசங்கள் உண்... பேசுதல் அல்லது வாய்மொழி ... ஒரு பிரிவு ... ...தில் சாதாரண சம்பாஷணை ...தல் அரிய கருத்துக்கள் ...ங்

கிய ஓர் அறிஞருடைய சொற்பொழிவுவரை அடங்கி யுள்ளது. இரண்டாவது பிரிவு எழுத்து வன்மை என்பது; இதில் எளிய கடிதங்கள், விண்ணப்பங்கள் முதல் கற்பனை ஊற்றுக்களை வெளிப்படுத்தும் பல ஆக்க நூல்கள் ஈறுக அடங்கியுள்ளன.

'கிரகித்தல்' என்பது தன்னுள் பல உட்பிரிவுகளை அடக்கியுள்ளது என்று அறிந்தோம். நம்முடைய ஐம் புலன்கள் மூலமாகவே தான் பல கருத்துக்களைக் கிரகிக்கக் கூடும். கிரகித்தலுக்கு ஐம்புலன்களின் பயிறசி மிகவும் அவசியம். உலகில் பல பொருள்களைக் கண்களின் வாயிலாக நாம் பார்க்கிறோம்; உடனே அவைகளைப்பற்றிய கருத்துக்கள் பல நமக்குத் தோன்றுகின்றன. பார்வை யின் வாயிலாக நமது சிந்தனைசக்தியை இப்பொருள்கள் கிளப்புகின்றன. இதுபோன்ற மற்ற புலன்களின் உணர்ச்சியினால் பல பொருள்களைப் பற்றிய கருத்துக்களை நாம் கிரகித்துக்கொள்ளுகிறோம். பிறர் சம்பாஷிப்பதைக் கேட்பதினாலும், சொற்பொழிவுகளைக் கேட்பதனாலும் கிரகித்தல் உண்டாகிறது. இதைக் "கேள்வி ஞானம்" எனச் சொல்வர். கல்வியில் "கேள்வி" யென்பது ஒரு முக்கியமான பிரிவாகும். பல நூல்களைப் பிழையறப் படித்துக் கருத்துக்களைக் கிரகிக்க வாசிப்புப் பழக்கம் தேவை. கிரகிக்கும் சக்தி அபிவிருத்தியடைய வாசித் தலும், கேள்வியும் அபிவிருததியடையவேண்டும். இவ் வாறு கிரகித்து உணரும் கருத்துக்களை வெளியிடுவதற் குச் சொல்வன்மை தேவை. சொல்வன்மையானது பேச்சு வன்மை, எழுத்துவன்மை என இருவகைப்படும். உரை யாடல், சொற்பொழிவு என்பவை பேச்சுவன்மையின் அம்சங்கள்; கடிதம், கட்டுரை எழுதுதல், ஆக்கத்திறமை போன்றவை எழுத்து வன்மையின் அம்சங்கள். இப் பிரிவுகளை எதிர்ப்பக்கத்தில் உள்ள கண்ணாடி நனகு விளக்குகின்றது.

இவற்றின் உட்பிரிவுகள்

'கல்வி' என்பது, 'பல சிறந்த பழக்க வழக்கங் களில் ஏற்படும் பயிற்சி' என நவீனக்கல்வி ஆராய்ச்சி

- மொழிப்பயிற்சி
  - கிரகித்தல்
    - கேள்வி
      - படிப்பு
      - பேச்சு (அ) சொற்பொழிவு
    - வாசித்தல்
      - மௌன வாசிப்பு
      - உரக்க வாசித்தல்
  - சொல்வன்மை
    - வாய்மொழி
      - உரையாடல்
      - சொற்பொழிவு
    - எழுத்து
      - கடிதம் கட்டுரை
      - ஆக்க நூல்கள்
        - உரைநடை
        - காவியம்

யாளர் கருதுகின்றனர். இது உண்மையே. இயந்திரத்தின் இயங்கும் தன்மையை ஆராய்வதற்கு, அதில் வேலை செய்யும் பல பாகங்களின் அமைப்பையும், அவை அமைக்கப்பட்டுள்ள ஒழுங்கையும், அவை ஒவ்வொன்றும் செய்யும் வேலை முறைகளையும் அறிந்து கொள்ளவேண்டும். அதுபோன்றே, 'கற்றல்' என்ற தொழிலில் ஒவ்வொரு தனிப் பழக்கத்தையும் சீர்தூக்கிப் பார்த்து, அதில் பயிற்சியளிக்க வேணடும். மொழிப் பயிற்சியும் அவ்வாறே. மொழிப் பயிற்சியில் திறமையடைய வேண்டுமானால், அதன் பல அம்சங்களில் சிறந்த தேர்ச்சி யடையவேண்டும். அந்த அம்சங்கள் சம்பாஷணை, சொற்பொழிவு, வாசித்தல் எழுதுதல் என்பன. இவற்றில் குழந்தைகளுக்குப் போதுமான பயிற்சி யளித்தாலன்றி அவர்கள் மொழிப்பயிற்சி பெற முடியாது.

உளநூல் குறிப்பு

வாய்மொழி, படிப்பு என்ற இரு சக்திகளிலும் உள்ள மனப்போக்கு ஒன்றுதான். இவைகளுக்குள் வித்தியாசம் புலன்களில்தாம்; கேள்வியினால் உணரும்போது காதுகள் முக்கிய புலன்கள்; படிபபின் மூலம் தெரிந்து கொள்ளும்போது கண்கள் உபயோகப் படுகின்றன. கேள்விக்கும், பார்த்துப் படிப்பதற்கும் வித்தியாசம் இது தான். படிப்பு இரு பிரிவுகளில் அடங்கியது: நேர்முகமாகப் படித்தல், நேர்முகமல்லாது படித்தல் என்பன. நாமாகவே செய்தும் பார்த்தும் கற்றுக்கொள்வது நேர்முகப் படிப்பு; சொற்பொழிவுகளைக் கேட்பது, புத்தகங்களைப் படிப்பது, படங்களைப் பார்ப்பது ஆகியவை நேர்முகமல்லாத படிப்பைச் சேர்ந்தவை. பல விஷயங்களை நேர்முகமாகக் கற்றுக்கொள்ள முடியாது. பழங்காலச் சம்பவங்கள், பிறநாட்டுக் காட்சிகள் போன்றவைகளைப் படங்கள் மூலமாகவும், புத்தகங்கள் மூலமாகவும், பிரசங்கங்கள் மூலமாகவுமே அறிந்துகொள்ளக் கூடும். ஆனால் கேள்வியைவிடப் படித்தலே சிலாக்கியமானது. நமக்கு ஓய்வுள்ள நேரத்தில் நாமாகப் படித்து இன்புறக் கூடும்;

மொழிப்பயிற்சியின் பல அம்சங்களிலுள்ள ஐக்கிய பாவம்

ஆனால் நாம் பிரியப்படும்பொழுது தகுந்த சொற்பொழிவாளர் தயாராயிருக்க முடியாது. நமது மனப்போக்கின்படி படித்து, பிறர் உதவியை அதிகமாக நாடாமல், பல பொருள்களைப்பற்றிய கருத்துக்களைக் கிரகிப்பதற்குப் 'படித்தல்' மிகவும் அவசியமானது.

---

4 வாய்மொழி

வாய்மொழியின் அவசியம்

மொழிப் போதனையின் மூன்று பிரிவுகளாகிய வாய்மொழி, வாசிப்பு, எழுத்து என்பவற்றுள் வாய்மொழி மிகவும் அவசியமானது. வாய்மொழிப் பயிற்சியின் அவசியத்தை இதுகாறும் நாம் கவனிக்கவில்லை. படிக்காதவர்கள் தங்கள் கருத்துக்களை வாய்மொழியாகத் தெரிவிக்கின்றனர்; படித்தவர்களும் பேச்சை உபயோகிக்கின்றனர். பெரும்பாலோர் கடிதங்கள் எழுதும்பொழுது மட்டும் எழுத்தை உபயோகிக்கின்றனர். ஆகவே, கல்விச்சாலைகளில் வாய்மொழிப் பயிற்சி அதிகமாகக் கவனிக்கப்படவேண்டும். கல்விச் சாலைகளில் பிள்ளைகளை வாழ்க்கைக்குத் தயார் செய்கிறோம். ஆகையால் வாழ்க்கையில் அவசியமான வாய்மொழிக்குக் கல்வித் திட்டத்தில் முக்கியமான இடம் அளிக்கவேண்டும். முன்காலத்திலும் வாய்மொழிக்குப் பெருமை அளிக்கப்பட்டு வந்தது. 'கல்விக் கழகு கசடற மொழிதல்' என்ற முதுமொழி இதை விளக்கும். ஆகையால் குழந்தைகளைத் தெளிவாகவும் திருத்தமாகவும் தமிழில் பேசப் பழக்குவது ஆசிரியருடைய கடமையாகும்.

வாய்மொழியில் அதிகமான பயிற்சி யளித்தால்தான் குழந்தைகளுக்குப் பேசும் திறமை உண்டாகும். இன்றேல் மௌன நிலையிலேயே அவர்கள் இருப்பார்கள். பாடசாலைக்கு வரும்பொழுது குழந்தைகள் பல சொற்களைக் கற்றிருப்பார்கள். உற்றாருடன் அளவளாவுவதாலும்,

பிறர் பேசுவதைக் கேட்பதாலும், பிறர் செய்கைகளைக் கவனிப்பதாலும் சிறிதளவு பேசும் திறமையைப் பாடசாலைக்கு வருமுன்னரே குழந்தைகள் அடைந்திருப்பார்கள். பாடசாலைக்கு வந்த பின்னர், மற்ற குழந்தைகளுடன் பழகுவதாலும் ஆசிரியருடன் பேசுவதாலும், பேசும் சொற்களின் பெருக்கம் குழந்தைகட்கு உண்டாகும். இவ்வாறு பல புதிய சொற்களை அவர்கள் கற்பார்கள். இவவிதம் பல சொற்களைக் கற்பதனால், வாசிப்புப் பழக்கம் ஏற்படும் பொழுது பொருள்பட வாசிப்பது எளிதாகும். பேசும் பயிற்சியினால் பயமும் கூச்சமும் நீங்கும்; உச்சரிப்பு திருந்தும்; பேச்சுத் தெளிவடையும். பின்னால் பிழையின்றி எழுதுவதற்கு, வாய்மொழியாக ஆரம்பத்தில் கருத்துக்களை வெளியிடப் பழகுவது சிறந்தது. வாய் விட்டுப் பேசுவதனால் குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை உண்டாகும். ஆரம்ப நிலையில் சிறந்த பேச்சுப் பயிற்சி பெற்றால், மேல் நிலையில் நாவன்மையுடன் சொற்பொழிவுகள் நிகழ்த்த அது உதவும். பிற்கால வாழ்க்கையில் பல துறைகளில் பொதுமக்களுக்கு அறிவு ஊட்டவும், சமூக சேவை செய்யவும் பிரசங்கவன்மை உதவும். ஆகையால் பாடசாலை வாழ்க்கையில் ஆரம்பநிலை முதல் இறுதிவரை மாணவர்கள் பேசுவதற்கு ஏராளமாகச் சந்தர்ப்பங்கள் கொடுக்கவேண்டும். மேல் நாடுகளில் கல்விச்சாலைகளிலும் வாழ்க்கையிலும் வாய்மொழிக்குப் போதுமான கவனம் செலுத்தப்படுகிறது. நமது சமூகத்தில் வாய் திறவாது மௌனமாக இருப்பவர்களுக்குச் செலுத்தும் அளவு கடந்த மரியாதை, மேல் நாடுகளில் நன்கு சம்பாஷிப்பதற்கு அளிக்கப்படுகிறது. ஒருவனுடைய சம்பாஷணைத் திறமையை வியந்து போற்றுவது அந்நாடுகளில் உள்ள வழக்கம். சொல்வன்மை பெற்றாலன்றிச் சம்பாஷணைத் திறமை உண்டாகாது. வாய்மொழிப் பயிற்சியின் மூலம் குழந்தைகள் கூச்சமின்றிச் சபையில் பேசவும் விவாதம் செய்யவும் திறமை பெறவேண்டும். பேசும் விஷயமும் விவாதப் செய்யும் விஷயமும் அவர்களுக்குத தெரிந்ததாயிருக்க வேண்

வாய்மொழிப் பயிற்சியின் நோக்கம்

டும். தங்களுக்குத் தெரிந்த விஷயங்களை ஒழுங்குபடுத்திக் கோவையாக விளக்குவதற்குத் தயாராக இருக்கவேண்டும். பேசும்பொழுது தெளிவாகவும், தடையின்றியும், பிறர் இரசிக்கும்படியும் பேசப் பழகவேண்டும். கேள்விகட்கு விடை அளிப்பது மட்டும் வாய்மொழிப் பயிற்சி ஆகாது. ஒரு பொருளைப்பற்றித் தொடர்ச்சியாகவும், பொருத்தமாகவும் பேசுவதற்குத் திறமையடைந்தாலொழிய வாய்மொழிப் பயிற்சி நன்கு பெற்றதாக நினைக்க முடியாது. ஆரம்ப வகுப்புக்களில் சிறு வாக்கியங்களில் கேள்விகட்குப் பதில் அளிக்கும் வகையில் வாய்மொழிப் பயிற்சி அளிக்கவேண்டும். பின்னர், மேல் வகுப்புக்களில் தொடர்ச்சியாகப் பேசும் வாக்கு வன்மை பெறவேண்டும். வாய்மொழிப் பயிற்சியின் மூலமாகக் குழந்தைகள் பிழையின்றிப் பேசவும், பிறர் தமது கருத்துக்களை எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையில் தெளிவாகவும் சுலபமாகவும் எடுத்துச் சொல்லவும், கேட்பவர்கள் இரசிக்கும் வகையில் பேசவும் திறமை பெற வேண்டும். கல்வி கற்கும் குழந்தைகட்கு இத்தகைய பயிற்சியளிப்பதே வாய்மொழிப் பயிற்சியின் நோக்கமாகும்.

வாய்மொழிப் பயிற்சிக்கான முறைகள்

பாடசாலையில் சேருவதற்கு முன்பே குழந்தைகள் வாய்மொழியாகப் பேசவும், பிறர் பேசுவதைத் தெரிந்து கொள்ளவும் பழகியிருப்பார்கள். குழந்தைகளின் சொல் வன்மை எவ்விதம் வளர்கிறது என்பதைக் கவனித்தால், அத்திறமையைப் பாடசாலையில் எவ்விதம் உண்டாக்கக்கூடுமென்று அறிய முடியும். பிறந்தவுடனே குழந்தைகள் "குவா, குவா" என்று அழுது சப்தம் செய்கின்றன. நாளாக ஆகப் பலவிதமான சப்தங்கள் செய்கின்றன. இச்சப்தங்களினால் உண்டாகும் பலன்தான் அக்குழந்தைகளைப் பேசுவதற்குத் தூண்டுகின்றது. உதாரணமாக, ஒரு குழந்தை பசியினால் அழுதால், அதைத் தாயார் எடுத்துப் பாலூட்டுகிறாள். அழுதால் பால் கிடைக்கும் என்ற எண்ணம் அக்குழந்தைக்கு உண்டாவதால் திரும்பவும்

பசி எடுத்தபொழுது அழுகின்றது. மகிழ்ச்சியடையும் போதும குழந்தைகள் சப்தம் செய்கின்றன; தான் கோரிய பொருளைக் கண்டால் ஆவலுடன் ஒலியை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு குழந்தையும் ஆரம் பத்தில் தனித்த ஒரு மொழியில் பேசுகின்றது. இச் சொற்களை மழலைச் சொற்கள் என்கிறோம். பலர் பேசுவ தைக் கேட்பதாலும் பிறருடன் சம்பாஷிப்பதாலும், இம் மழலைச் சொற்கள் தெளிவடைந்து நாளடைவில் தெளி வான சொற்களாக மாறுகின்றன. கவர்ச்சியான காட்சி கள், ஓசைகள், புதிய அனுபவங்கள், தெருக்கூட்டங்கள், படங்கள். மிருகங்கள், பறவைகள் ஆகிய யாவும் குழந் தைகள பேசுவதற்குத் தூண்டுகோல்கள். குழந்தைகளு டன் முதியவர்கள் சம்பாஷிக்கும்போது தெளிவும் அழகும் பொருந்திய மொழியில் பேசவேண்டும். குழந்தைகளின் சொல்லகராதியைச் சிறுகச் சிறுகப் பெருக்கவேண்டும். பெற்றோர்கள் குழந்தைகளின் சொல்லகராதியைப் பெருக்க இம்முறைகளைக் கையாண்டால், பள்ளிக்கு வரு முன ஓரளவுக்கு அவை வாக்குவன்மை பெற்றிருக்கும். பல நல்ல சந்தர்ப்பங்கள் நிறைந்த குடும்பங்களில் வளரும் குழந்தைகள் பேசும் சொற்களின் பொருளை வெகு சீக்கிரம் உணருவதுடன நன்ருகப் பேசவும் அறிந்திருக்கும். இவ்வகை வசதிகள் இல்லாத குடும்பங் களிலுள்ள குழந்தைகளின் பேச்சுவன்மை தெளிவற்ற தாகவும் பிழையாகவும இருக்கும். ஆகவே, மொழியில் திறமை வேண்டுமானல் பரந்த அனுபவமும், சிறந்த பயிற்சியும் அவசியம் என்று தெரிகின்றது. பள்ளியில் முதலில் குழந்தைகள் பேசும் சொற்கள் கொச்சையாகவும் பிழையுள்ளதாகவும் இருக்கும்; காலக்கிரமத்தில் இக் குறைகள் சீர்ப்படும். இவ்வாறு சீர்ப்படுவது அனு பவத்தின் மூலம் தான் சாத்தியமாகும் அனுபவம் இன்றிக் கருத்துக்கள் தோன்ரு; தோன்றும் கருத்துக் களை வெளியிடவும் முடியாது. ஆகையால், போதுமான அனுபவங்களைக் குழந்தைகளுக்கு அளிப்பது ஆசிரிய ருடைய கடமையாகும். பிராணிகள், பொருள்கள், செடி கள் முதலியவற்றைக் கையாளுவதற்குப் பாடசாலைகளில் சந்தர்ப்பமளித்தால் குழந்தைகள் போதுமான அனு

பவங்களைப் பெற்று வாக்குவன்மை அடைவார்கள். படங்களும் பெரிதும் உபயோகிக்கப்படும், வகுப்பறையில் குழந்தைகள் தாராளமாகப் பேசுவதற்கு ஆசிரியர் உதவியளிக்கவேண்டும். வீட்டில் குழந்தைகள் தங்களுடைய தோழர்களுடனும் பெரியவர்களுடனும் சங்கோசமின்றித் தாராளமாகவும் இயற்கையாகவும் பேசிப் பேசிப் பல சொற்களைக் கற்றுப் பேசும் திறமையைப் பெறுகின்றன. குழந்தைகள் ஓயாமல் பேசும் தனமை வாய்ந்தவர்கள். வகுப்பறையின் நிர்ப்பந்தமில்லாமலிருந்தால் பேசசு தாராளமாக வரும். இந்த இயல்பை வாய்மொழிப் பயிற்சிக்குச் சாதகமாக நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஆனால், ஆசிரியர்களின் முன்னிலையில் குழந்தைகள் பேசுவதற்குப் பயப்படுவார்கள்; கூச்சம், பயம் ஆகியவை தோன்றும். இவற்றைப் போக்கி, பேசுவதில் அவர்களை உற்சாகப்படுத்துவது ஆசிரியர் கடமை. இதற்கேற்ற வழிகளைக் கையாள வேண்டும்.

வாய்மொழிப் பயிற்சியில் ஆரம்பத்தில் கவனிக்க வேண்டியது

குழந்தைகள் தெளிவாகவும், திருத்தமாகவும், பிழையின்றியும் பேசவேண்டும் என்பதே வாய்மொழிப் பயிற்சியின் நோக்கமாகும். ஆனால், ஆரம்பத்திலேயே நன்றாய்ப் பேசவேண்டும் என்று விரும்புவது பிழையாகும். குழந்தைகள் நன்றாய்ப் பேசுவதற்கு முன் அதிகமாகப் பேசப் பழகவேண்டும். தமது மனத்தில்தோன்றும் கருத்துக்களைத் தாராளமாகவும் அளவுக்கு மேற்பட்டும் வெளியிடுவதற்குக் குழந்தைகளைப் பழக்கவேண்டும். குழந்தைப் பேச்சில் பிழைகளிருப்பின் அவற்றை ஆசிரியர் பாராட்டக்கூடாது; குழந்தைகளை உற்சாகப்படுத்தி அடிக்கடி புகழவேண்டும். பிழைகளையே அடிக்கடி கவனிக்காமல், நல்ல அம்சங்களைப் புகழ்வதால், நாளடைவில் பிழைகள் குறையும். பிழைகளை எடுத்துக் காட்டிப் பரிகசித்தால், குழந்தைகள் பேசுவதற்குக் கூச்சம் ஏற்பட்டு, அக்கூச்சமே வேரூன்றவும் இடமுண்டு. பேசும்பொழுது நடுநடுவே பிழைகளை எடுத்துக் காட்டுவதாலும் தொடர்ந்த கருத்துக்கள் கத்தரிக்கப்படும்.

ஆசிரியருடைய பேச்சு, குழந்தைகளுக்கு ஒரு முன் மாதிரியாக இருக்கவேண்டும். ஆசிரியர் எவ்வாறு பேசுகின்றாரோ அவ்வாறே குழந்தைகளின் சொற்பயிற்சியும் அமையும். ஆகையால், ஆசிரியர் தாம் பேசுவதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; பிழையில்லாமலும், தெளிவாகவும், திருத்தமாகவும் எச்சரிக்கையுடனும் பேசவேண்டும். சொற்களை மென்று விழுங்கியும், அவசரமாகவும், பிழையான உச்சரிப்புடனும் பேசக்கூடாது. வகுப்பின் அமைதிக்குப் பங்கமில்லாத வழியில் குழந்தைகள் ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகிக் கலந்து பேச உற்சாகம் ஊட்டவேண்டும். பேசுவதற்குக் கூச்சப்படும் குழந்தைகளை முன்னணிக்கு வரத் தூண்ட வேண்டும்.

மேலும் சில பயிற்சி முறைகள்

பாடசாலையில் பயிலும் எல்லாப் பாடங்களிலும் வாய்மொழிப் பயிற்சிக்கு இடமுண்டு. ஆரம்ப வகுப்புக்களில் பூகோளம், சரித்திரம், அரசியல் ஆகிய எல்லாப் பாடங்களையும் கூடுமானவரையில் வாய்மொழியாகவே கற்பிக்கக் கூடும். அடிக்கடி கேள்விகள் கேட்டு, விடைகளைப் பெறுவதால், பேச்சுப் பழக்கம் உண்டாகும். பேசும்பொழுது ஏற்படும் பிழைகளை அவ்வப்பொழுதே திருத்துவது கூடாது; விடையின் முடிவில் பிழைகளை எடுத்துக் காட்டலாம்; இன்றேல் எண்ணங்களின் தொடர்ச்சி தடைப்பட்டுக் கூச்சம் அதிகமாகும். இவ்வாறு எல்லாப் பாடங்களிலும் வாய்மொழிப் பயிற்சிக்கு இடமுண்டு என்றாலும், முக்கியமாகத் தாய்மொழிப் போதனையில் வாய்மொழிப் பயிற்சிக்கு அதிகமான இடம் உண்டு. பிள்ளைகள் தாராளமாகப் பேசத் தூண்டுவதற்கு முகாந்திரங்கள் அவசியம். பேசும் விஷயம் குழந்தைகளின் விருப்பத்திற்குகந்தவைகளாக விருக்கவேண்டும். இவ்வகை விஷயங்கள் பலவற்றில் உரையாடல், பாடல்கள், படம் படித்தல், கதை நடித்தல், கதை சொல்லல், சொற்பொழிவுகள், விவாதங்கள் ஆகியவை முக்கியமானவை. இவை வாய்மொழிப் பயிற்சிக்கு ஏற்ற விஷயங்கள்.

வாய்மொழிப் பயிற்சிக்கான வகைகள்

மாணவரை மூன்று பிரிவினராகப் பிரிக்கலாம். ஆரம்ப நிலை, நடுத்தர நிலை, உயர் தர நிலை என மூன்று நிலைகள் உண்டு. முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகும்புவரை ஆரம்பநிலை; ஆறு, ஏழு, எட்டு வகுப்புக்கள் நடுத்தரநிலை; அதற்குமேல் உயர்

மாணவர்களைத் தரம்பிரித்தல்

தரநிலை. அந்தந்த நிலைக்கு ஏற்ற படிப் பயிற்சி யளிக்க வேண்டும். குழந்தைகளின் மனோபாவத்தை யுணர்ந்து விஷயங்களை வகுக்கவேண்டும். குழந்தைகளின் சொல்லகராதி, அனுபவங்கள், அறிவு வளர்ச்சி, மனப் பக்குவம் இவற்றை அனுசரித்துப் பேசும் பயிற்சி யளிக்கவேண்டும். ஆரம்பநிலையில் குழந்தைகளின் அனுபவத்திற்குகந்த உரையாடல், பாடல்கள், கதைகள், நடிப்பு, படங்கள் ஆகியவற்றின் மூலமாகப் பேசும் பயிற்சி அளிக்க வேண்டும். உயர்நிலையிலும் நடுத்தர நிலையிலும் விவாதங்கள், சொற்பொழிகள் மூலமாகப் பேசும் பயிற்சி யளிக்கவேண்டும்.

மொழியானது முதன் முதலில் பேசப்பட்டதேயன்றி எழுதப்படவில்லை. அதன் முறையீடு செவிகளுக்கே யன்றிக் கண்களுக்கு இல்லை. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னால் ஒலிக்குறிப்புகளுக்கு வரிவடிவங்கள் கண்டு

ஆரம்பநிலையில் பேச்சு

பிடிக்க முயலுவதற்கு முன்னர், மனிதர்கள் வாய்மொழி மூலமாகவே தமது கருத்துக்களைத் தெரிவித்து வந்தனர். வாசிபபதற்கு ஒன்று மிருந்திராத காலத்தில் பேசியும், பேசுவதைக் கவனித்தும் வந்தனர்; ஏனெனில் மனித சமூகத்தின் சரித்திரத்தில் எழுத்துக் கண்டுபிடித்தது சமீபகாலச் சம்பவம். இன்றும் பலர் நமது முன்னோர்களைப் போலவே படிக்காதவர்களாக இருக்கின்றனர்; படித்தவர்கள் கூட எழுதுவதைக் காட்டிலும் அதிகமாகப் பேசுகின்றனர். எழுதப்படும் சொல்லானது நாம் பேசும் சொல்லின் அடையாளம் என்றும, அதன் பொருளை உணருமுன் அதைப் பேசும் சொல்லாக நாம் மாற்றவேண்டும் என்பதையும் மறக்கலாகாது. ஆகவே, தமிழ் கற்பிக்க ஆரம்பிக்கும்பொழுது வாய் மொழியாகவே முதலில் ஆரம்பிக்கவேண்டும் என்ப

தன் அவசியத்தை நாம் உணரவேண்டும். காலம், அவசியம் இவற்றை யனுசரித்து வாசிப்பதற்குக் கற்றுக் கொள்வதற்கு முன்னால் பேசும்பயிற்சி அளிக்கவேண்டும் என்பது நமக்குத் தெளிவாக விளங்குகின்றது. தெளிவாகப் பேசுவதற்குக் கற்பிக்க ஆரம்ப வகுப்பில் தொடங்கவேண்டும். இதை நாம் வற்புறுத்தவேண்டும்; ஏனெனில், இது கடினமாயிருப்பதால் அனுசரிக்கப் படுவதில்லை. கருத்துக்களைத் தெரிவிக்கும் பேச்சைப் பற்றியல்ல இங்கு சொல்லப்படுவது: பொருள் அறியுமாறு பேசப்படும் ஒலிக்குறிகளை உச்சரிக்கும் முறையாகிய பேச்சைப்பற்றி இங்குச் சொல்லப்படுகிறது. நம்மில் ஒவ்வொருவரிடமும் ஓர் இசைக்கருவி உண்டு; அது காற்றுக் குழாய்களினால் ஆகியது; அதிகமான மென்மையும சக்தியும் வாய்ந்தது. அதைத் திறம்படப் பெற்று வாழ்க்கையில் வெகு குறைவான அளவுக்கே உபயோகிக்கிறோம். பள்ளிக்கு வரும் பாலர்கள் இக்கருவியைச் சரிவர உபயோகிப்பதில்லை; உபயோகிக்கும் வழியும் தெரியாது. அளவுக்கு மிஞ்சி அதை உபயோகிக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிப்பது உண்மையேயாயினும், சிறந்த வகையில் உபயோகிப்பதற்கு உற்சாகம் ஊட்டப்படுவதில்லை. ஆனால், ஆரம்பநிலையில்தான், பேசும் பழக்கங்கள் நன்கு அமைய வேண்டியிருப்பதால், குழந்தைகளுக்கு ஆசிரியருடைய உதவி அவசியம்.

திருப்தியான பேச்சுப் பழக்கங்கள் ஏற்படவேண்டுமானால், பேசுவதிலுள்ள குறைகள் நிவிர்த்திக்கப்பட வேண்டும். இக்குறைகள் பலவகைப்படும். அவை தெளிவற்ற பேச்சு, பிழையான உச்சரிப்பு, கத்தரித்த முடிவுகள், வேகமான பேச்சு ஆகியவை.

பேசுவதில் நிவிர்த்திக்க வேண்டிய குறைகள்

வீடுகளிலும், தெருக்களிலும் பழகுவதனால் ஏற்பட்ட பிழையான பேச்சுப் பழக்கங்களுடன் குழந்தைகள் பள்ளிக்கு வருகின்றனர். திருத்தமான புதிய பழக்கங்களைக் கைக்கொள்ளவும் பழைய பிழையான பழக்கங்களை உடைத்தெறியவும் ஆசிரியர் தம்மைத் தயார் செய்துகொள்ளவேண்டும். பழைய பழக்கங்களுக்கு வன்மை அதிகம்; இந்தவன்மை

ஆசிரியருடைய முயற்சிகள் ஈடேறுதபடி தொடர்ச்சியாக வேலைசெய்யக் கூடியது; ஆனால், ஆசிரியர் அதைரியமடையக் கூடாது. மேலும் தொடர்ந்து சிறந்த பழக்கங்களைக் கைகொள்ளச் செய்வதில் முனைந்து வேலைசெய்யவேண்டும். குழந்தைகளிடம் ஆசிரியர் அன்பும் ஆதரவும் காட்டி, குற்றங்களை நீக்குவதற்கும் நற்பழக்கங்கள் ஏற்படுவதற்கும் முயலவேண்டும்.

பேச்சும் உரையாடலும்

பள்ளி வாழ்க்கையின் ஆரம்ப நிலையில் குழந்தைகளின் சிந்தனைகள் அபிவிருத்தியடைய வேண்டுமானால், புதிய சொற்களையும், சொற்றொடர்களையும் அவர்கள் சேகரம் செய்து கொள்ளவேண்டும். கட்டுப்பாடில்லாமலும், தெளிவாகவும் பேசுவதற்குப் பயிற்சியளிப்பதே ஆரம்ப வகுப்பில் ஆரிசியருடையநோக்கம். சொல்லாட்சி பேசுவதன் மூலமாகவே விரிவடையும். சிறு குழந்தைகளைப் பொறுத்தமட்டில், வாய்மொழிப் பயிற்சி என்றால் பேச்சும் சம்பாஷணையும் தாம். பேச்சுக்கும் உரையாடலுக்கும் தனி வகுப்புக்கள் கிடையா. வாசிக்கும் பருவத்துக்கு முன்னரே குழந்தைகள் சம்பாஷிப்பதில் ஆர்வமும் வல்லமையும் காட்டுகின்றனர். சிறு குழந்தைகள் பெரும்பாலும் தங்களைப்பற்றிய விஷயங்களை அறிந்துகொள்வதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர்; தங்களைப் போன்ற வேறு குழந்தைகளைப்பற்றிய விஷயங்களை அறியவும் ஆவல்கொள்ளுகின்றனர். ஆரம்பத்தில் குழந்தைகளுடைய அன்றாட அனுபவங்களைப்பற்றி ஆசிரியர்கள் அவர்களுடன் இயற்கையான முறையில் சமபாஷிக்கவேண்டும். இச்சம்பாஷணை குழந்தைகளின் மனபபான்மைக்கு ஒத்து இருக்க வேண்டும். சம்பாஷணை விஷயங்கள் அவர்களுடைய விருப்பத்தை அனுசரித்து இருக்கவேண்டும். அவர்களுடைய மனநிலைக்கு எட்டாத விஷயங்களைப்பற்றியும், அவர்களுடைய அனுபவத்திற்குப் புறம்பான விஷயங்களைபபற்றியும் சம்பாஷணை செய்வதில் பலன் ஏற்படாது.

உரையாடலினால் குழந்தைகள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் உண்டாகின்றது. அதன் மூலம் பேசுவதில் பயிற்சி

ஏற்படும். உரையாடலின் வாயிலாகக் குழந்தைகளின் சிந்தனா சக்தி தூண்டப்படும்; சொல்லறிவு அபிவிருத்தி யடையும்; கருத்துக்கள் விரிவடையும்; உற்று நோக்கும் சக்தி, கவனிக்கும் திறமை, யாதாயினும் சம்பவத்தைப் பற்றித் தொடர்ச்சியான சிந்தனைகள் உண்டாதல், கேள்விகட்குச் சரியான விடைகள் அளிக்கும் திறமை, முழுவாக்கியங்களில் பேசப் பழகுதல், பிள்ளைகளின் கூச்சம் நீங்குதல், பாடசாலை வாழ்க்கையில் விருப்பம் உண்டாகுதல், குழந்தைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே பரஸ்பர அன்பு உண்டாகுதல் ஆகிய பலவகையான நன்மைகள் ஏற்படுவதற்கு உரையாடல்கள் காரணமாக இருக்கும்.

உரையாடலின் நோக்கம்

உரையாட்டுக்குரிய விஷயங்கள்

உரையாடலுக்குரிய விஷயங்கள் மாணவர்களுடைய மனப்பான்மைக்கு உகந்தவைகளாய் இருக்கவேண்டும். அவர்களுடைய அறிவுக்குத் தக்கவைகளாகவும், அவர்களுடைய விருப்பத்தைத் தூண்டக்கூடியவைகளாகவும் இருக்கவேண்டும். அவர்களுடைய அறிவுக்கும், விருப்பத்திற்கும் எட்டாத பொருள்களைப்பற்றிப் பேசுவது பயனளிக்காது. ஆரம்பத்தில் குழந்தைகளுக்குத் தங்களைப்பற்றிய விஷயங்களில் அதிக விருப்பம் உண்டு; பின்னர், தங்களுடைய சுற்றுப்புறம், பிறபொருள்கள், பிறமனிதர்கள் ஆகியவற்றைப் பற்றிய சம்பவங்கள் அவர்களுக்குக் கவர்ச்சியை அளிக்கும். குழந்தைகளுடைய வகுப்பறை அனுபவங்களும், வெளிப்புற அனுபவங்களும் சம்பாஷணைக்குகந்த விஷயங்களே. அவயவங்கள், கைவேலை, உடைகள், வகுப்பறை, தொழில்கள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுவது உற்சாகம் உண்டாக்கும். குடும்பம், செல்லப் பிராணிகள், பறவைகள், பூக்கள், இயற்கைத் தோற்றங்கள் ஆகியவை சம்பாஷணைக் குரியவை. மேல் வகுப்புக்களில் குறித்த விஷயங்களைப்பற்றி நீண்டநேரம் பேசக்கூடிய திறமை அளிக்கவேண்டும். கீழ்நிலையில் கைத்தொழில் காலங்களில் வேலை செய்யும் முறையை

யும் ஒழுங்கையும்பற்றிச் சம்பாஷணை நடத்தலாம்; குழந்தைகள் செய்யவேண்டிய வேலைகளைப் பற்றியும், செய்துகொண்டிருக்கும் கைத்தொழிலைப் பற்றியும் சம்பாஷிக்கலாம். கிராமம், வகுப்பறைச் சாமான்கள, வாழ்க்கைச் சம்பவங்கள், சிநேகிதர்கள், பண்டிகைகள் முதலியவைகளைப் பற்றியும் பேசச் சந்தர்ப்பம் அளிக்கலாம். கைத்தொழில்கள் செய்வதற்கு வேண்டிய பொருள்களைப் பற்றியும் அவற்றைச் சேகரிக்கும் முறைகளைப் பற்றியும் சம்பாஷிக்கலாம்.

உரையாடல் முறைகள்

ஆரம்ப நிலையில் ஆசிரியர் குழந்தைகளுடன் இயற்கையாகச் சம்பாஷிககவேண்டும்; வகுப்பறைக்கென்று ஒரு தனிப்பாஷையை உண்டாக்கக் கூடாது. வகுப்பறையில் கட்டுப்பாடு இன்றித் தாராளமாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். குழந்தைகளின் பேச்சு, தெளிவாகவும் திருத்தமாகவும் இருக்கவேண்டுமானாலும், தாராளமாகவும், தெளிவாகவும, இயற்கையாகவும் ஆரம்பத்தில் பேசுவது அவசியம். ஆசிரியர் பிழையின்றிப பேசினால், அதை முன்மாதிரியாகக் கொண்டு மாணவர்களும் திருத்தமாகப் பேசுவார்கள். அடிக்கடி பிழைகளைத் திருத்துவதும், பிழைகளைப்பற்றி ஏளனம் செயவதும் பிசகு. ஆசிரியர் தினந்தோறும் குழந்தைகளுடன் தாராளமாகப் பழகிப் பேசவேணடும்; அவர்களுடைய கூச்சத்தைப் போக்கவேண்டும். சம்பாஷணையில் அவர்களுக்கு விருப்பம் உண்டாகும்படி பேசவேண்டும். ஆசிரியருடன் சம்பாஷிக்கும் மாணவர்களுக்குள ஒருவரோடு ஒருவர் சம்பாஷணை செய்யவும் அவகாசம் அளிக்க வேண்டும். குழந்தைகள் கேள்வி கேட்பதை வரவேற்க வேண்டும்.

சம்பாஷணைகள் செய்யும்பொழுது ஆசிரியருடனும் தோழர்களுடனும் நெருங்கிய நட்பு ஏற்படுவதால், பாடசாலையைக் குழந்தைகள் நேசிப்பார்கள்: குழந்தைகளுக்குள்ளே தோழமை அதிகரிக்கும். ஆசிரியர் குழந்தை

களின் தன்மைகளை உணர்ந்து அவர்களை உள்ளன்புடன் நேசிக்கக்கூடும். இயற்கையான முறையில் சம்பாஷித்தால், குழந்தைகளின் இயற்கைச் சக்திகள் வளரக் கூடும். குழந்தைகளின்சொல்லகராதி பெருகும்; அவர்களுடைய சிந்தனை சக்தி அதிகரிக்கும்; பல புதுக் கருத்துக்கள் மனத்தில் தோன்றக் கூடும், அறிவும் அனுபவமும் விருத்தியடையும்; உற்று நோக்கும் திறமை, கேள்விகட்குச் சரியான விடைகள் அளிக்கும் சக்தி, முழு வாக்கியங்களில் பேசுவதற்குப் பழக்கம் ஆகிய தன்மைகள் சம்பாஷணையின் மூலம் ஏற்படும்.

சம்பாஷணைகளினால் அடையும் பலன்கள்

குழந்தைகளுடைய பேச்சில் காணப்படும் குறைகள் ஏற்கனவே விவரிக்கபபட்டுள்ளன. அவை பிழையான உச்சரிப்பு, தெளிவில்லாத பேச்சு, மிகவும் விரைவாகவும் அல்லது மிகவும் மெதுவாகவும் பேசுதல், சொற்களின் கடைசியை உச்சரிக்காது விழுங்குதல், வாக்கியம் அல்லது சொற்களின் முடிவுகளை ஒலிக்காமல் கத்தரித்து விடுதல் போன்ற பிழைகளாகும். இவைகளை ஆசிரியர் பழக்கத்தின் மூலமாகவே திருத்தக்கூடும். ஆசிரியர் திருத்தமான பேச்சையே குழந்தைகளின் முன்னால் பேச வேண்டும். குழந்தைகள் தானே என்று அசட்டை செய்து, அவர்கள் முன்னிலையில் திருத்தமற்ற பேச்சுக்களைப பேசுவதனால், அவர்களும் பிழைகளை வெகு விரைவில் கற்றுக் கொள்வார்கள். ஆகவே, ஆசிரியருடைய பேச்சு, மாணவர்கள் பின்பற்றுவதற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமையவேண்டும். சிலருக்கு உடல் நிலையினால் பேச்சுக் கோளாறுகள் ஏற்பட்டிருப்பின், அவற்றை நீக்கித் திருத்தமான பேச்சு ஏற்படுவதற்கு ஏற்ற சிகிச்சைகளைச் செய்யும்படி பெற்றோர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்; சத்திரச் சிகிச்சைகள் தேவையானல், அவை பற்றியும் ஆலோசனை அளிக்கலாம். குழந்தைகளின் மனம் புண்படும் வகையில் பேச்சுக் குறைகளை ஏளனம் செய்யலா

பேச்சில் காணப்படும் குறைகளை நீக்கும் முறைகள்

காது. பிழை செய்பவர்களைச் சுட்டிக் காட்டாமல் பிழைகளைப் பொதுவாக வகுப்புக்கு எடுத்துக் காட்டலாம். நாக்குச் சரியாகப் பிறழ்வதற்கும், நெகிழ்வதற்கும் தேவையான பயிற்சிகளை அடிக்கடி கொடுக்கவேண்டும். (உ-ம்) (1) அடடா! நரி கரடேறுது! ஒன்பது நரியிலே ஒரு நரி கிழ நரி; கிழ நரி முதுகிலே ஒரு பிடி நரைத்த மயிர். (2) மலைமேல் மழை பெய்தது. ல, ள, ர, ற, ன, ண என்ற எழுத்துக்களின் உச்சரிப்பு கவனம் பெறவேண்டும். அடிக்கடி உண்டாகும் பிழைகளுக்கு அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும். பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு முகம் பார்க்கும் கண்ணாடி கொடுக்க வேண்டும்; அவர்களுக்கு முன்னால் ஆசிரியர் நின்றுகொண்டு, தமது நாக்கு, வாய், பற்கள் முதலியவற்றை மாணவர்கள் கவனிக்கும் வண்ணம் உச்சரிக்கவேண்டும். தங்களிடமுள்ள கண்ணாடிகளின் உதவியால் ஆசிரியருடைய உறுப்புக்கள் அசைவதைப்போல் குழந்தைகளும் அவற்றை அசைத்து உச்சரிக்கவேண்டும். ண, ன, ழ, ள, ற, ர என்ற எழுத்துக்களின் உச்சரிப்பு வித்தியாசங்களை இம்முறையில் போதிக்கலாம். அடிக்கடி சுவாசப் பயிற்சிகள் கொடுப்பதனால் திருத்தமான பேச்சு உண்டாகும்.

பேசும்பொழுது திருத்தமான உச்சரிப்புடன் பேசவேண்டும். பிறருக்கு மனத்தாங்கல் உண்டாகும்படி பேசலாகாது. சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி குரலில் ஏற்றத் தாழ்வு அமைந்திருக்க வேண்டும்; இயல்பான குரலில் பேசவேண்டும்; குரல் இனிமையாகவும் இருக்கவேண்டும். குரல் வகுப்புக் கேற்றவாறு அதிகமான சப்தமில்லாமலும், தாழ்ந்திராமலும் இருக்கவேண்டும். மிக விரைவாகவும், மிக மெதுவாகவும் பேசக்கூடாது. அச்சம், நாணம், படபடப்பு, தெளிவின்மை, குன்றக் கூறல், கூறியது கூறல், மாறுபடக் கூறல், மிகைபடக் கூறல் என்ற குறைகள் பேச்சில் கூடாது. பேச்சில் உயிரும் உணர்ச்சியும் ஊடுருவிச் செல்லவேண்டும். நடை எளிமையும் தூய்மையும் பொருந்தியதாக இருக்க வேண்டும்; கொச்சை மொழி

திருத்தமான பேச்சின் தன்மைகள்

தவிர்க்கப்பட வேண்டும். உணர்ச்சியும் தன்னம்பிக்கையும் பேச்சில் காணப்படவேண்டும்.

பேசுவதில் திருத்தமும் தெளிவும், ஆரம்ப வகுப்புக்களில் அடையவேண்டிய திறமைகளாகும். பள்ளி வாழ்க்கை முழுவதிலும் இத்திறமைகளை வளர்க்கவேண்டும். தெளிவான பேச்சுப் பழக்கம் அசதியில் ஏற்படக்கூடும் என்று நினைப்பது பிழையாகும். இது ஒரு சிறந்த நன்னடக்கையாகும்; பிறருடைய சௌகரியத்தை நாம் திருத்தமாகப் பேசும்பொழுது கவனிக்கின்றோம்; ஆகவே இதற்குச் சமூகத்தில் மதிப்பு உண்டு; குரலுக்குத் தொழில் முறை சம்பந்தமாக நல்ல மதிப்பு உண்டு. ஒரு ஆசிரியருக்குக் குரல் அவசியமானது. அவருடைய தொழில் முறைக்கு நல்ல குரல் இன்றியமையாதது. அதைச் சிறந்த முறையில் அவர் உபயோகிக்க வேண்டும். அம்மாதிரியே மாணவர்களுடைய குரல்களுக்கும் நல்ல பயிற்சி வேண்டும். இளைப்புத் தோன்றாமலும், குரலின் இனிமை கெடாமலும் குறைந்த பட்சம் ஒரு மணி நேரம் பேசுவதற்குப் பழக்கம் அவசியமானது. சிறந்த பயிற்சியின்மையினால் இயற்கையாகப் பேச முடியாது. கஷ்டப்பட்டுப் பேசுந் திறமையை அடைந்தாலும் பேசும்பொழுது கஷ்டப்படுவதாகப் பிறருக்குத் தோன்றக் கூடாது. இயற்கையாகவும் சுலபமாகவும் பேசப் பழகினால், ஒருவன் ஒரு கலையை மற்றொரு கலையினால் மறைக்கக்கூடிய திறமையை அடைந்ததாக விருக்கும். இத்தகைய பேசும் பயிற்சியை மேல் வகுப்புக்களில் மாணவர்களுக்கு அளிக்கவேண்டும். சம்பாஷணையில் திறமை பெற்றால், சிறிய சொற்பொழிவுகள் செய்ய மாணவர்கள் சக்தி பெறுவர். பள்ளியிலும், வீடுகளிலும், கிராமங்களிலும் நடக்கும் சம்பவங்களைப் பற்றிப் பேசலாம். பேசுவதற்கேற்ற விஷயங்கள் மாணவர்க்குக் கவர்ச்சி உண்டாக்கவேண்டும். பேசவேண்டிய பொருளை மாணவர்களே நிர்ணயிக்கலாம்; ஆசிரியர்மட்டும் நிர்ணயிக்கக் கூடாது. மாணவர் கூட்டங்களுக்கு மாணவர்களே

மேல் வகுப்புக்களில் அளிக்க வேண்டிய பேச்சுப் பயிற்சிகள்

தலைமை வகிக்கவேண்டும்; கூட்டங்களில் கேள்விகள் கேட்கவும், யோசனைகளை வெளியிடவும் சுதந்திரம் அளிக்கலாம். ஆசிரியர் வழிகாட்டியாக இருப்பார். கூட்டம் நடத்தவேண்டிய முறையைப் பிள்ளைகளே தீர்மானிக்க வேண்டும். கூட்டம நடைபெறும்பொழுதே பிழைகளை எடுத்துக் காட்டக்கூடாது. கூட்டம் கலைந்த பின்னர், ஆசிரியர் தாம் குறித்துக்கொண்ட பிழைகளைப் பற்றிப் பொதுவாகப் பேசித் திருதத வேண்டும். கூட்டங்களில் பேசுவதை ஒரு விளையாட்டாக மாணவர்கள் மதிக்க வேண்டும். அதை ஒரு பள்ளிப் பாடமாகவோ பரீட்சையாகவோ கருதக் கூடாது.

ஒரு சிறு நிகழ்ச்சியை, ஆதியோடந்தமாகவும், பொருத்தமற்ற விஷயங்களைப் புகுத்தாமலும் எடுத்து விளக்குவதில் பழக்கம் அளிக்கலாம். ஒருவர் சொல்லிய செய்தியை மற்றொருவருக்கு எடுத்துரைப்பதில் பயிற்சி

இன்னும் சில பேச்சுப் பயிற்சிகள்

கொடுக்கவேண்டும. தாம் கண்களால் பார்த்த விஷயங்களை, விரித்துப் பேசுவதில் திறமையை வளர்க்கலாம். இவை யாவும் தொடர்ச்சியாகப் பேசுவதற்குத் தேவையான அடிப்படையான திறமைகள் என்றே கருதவேண்டும்.

வாய்மொழிப் பயிற்சிக்குக் குழந்தைப் பாடல்கள் பெரிதும் உதவக்கூடியவை. ஒரு வகுப்பிலுள்ள குழந்தைகள் தெளிவாக உச்சரிப்பதற்குத் தேவையான முறை என்ன? பேசும் பயிற்சிக்கு அவர்களுடைய விருப்பத்தை

குழந்தைப் பாடல்கள்

எவ்விதம் வசீகரிக்க முடியும்? இது வகுப்பு முறையில் சாத்தியமானதல்ல; தொகுதி முறையில் சாத்தியமானது. சில பிள்ளைகளை ஒருங்கு சேர்த்துப் பேசும் பயிற்சி அளிக்கலாம்; ஒழுங்கு முறைப் பயிற்சியினால் அல்ல; ஆனால் நல்ல சந்தத்தில் அமைத்த பாடல்கள் மூலமாகப் பேசும் பயிற்சி அளிக்கக்கூடும். பாடல்களில் சொற்களின் ஓசை, பாடலின் இனிமை, சந்தப் பெருக்கு ஆகியவை மனத்திற்குச் சந்தோஷத்தை

யும் உல்லாசத்தையும் அளிக்கும். இப்பாடல்களின் மூலம் புதிய சொற்களையும், புதிய கருத்துக்களையும் குழந்தைகள் கற்றுக் கொள்வார்கள். குழந்தைகள் முதல் முதியோர்வரையில் சந்த உணர்ச்சி இயற்கையாகவே அமைந்து இருக்கின்றது. பாடல்களை உரிய அபிநயங்களுடன் பாடக் கற்பிக்க வேண்டும். குரல்களில் மாறுதல் காட்டுவதுடன் பாராமலும் பாடப் பழக்க வேண்டும். இப்பாடல்களைக் குழந்தைகள் எல்லாரும் சேர்ந்து பாட வேண்டும். பாடல்களை வகுப்புக்களுக்கு ஏற்றபடி தெரிந்தெடுக்க வேண்டும். வீடுகளில் பாடப்படும் அம்மானை, தாலாட்டு, தெம்மாங்கு கும்மி, கோலாட்டம், ஆகிய பாடல்களை வகுப்புக்கேற்றபடி தொகுத்துக் கற்பிக்கலாம். ஆரம்ப வகுப்புக்களில் தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப்பாடல்கள், விடுகதைகள், நாட்டுப்பாடல்கள் ஆகியவற்றைத் கற்பிக்கலாம். இப்பாடல்கள் மொழிப்பயிற்சிக்கு மிகவும் அனுகூலமானவை.

பாடங்கள் குழந்தைகளின் மனத்தைக் கவரக் கூடியவை; மகிழ்ச்சியளிக்கக் கூடியவை. படங்களை உற்று நோக்குவதன் மூலம் கூர்ந்து நோக்கும் திறமை கற்பனை சக்தி, ஓவியக் கலையில் ஆர்வம், அழகுணர்ச்சி ஆகியவை ஏற்படும். படங்களில் காணும் விஷயங்கள் மனத்தில் நன்கு பதியும். படங்களில் காணும் விஷயங்களைப்பற்றி மாணவர்கள் கேள்விகள் கேட்கலாம்; அவற்றைப்பற்றிச் சம்பாஷிக்கலாம். படங்களின் மூலம் கதைகளை விளக்கலாம். படங்களை வர்ணித்துப் பேசலாம். படங்களைக் கொண்டு பாடங்களை விளக்கக்கூடும். படங்களில் காணப்படும் பொருள்களின் பெயர்களைக் கற்பிக்கலாம்; படங்களிலுள்ள கதைகளைக் கோவையாக எடுத்துச் சொல்லலாம். பிராணிகளின் படங்கள், இயற்கைக் காட்சிகள், வாழ்க்கைச் சம்பவங்கள், திருவிழாக்கள் ஆகியவற்றை விளக்கும் படங்கள், பிள்ளைகட்கு விருப்பமானவை. படங்கள், வர்ணப் படங்களாக இருக்க வேண்டும். மொழிப்பயிற்சிக்கு ஏற்றபடி படங்களை உபயோகிக்கவேண்டும்.

படங்கள்

குழந்தைகளுக்கு நடிப்பதில் ஆவல் அதிகம். நடித்தல் அவர்களுக்கு இயற்கையாக அமைந்துள்ளது. நடிப்புக்கேற்ற சிறு பாடல்களையும் கதைகளையும தேர்ந்தெடுத்து நடிக்கக் கற்பிக்கவேண்டும்.

நடிப்பு

நடிக்கவேண்டிய பகுதியின் கருத்தையுணர்ந்து நடிக்கவேண்டும். சிறு சம்பவங்கள், தொழில்கள், பிராணிகள், பிரயாணங்கள் ஆகியவற்றை நடிக்கச் செய்யலாம். நடிக்கும்பொழுது பாடல்களையும் தகுந்த அபிநயத்துடன் பாடலாம். சிறு நாடகங்களை நடிக்கலாம். மேல் வகுப்புகளில் கேட்ட அல்லது படித்த கதைகளை நடிக்கலாம். நடிப்பதில் ஆரம்பத்திலேயே தேர்ச்சி உண்டாகாது; சிறுகச் சிறுகத் தேர்ச்சி ஏற்படும். முதலில் சிறுகதைகளை நடிப்பதன்மூலம் நடிப்புக் கலையில் தேர்ச்சி யடையலாம். நடிபபுமட்டும் முக்கியமல்ல; இயற்கையான சொல்வன்மையில் அபிவிருத்தி உண்டாக வேண்டும். நடிக்கும்பொழுது உணர்ச்சியுடன் இயற்கையாக நடிக்கவேண்டும்.

கதைகள்

பண்டைக் காலத்திலிருந்தே மானிட வாழ்க்கையில் கதைகள் ஒரு பிரதானமான இடத்தை வகித்து வந்திருக்கின்றன. பண்டை நிகழ்ச்சிகளையும், அன்றாட அனுபவங்களையும் சிறப்பான வகையில் கதைகள் மூலமே அறிந்துகொள்ளக்கூடும். ஆகவே தாய்மொழிப் பயிற்சியில் கதைகளுக்குப் பிரதானம் அளிக்கவேண்டும்.

கதைகளின் பண்டைப் பெருமை

நம் நாட்டில் கதை சொல்வது ஒரு கலையாகவே மதிக்கப்படுகின்றது. திருவிழாக் காலங்களிலும் மற்ற நாட்களிலும் கோயில்களிலும் மடங்களிலும் "பௌராணிகர்கள்" புராணப் பிரசங்கங்கள் இன்றும் செய்து வருகின்றனர். கதா காலட்சேபங்களை இன்றும் ஒரு விசேஷக் கலையாக மதிப்பதுடன் மக்கள் அவற்றைப் பெரிதும் விரும்புகின்றனர். எளிய மக்களுக்குக் கதைகள் மூலமாகப் பல நுட்பமான சமய உண்மைகளும் சமூகப் பண்புகளும் போதிக்கப்படு

கின்றன. நமது நாட்டில் கதைகளுக்குக் குறைவில்லை. ஆதிக்கிரந்தங்களாகிய மகாபாரதம், இராமாயணம் எனபவைகளே இவ்வுண்மைக்குத் தகுந்த சான்று. யுதிஷ்டிரருக்குப் பல ராஜீய உண்மைகளைப் பிதாமகராகிய பீஷ்மர் கதைகளைக் கொண்டே கற்பித்தார் என அறிகின்றோம். இதோபதேசக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள் ஆகியவை இலக்கியங்களில் பெருமை பெற்றவை. கதைகளை எப்பருவத்தினரும், எந்நிலையிலுள்ளோரும் இரசித்து இன்புறுவர். சமூகத்தில் வாழ்க்கை முறைகளையும் ஆத்மார்த்தக் கொள்கைகளையும் கதை சொல்கின்றவர்கள் விளக்கி வந்தனர். அவற்றைக் கேட்டு மக்கள் உள்ளத் தெளிவுபட்டு வாழ்க்கை முறையில் திருத்தம் அடைவர். மக்களுக்குக் கதைகளில் உள்ள இயற்கை ஆர்வத்தை மொழிப் பயிற்சிக்கு ஆசிரியர் சாதகமாக்கிக் கொள்ளவேண்டும்.

கதைகள் சொல்லுவதன் நோக்கங்கள்

கதை சொல்லுதல் ஒரு கலை; அதை மொழிச்சித்திரம் என்று கூறலாம். ஓவியம் எவ்வாறு கண்களுக்கு இரம்மியமாகப் பல கற்பனை ஊற்றுக்களை எடுத்துக்காட்டுகின்றதோ அம்மாதிரியே கதைகளும் செவிகளுக்கு இன்பம் அளிக்கின்றன. மனித வாழ்க்கையில் தொன்றுதொட்டுக் கதைகள் ஆனந்தத்தைப் பரப்பி வந்திருக்கின்றன. அந்த இன்பத்தையும் சந்தோஷத்தையும் பள்ளிக் குழந்தைகளும் அனுபவிப்பதற்குக் கதைகள் இடமளிக்கின்றன. கதைகளின் வாயிலாகப் புத்தம்புது உணர்ச்சிகளைக் குழந்தைகள் அனுபவிப்பார்கள். இன்னும் பலவகையான கதைகளைக் கற்பதனால், பல நாட்டுக் கலாசாரங்களும் பழக்க வழக்கங்களும் குழந்தைகளுக்கு அறிமுகமாவதுடன், அறிவு வளர்ச்சியும் உண்டாகும். ஆனால் கதை சொல்வதனால் அறிவு வளர்ச்சிமட்டும் ஏற்படுவதில்லை; மனத்திற்கு ஆனந்தம் அளிப்பதே கதைகள் சொல்வதில் முக்கியமான நோக்கம். சிறந்த கதைகளைக் கேட்பதனால் குழந்தைகளின் மனவெழுச்சிகளுக்குப் பயிற்சி உண்டாகும்; புதுமையான கற்பனைச் சித்திரங்களை அறிமுகப்

படுத்தமுடியும்; மனமும் கருத்துக்களும் ஒன்றுபட்டுக் கதைப்போக்கில் ஈடுபடுவதனால், கவனிக்கும் திறமை உண்டாகும். மேலும் வகுப்பறையில் காணபபடும் நிர்ப்பந்த நிலைமையைக் கதை சொல்வதனால் அகற்றலாம். ஆனால், இதன்மூலம் கட்டுப்பாடற்ற சுயேச்சை வேண்டும் என்பது நோக்கமல்ல- இயற்கையாக மாணவர்களும் ஆசிரியர்களும் பழகுவதற்குக் கதைகள் இடம் அளிக்கின்றன. பள்ளி வாழ்க்கைக்கே கதை சொல்லுதல் புத்துயிர் அளிக்கும். பள்ளி வாழ்க்கையில் வெறுப்பு மனப்பான்மை காட்டும் குழந்தைகளும், ஆசிரியர்களிடம் விரோதபாவம் நிறைந்த குழந்தைகளும்கூட, கதைகளைக் கேட்பதனால் வெறுபபும் விரோதமும் நீங்கப்பெறுவர். கடைசியாகக் கதைகள் சொல்லுவதன் முக்கியமான நோக்கம் குழந்தைகளின் சொல்வன்மையை அபிவிருத்தி செய்வதேயாம். குழந்தைகள் கதை சொல்வதை ஆர்வத்துடன் கேட்பதனால், அதை மொழிப்பயிற்சிக்குச் சாதகமாக்கிக்கொள்ளலாம். ஆசிரியர் சொன்ன கதைகளைக் கவர்ச்சியுடனும் உணர்ச்சியுடனும் சைகைகளுடனும் குழந்தைகள் சொல்லப் பழக்கவேண்டும். பின்னர் அவர்களுடைய சுயமான பாஷையிலேயே கதைகளை நடிக்கத் தூண்டவேண்டும். கேட்ட கதைகளைப்பற்றிச் சம்பாஷணைகள் நடத்தலாம் ஆரம்ப நிலையில் இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் சொல்லக்கூடிய கதைகளையே தேர்ந்தெடுக்கவேண்டும். குழந்தைகளையே கதைகளை இயற்றுவதற்குத் தூண்டவேண்டும். வீடுகளில் குழந்தைகள் சொல்லக் கேட்கும் கதைகளையும், தாங்களே படித்தறிந்த கதைகளையும் சொல்லுவதற்கு அவர்களைத் தூண்டலாம். கதைகள் உற்சாகம் நிரம்பியவைகளாக இருக்கவேண்டும்; அவற்றின்மூலம் வாழ்க்கையில் பயன்படக்கூடிய பல விஷயங்களை அறியக்கூடும். சிந்தனைகளை ஒழுங்குபடுத்தவும், எண்ணங்களை உருவாக்கிக்கொள்ளவும், கோவையாகப் பேசவும் கதைகள் சிறந்த சாதனங்களாகும். தாங்கள் கேட்ட கதையே திரும்பவும் சொல்லவேண்டியிருப்பதால், குழந்தைகளின் ஞாபகசக்தி அபிவிருத்தியாகும். குழந்தைகளின் கற்பனைசக்தி பெருகுவதற்குக் கதைகள் பெரிதும் துணைசெய்யும். தெளிவான

பேச்சும், இயல்பான நடையும், புதிய சொற்களும் கற்றுக்கொள்வதற்குக் கதைகள் உபயோகபபடும. கதைகளின் மூலமாக நற்குணங்கள் வளருவதற்கும் இடமுண்டு.

கதைகளின் வகைகள்

கதைகளில் அநேக வகைகள் உண்டு. மோகினிக் கதைகள், நகைச்சுவையுள்ள வேடிக்கைக் கதைகள், இயற்கைக் கதைகள், சரித்திரக் கதைகள், புராணக் கதைகள், மிருகங்களைப் பற்றிய கதைகள், பல பிராணிகளைப் பற்றிய கதைகள், மாந்திரிகக் கதைகள், வீரம் ஆச்சரியம் சோகம் நிறைந்த கதைகள் எனப் பலவகையான கதைகள் உள்ளன.

மோகினிக் கதைகள்

மோகினிக் கதைகள் குழந்தைகளின் பரம்பரைச் சொத்து; இவ்வகைக் கதைகளைக் குழந்தைகள் ஆர்வத்துடன் வரவேற்கின்றனர். கற்பனைகளின் மூலமாகப் பல உண்மைகளை இவ்வகைக் கதைகள் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்துகின்றன. நன்னடக்கையின் உண்மைத் தத்துவங்களையும் மானிட வாழ்க்கையில் ஏற்படும் பல அனுபவங்களின் பொதுத் தன்மைகளையும் மோகினிக் கதைகள் குழந்தைகளுக்கு உணர்த்துகின்றன. உதாரணமாக நம்மில் பலர் பால்யத்தில் கற்ற கதைகளில், ‘விறகு வெட்டியும் வன தேவதையும்’ என்ற கதை மிகக் கவர்ச்சி பொருந்தியது. இதிலிருந்து கெட்ட குணங்களினுல் உண்டாகும் தீய பலன்களைக் குழந்தைகள் உணர்வார்கள். மோகினிக் கதைகளைப் பள்ளி வாழ்க்கையின் ஆரம்ப நிலையில் சொல்லாவிட்டால் பிற்காலத்தில் முதிர்ந்த இலக்கியத்தைச் சரிவர மதிப்பிடுவதற்குத் தேவையான சக்தியைக் குழந்தைகள் அடையாமல் தடுக்கிறோம். ஆரம்பத்தில் ஆச்சரியக் கதைகளில் மனத்தைப் பறிகொடுத்தவர்களே பிற்காலத்தில் இலக்கியங்களைச் சிருஷ்டிக்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றனர். சிறந்த இலக்கியப் பண்பாடு குழந்தைகளுக்கு ஏற்படவேண்டுமானுல், மோகினிக் கதைகள் அவசியமானவை. இலக்கியத்தில் கம்பன், காளிதாசன்

போன்றவர்களுடைய நூல்களைப் படிக்காமலிருந்தால், அடையும் நஷ்டத்திற்கு ஈடாக மோகினிகள் இல்லாத கதைகள் குழந்தைகளின் இலக்கிய வாழ்க்கையில் வறட்சியுண்டாக்கும். நாட்டுக்கதைகளிலும், மோகினிக் கதைகளிலும் விறுவிறுப்பு, பெருக்கு, கபடமற்ற தன்மை ஆகிய மேம்பாடுகள் இருப்பதால், இலக்கிய நடையில் பிற்காலத்தில் சுவை ஏற்படுவதற்கு இக்கதைகள் அஸ்திவாரமாகும். இக்கதைகள் கற்பனைக்குச் சந்தோஷமான கிளர்ச்சியளிப்பதாலும், முதியோர் இலக்கியங்களை மதிப்பிடுவதற்குத் தேவையான திறமையை அளிக்கின்றன வாகையாலும் இவற்றை நாம் கட்டுப்பாடின்றி உபயோகிக்கலாம்.

நகைச்சுவைக் கதைகள் என்ற தலைப்பில் பல வேடிக்கைக் கதைகளைச் சேர்க்கக் கூடும். இவ்வகைக் கதைகள் வேடிக்கை நிரம்பியவை; மனத்திற்கு ஆரோக்கியம் அளிப்பவை. நிந்தனையும் விகாரமும் அற்ற

நகைச்சுவைக் கதைகள்

சிரிப்பு உடம்புக்கு நல்லது; நரம்புகளில் இரத்த ஓட்டம் சுயேச்சையாக ஓடுவதற்கு விளையாட்டு உதவுகின்றது; உணர்ச்சியிலும் சிந்தனைகளிலும் காணப்படும் நிர்ப்பந்தத்தை விளையாட்டு அகற்றுகின்றது. பள்ளியின் கட்டுப்பாடான நிலைமையை நீக்கி மனத்திற்கு உல்லாசம் அளிப்பது சிரிப்பும் விளையாட்டும். மேலும் நகைச்சுவை வாழ்க்கையிலுள்ள தராதரங்களைக் குழந்தைகளுக்கு உணர்த்துகின்றது. பரிகாசம் கலந்த கதைகளைக் காட்டிலும் ஊக்கமான ஆசிரியர் யார்? பழக்கமான போக்குகளில் காணப்படும் அதிசய அலங்காரங்களைக் குறிப்பாகக் காட்டும் நகைச்சுவையைக் காட்டிலும் கூர்மையான அம்புகள் யாவை? சில கதாபாத்திரங்களுக்கு நேரிடும் சம்பவங்களை இன்று நினைத்தாலும் நாம் குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறோமல்லவா? நகைச்சுவைக் கதைகள் சொல்லுவதன் முக்கிய காரணம் வேடிக்கையே; அவற்றிலுள்ள புத்திமதி இரண்டாம் அம்சமே. சம்பூர்ண வாழ்க்கைக்கு ஹாஸ்ய உணர்ச்சி மிகவும் அவசியம்; ஆகையால், அதைக் குழந்தைகளும் அனுபவிக்கச் சந்தர்ப்பங்கள் உண்டாக்கவேண்டும்.

இயற்கைக் கதைகள் ஆசிரியருக்குப் பெரிதும் பழக்கமானவை. இவற்றில் பிராணிகளின் பழக்க வழக்கங்களைக் கற்பிப்பது மட்டும் நோக்கமாகக் கொள்ளக் கூடாது. மனித வாழ்க்கையைத் தவிர மற்ற ஜீவராசிகளின் வாழ்க்கை வரலாறுகளையும் நன்கு அறிவதற்குச் சிறந்த கதைகள் உதவும். சாதாரண மனிதன் பல வகையான வாழ்க்கைகளை அனுபவிக்கச் சந்தர்ப்பங்கள் இல்லை; அனுபவமில்லாத வாழ்க்கையில் அனுதாபம் கொள்ளுவது கடினம். இவ்வித அனுபவத்தை நன்கு எழுதப்பட்ட கதைகள் அளிக்கின்றன. சொல்வதில் கவர்ச்சி வேண்டும்; மனக்கண்முன் வர்ணிக்கப்படும் காட்சிகள் அப்படியே தோன்றவேண்டும். சகல ஜீவராசிகளுடைய வாழ்க்கையிலும் அனுதாபம் கொள்ளவும், அவற்றின் வாழ்க்கை நிலையை உணரவும் கூடிய ஒரு பண்பாட்டை இக்கதைகள் குழந்தைகளுக்கு அளிக்கின்றன.

இயற்கைக் கதைகள்

இயற்கைக் கதைகள் எப்படி மற்றப் பிராணிகளின் வாழ்க்கைகளைப் பற்றியவைகளாக இருக்கின்றனவோ அம்மாதிரியே சரித்திரக்கதைகள் நமக்கும் நமது மூதாதையர்க்கும் உள்ள சம்பந்தத்தை அறிவுறுத்துகின்றன. சந்ததிகளுக்குள் இருக்கும் நெருங்கிய முடிவற்ற தொடர்பை இவை விளக்குகின்றன. ஒரு சிறந்த சரித்திரக்கதை, பண்டைச் சம்பவங்களுக்கு உயிர் கொடுத்து உருவம் அளிக்கின்றது. அந்தந்த நாட்டைப் பற்றிய கதைகளைப் பொறுத்தமட்டில் இது முற்றும் உண்மை. ஒரு நாட்டு மக்களின் ஒற்றுமையை இவை வலியுறுத்துகின்றன. மேலும் தேசபக்தியை வளர்த்து நாட்டினிடம் பற்றுக் கொள்ளச்செய்வது இக்கதைகளின் தன்மையாகும். சரித்திரத்தில் தலைசிறந்த பெரியோர் பலர் இருந்திருக்கின்றனர்; அவர்களிடம் பக்தி கொள்வது இளஞ்சிறுர்களின் மனப்பான்மை. சிறந்த செயலாளர்கள், பொறுமையே ஆபரணமாகக் கொண்டவர்கள், முடிவான தீர்மானம் உள்ளவர்கள், நம்பிக்கையுள்ளவர்கள் ஆகியவர்கள் உலக சரித்திரத்

சரித்திரக் கதைகள்

தில் பலர் உண்டு. இவர்களின் செயல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதையாகும். ஒரு நாட்டின் பெருமை பொருந்திய பண்டைக்காலத்தைத் தற்கால வாழ்க்கையுடன் இணைப்பதற்கும், சரித்திரப் பிரசித்தம் வாய்ந்த பெரியோர்களைப் பின்பற்றும் மனப்பான்மையை வளர்ப்பதற்கும் இக்கதைகள் சொல்லப்படுகின்றன. இக்கதைகள் சொந்த நாட்டைப் பற்றியனவாகவே இருந்தால் தேசபக்தியும் தேசத்தலைவர்களைப் போற்றும் மனப்பான்மையும் வளரும். சிவாஜியின் தீரச்செயல்கள், அசோகரின் ஆட்சித்திறமை, அக்பருடைய சமரச மனப்பான்மை, புத்தரின் தியாகம், பிருதிவியின் தீரம் போன்றவற்றை விளக்கும் சரித்திரக்கதைகளை விரும்பாத சிறுவர்கள் இருக்க முடியாது. இவற்றின் மூலம் தேசப்பணி செய்யவேண்டும் என்ற ஆர்வமும் தோன்றும். சுருங்கக்கூறின் சரித்திரக்கதைகள் பண்டைக் காலச் சம்பவங்களுக்கு மனிதத்தன்மையும் உண்மையும் அளிப்பதுடன், தேசபக்தியை வளர்க்க ஒரு கருவியாகவும், நல்லொழுக்கங்களையும் அறிவையும் விருப்பமாக அபிவிருத்தி செய்யக் கூடியவைகளாகவும் இருக்கின்றன.

குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகளின் தன்மைகள்

மேலே கூறப்பட்ட பலவகைக் கதைகளும் குழந்தையுள்ளத்திற்கு ஏற்றவை. அவற்றில் பொதுவான சில தன்மைகள் இருக்கவேண்டும். குழந்தைகளின் அனுபவங்களை யொட்டிய சம்பவங்கள் அவற்றில் இருக்கவேண்டும். அவற்றில் செயல்கள மிகுந்து சம்பாஷணைகளுக்கு உகந்தவைகளாக இருக்கவேண்டும். புதிய சொற்களும் சொற்றொடர்களும் அடிக்கடி உபயோகப்படுத்தப் பட்டிருக்கவேண்டும். 'கூறியது கூறல்' அதிகமாக அமைந்திருக்கவேண்டும். திடுக்கிடும் சம்பவங்கள், ஆச்சரியங்கள், மனித அனுபவத்தில் காணாத தன்மைகள் இருக்கவேண்டும். சொல்லும் நடை எளிதாகவும், அறிமுகமானதாகவும் இருக்கவேண்டும். சிறு கதைகளிலிருந்து ஆரம்பித்துப் பெரிய கதைகளுக்குச் செல்லவேண்டும்.

குழந்தைகட்கான கதைகள் கவர்ச்சியுள்ளவைகளாக இருக்க வேண்டும்; கதைப்போக்கு விறுவிறுப்பாக இருக்கவேண்டும். குழந்தைகள் தங்களுடைய அனுபவங்களில் உற்சாகம் அடைவார்கள். பலவகை அதிசயங்களும் விநோதங்களும் நிரம்பிய இவ்வுலக வாழ்க்கை அவர்களுக்குப் புதுமையாக விருக்கும்; அவ்விஷயங்களைப் பற்றி அறிய ஆவல் காட்டுவார்கள். விஷயங்கள் அறிமுகமானவைகளா யிருந்தாலும் அவற்றில் கற்பனைகள் மறைந்திருக்கவேண்டும். கதைகளில் திரும்பத் திரும்பக் கூறும் அமசம் காணப் படவேண்டும். கதைகளில் செயல்கள் மிகுந்து வாழ்க்கையைச் சித்திரிக்கும் அம்சங்கள் நிறைந்திருக்கவேண்டும். கதை உற்சாகம் வியப்பு ஆகியவற்றை ஊட்டுவதுடன் ஆச்சரியமான முடிவையும் பெறவேண்டும். பிள்ளைகளின் வயதையும் மனப் பக்குவத்தையும் அனுசரித்துக் கதைகளின் நீளத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இளம் வயதில் பயத்தை ஊட்டக் கூடிய பேய்க் கதைகளை நீக்கலாம்; துக்ககரமான சம்பவங்களும் துயரமான முடிவுகளும் கொண்ட கதைகளையும் நீக்குதல் நல்லது. சம்பாஷணைகள் அதிகமாகவுடைய கதைகளும் சில சொற்களும் சொற்றொடர்களும் பாடல்களும் திரும்பத் திரும்ப வரும் கதைகளும் கவர்ச்சி பொருந்தியவை. குழந்தைகளின் வீடுகளில் சொல்லப்படும் கதைகளை அறிந்து, அவற்றை வகுப்பறையில் கவர்ச்சி மிகுந்த வகையில் கவனத்தைக் கவரும் வண்ணம் அமையும் துவக்கத்துடன் சொல்லவேண்டும். கதைக்குத் தேவையிராத வருணனைகளும், உட்கதைகளும் இன்றிச் சுருக்கமாக இருத்தல் நலம். பால்ய நிலையில் மோகினிக் கதைகளையும் குழந்தைகளின் செயல்களை வருணிக்கும் கதைகளையும் வீரம் செறிந்த கதைகளையும் குழந்தைகள் பெரிதும் விரும்புவர். பின்னர், அவர்களோடு பழகும் பிராணிகள், பட்சிகளைப் பற்றிய கதைகள் கவர்ச்சி தரும்; காட்டு மிருகங்களைப்பற்றிய கதைகளையும் இரசிப்பார்கள்; நகைச்சுவை ததும்பும் கதைகளையும் விரும்புவர். மேல் நிலையில் சரித்திரக்கதைகளில் விருப்பம் தோன்றும்.

குழந்தைக் கதைகளைத் தேர்ந்தெடுத்தல்

குழந்தைகளுக்குக் கதைகள் சொல்வதற்கு ஆசிரியர் தம்மை நன்ருக ஆயத்தம் செய்துகொள்ள வேண்டும். அவரிடம் சில முக்கியமான குணங்கள் இருக்க வேண்டும். ஆசிரியர் உற்சாகமும் சந்தோஷமும் உடையவராக இருக்கவேண்டும்; இன்றேல் குழந்தைகளுக்கு இவற்றை ஊட்ட முடியாது. ஆசிரியர், தன்னுடைய 'ஆசிரியர்' என்ற நிலையை மறந்து விட வேண்டும்; குழந்தைகளுடன் குழந்தையாயிருந்து கதை சொல்லவேண்டும். வீடுகளில் பாட்டிமார்கள் கதைசொல்லும் முறையில் அன்பாகவும் இயல்பாகவும் உற்சாகத்துடனும் சொல்லவேண்டும். ஆசிரியரிடம் கற்பனு சக்தி இருக்கவேண்டும். வர்ணனைகளை விளக்கும்போது பிள்ளைகளுக்கு அவை உண்மையாகத் தோன்றும் வகையில் சொல்லவேண்டும்; அப்பொழுதுதான் அவர்களுக்குக் கேட்பதற்கு உற்சாகமும் ஆவலும் ஆச்சரியமும் உண்டாகும். குழந்தைகளுடைய சங்கோசத்தையும் பயத்தையும நீக்கும் வகையில் அவர்களுடன் நடந்துகொள்ள வேண்டும். குழந்தைகள் ஏதும் அறியாதவர்கள் என்று நினைக்கக்கூடாது; தனக்குத் தெரியாதது ஒன்றுமே இல்லை என்ற மனப்பான்மையில் அவர் நடந்துகொள்ளக் கூடாது. ஆழ்ந்த சிந்தனு சக்தியும் சுற்றுப்புறம் நடக்கும் சமபவஙகளைக் கவனிக்கும் திறமையும் ஆசிரியரிடம் இருக்கவேண்டும். இவையெல்லாவற்றையும விட, கதைகளை எடுத்துச் சொல்வதற்குத் தேவையான வாக்கு வன்மையும, சம்பவங்களைப் பிரத்தியக்ஷமாக்கக்கூடிய பாஷைத் திறமையும், அந்தந்த இடங்களுக்குத் தகுந்த குரல் வேறுபாடுகளும், செயல்களுககேற்றவாறு சைகைகளை உபயோகிக்கும் பக்குவமும ஆசிரியரிடம் அமைந்திருக்கவேண்டும். இக்குணங்களுடன் கதை சொல்லுவதற்கு முன் ஆசிரியர் தம்மை நன்கு ஆயத்தம் செய்துகொள்வது அவசியம். வகுப்புக்கும் குழந்தைகளின் மன நிலைக்கும் ஏற்ற கதைகளைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். பொறுக்கி எடுக்கப்பட்ட கதைகளில் நல்ல ஞாபகம் இருக்கவேண்டும். சில சமயங்களில் கதைகளை எழுதியும் பழக்கிக்கொள்ளலாம். அடிக்கடி

ஆசிரியரின் ஆயத்தம்

சொல்லுவதால் ஏற்படும் அனுபவத்தைப்பயன்படுத்திக் கொள்ளலாம். தனக்குத்தானே வாய்விட்டுச் சொல்லியும் பழக்கிக்கொள்ளலாம். கதைகளை அதிகமாக நெட்டுருச் செய்யக்கூடாது. சில பகுதிகளையோ அவசியமான சம்பவங்களையோ அங்குள்ள நயம் கெடாமலிருப்பதற்கு நெட்டுருச் செய்யவேண்டியது அவசியமே. ஆனாலும் எல்லாவற்றையும் மனனம் செய்வது சரியல்ல; ஏனெனில் இது கிளிப்பிள்ளை பேசுவதுபோன்று இருக்கும். சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி அமைப்பு, விவரம், காட்சிகள் ஆகியவற்றை மாற்றவேண்டியிருக்கலாம். சொல்லப்படும் கதையில் ஆசிரியருக்கும் கவர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும். கதையில் வரும் பாத்திரங்களுக்கு ஏற்படும் அனுபவங்களைத் தமக்கு ஏற்பட்டதாகவே ஆசிரியர் பாவித்துச் சொல்லவேண்டும்; அப்பொழுதுதான கதையில் உணர்ச்சியிருக்கும்; கதைகளும் குழந்தைகளின் இருதயத்துக்கு உணர்ச்சியளிக்கும். கதை சொல்வதை ஒரு வேலையாகக் கருதக்கூடாது. கதையிலுள்ள சம்பவங்கள், நடக்கும் இடம், அங்குள்ள மக்களின் வாழ்க்கை விவரங்கள், அவர்களுடைய பழக்க வழக்கங்கள் யாவற்றையும் ஆசிரியர் நன்கு அறிய வேண்டும். கதை சொல்லும்பொழுது கதாபாத்திரங்களின் பேச்சுக்களை உணர்ச்சியுடன் நடிக்க வேண்டும். உபயோகிக்கும் பாஷை வசீகரமான நடையில் அமையவேண்டும்.

கதைகளைப்படித்துக்காட்டுவது சிறந்த முறையன்று; சொல்லுவதே சிறந்த முறை. தாமே இயற்றிய கதையைப் போன்றே ஆசிரியர் அதைப் பாவிக்கவேண்டும். தமது முழுக் கற்பனைத் திறமையையும் கதை சொல்லும்பொழுது உபயோகிக்க வேண்டும். சொல்லும் முறையினால் கேட்பவர்களுடைய இருதயத்தை வசீகரிக்கக் கூடும். கதை சொல்லும் பொழுது அடிக்கடி புத்தகத்தைப் பார்க்கக்கூடாது. ஒவ்வொரு கதையிலும் உபயோகிக்க வேண்டிய சில பிரத்தியேகமான சொற்களையும் சொற்றொடர்களையும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். தேவை

கதை சொல்லும் முறை

யான இடங்களில் நிறுத்தியும், இயற்கையான குரலிலும் சொல்ல வேண்டும். வகுப்பறையில் நிர்ப்பந்தம் கூடாது. குழந்தைகள் உல்லாசமாக இருக்கவேண்டும்; ஆனால் ஒழுங்கு இருக்கவேண்டும். கதைப்போக்கு கவர்ச்சியுள்ளதாகவிருந்தால் ஒழுங்கு தானாக உண்டாகும். சம்பவங்களுக்கு ஏற்றபடி குரலில் மாறுபாடுகள் வேண்டும். கதை சொல்லுவதற்கு முன், குழந்தைகளுடன் சம்பாஷித்து, கதை கேட்பதற்கு அவர்களுடைய மனத்தைப் பக்குவப்படுத்தவேண்டும்; இதனால் கதை கேட்பதற்கு ஆவலும் உற்சாகமும் உண்டாகும். குழந்தைகளின் தேவைகளுக்குத் தகுந்தபடி பெரிய கதைகளைச் சுருக்கவேண்டியிருக்கலாம்; சிறு கதைகளைப் பெருக்க வேண்டியிருக்கும். சொல்லுவதற்கு முன்னால் கதையைத் தேவைக்குத் தகுந்தபடி சுருக்கியும் பெருக்கியும் அமைத்துக் கொள்ளவேண்டும். கதை சொல்லுவது ஒரு சொற்பொழிவுபோல் இருக்கக்கூடாது.

குழந்தைகள் கதை சொல்லும் முறை

பிறர் சொல்லக்கேட்ட கதைகளைக் குழந்தைகள் தங்களுடைய சொந்த நடையில் சொல்வதால் சிறந்த வாய்மொழிப் பயிற்சி உண்டாகும். கதைகளைத் திரும்பச் சொல்வதற்கு அவர்களுக்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் அளிக்கவேண்டும். கீழ் வகுப்புக்களில் பிரதிதினமும் கதை சொல்லல் நடத்தப்படவேண்டும். குழந்தைகள் ஒவ்வொரு கதையையும் தனித்தனியாகச் சொல்லச் செய்யலாம்; அல்லது ஒரு கதையிலுள்ள பல பகுதிகளில் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் தொடர்ச்சியாகச் சொல்லும்படியும் செய்யலாம். ஆசிரியர் உபயோகித்த சொற்களைக் குழந்தைகள் உபயோகித்தால் ஆரம்ப நிலையில் மொழிப் பயிற்சிக்கு அனுகூலமளிக்கும். குழந்தைகள் கதை சொல்லும்பொழுது அவர்களுடைய குரல் தேவையான அளவுக்கு உயர்த்தப்பட்டும், உச்சரிப்புக்கள் தெளிவாகவும், பாஷை திருத்தமாகவும இருக்கவேண்டும். கேட்பவர்கள் இரசிக்கும்படி சொல்லவேண்டும். கதை சொல்லும் நேரத்தில் குழந்தைகளின் செயல்களுக்குச் சந்தர்ப்பங்கள் அளிக்கவேண்டும்.

நடிப்பதற்கேற்ற அம்சங்கள் ஒரு கதையில் இருப்பின், அவற்றை நடிக்க ஆவல் உண்டாகும்; அந்த ஆவலை ஆசிரியர் பூர்த்தி செய்யவேண்டும். நடிப்பதற்குத் தேவையான பொருள்களை அவர்களே தயாரிக்கவேண்டும். கற்ற கதைகளைப்பற்றிப் பேசுவதற்கும், நடிப்பதற்கும் அவகாசம் கொடுக்கவேண்டும். தன்மை நிலையிலே கதைகளைச் சொல்லப் பழக்குவது ஒரு சிறந்த பயிற்சி; இது குழந்தைகளின் கற்பனு சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

5. வாசிப்பு

மொழிப் பயிற்சியில் வாய்மொழிக்கு அடுத்த முக்கியமான பிரிவு வாசிப்பு பள்ளியில் கற்பிக்கப்படும் எல்லாப் பாடங்களுக்கும் வாசிப்பு இன்றியமையாத சாதனம். ஆகையால் கல்விக்கு மூலாதாரம் வாசிப்பு; ஏனெனில் பல பாடங்களைக் கற்கவேண்டுமானுல், பல புத்தகங்களைப் படித்துப்பல விஷயங்களைக் கிரகித்துக்கொள்ள வேண்டும். வாசிப்பில போதுமான தேர்ச்சி இல்லாமலிருந்தால், மேலும் மேலும் படித்து அறிவை விசாலித்துக்கொள்ள முடியாது. பள்ளி வாழ்க்கைக்குப் பிறகும் மனிதன் மேலும் படித்து அதிகமான அறிவும், விசேஷமான ஞானமும் பெற வேண்டும். வாழ்க்கையில் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் காலத்தை வீணக்காமல் சிறந்த நூல்களைப் படித்துச் சந்தோஷம் அடைவதற்கு வாசிப்புப் பெரிதும் தேவையாயிருக்கின்றது. இக்காரணங்களினுல் பாடசாலைகளில் வாசிப்பு ஒரு முக்கியமான பாடம் எனக் கருதப்பட்டு அதற்குக் கால அட்டவணையில் அதிக நேரம் அளிக்கப்படுகின்றது.

வாசிப்பின் அவசியம்

கையெழுத்து அல்லது அச்சிலிருக்கும் சொற்களின் கருத்தை உணர்வதே வாசிப்பின் நோக்கமாகும்; இது கஷ்டமான காரியம். வரி வடிவத்திலுள்ள சொற்களை ஒலி வடிவாக மாற்றி, உச்சரிக்கும் உறுப்புக்களும்,

சொற்களைப் பார்க்கும் கண்களும் ஒற்றுமையுடன் வேலை

வாசிப்பின் நோக்கம்

செய்தால் 'வாசிப்பு உண்டாகும். வாசிக்கும் பிரிவில் வந்துள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் அவற்றின் கருத்துக்களையும் அறியவேண்டும். வாசித்துக்கொண்டிருக்கும் பிரிவும், அதற்கு முந்திய பிரிவும் ஞாபகத்தில் இருக்கவேண்டும். வாசிப்பவருடைய நினைவில், வாசிக்கும் பொருளுக்குச் சமபந்தப்பட்ட அவருடைய அனுபவங்களும் எண்ணங்களும் தோன்ற வேண்டும். இத்திறமைகளனைத்தும் ஒருங்கே அமைந்தால் கருத்து நனகு விளங்குவதுடன், வாசிப்பின் நோக்கமும் ஈடேறும்.

வாசிப்பு வகைகள்

வாசிப்பு இரண்டு வகைப்படும். அவை மௌன
வாசிப்பு உரக்க வாசித்தல் என்பனவாம். மனித வாழ்க்
கையில் பெரும்பாலும் மௌன வாசிப்பே பயன்படு
கின்றது. ஏனெனில் குறைந்த கால அளவில் மெது
வாக ஒரு பெரும் பகுதியை வாசிக்கலாம்.
வாழ்க்கையில் கிடைக்கும் ஓய்வு
நேரத்தை நல்ல வழியில் உபயோகிக்க
வேண்டுமானல், மௌன வாசிப்பைக்
கையாள வேண்டும். மௌன வாசிப்பில் தேக சிரமம்
குறைவு; மனத்திற்கும் சிரமம். குறைவு. தற்கால உல
கில் கிடைக்கும் சொற்பமான ஓய்வு நேரத்தில் அதிக
மான விஷயங்களை மௌன வாசிப்பின் மூலம கிரகிக்கக்
கூடும். ஆயினும், இதுகாறும் மௌன வாசிப்புப் பாட
சாலைகளில் கவனிக்கப்படாமலே இருந்து வந்திருக்கிறது.
'வாசிப்பு' என்றால் உரக்க வாசித்தல் என்றே கருதப்
பட்டு வந்து, அதில் மட்டும் பயிற்சி யளிக்கப்பட்டு வந்
தது. உரக்க வாசித்தலில் தேர்ச்சி ஏற்பட்டால் மௌன
வாசிப்பு எளிதில் கைகூடும் எனற எண்ணமே இதற்குக்
காரணமா யிருக்கலாம். உண்மையில் இவ்விருவகை
வாசிப்புகளும் நெருங்கிய தொடர்புள்ளவை; ஆனல்
வாசிப்புகளுக்குத் தேவையான பழக்கங்கள் மட்டும் வெவ்
வேறானவை. குழந்தைகளுக்கு இவ்விருவகை வாசிப்பு
களிலும் சிறந்த பழக்கம் அளிக்க வேண்டும். வாழ்க்கை

யில் பத்திரிகைகளையும் கதைகளையும் மௌனமாகவே படிக்கிறோம். சிறந்த செய்யுட்பகுதிகளைப் படிக்கும் பொழுதும் பிறர் கேட்பதற்குப் படிக்கும்பொழுதும் உரக்க வாசித்தலைக் கையாளுகிறோம். ஆகவே, வாய்விட்டு வாசித்தலில் பயிற்சி அளிப்பதுடன், மௌனமாகப் படித்துக் கருத்தைக் கிரகிக்கவும் குழந்தைகளைப் பழக்கவேண்டும். ஆரம்ப நிலையில் உரக்க வாசித்தலில் தான் பழக்கம் அளிக்க முடியும்; உரக்க வாசித்தலில் பழக்கம் உண்டாகிய பின்னரே மௌன வாசிப்புப் பழக்கம் ஏற்படும்.

வாசிப்புத் தொடங்க வேண்டிய நிலை

குழந்தை பாடசாலையில் சேர்ந்தவுடனேயே வாசிப்பு ஆரம்பிப்பது சகஜமாக இருக்கின்றது வாசிப்பின் தன்மையையும் நோக்கத்தையும் கவனிக்கும்பொழுது இது பிழையானது என்று தெரியவரும். படிக்கும் சொற்களின் பொருளை அறிந்தாலன்றி, கருத்தைக் கிரகிக்க முடியாது. படிக்கும் சொற்களின் கருத்தை அறியவேண்டுமானால், குழந்தைகளின் சொல்லகராதி போதுமான அளவுக்குப் பெருகியிருப்பதுடன் தெளிவான வாக்கு வன்மையும் உண்டாயிருக்கவேண்டும். தன் சுற்றுப் புறத்தையும், பல இயற்கைச் சம்பவங்களையும் நேர்முகமாகப் பார்த்துப் போதுமான அனுபவங்களை அடையாத குழந்தைகள், அச்சில் அல்லது கையெழுத்தில் காணப்படும் சொற்களின் கருத்தை அறிய முடியாது. குழந்தை தான் பார்த்தும் கேட்டும் அனுபவித்தும் உள்ள விஷயங்களைப் பற்றித்தான் முதலில் வாசிக்க வேண்டும். குழந்தைகளின் மனத்துக்கு உண்மையான சம்பவங்களும் பொருள்களும் உற்சாகத்தை யளிக்கும். பல இடங்களையும் காட்சிகளையும் நேரில் காண்பதற்கு அவர்களை அழைத்துச் செல்ல வேண்டும். வாய்மொழிப் பயிற்சிக்கு அனுகூலமாயிருக்கும் கதைகள், பாடங்கள், சம்பாஷணைகள் படங்கள் ஆகியவற்றை உபயோகித்துச் சொற்கள் சொற்றொடர்கள் இவற்றின் கருத்தை விளக்கி, அவற்றை பார்த்துப் படிக்கும்பொழுது கருத்தைக் கிர

இக்கும் வகையில் குழந்தைகளின் மனத்தைப் பக்குவப் படுத்தவேண்டும். ஆசிரியர் புத்தகங்களைப் பார்ப்பதை யும் படிப்பதையும் குழந்தைகள் பார்ப்பதாலும் படிப்ப தற்கு அவர்களுக்கு ஆவல் உண்டாகக்கூடும். இந்த ஆர் வம் உண்டாகும்பொழுதே வாசிப்பைத் துவக்க ஏற்ற காலமாகும்.

வாசிப்புக் கற்பிக்கும் முறை

குழந்தைகளுக்குப் படிப்பில் ஆர்வத்தை ஊட்டிவிட் டால் கற்றல் எளிதில் நடைபெறும் என்பது உண்மை. வாசிப்பில் ஆர்வமும் உற்சாகமும் குழந்தைகள் காட்ட வேண்டுமாயின், போதிக்கும் முறை கவர்ச்சி பொருந்தி யிருக்கவேண்டும். ஆரம்பத்தில் உற்சாகம் தரக்கூடிய ஒரு விளையாட்டாகவே வாசிப்பு இருக்கவேண்டும்; உற்சாகம் குறைந்து வெறுப்பு ஏற்படும் முறைகளைத் தவிர்க்கவேண்டும். குழந்தைகளது உள்ளங்களின் தன்மையையும் மனப்பான்மையையும அனுசரித்து வாசிப்புக் கற்பிக்கும் முறையை நிர்ணயிக்கவேண்டும். பாஷையின் தேவைகளை மட்டும் கவனித்து முறையை நிர்ணயிக்கக் கூடாது. மேலும் போதிக்கும் முறை மிகவும் சுலபமானதாக இருக்கவேண்டும்; தழுவும் முறையினால் குழந்தைகளின் உள்ளத்தில் குழப்பம் தோன்றக் கூடாது; குழந்தைகளின் சொல்லகராதி பெருகக்கூடிய முறையாக இருக்கவேண் டும்; இயற்கையான முறையாகவும் கவர்ச்சி பொருந்திய முறையாகவும் உற்சாகம் அளிக்க வல்லதாயும் இருக்க வேண்டும். ஆதி மனிதன் மொழி கற்ற வரலாற்றை ஆராய்ந்தால், குழந்தைகளுக்கு வாசிப்புக் கற்பிக்கும் முறையைத் தீர்மானிக்கலாம். மானிட சமூகம் பல்லாயி ரம் ஆண்டுகளாகக் கற்ற மொழியை, ஒரு குழந்தை சில ஆண்டுகளுக்குள் கற்றுக்கொள்ளுகின்றது. கற்றலில் நமது மூதாதையர் அடைந்த அனுபவங்களை உபயோ கித்து முறையை நாம் தீர்மானிக்கலாம். ஆதிமனிதன் முதலில் வாய்ப்பேச்சு மட்டும் கற்றான்; பின்னர்ச் சொற்

சிறந்த போதனா முறையின் தன்மைகள்

களுக்குப் பதிலாகச் சித்திரங்களை எழுதித் தன் கருத்துக்களைப் பிறருக்கு வெளியிட்டு வந்தான்; பின்னர்ச் சித்திரங்களை நீக்கிச் சொறசித்திரங்களாகிய வரி வடிவங்களை உண்டாக்கி எழுத்துக்களாலான வார்த்தைகளை உபயோகிக்கலாயினான். இந்த ஒழுங்கிலேயே குழந்தைகளுக்கு வாசிபபுப் பழக்கம் உண்டாக்குவது அவசியம். வாசிப்புக் கற்பிபபதற்குப பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவை எழுத்துமுறை, வார்த்தை முறை, வாக்கிய முறை, கதை முறை, பார்த்துச் சொல்லும் முறை எனப் பலவாம். இம் முறைகள் ஒவ்வொன்றிலும் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. ஏதாவது ஒரு முறை மட்டும் சிறந்தது என நினைப்பது பிழையாகும். இமமுறைகளில் காணபபடும் பலசிறந்த அம்சங்களைத் தொகுத்து, ஆசிரியர் ஒரு முறையைத் திட்டப்படுத்திக்கொண்டு அதைத் தழுவ வேண்டும்.

எழுத்து முறை

எழுத்து முறையே புராதன முறை. இம்முறைப்படி எழுத்துக்கள் எலலாவற்றையும் வரிசைக் கிரமபபடிக் கற்பித்த பின்னரே, எழுத்துக்கூட்டிச் சொற்களைப் படிக்கக் கற்பிக்கப்படும்; பின்னர் வாக்கியங்களையும் படிக்கக் கற்பிக்கப்படும். முதலில் எழுத்துக்களைக் கற்பித்த பிறகு ஈரெழுத்துச் சொற்களையும் மூவெழுத்துச் சொற்களையும் கடினமான சொற்களையும் சொற்றொடர்களையும் முறையே வரிசையாகக் கற்பிபபார்கள். இம் முறையில் அனேக குறைகள் காணப்படுகின்றன. தமிழில் உள்ள 247 எழுத்துக்களையும் எழுதப் படிக்கக் கற்ற பிறகே எழுத்துக் கூட்டிப் படிக்க இயலும்; ஆகையால், இம்முறையில் படிக்க அதிக காலம் ஆகும். எழுத்துக்கூட்டி வாசிப்பதிலேயே குழந்தைகள் தமது சக்தியைச் செலவிடுவார்கள். பொருளில்லாத தனி எழுத்துக்களின் உச்சரிப்பைக் குருட்டுப் பாடமாகக் கற்பிபபதனால் படிப்பில் வெறுப்பும் அதிருப்தியும் சலிப்பும் உண்டாகும். எழுத்துக்கூட்டிப் படிப்பதனால் வாசிக்கும் பகுதியில் கருத்தை நன்கு உணர முடியாது. இம்முறை மானிட வாழ்க்கையில் மொழி வளர்ச்சியடைந்த முறைக்கு எதி

ரானது; ஆகவே, இது இயற்கைக்கு மாறான முறை. குழந்தைகளின் தன்மையைக் கவனித்தால், அவை முதலில் பல வஸ்துக்களைப் பார்த்தும் ஸ்பரிசித்தும் அவற்றின் தன்மைகளையும் பெயர்களையும் அறிந்துகொள்ளுகின்றன; வஸ்துக்களின் தனிபபட்ட பாகஙகளை முதலில் கவனிப்பதில்லை. அடிக்கடி ஒரு வஸ்துவினிடம் பழகுவதனால் அதன் பல பாகங்களைக் கவனிக்கச் சந்தர்ப்பமேற்படுகின்றது. இந்த ஒழுங்கிலேயே சொற்களை முதலில் கற்கிறார்கள் குழந்தைகள்; பின்னரே எழுத்துக்களைக் கற்கின்றனர். முதலில் சொற்களைக் கற்பிக்காமல் எழுத்துக்களைக் கற்பிப்பது இயற்கைக்கு விரோதமானது. எழுத்துக்கூட்டி வாசிப்பதன் காரணமாகப் பல பிழையான வாசிப்புப் பழக்கங்கள் ஏற்படக்கூடும். கற்ற எழுத்துக்களாலமைந்த சொற்களைப் படிப்பதற்கு மட்டுமே எழுத்துக் கூட்டிப்படிக்கும் முறை பயன்படும். எழுத்துக்கள் யாவும் குழந்தைகள் புதிதாய்க் கற்கவேண்டியவை; போதனு முறையின் முக்கியக் கொள்கையாகிய "தெரிந்ததைக்கொண்டு தெரியாததைக் கற்பித்தல்" என்பதற்கு இம் முறை முற்றிலும் மாறானது. இம் முறையின்படி குழந்தைகள் எழுத்து, சொல், உச்சரிப்பு என்ற மூன்றையும் ஒரே சமயத்தில் கற்கவேண்டி யிருப்பதால், கற்றல் கடினமாயிருக்கும். இம் முறையில் உற்சாகமும் கவர்ச்சியும் இல்லை. இது குழந்தைகளுக்கு வெறுப்பை அளிக்கக் கூடியது. இம்முறையில் குழந்தைகளின் கவனத்தைக் கவர்ந்து உற்சாகத்தை அளிப்பதற்குச் சில உபாயங்களைக் கையாளுகின்றனர். ஒவ்வொரு எழுத்தையும் இம் முறையில் கற்பிக்கவேண்டின், அவ்வெழுத்தைக் கொண்டு தொடங்கும் பெயரோடு கூடிய ஒரு பொருளின் படத்தையும் அதன் கீழ் அவ்வெழுத்தையும் அச்சிடுவார்கள். குழந்தைகள் படங்களைப் பார்த்து எழுத்துக்களின் வரி வடிவங்களையும் ஒலிகளையும் ஆவலுடன் கற்பார்கள். பின்னர் எழுத்துக்களைக் கூட்டிச் சொற்களைக் கற்பார்கள். ஆனால் படங்களைப் பார்க்கும் வரையில் உற்சாகம் இருக்கும். எழுத்துக்களைக் கூட்டிப் படிக்கும் பொழுது உற்சாகம் குன்றும். இம்முறையில் சில நிறைகளும் உண்டு. தமிழில் நாம் எழுதும்பொழுது உச்சரிப்

பது போலவே எழுதுகிறோம் ; ஓர் ஒலி ஒரே எழுத்தால் குறிக்கப்படுகின்றது ; ஓர் எழுத்துக்கு ஒரே ஒலி தான் உண்டு. ஆகவே, இம்முறைப்படி தமிழ் எழுத்துக்களைக் கற்பது எளிது. மேலும் மாணவர்கள் எழுத்துக்களின் சரியான உச்சரிப்பைத் தெரிந்துகொள்வதனால் எழுத்துப் பிழையில்லாமல் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்வார்கள். ஆயினும் இம்முறையில் நிறைகளைக் காட்டிலும் குறைகளே அதிகம்; ஆகவே இம்முறையைப் பாடசாலைகளினின்றும் நீக்க வேண்டும்.

வார்த்தை முறை

நாம் பேசும்பொழுது தனி எழுத்துக்களாகப் பேசுவதில்லை ; சொற்களையே உபயோகிக்கின்றோம். ஆதிகால மனிதன் முதலில் முழுச் சொற்களையே உபயோகித்து மொழியைக் கற்றான். குழந்தைகளும் பேச ஆரம்பிக்கும் பொழுது முழுச் சொற்களாகவே பேசப் பழகுகின்றன. ஆதலின், இம்முறை இயற்கையானது. இம்முறையில் முதலில் படங்கள், வஸ்துக்கள் மூலமாகச் சொற்களைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்விக்கின்றோம். எழுத்துக் கூட்டாமல் முழுச் சொற்களாகவே படிக்கப் பழக்குகின்றோம். இமமுறைப்படி, முதலில் படங்களைப் பார்க்கச் செய்து அவற்றின் பெயர்களைக் கற்பிக்கின்றோம். பின்னர், அச்சொற்களை அவற்றின் படங்களுடன் இணைக்கச் செய்கின்றோம். படங்களையும் சொற்களையும் சரியாகப் பொருத்துவதன் மூலம் சொற்களை மட்டும் குழந்தைகட்கு அறிமுகப் படுத்துகின்றோம். ஒரு வஸ்துவுக்குப் பதிலாக அதன் சித்திரத்தை எவ்வாறு அறிகின்றோமோ அதேபோல் ஒரு சித்திரத்திற்குப் பதிலாக அதன் சொற்சித்திரமாகிய எழுத்துக்களாலான சொல்லை அறியலாகும். இவ்வாறு முழுச் சொற்களாகப் படிக்க அறிந்த பின்னர், அச்சொற்களிலுள்ள எழுத்துக்களைக் கற்கவேண்டும். குழந்தைகள் முழுச் சொற்களின் வடிவத்தையும், கருத்தையும், உச்சரிப்பையும் அறிந்து கொள்வதை இம்முறை சாத்தியமாக்குகின்றது. இம்முறையில் சொற்களின் கருத்தை அறிந்து படிப்பதால்,

குழந்தைகளுக்கு வாசிப்பில் உற்சாகம் உண்டாகும். முழுச் சொற்களைக் கற்பித்தல் உளநூல் கொள்கைகளுக்கு ஏற்றதும் இயற்கையானதுமாகும். குழந்தைகள் பள்ளிக்கு வரும்பொழுதே பல சொற்களை அறிந்தவர்களாகவும் பல கருத்துக்களைப் பெற்றவர்களாகவும் வருகின்றனர். இவ்வாறு அவர்களுக்கு முதலில் அறிமுகமான சொற்களைக் கற்பிப்பது எளிது. மேலும் இவ்வாறு செய்வதால் 'தெரிந்ததைக் கொண்டு தெரியாததைக் கற்பித்தல்' என்ற நவீன உளநூல் கொள்கையை அனுசரிக்கின்றோம். முழுச் சொற்களின் வடிவத்தையும் உச்சரிப்பையும் குழந்தைகள் அறிந்து கொள்ளுவதுடன் பொருளையும் கிரகித்துக் கொள்கின்றனர். குருட்டுப்பாடமின்றிப் பொருளறிந்து படிப்பதனால், வாசிப்பில் ஆவலும் கவர்ச்சியும் உண்டாகும்.

இம்முறையின் பிரதிகூலங்களும் அவற்றை நீக்கும் உபாயங்களும்

இம்முறையின் மூலம் குருட்டுப் பாடமாகப் படிக்கும் பழக்கம் ஏற்படக்கூடும். ஒரு படத்திலுள்ள சொற்களின் வரிசையைப் படங்களிலிருந்து கற்றுக்கொண்டு சொற்களைப் பார்க்காமலேயே அவற்றைப் படிக்கும் பழக்கம் உண்டாகும்; இதனால் கருத்து அறிதல் தடைப்படும். ஆனால் சொற்களின் வரிசைக் கிரமத்தை ஆசிரியர் அடிக்கடி மாற்றிக் கரும்பலகையில் எழுதிப் படிக்கச் செய்தால், இக்குறை நீங்கும். ஏறக்குறைய ஒரே விதமான ஓசையுள்ள சொற்கள் வரும்பொழுது ஒன்றுக்கொன்று மாற்றிப் படிக்கக்கூடும். இத்தகைய சொற்களின் நடுவில் வேறு ஓசைகளுள்ள சொற்களை அமைத்துப் படிப்பதால் இக்குறை நீங்கும். இம்முறையில் வாசிக்கக் கற்பவர்கள் எழுதும்போது அதிகமான எழுத்துப் பிழைகள் செய்வார்கள் என்று சொல்லக்கூடும். ஆனால், முழுச் சொற்களைச் சரிவர உச்சரிப்பதனாலும், முழுச் சொற்களாகவே அடிக்கடி உற்று நோக்குவதாலும், பன்முறை பார்த்து எழுதுவதாலும் எழுத்துப் பிழைகளைத் தவிர்க்கலாம். இம்முறையினால் எழுத்துக் கற்றுக்கொள்வது உடனே

முடியாது போயினும் வாசிப்பு விருத்தியாகும் என்பர். இது உண்மையே. வாசிக்கக் கற்றபின்னரே எழுத்துக் கற்பிக்கப்படவேண்டும். இம்முறையில் தமிழ் நெடுங் கணக்கு வரிசையில் எல்லா எழுத்துக்களையும் கற்றுக் கொள்ளவேண்டும் என்பதில்லை; மூன்றாம் வகுப்பில் நெடுங்கணக்கை அறிந்தால் போதுமானது.

பார்த்துச் சொல்லும் முறை

பார்த்துச் சொல்லும் முறையில் எழுத்துக்களைக் கூட்டாமல் சொற்களைப் பார்த்தவுடன முழுமையாக அவற்றைக் கற்பிக்கின்றனர். முழுவார்த்தைகள் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யப்படுகின்றன. வார்த்தை முறையில் உபயோகிக்கும் படங்களை இம்முறையில் உபயோகிப்பதில்லை. கற்றுக்கொண்ட சொற்களைத் தொகுத்து வாக்கியங்கள் கற்பிக்கப்படும். இம்முறையில் குழந்தைகளுக்கு உற்சாகம் காணாது. படங்களின்றிச் சொற்களின் கருத்துக்களை ஆரம்ப நிலையில் அறிந்து கொள்வது கடினம். இம்முறையில் சொற்கள் ஒலி அளவிலேயே நின்றுவிடக் கூடும். வார்த்தை முறையை இம்முறையுடன் கலந்து போதிப்பது சிலாக்கியமாகும்.

வாக்கிய முறை

வாசிப்புப் பழக்கம் உண்டாக்குவதில் வாக்கிய முறை மிகப் புதிய முறையாகும். இம்முறையில் குழந்தைகள் முதலில் வாக்கியங்களைக் கற்கின்றார்கள். குழந்தைகளுடைய பேச்சிலிருந்தும், பார்க்கும் படங்களிலிருந்தும் தொடங்கும் வாக்கியங்களைப் போதிக்க வேண்டும். பல குழந்தைப் பாடல்களில் காணப்படும் வாக்கியங்களையும் கற்பிக்கலாம். அநேக படங்களை வகுப்பறையில் தொங்க விட வேண்டும். அவற்றில் காணப்படும் செயல்களை விளக்கக்கூடிய வாக்கியங்களை அவற்றின் கீழ் எழுதி வைக்கவேண்டும். படங்களின் கீழே எழுதப்பட்டுள்ள வாக்கியங்களைப் படிக்கக் குழந்தைகள் ஆசை கொள்வார்கள். இந்த வாக்கியங்களைக் கற்பிப்பதற்கு இதுவே சரியான தருணம். அவற்றை முழு வாக்கியங்களாகப்

படிக்கச் செய்யவேண்டும். மேலும் வகுப்பறையில் சில செயல்களைச் செய்யும்படித் தூண்டும் கட்டளைகளைப் பெரிய அட்டையில் எழுதி மாட்டி வைக்கலாம். "கதவைத் திற," "ஜன்னலை மூடு," "கால் கழுவு," "தலை வாரு" என்று எழுதியுள்ள கட்டளைகளின்படி குழந்தைகள் நடக்காவிட்டால், அவர்களுக்குப் படித்துக்காட்டி அதன்படி நடக்கச்செய்து அவற்றைப் படிக்கச் செய்யலாம். படிப்பதற்கு ஆவல் ஊட்டக் கூடிய பல சாதனங்கள் வகுப்பறையில் இருக்கவேண்டும். கதைகள், படங்கள், விளையாட்டுக்கள், பாடல்கள், செயல்கள் இவற்றை விளக்கும் படங்களின் கீழ் அவற்றிலடங்கிய விஷயங்களைச் சிறு வாக்கியங்களாக எழுதியும் கற்பிக்கவேண்டும். குழந்தைகளுக்குப் பிரியமான பொருள்களைப்பற்றி அவர்களையே வாக்கியங்கள் எழுதச் சொல்லி, அவ்வாக்கியங்களைச் சேர்த்துப் புத்தகங்களாகத் தொகுக்கலாம். இவற்றை விளக்கும் சித்திரங்களையும் வரையலாம். அடிக்கடி உபயோகப்படுத்தப்பட்ட சொற்களும் சொற்றொடர்களும் இந்த வாக்கியங்களில் அமைய வேண்டும். இம்மாதிரி அநேக புத்தகங்களைத் தயாரிக்கலாம். இம்முறையின் மூலம் பல வாக்கியங்களைக் கற்றபின்னர், அவற்றில் காணப்படும் சொற்களைக் கற்கவேண்டும். பின்னர் அச்சொற்களின் உச்சரிப்பையும், எழுத்துக்களின் ஒலி வேறுபாட்டையும் அறியவேண்டும்.

இம் முறையின் குறைகளும் நிறைகளும்

இம்முறையே இயற்கையான முறையாகும். இம்முறையில் வாக்கியம் போதனைக்குரிய ஓர் அளவாகும்; எண்ணங்கள் தனிப்பட்ட சொற்களால் அமைவதில்லை; பல சொற்கள் சேர்ந்து ஒரு பொருளைக் கொடுக்கும் வாக்கியமே எண்ணங்களின் திறவுகோல். இம்முறையில் எழுத்துக்களையும் சொற்களையும் முக்கியம் என்று கருதாமல், குழந்தைகளுக்கு வாக்கியங்களை அறிமுகப்படுத்தாத வாக்கியங்களையும் கற்பிப்பயும், கருத்து விளங்காத வாக்கியங்களைக் கற்பிப்பதும் இல்லை. குழந்தைகள் தங்களுக்கு விளங்கக்கூடியவற்றை

யும், தாங்கள் விரும்புவதையும் கற்கின்றார்களாகையால், படிப்பில் உற்சாகம் உண்டாகி, கற்றல் எளிதாகும். முதலில் முழுவஸ்துவையும் தம் புலனுணர்ச்சிகளால் அறிந்து பின்னர் அதன் பாகங்களை எவ்வாறு குழந்தைகள் அறிகின்றார்களோ, அவ்வாறே முழுவாக்கியங்களை முதலில் கற்றுப் பிறகு சொற்களைக் கற்கின்றனர்; ஆதலால், இது குழந்தை உள்ளத்துக்கு ஏற்ற முறையாகும். முழுச் சொற்களையும் சொற்றொடர்களையும் இம்முறையில் வாசிக்கப் பழகினால், பார்வையை ஒட்டிப்பழகும் காரணத்தால் தடையின்றித் தெளிவுடன் கருத்துணர்ந்து படிக்கத் திறமை பெறுவார்கள். இம்முறையில் ஓர் ஒழுங்கு இல்லை என்றும் சொல்லாக்கத் திறமை விரிவடையாதென்றும், கற்பிக்கும் சொற்கள் ஒரு புத்தகத்தையும் அனுசரித்திராதென்றும் குறை கூறக்கூடும். இவை உண்மையேயானாலும்,பிள்ளைகள் இம்முறையின் மூலம் வாசிப்பில் காட்டும் உற்சாகம் காரணமாக இக்குறைகள் நீங்கும்; எளிதில் படிக்கும் திறமை பெறுவர். இம்முறைப் படி பயின்றால் கற்ற வாக்கியங்களை மட்டும் வாசிக்கும் திறமை உண்டாகும் என்றும் வேறு புதிய சொற்களையும் வாக்கியங்களையும் கற்பதற்குத் திறமை ஏற்படாது என்றும் கூறப்படுகின்றது. இது உண்மையல்ல; குழந்தை முதலில் வாக்கியங்களைப் படிக்கக் கற்பது உண்மையாயினும், பின்னர் அவற்றின் பகுதிகளாகிய சொற்களையும், அச்சொற்களிலடங்கிய எழுத்துக்களின் ஒலிகளையும் கற்கின்றது. முடிவில், தான் கற்ற எழுத்துக்களை அமைத்துப் பல புதுச் சொற்களைப் படிக்கவும் பழகுகின்றனர். இவ்வாறு புதுச் சொற்களை எழுத்துக் கூட்டிப் படிப்பதால் தனிப்பட்ட எழுத்துக்களை ஒலிப்பதில் பிழை ஏற்படாது; எழுத்துக்களையும் பிழையின்றித் தெரிந்துகொள்ளுவதற்குக் காரணமாயிருக்கும்.

கதைகளின் வாயிலாக மொழி போதிப்பதைக் 'கதை முறை' என்கிறோம். இது வாக்கிய முறையின் விவரிப்பேயாகும். ஒரு கதையை விவரிக்கும் பல வாக்கியங்களை ஒருங்கே அமைத்துத் தொடர்ச்சியாகப் போதிப்பதே இம்முறையின் நோக்கம். கதைகளில்

ஆவலும் பற்றும் இல்லாத குழந்தைகளே இல்லை எனலாம். இந்தப் பற்றை மொழிப் பயிற்சிக்கு நாம் உபயோகிக்கலாம்.

கதை முறை

வாசிப்பதில் கவர்ச்சி உண்டாக்குவதற்குக் கதைகள் சொல்லுதல் சிறந்த கருவி ஆகும். கதைகளை விளக்கும் அநேக படங்களை வகுப்பறையில் வைத்து அவற்றின் கீழே அக்கதைகளை விளக்கும் வாக்கியங்களை எழுதிவைக்கலாம். படங்களை அடிக்கடி பார்ப்பதால், அவற்றின் கீழே உள்ளவற்றை வாசிக்கக் குழந்தைகள் ஆவல்கொள்ளுவார்கள். அப்பொழுது அந்த வாக்கியங்களைக் கற்பிக்கலாம். பின்னர் 'வாக்கிய முறை'ப் பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கின்றபடி சொற்களையும் எழுத்துக்களையும் போதிக்கவேண்டும். வாக்கியமுறையின் குண தோஷங்கள் இம்முறைக்கும் பொருந்தும். ஆனால் கதை முறை குழந்தைகளின் இயற்கை ஆவலைத் தூண்டி விடுகிறது; வாசித்தலுக்கு ஒரு முகாந்திரம் அளிக்கின்றது; வாய்மொழி வேலைக்குச் சிறந்த சந்தர்ப்பம் அளிக்கின்றது. மேலும் இம்முறையில் பல கோவையான வாக்கியங்களைக் கற்பதில் வெறுப்புத் தோன்றலாம்; ஆனால் ஒரு கதையை விளக்கும் வாக்கியங்களைப் படிக்க ஆவல் உண்டாகும்.

மேலே கூறப்பட்ட பல முறைகளில் எது சிறந்தது என்று உணரவேண்டியது அவசியம். இம்முறைகளில் ஒன்றைப் பாராட்டுபவர்கள் தாம் பாராட்டும் முறையே

மேலே கூறப்பட்ட முறைகளில் ஆசிரியர் அனுசரிக்க வேண்டிய முறை :—

மேலென்றும், அதையே முழுதும் கையாள வேண்டுமென்றும் வற்புறுத்துவார்கள். இது சரியல்ல. இம்முறைகள் ஒவ்வொன்றிலும் பல நல்ல கொள்கைகள் இருக்கின்றன. ஆகையால், ஒரு முறையே சிறந்த முறை எனக் கொள்வது தவறு. அனுபவமும் போதனைத் திறமையும் புத்தி சாதுரியமும் மிகுந்த ஆசிரியர்கள் இம்முறைகளை நன்கு கற்று அவற்றிலுள்ள நல்ல அம்சங்களைத் தொகுத்துக்கொண்டு, தமது அனுபவத்திற்கும் குழந்தைகளின் மனநிலைக்கும் ஒத்த ஒரு முறையை

வகுத்துக்கொண்டு அதை அப்பியாசிக்க வேண்டும். எழுத்து முறையானது நவீன உள நூல் கொள்கைகளுக்கு ஏற்றதல்ல என்னும் இயற்கைக்கு விரோதமென்றும் அறிந்தோம். வார்த்தை முறை இயற்கையானது என்றும், அதில் குழந்தைகளுக்குக் கவர்ச்சி உண்டாகும் என்றும் உணர்ந்தோம். வாக்கிய முறையிலும் கதை முறையிலும், கவர்ச்சியும் வாசிப்பதில் ஆர்வமும் ஏற்பட்ட போதிலும், சொற்களைக் கற்கவேண்டிய நிலை உண்டு. ஆகையால், இந்த முறைகள் ஒவ்வொன்றிலும் உள்ள தன்மைகளைத் தக்க அளவிலும் வகையிலும் கலந்து கையாளப் பெறின். படிக்கும் பழக்கமும் எழுதும் பழக்கமும் குழந்தைகள் எளிதில் அடைவர். கதைகள சொல்வதனாலும், கதைப் படங்களை உற்றுப் பார்ப்பதனாலும், மாணவர்களுக்குப் பல புதிய சொற்கள் அறிமுகமாகும். இச் சொற்களை வாக்கியங்களின் மூலம் கற்கின்றனர். இச் சொற்களில் அடங்கிய எழுத்துக்களைக் கற்கும்போது எழுத்து முறையை அனுசரிக்கிறோம். இந்தக் கலப்பு முறையின் மூலம் உச்சரிப்புத் தெளிவடையும்; சொற்களில் அடங்கியுள்ள கருத்துக்கள் விளக்கமடையும்; எழுத்துக்கூட்டிப் படிக்கும் திறமை உண்டாகும். வாசிப்பில் ஆர்வம் உண்டாவதற்குக் கதைகள் உதவுகின்றன; படங்கள் பார்வைக்கு வசீகரம் அளிக்கின்றன; உற்றுநோக்கும் திறமை வளரும். ஆகவே, இக் கலப்பு முறை உள நூல் கொள்கைகளுக்கும் மாணவர் மனத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்றதாக அமையும்.

வாசிப்புப் பழக்கம் உண்டாக்கச் சாதனங்கள்

குழந்தைகளுக்கு வாசிப்புப் பழக்கம் உண்டாக்குவதற்குப் பல சாதனங்களை ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளவேண்டும். ஆசிரியர் பல வாசிப்புத்தாள்களையும் சிறு புத்தகங்களையும் தயாரித்துக்கொள்ளவேண்டும். அவற்றில் காணப்படும் சொற்கள் குழந்தைகளுக்கு அறிமுகமானவைகளாக இருக்கவேண்டும். மாணவர்கள் சாதாரணமாகப் பேச்சில் உபயோகப்படுத்தும் சொற்களைக் கொண்ட ஒரு பட்டியலைத் தயாரித்துக் கொள்ளவேண்டும். குழந்தைகளின் சுற்றுப்புறத்தி

ளுள்ள பொருள்களின் பெயர்கள், செய்கைச் சொற்கள் அறிமுகமான சொற்கள் ஆகியவற்றை உபயோகித்து வாசிப்புத் தாள்களைத் தயாரிக்கவேண்டும். இச் சொற்களைக் கற்பிக்கும் கதைகளிலும் சம்பவங்களிலும் அடிக்கடி உபயோகப்படுத்தவேண்டும். ஒவ்வொரு வகுப்புக்கும் இத்தகைய சொற்பட்டியல் அவசியமானது. குழந்தைகளின் சொற்களஞ்சியம் அப்பொழுதுதான விரிவடையும். சொற்களஞ்சியம் விரிவடைந்தாலன்றி வாசிப்புப் பழக்கம் ஏற்படாது; கருத்துக்களை உணரும் திறமையும் குறைவுபடும். கீழ்வகுப்புக்களில் சுலபமான சொற்களை உபயோகிக்கவேண்டும்; மேல் வகுப்புக்களில் மற்ற பள்ளிக்கூடப் பாடங்களில் உபயோகப்படுத்தும் சொற்களைச் சேர்க்கலாம்; பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றில் உபயோகப்படுத்தும் சொற்களைச் சேர்க்கலாம். ஐந்தாண்டுகளில் இச்சொற்களைக் கற்பதன்மூலம் வாசிப்பின் நோக்கம் பூர்த்தியடைய வேண்டும். பின்னும் விளையாட்டு முறையில் போதிப்பதற்கான மின்னட்டைகள், சொற்படப் பொருத்த அட்டைகள், சொல்லாக்க எழுத்தட்டைகள், படங்கள் உள்ள புத்தகங்கள், தனிப்படங்கள் முதலான சாதனங்களைத் தயாரிக்க வேண்டும்.

வாசிக்கும் திறமை

வாசிப்புப் பழக்கம் உண்டாக்குதல்

மேலே கூறப்பட்ட பல சாதனங்களின் மூலம் குழந்தைகள் வாசிக்கத் தொடங்க வேண்டும். குழந்தைகளுக்கு அறிமுகமான, பழக்கத்திலுள்ள பொருள்களின் பெயர்களைச் சிறு அட்டைகளில் தனித்தனியாக எழுதி அவற்றை அப்பொருள்களின் மேல் பொருந்தும்படி பயிற்சி அளிக்கலாம். இதற்கு முன்னால், இப்பொருள்களின் படங்களும் அவற்றின் கீழே அவற்றின் பெயர்களும் எழுதப்பட்ட அட்டைகளையும் தயாரித்து இவற்றைப் பார்த்துப் பிள்ளைகள் படங்களையும் சொற்களையும்

இணைத்துப் படிக்கப் பழக்க வேண்டும். அடிக்கடி இவ்வாறு வாசிப்பதால், படத்துடன் படத்தைக் காட்டும் சொற்சித்திரமும் மாணவர்களுடைய மனத்தில் பதிவாகும். பின்னர்ப் படங்களும் பெயர்களும் எழுதப்பட்டுள்ள தனித்தனி அட்டைகளைத் தயாரித்துப் படங்களையும் பெயர்களையும் இணைக்கப் பயிற்சி அளிக்கவேண்டும். பின்னர்ப் படங்களின் பிரதிநிதிகளாகிய சொற்சித்திரங்களைமட்டும் படிப்பதற்குப் பழக்கம் கொடுக்கவேண்டும். இச்சொற்களை நன்ருகப் படிக்கத் தெரிந்த பின்னர், இச்சொற்களில் வந்துள்ள எழுத்துக்களைத் தனித்தனியாக வெட்டி எடுக்கப்பட்ட அட்டைத் துண்டுகளால் தயாரித்து, அவற்ருல் இச்சொற்களை அமைப்பதில் பயிற்சி அளிக்கவேண்டும். இவற்றைச் "சொல்லாக்க எழுத்தட்டைகள்" எனக் கூறலாம். இந்த நிலையில் எழுத்துக்களின் ஒலிக்குறிப்பைக் கற்பிக்கலாம். இதற்குமேல் இவ்வெழுத்துக்களைக் கொண்டு புதிய சொற்களை அமைக்கச் செய்து படிக்கச் செய்யலாம். கற்ற சொற்களை உபயோகித்துப் பாடல்களும் கதைகளும் கற்பிக்க வேண்டும். சம்பாஷணைகளின் மூலம் சொல்லகராதிப் பெருக்கம் ஏற்பட வேண்டும் பழக்கமான சொற்களையும் வாக்கியங்களையும் ஆரம்பத்தில் படிக்கத் தொடங்கினுல், கருத்தைக் கிரகிப்பது சுலபம். சொற்களில் அடங்கிய எழுத்துக்களைக் கற்கும்பொழுது அவற்றை அகர வரிசையில் கற்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. பிள்ளைகளின் வாசிப்புத் தாள்களில் வரும் சொற்களில் அடங்கிய எழுத்துக்களின் ஒலிகளைக் கற்ருல் போதும். குழந்தைகளுக்குப் பொருள் விளங்காத சொற்களையும், அவற்றிலுள்ள எழுத்துக்களையும் ஆரம்பத்தில் அறவே நீக்கவேண்டும்; குழந்தை வாழ்க்கையில் இச்சொற்களுக்கு இடமில்லை. சந்தர்ப்பத்தை யனுசரித்து மேல் வகுப்புக்களில் தேவையான பொழுது கற்பித்தல் போதுமானது; 'ஒள' வரிசையிலுள்ள உயிர்மெய் எழுத்துக்கள், ங், ஞ் தவிர மற்ற அவ்வரிசை எழுத்துக்கள் போன்றவைகளை முதல் வகுப்பில் நீக்கவேண்டும். வடமொழி எழுத்துக்களை இரண்டாம் வகுப்பில் கற்பித்தால் போதும். வாசக புத்தகத்தை உபயோகிப்பதற்கு

முன் படப் புத்தகங்கள், பாடல்கள், கதைகள் ஆகிய பலவற்றைப் படித்து, வாசிப்புப் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டும்.

முதலாம் வகுப்பும் வாசக புத்தகமும்

சிறந்த வாசிப்புப் பழக்கம் உண்டாவதற்கு முதலாம் வகுப்பில் வாசக புத்தகம் அவசியமா என்று கவனிக்க வேண்டும். இது தேவையில்லை என்று சொல்லுவோரும் உண்டு. கண்களைக் கவரக்கூடிய அச்சுப் புத்தகங்களைப் படிக்கக் குழந்தைகள் பெரிதும் விரும்புவார்கள். மேலும் மேல் வகுப்புக்களில் வாசக புத்தகங்களைப் படிக்கவேண்டியது அவசியமாக இருக்கின்றது. ஆகவே முதல் ஆண்டின் பிற்பகுதியில் ஓரளவுக்கு வாசிப்புப் பழக்கம் ஏற்பட்ட பிறகு ஓர் அச்சுப் புத்தகத்தை உபயோகிக்கலாம். வாசக புத்தகத்தைத் தேர்ந்தெடுப்பதில் பல அம்சங்கள் கவனம்பெற வேண்டும். வாசக புத்தகம் மேலே சொன்ன 'கலப்பு முறை'யைத் தழுவி இருக்கவேண்டும். அதிலுள்ள பாடங்கள் அகர வரிசையில் அமைந்திருக்கலாகாது; ஒலி முறையைப் பின்பற்றியவை அகர வரிசையில் உள்ள புத்தகங்கள்; சுலபமாக எழுதக்கூடிய எழுத்துக்களாலாகிய பல சொற்களை முதலில் கற்பிக்கும் புத்தகங்களும் உண்டு. இவற்றில் ட, ப, ம போன்ற எழுத்துக்கள் அடங்கியுள்ள சொற்கள் முதலில் காணப்படும். இவ்விரண்டு முறைகளையும் அனுசரித்த புத்தகங்கள் 'கலப்பு முறை'யைத் தழுவியவை யல்ல. குழந்தைகளுக்குப் பழக்கமான சொற்களை விளக்கும் படங்களும் அச்சொற்களும் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டு, 'வார்த்தை முறை'யைத் தழுவியுள்ள புத்தகங்களே சிறந்தவை. ஆரம்பத்தில் சொற்களும், பின்னர், அதி சீக்கிரத்தில் இச்சொற்களால் ஆகிய வாக்கியங்களும், இவ்வாக்கியங்களை விளக்கும் படங்களும் இருக்கவேண்டும். வாக்கியங்கள் ஒரே அளவுள்ளவைகளாகவும், ஒரு வரியில் அடங்குபவைகளாகவும், தொடர்ச்சியாகவும் இருக்கவேண்டும். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத சில வாக்கியங்களை ஒரு பாடத்தில் சேர்ப்பது பிழையாகும். குழந்தைகளுடைய

அனுபவத்தில் வந்துள்ள விஷயங்களையும், சுற்றுப்புறத்தைப்பற்றிய விஷயங்களையும புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கவேண்டும. குழந்தைகளுடைய சொல்லகராதியில் காணாத கடின சொறகள் இப்புத்தகத்தில் கூடாது. குழந்தைகளின் கண்களையும் மனத்தையும் வசிகரிக்கக்கூடிய பல வர்ணபடங்கள் இப்புத்தகத்தில் இருக்கவேண்டும். எழுத்துக்கள் பெரிதாக இருக்க வேண்டும். புத்தகம் உறுதியான அமைபபுடன் இருக்க வேண்டும். புத்தகத்தில் ஆங்காங்கு மொழிப் பயிறசிக்கான அப்பியாசங்கள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

வாசிப்பில் திறமை

குழந்தைகளுக்கு வாசிப்புப் பழக்கம் ஏற்பட்ட பின்னர், வாசிப்பில் திறமை உண்டாக்கவேண்டும். 'படித்தல்' என்பது வாய் உச்சரிப்பு மட்டுமன்று. படித்த பகுதிகளைப் பற்றிய சிந்தனைகளும், படிக்கும் பகுதியிலுள்ள பொருளைக் கிரகித்தலும் வாய் உச்சரிப்புடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஆகவே வாசிப்பு இருவகைப்படும்: உரக்க வாசித்தல், மௌன வாசிப்பு. வாசிப்பில் திறமை ஏறபட வேண்டுமானால், இவ்விரு வகைகளிலும் போதிய திறமை ஏற்பட வேண்டும்.

ஆரம்ப நிலையில் உரக்க வாசிப்பதன் மூலமாகத் தான் வாசிப்பில் திறமை ஏற்பட முடியும். ஒலிக்கப்படும் சொற்களை அச்சிலுள்ள எழுத்துக்களுடன் இணைப்பது உரக்க வாசிக்கும் பழக்கமே யாகும். உரக்க வாசித்தலில்

உரக்க வாசித்தல்

மூன்று வகையான அமசங்கள் அடங்கியுள்ளன. முதலில் படிக்கவேண்டிய எழுத்துக்களையும் சொற்களையும அறிதல்; பின்னர் அவற்றை உச்சரிப்பதற்கு அறிதல்; மூன்றாவதாக அவற்றில் அடங்கிய கருத்தை உணர்தல். வாசித்தலில் திறமை ஏற்பட வேண்டுமானால், இம் மூன்று அம்சங்களிலும் தனித்தனியாகத் திறமை உண்டாக வேண்டும்.

குழந்தைகள் வாசிப்புப் பழக்கத்தினால் போதிய திறமையை அடைந்திருக்கின்றனரா என்று உரககப்

படித்தலின் மூலம்தான் சோதிக்க முடியும். விரைவாகப் படித்தல், நிறுத்தக் குறிகளுள்ள இடங்களில் நிறுத்தி வாசித்தல், தெளிவான உச்சரிப்பு, சரியான ஒலிப்பு, அவசியமான இடங்களில் குரலின் ஏற்றத் தாழ்வு, முழுச் சொற்களாகப் படித்தல், தடுமாற்றமின்மை ஆகிய அம்சங்கள் உரக்கப் படிப்பதிஞல் அபிவிருத்தியடையும். பிறருக்குப் படித்துக்காட்டுவதற்கு உரக்க வாசிப்பதில் திறமை உண்டாகவேண்டும். அவ்வாறு படிக்கும்பொழுது கேட்பவர்களுக்கு உற்சாகம் உண்டாகும் வகையில் படிக்க வேண்டும்; நாடகங்கள், பாடல்கள், இவ்வாறு வாசிக்கப் பட வேண்டும். செய்திகள், விளம்பரங்கள் முதலியவற்றைப் பிறருக்குப் படித்துக் காட்டுவ்தற்கு உரக்க வாசித்தல் அவசியம். உரக்க வாசிப்பதில் நல்ல திறமை உண்டாகாவிட்டால் காலச்சேதம் உண்டாவதுடன் கேட்பவர்கள் இரசிக்கமாட்டார்கள்; கருத்தை யுணர்வதும் கடினம். புதிய சொற்களே உரக்கப் படிப்பதிஞல் கண்களால் பார்ப்பதுடன், காதிஞலும் கேட்கப்பட்டு, மனத்தில் நன்கு பதியும். உரக்க வாசித்தலின் மூலம் நல்ல இனிமையான குரல் ஏற்பட வேண்டும்.

உரக்க வாசித்தலின் அவசியம்

இதைக் 'கருத்துணர்தல்' என்றும் சொல்லலாம். நல்ல உச்சரிப்புடன் திருத்தமாகப் படிப்பது மட்டும் போதாது; வேகமாகப் படிப்பது மட்டும் போதாது. வாசிக்கும் பகுதியில் சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தைக் கிரகித்துக்கொள்வது அவசியம். உரக்கப் படித்தலில் குழந்தைகளின் கவனம் உச்சரிப்பு, விரைவு என்ற இரு அம்சங்களில் இழுக்கப்படுவதுடன், கிரகிக்கும் சக்தியும் பெருக வேண்டும். கிரகிக்கும் சக்தி பெருகுவதற்குத் துவக்கத்தில் பாடங்களில் உபயோகிக்கும் சொற்கள் பழக்கத்திலுள்ளவைகளாகவும், கருத்தை எளிதில் உணரக்கூடிய தன்மை வாய்ந்தனவாகவும், குழந்தைகளுடைய மனப்பான்மையை அனுசரித்த விஷயங்களைப் பற்றியதாகவும்

கிரகிக்கும் திறமை

இருக்கவேண்டும். சொல்லகராதி படிப்படியாக அபிவிருத்தி யடைய வேண்டும். ஒரு பாடத்தைத் துவக்குவதற்கு முன்னால் அதில் கண்டுள்ள பொருளைப் பற்றிச் சம்பாஷிக்க வேண்டும். சம்பாஷணையின்போது பாடத்தில் கண்டுள்ள புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் குழந்தைகட்கு அறிமுகப்படுத்திப் பொருளை விளக்கலாம்; இச் சொற்களையும் சொற்றொடர்களையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் உபயோகித்துக் காட்டலாம். இச்சம்பாஷணை பின்னர்க் குழந்தைகள் கருத்துணர்வதை எளிதாக்கும் தன்மையுடையது.

உரக்கப் படித்தலினால் அடைய வேண்டிய திறமையும் அதை யடையும் முறையும்

உரக்க வாசிப்பதினால் மூன்று அம்சங்களில் திறமை ஏற்படவேண்டும் என்று சொன்னோம். அவை, வாசிக்க வேண்டிய எழுத்துக்களையும் சொற்களையும் அறிதல், தெளிவும் திருத்தமுமான உச்சரிப்பு, கிரகிக்கும் திறமை என்பன. உரக்க வாசித்தலின் மூலம் அறிமுக மாக்கப்படும் சொற்கள் அதிகரிக்கவேண்டும். படிக்கும்பொழுது உச்சரிப்பு திருத்தமாக இருக்கவேண்டும்; குரலமைப்பு தேவைக்குத் தகுந்தபடி மாற்றப்படவேண்டும்; வாசிப்பது கருத்து உணரும் வகையில் விரைவாக இருப்பதில் ஒழுங்கான அபிவிருத்தி தேவை. ஆனால் வேகத்துடன் திருத்தமும் தெளிவும் இருக்க வேண்டும். தெளிவும் திருத்தமும் இல்லாத வேகம் கூடாது. படிக்கும்பொழுது உணர்ச்சியுடன், கேட்போர் கருத்துணரும் வகையில் படிக்க வேண்டும். சிறந்த செய்யுட்பகுதிகளையும், நாடகங்களையும், வசனப் பகுதிகளையும் உரக்கப்படித்தால்தான் இரசிக்க முடியும். அப்பொழுதுதான் மொழியின் நடையிலும் நயத்திலும் நமக்குப் பிரேமை உண்டாகும். மேலே சொல்லப்பட்ட திறமைகளை மாணவர்கள் அடைய வேண்டுமானால், ஆசிரியர் முதலில் பாடத்தை உரக்கப் படித்து ஒரு முன்மாதிரியாகக் காட்டவேண்டும். நடிக்கத் தகுதியான பகுதிகளை நடிக்கவேண்டும்; பிள்ளைகளை நடித்துக்காட்டச் செய்யவேண்டும். செய்யுட்களை

உரக்கப் படிக்கப் பழக்க வேண்டும். சில கேள்விகளின் மூலம் வாசித்த பகுதியில் அடங்கியுள்ள கருத்தைச் சோதிக்க வேண்டும். படிக்கும்பொழுது கண் பார்வையின் வேகமும் உச்சரிப்பும் திருத்தமாக இருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும். ஒரு பாடத்தை மாணவர் வாசிக்கும்பொழுது நிறுத்தல்கள், பிற்போக்குகள், பிழைகள் ஆகியவற்றைக் கவனித்துத் தகுந்த பரிகாரங்கள் செய்யவேண்டும். ஒரு மாணவனுடைய திறமையைச் சோதிக்க, ஒரு பாடத்தை வாசிப்பதற்கு அவன் எடுத்துக்கொள்ளும் கால அளவைக் கவனிக்க வேண்டும். சொற்களை விழுங்குதல், சொற்களையும் எழுத்துக்களையும் விட்டுப் படித்தல், இல்லாத சொற்களைச் சேர்த்துப் படித்தல், சொற்களை மாற்றிப் படித்தல், சொற்களைத் திருப்பிப் படித்தல் முதலிய குறைகளை அறவே நீக்க வேண்டும்.

மௌன வாசிப்பு

குழந்தைகளுக்குச் சிறந்த வாசிப்புப் பழக்கம் ஏற்படுவதற்கு அடிப்படையான ஆரம்பப் பழக்கம் உரக்க வாசித்தலே. ஆனால் மனித வாழ்க்கையில் அதிகமாகத் தேவையாயிருப்பது மௌன வாசிப்பு. மௌன வாசிப்பு என்பது, கையெழுத்துப் பிரதி அல்லது அச்சுப் புத்தகத்திலுள்ள பகுதிகளில் கண் பார்வையை ஓட்டி, உரக்க வாசிக்காமலும், உதடுகள் அசையாமலும், தொண்டையின் ஓசைவுகூட இல்லாமலும், கருத்தை நன்கு கிரகித்துக் கொள்வதாகும். ஒரு சொல் அல்லது சொற்றொடர் வாசிக்கப்படும் பொழுதே, அடுத்த சொல் அல்லது சொற்றொடருக்குக் கண் சென்றுவிடும். இந்தப் பழக்கம் ஏற்பட்டால், வாய்விட்டு உச்சரிக்கவேண்டிய நிலை நீங்கி சொற்களைக் காணும்பொழுதே கருத்தைக் கிரகிக்கக்கூடிய நிலை உண்டாகின்றது.

மௌன வாசிப்பின் விளக்கம்

வாழ்க்கையில் பெரும்பான்மையினர் மௌன வாசிப்பையே கையாளுகின்றனர். அறிவை வளர்ப்பதற்கும் ஆனந்தம் எய்துவதற்கும் மௌனமாக வாசித்தல் அவசியமாகிறது. இவையே வாசித்தலின் நோக்கங்களாகையால், இவற்றை அடைவதற்குத் தேவையான பயிற்சியைக் குழந்தைகட்கு அளிக்க வேண்டும். வாய்விட்டுப் படிக்காமல் கண்களையும் மனத்தையும் மட்டும் உபயோகித்துக் கருத்தை அறியும் பொழுது குழந்தைகள் இதன் அவசியத்தை நன்கு உணர்வார்கள்.

மௌன வாசிப்பின் சிறப்பும் தன்மையும்

மௌனவாசிப்பில் குழந்தைகள் சுறுசுறுப்பாக இருக்க இடமுண்டு. கூட்டுவேலைக்கும் தனித்த வேலைக்கும் மௌன வாசிப்பில் இடமுண்டு. குழந்தைகளின் தனிப்பட்ட திறமையை அனுசரித்து மௌன வாசிப்பை வளர்க்கலாம். பேச்சுக் கருவிகளுக்கு மௌன வாசிப்பில் வேலையில்லை; ஆகையால் தேகத்திற்கு சிரமம் குறைவு. கண்களும் மனமும் ஒருங்கே சேர்ந்து வேலை செய்வதால் குவிந்த மனநிலை ஏற்பட்டு, கிரகிக்கும் திறமை அதிகரிக்கும். அநேக சந்தர்ப்பங்களில் உரக்க வாசிப்பதனால் அருகிலிருப்பவர்களுக்குக் கஷ்டம் நேரிடும்; ஒரே சமயத்தில் எல்லோரும் உரக்க வாசித்தால், ஒருவராலும கருத்துணர இயலாது; ஆதலால் மௌனப் படிப்பு பல சந்தர்பபங்களில் விரும்பற்பாலது. உரக்க வாசிப்பதில் இருவகைச் சக்திகளை உபயோகிக்கவேண்டும். ஒன்று உச்சரிக்கும் திறமை; இரண்டாவது கிரகிக்கும் சக்தி. ஆனால் மௌன வாசிப்பில் கருத்தை உணரும் சக்தி மட்டுமே தேவை. மௌன வாசிப்பில், குறைந்த நேரத்தில் அதிகமான பகுதி படிக்கக்கூடும்; படிப்பின் வேகமும் அதிகரிக்கும். ஒருவன் உரக்க வாசிக்கும் பொழுது வகுப்பில் பலர் கவனிப்பின்றி இருப்பார்கள்; ஆனால் மௌன வாசிப்பில் எல்லோரும் படிப்பில் கவனத்தை ஊன்றிக் கருத்தை உணர நேரிடும். இலக்கியங்களில் காணப்படும் சுவைகளை இரசிப்பதற்கு மௌன வாசிப்புப் பழக்கம் உதவும்.

குரற் பயிற்சி பெறுவதற்கு இப்பழக்கத்தில் இடமில்லை. மௌனவாசிப்பின் மூலம் உச்சரிப்புப் பயிற்சி,

உரையாடல், நடித்தல், சம்பாஷணை, சொற்பொழிவுகள் முதலியவற்றில் கவனம் ஏற்படாது.

மௌன வாசிப்பின் குறைகள்

குழந்தைகள் செய்யும் பல பிழைகளைத் திருத்துவதற்கு இவ்வாசிப்பில் ஆசிரியர்களுக்குச் சந்தர்ப்பம் கிடையாது ; ஏனெனில் வாய்மொழிப் பயிற்சிக்கு இதில் இடமில்லை. செய்யுட் பாடங்களை ஒப்புவிக்க முடியாது. செய்யுட் பகுதிகளை உரக்கப் படித்து இசை நயத்தை யுணர்ந்து இன்புறுவதற்கும் இதில் இடமில்லை.

மௌன வாசிப்பில் குழந்தைகளுக்குப் போதிய திறமை உண்டாக வேண்டுமானால், அதிலுள்ள பல அம்சங்களில் நல்ல பயிற்சி பெறவேண்டும். உரக்க வாசித்தல் தேவையான ஆரம்பப் பழக்கம்; அதிலிருந்தே மௌன வாசிப்புப் பழக்கம் உண்டாக வேண்டும்.

மௌன வாசிப்பில் உள்ள அம்சங்கள்

உரக்க வாசித்தலில் சொற்களை உரக்கப் படிக்கின்றோம்; பின்னர் சத்தத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்; படிப்படியாகச் சத்தத்தைக் குறைத்து உதடுகள் மட்டும் அசையும் நிலைமையும், அதன் பின்னர் தொண்டை அசைவு மட்டும் உள்ளவாறும் பயிற்சி வேண்டும். கடைசியில் உதடுகளும் தொண்டையும் அசையாமல், கண்ணோட்டத்தின் மூலமே படிப்பு நடைபெற வேண்டும். உறுப்புக்களின் அசைவு இல்லாமை, விரைவான கண் நகர்ச்சி, பிற்போக்குகளும் நிறுத்தல்களும் குறைதல், நேர்மையான கண்பாய்ச்சல், நல்ல கண்பார்வை, கிரகிக்கும் சக்தி ஆகியவை மௌன வாசிபபில் உள்ள அம்சங்களாகும். மேலும், படிக்கும் பொழுது பல புதுச் சொற்கள் இருக்கும்; இவற்றைப்பற்றிய முன்னறிவு இருந்தாலன்றிக் கருத்துணர்தல் தடைப்படும். மேலே கூறப்பட்ட அம்சங்களில் சிறந்த பயிற்சி உண்டாவதற்குப் பல உபாயங்களைக் கையாள வேண்டும். இந்த அம்சங்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று கிரகிக்கும் திறமை; மற்றொன்று வேகம். இவ்விரு அம்சங்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

மௌனவாசிப்பில் கிரகிக்கும் சக்தி அதி முக்கியமானது. கிரகிக்கும் திறமை இருந்தாலன்றி வேகமும் மௌனமும் பயன்படா; படிக்கும் பகுதியில் அடங்கியுள்ள கருத்தை யறிவது மிக அவசியம். ஆகையால் இச்சக்தியில் நல்ல திறமை பெறுவதற்கு முதலில் குழந்தைகளின் சொல்லகராதி பெருக வேண்டும். குழந்தைகளுக்கு அறிமுகமான சொற்களையும் சொற்றொடர்களையும் உபயோகித்துப் பயிற்சி அளிக்கக்கூடும். குழந்தைகளுக்கு விளங்கக் கூடிய சிறு கட்டளைகள் அடங்கிய அட்டைகள் பலவற்றைத் தயாரித்து, அவர்களை அவற்றை மௌனமாகப் படிக்கச் செய்து, அக்கட்டளைகளை நிறைவேற்றுவதில் பயிற்சி அளிக்கலாம். சொற்களையும் அவற்றின் படங்களையும் மௌனமாகவே பார்த்துச் சரியாகப் பொருத்தச் செய்யலாம். கைத்தொழில் கற்பிக்கும் பொழுது, அங்குச் சொல்லவேண்டிய கட்டளைகளை எழுதி, அவற்றை மௌனமாகப் படித்து நிறைவேற்றுவதில் பயிற்சி அளிக்க வேண்டும். ஒரே சம்பவம் அடங்கிய சிறு கதைகளை மௌனமாகப் படித்து, அவற்றை நடிப்பதினால் கிரகிக்கும் திறமை அதிகரிக்கும். இக்கதைகள் கவர்ச்சியுள்ளவைகளாகவும், எளிய நடையில் அமைந்தனவாகவும், இருக்க வேண்டும். இவற்றைக் குழந்தைகள் வாசிக்கத் துவக்குமுன், தகுந்த சம்பாஷணைகளின் வாயிலாக அவர்களுக்குப் படிப்பில் ஊக்கமும் உற்சாகமும் அளித்துப் படிப்பதற்கு மனத்தைப் பக்குவப்படுத்த வேண்டும். குழந்தைகள் பல பாடங்களை மௌனமாகப் பார்த்து, உற்று நோக்கி, அவற்றில் அடங்கிய கருத்துக்களைக் கிரகித்துக் கொள்வதில் பயிற்சி தேவை. குழந்தைகள் மௌனமாக வாசிக்கும்பொழுது ஆசிரியர் குறுக்கிட்டு, அவர்களுடைய மனத்தைச் சிதறவிடக் கூடாது; படிக்கும்பொழுது கண்ணும் எழுத்தும் ஒருமைப்பாடு அடைந்து, குவிந்த மனநிலை ஏற்படுத்திக்கொண்டால், கருத்துணர்தல் எளிது. மௌனவாசிப்புக்கு உகந்த புத்தகங்களில் அதிகமான கடினச் சொற்களும் பொருள் விளங்காத கருத்துக்களும் இருக்கலாகாது. புதிய சொற்களும் சொற்றொடர்களும்

கிரகிக்கும் சக்தி

குறைவாகவே இருக்க வேண்டும். அவை அதிகமாக இருப்பின் கருத்து உணர்தல் தடைப்படும்; அவ்வாறு அதிகமாக இருப்பினும் தகுந்த சம்பாஷணைகளின் மூலம், படிக்க ஆரம்பிக்குமுன் அவற்றை ஆசிரியர் விளக்கலாம். மேல் வகுப்புக்களில் சுயநோக்க முயற்சி முறையின் மூலமாகவும், தனிப்பயிற்சி மூலமாகவும், பல புத்தகங்களைப் படிப்பதன் வாயிலாக, கிரகிக்கும் திறமையில் அபிவிருத்தி உண்டாகும். படிக்கும் பகுதியில் அடங்கியுள்ள விஷயங்களில் பல கேள்விகளைத் தயாரித்து, அப்பகுதியை மாணவர்கள் மௌனமாகப் படித்த பிறகு, அக்கேள்விகட்கு விடையளிப்பதில் பயிற்சி கொடுக்கலாம். ஒரு பத்தியைப் படித்து அதற்குத் தலைப்பு அளித்தல் நல்ல பயிற்சியாகும்.

வாசிப்பதன் ஒரு நோக்கம் குழந்தைகளின் சொல்லகராதியை அதிகரித்தலாகும். அவர்களுக்குத் தெரியும் சொற்களின் அளவு அதிகரித்தாலொழிய, வாசிப்பில் கருத்துணர்தல் கடினமாகும். புதிய சொற்களின் பொருள் மாணவர்களுக்கு விளங்காமலிருப்பின், கருத்துணர்தல் தடைப்படும். ஆகையால் மொழிப் பயிற்சியில் புதிய சொற்களின் பொருளை அறிதல் முக்கியமான அம்சமாகும். சொற்களை இருவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று வழக்கிலுள்ள சொற்கள்; மற்றொன்று அரும்பதங்கள் அல்லது விசேஷச் சொற்கள். வழக்கிலுள்ள தினசரிச் சொற்களில் சில சொற்களை அடிக்கடி உபயோகப் படுத்துகின்றோம்; சிலவற்றைச் சில சந்தர்ப்பங்களில் மட்டும் உபயோகிக்கிறோம். இத்தகைய சொற்களின் ஜாபிதாக்களைத் தயாரிப்பது நலம். விசேஷச் சொற்களையும் சொற்றொடர்களையும் அடிக்கடி வரும்படியாகப் பாடங்கள் அமைந்திருக்க வேண்டும். அவற்றை அநேக சந்தர்ப்பங்களில் ஆசிரியர் உபயோகித்துக் கற்பிக்க வேண்டும். பாடத்தை வாசிப்பதற்கு முன்னால், அதில் வந்துள்ள புதிய சொற்களைக் குழந்தைகட்கு அறிமுகப் படுத்தி விளக்க வேண்டும். ஒரே ஒலியுள்ள சொற்களை

புதிய சொற்களுக்குக் கவனம்

யும், கருத்து வேற்றுமையுள்ளவற்றையும், எதிர்ப் பதங்களையும் கற்பிக்க வேண்டும். சொற்களை மட்டும் கற்பித்தல் போதாது; அவற்றை வாக்கியங்களில் பல சந்தர்ப்பங்களில் உபயோகித்தால் மட்டுமே கருத்தை உணர முடியும். நம்முடைய மனத்தில் தோன்றக்கூடிய சிந்தனைகளை முழு வாக்கியங்கள் வாயிலாகவே வெளிப்படுத்த முடியும். ஒரு முற்றுப் பெற்ற கருத்தைத் தெரிவிப்பதே வாக்கியம். ஆகையால் சொற்களின் கருத்தைக் கிரகிக்க, அவற்றை வாக்கியங்களில் உபயோகிக்கவேண்டும். அகராதியை உபயோகிப்பதன் மூலம் சொல் வளத்தை அதிகரிக்கலாகும்.

வேகம்

மௌன வாசிப்பில் வேகம் முக்கியமான அம்சம்; ஆனால் வேகத்தினால் மட்டும் வாசிப்பு பூர்த்தி பெறாது; கிரகிக்கும் சக்தியும் கூடவே இருக்க வேண்டும். கிரகிக்கும் திறமையுடன் கூடவே வேகமும் விருத்தியடைய வேண்டும். கிரகிக்கும் திறமையைக் குறைக்காத வகையில் வேகத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய முறைகளை நாம் வகுப்பறையில் கையாள வேண்டும். உரக்க வாசித்தலில் திருத்தமான உச்சரிப்பும் தெளிவான பேச்சும் இருக்கவேண்டி யிருப்பதால், மௌனப் படிப்பில் உரக்கப் படித்தலில் காணும் வேகத்தைக் காட்டிலும், அதிகமான வேகம் இருக்கவேண்டும். மௌன வாசிப்பில் வேகத்தை அதிகரிக்கச் சில உபாயங்களைக் கையாள வேண்டும். படிக்கும் பொருள்களிலிருந்து வேகத்தைத் தடைப்படுத்தக்கூடிய பல அம்சங்களை நீக்கவேண்டும். பாடம் கடினமாக இருந்தால் வேகம் தடைப்படும். பாடங்களில் உரைக்கப்படும் பொருள் இலகுவானதாக இருக்கவேண்டும். ஒரே அளவுள்ள ஒரு கதையையும் ஒரு விஞ்ஞானக் கட்டுரையையும் படித்துப் பார்த்தால், விஞ்ஞானக் கட்டுரையைப் படிக்க அதிக நேரம் தேவையாயிருப்பதை நாம் உணரலாகும். மேலும் புதிய சொற்களே அதிகமாக அடங்கியுள்ள படிப்புச் சாதனங்கள் வேகம் வளர்க்க உதவா; ஏனெனில் கருத்துணர்தலில் காலச்சேதம் உண்டாகும். ஆகையால் மௌன

வாசிப்பில் வேகம் அதிகரிக்க எளிய சொற்கள் பலவும் ஆங்காங்குக் கடின சொற்கள் விரவியும் இருக்கக்கூடிய, படிப்பதற்கு ஆவல் உண்டாக்கக்கூடிய பொருளகள் அடங்கிய சாதனங்கள் உபயோகிக்கவேண்டும். இரண்டாவதாக, வேகம் அதிகரிப்பதற்குக் 'கண்சாண்' அதிகரிக்கவேண்டும். 'கண்சாண்' அகன்றிருந்தால், வேகம் அதிகரிக்கும். 'கண்சாண்' என்றால் படிக்கும் பகுதியில் ஒரே பார்வையில் பார்க்கக்கூடிய சொற்களின் நீளம் எனச் சொல்லலாகும். 'கண்சாண்' அதிகரித்தால் வேகமும் அதிகரிக்கும். ஆனால் கண்சாண் தடைப்படுவதற்குப் பல காரணங்களுண்டு. பக்கங்களைத் திருப்பவேண்டியிருத்தலும், நடு நடுவே படங்களும் வரி வெட்டுக்களும் இருத்தலும் கண்ணோட்டம் விரைவாகச் செல்வதைத் தடைப்படுத்தும். இந்தத் தடைகள் குறையவேண்டும்; அல்லது அவற்றைப் பழக்கத்தின் மூலம் சமாளித்துக்கொள்ள வேண்டும். கண்சாண் அகன்று, கண்ணோட்டம் தடுக்கப்படும் அம்சங்கள் குறைந்தால், வேகம் அதிகரிக்கும். ஒரு வரியை வாசிக்கும்பொழுது, கண்கள் அடிக்கடி நிற்கும்; அவ்வாறு ஒரு வரியில் எத்தனை முறை கண்கள் நிற்கின்றன என்று கவனிக்கவேண்டும். இதைக் '**கண் நிறுத்தல்கள்**' என்று சொல்லுவார்கள். ஒரு நிறுத்தலுக்குச் சுமார் கால் செக்கண்டு ஆகிறது. இந்த நிறுத்தல்கள் வரிப்பிளவுகளினாலும் கண்சாண் குறைவினாலும், பொருள் விளங்காத சொற்களாலும், கடினமான கருத்தைக் கிரகிக்க வேண்டியிருப்பதாலும் அதிகமாகின்றன; அந்த இடங்களில் கண்கள் படித்த பகுதியையே திரும்பவும் பார்க்கின்றன. இவற்றிற்குப் **பிற்போக்குகள்** என்று பெயர். ஒரு வரி முடிந்தவுடன் கண்கள் அடுத்த வரிக்கு உடனே பாய வேண்டும்; இதில் காலக் கழிவு ஏற்பட்டால் வேகம் தடைப்படும். கண்சாண் அகன்றால், நிறுத்தல்களும் பிற்போக்குகளும் குறையும்; கால விரயம் ஏற்படாது. கருத்தும், சொற்களும் விளக்கப்பட்டிருப்பின், நிறுத்தல்களும் பிற்போக்குகளும் குறைந்து, கண்சாண் விரிவடையும். கண்சாண் அதிகரிப்பதற்குச் சில உபாயங்களை அனுசரிக்கவேண்டும்.

பின்னட்டைகளை ஆரம்ப வகுப்புகளிலிருந்து உபயோகித்தல் அவசியம். சொற்கள், சொற்றொடர்கள் வாக்கியங்கள் எழுதப்பட்டுள்ள அட்டைகளை, வகுப்புக்கேற்றவாறு தொகுத்து, அவற்றைத் துரிதமாக மாற்றி, விரைவாகப் படிப்பதில் பயிற்சி அளித்தால், கண்சாண் விரிவடையும். கண் பார்வையில் கோளாறுகள் இருப்பின் வேகம் குறையும்; கண் மருத்துவருடைய உதவியால் இக்கோளாறுகளை நிவிர்த்தித்தால் வேகம் அதிகரிக்கும். குழந்தைகள் உட்காரும் நிலையும் வெளிச்சமும் வேகத்தைத் தடைப்படுத்தக்கூடியவை. குறைவான ஒளியில் வேகமாகப் படிக்க இயலாது; அதிகமான பிரகாசமும் வேகத்தைக் குறைக்கும். ஆகையால் சௌகரியமான நிலையில் நல்ல வெளிச்சத்தில், இடது புறத்திலிருந்து வெளிச்சம் வரும்படி வாசிக்க வேண்டும்; படிக்கும்பொழுது வெளிச்சம் முன்புறத்திலிருந்தாவது பின்புறத்திலிருந்தாவது வரக்கூடாது.

வாசிக்கும் வேகம் அதிகப்பட வேண்டுமானால் ஒரு பகுதியை வாசிக்கும் காலம் குறைய வேண்டும். மிகக் குறைந்த நேரத்தில், படிக்கவேண்டிய பகுதியை மௌனமாகப் படித்துக் கருத்தைக் கிரகிப்பதனால் மட்டுமே காலம் குறையக் கூடும். வாசிக்கும் நேரத்தை உடனே குறைக்க முடியாது; படிப்படியாகத்தான் குறைக்க முடியும். குரல் அசைவுகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கான உபாயங்களைக் கையாளுவதன் மூலம் படிப்பு நேரத்தைக் குறைககலாம். ஆரம்ப நிலையில் சொற்களைப் படிக்க அறிந்த பின்னர், அவற்றைத் தனித்தனி அட்டைகளில் எழுதி இவற்றை விளக்கும் படங்களுடன் இணைக்கச் சொல்லலாம். எழுத்துக்களைக்கொண்டு மௌனமாகவே சொற்களை அமைக்கச் சொல்லலாம். கட்டளைகளை எழுதிவைத்து அவற்றை மௌனமாகவே நிறைவேற்றுவதற்குப் பயிற்சி அளிக்கலாம். உதடுகள் அசைவதையும் தொண்டையின் அசைவையும் சிறுகச் சிறுகக் குறைக்க வேண்டும்; படிக்கும்பொழுது உதடுகளிலும் தொண்டையிலும்

வாசிக்கும் நேரம்

அடிக்கடி விரல்களை வைத்துப் பார்த்து, அவை அசையாமலிருக்கும்படி பயிற்சி பெறலாம்.

மௌன வாசிப்பில் கையாளவேண்டிய சில உபாயங்கள்

முதலில் உரக்கப் படிப்பதைப் படிப்படியாகக் குறைத்துச் சப்தத்தை அறவே நீக்கவேண்டும். கண் பார்வை மட்டும் வேலை செய்யும் நிலையில் மௌன வாசிப்புப் பழக்கம் ஏற்பட்டதாகக் கொள்ளலாம். சுலபமான கதைகளும்சந்தோஷத்தை அளிக்கும் கதைகளும் மௌன வாசிப்புக்கு ஏற்றவை. மௌனமாகப் படிப்பதற்கு முன்னால் மாணவர்களுடைய மனத்தைப் படிப்பதற்குப் பக்குவப்படுத்த வேண்டும்; குறிப்பிட்ட காலத்தில் ஒரு பாடப் பகுதியைப் படிப்பதில் பயிற்சி அளிக்கலாம். ஒவ்வொரு பாடத்திலும் ஒரு பகுதியை மௌனமாகப் படிக்கப் பயிற்சியளிக்க வேண்டும்.

மௌன வாசிப்புக்குத் தேவையான சாதனங்கள்

மௌன வாசிப்பில் தேவையான பயிற்சி அளிப்பதற்கு அநேக சாதனங்கள் தேவை. ஆரம்ப வகுப்புக்களில் பல கட்டளைகளை மின்னட்டைகளில் எழுதி அவற்றை மௌனமாகப் படித்து நிறைவேற்றச் செய்வதில் பயிற்சி அளிக்கலாம். மாணவர்களின் பெயர்களை அட்டைகளில் எழுதி, பெயர்களைக் கூப்பிடுவதற்குப் பதிலாக அந்த அட்டைகளைக் காட்டி, குறிப்பிட்டவர் மட்டும் எழுந்திருப்பதில் பயிற்சி அளிக்கலாம். 'சொற்படப் பொருத்த அட்டைகள்' கொடுத்து அவற்றைச் சரியாகப் பொருத்துவதில் பயிற்சி அளிக்கலாம். கைத்தொழில் செய்வதற்கும், சுயநோக்க முயற்சி வேலைகளைச் செய்வதற்கும் சில குறிப்புக்களை எழுதி,அவற்றை மௌனமாகப் படிக்கப் பழக்கம் அளிக்கலாம். படிக்கும் பாடப் பகுதிகளில் சில கேள்விகளை எழுதிக் கொடுத்து, படித்தபின்னர் பதில் எழுதுவதில் பயிற்சி அளிக்கலாம். கீழ் வகுபபுகளின் உபயோகத்திற்குப் பல சிறுகதைப்

புத்தகங்கள் இருத்தல் நலம். புத்தகங்களின் அமைப்பும் அச்சும் கண்களைக் கவரக் கூடியவைகளாக இருக்க வேண்டும்; புத்தகங்களில் நல்ல வனப்புள்ள படங்கள் இருத்தல் அவசியம். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு புத்தகசாலை இருத்தல் நலம். விளம்பரங்கள், சமாசாரப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் காணப்படும் குழந்தைப் பகுதிகள் யாவும் மௌனவாசிப்புக்கு ஏற்ற சாதனங்கள். மேல்வகுப்புக்களில் பொருளடக்கம், அகராதி, அநுபந்தம் ஆகியவற்றின் உபயோகத்தைக் கற்பிக்க வேண்டும். இவ்வகுப்புக்களில் உபயோகிக்கும் புத்தகங்கள் வகுப்புகளுக்கும் பிள்ளைகளின் வயதிற்கும் ஏற்றவைகளாக இருக்க வேண்டும். சிறந்த இலக்கியப் பகுதிகளில் இவ்வகுப்புக்களில் பரிசயம் ஏற்படவேண்டியிருப்பதால், உயர்தரமான நூற்களினின்றும் தொகுக்கப்பட்ட புத்தகங்களைப் பிள்ளைகள் படிக்க வேண்டும்.

மௌன வாசிப்பில் வேகமும் கிரகிக்கும் சக்தியும் அதிகரிக்கவேண்டின் பழக்கத்தினால் உண்டாகியிருக்கும் வாசிப்புத் திறமையை அடிக்கடி சோதிக்க வேண்டும். சோதிப்பதில், மாணவர்கள் அடைந்திருக்கும் திறமையை அளந்தறியலாம். மாதத்திற்கு ஒருமுறை இவ்வகைச் சோதனைகளை அளிக்கலாம். மௌன வாசிப்புக்குகந்த பல பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாக்கியத்தில் விடையளிக்கக் கூடிய கேள்விகள் பலவற்றை ஒவ்வொரு பாடப் பகுதிக்கும் தனித்தனியாக ஆசிரியர் தயாரித்துக் கொள்ள வேண்டும். தெரிந்தெடுக்கப்படும் பாடப் பகுதிகள் சமமான கடினத் தன்மை பொருந்தியவைகளாக இருக்க வேண்டும். ஆசிரியர் மாணவர்களைப் படிப்பதற்குத் தயாராக இருக்கும்படி எச்சரிக்கை செய்ய வேண்டும். எல்லோரும் ஒரே சமயத்தில் படிக்கவேண்டிய பகுதிகளை மௌனமாகப் படிக்க ஆரம்பிக்கச் சொல்ல வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலம் கழிந்தபின்னர், பிள்ளைகள் எல்லோரையும் படிப்பை நிறுத்தும்படி சொல்லவேண்டும்.

மௌன வாசிப்பில் சோதனை

வாசிக்கும்பொழுது உதடுகளின் அசைவையும் தொண்டையின் அசைவையும் நீக்க வேண்டும. படிப்பை நிறுத்திய இடத்தில் எழுதுகோலால் புத்தகங்களில் குறிகள் இடச் சொல்ல வேண்டும். பின்னர், முதலில் தயாரிக்கப்பட்ட கேள்வித்தாள்களைக் கொடுத்து, புத்தகங்களை மூடிவிட்டு, விடைகள் எழுதச் சொல்ல வேண்டும். விடைகள் அடங்கிய காகிதங்களைத் தொகுத்து, அவற்றை மதிப்பிடவேண்டும். பிள்ளைகள் ஒவ்வொருவரும் தாங்கள் படித்த சொற்களின் எண்ணிக்கையைக் கண்டறிய வேண்டும். ஒரு நிமிட நேரத்தில் ஒவ்வொருவரும் படித்த சொற்களின் எண்ணிக்கையை குறித்துக் கொள்ளவேண்டும். மாணவர்களின் பெயர்கள் அடங்கிய ஒரு பட்டி தயாரித்து, விடைகளுக்குக் கிடைத்த அம்ங்களையும், வேகத்தின் அளவையும் ஒவ்வொரு பெயருக்கும் எதிரில் குறிப்பிடவேண்டும். இவ்வகைப் பயிறசிகளை நான்காம் வகுப்பிலிருந்து கொடுக்கலாம். பயிற்சிச் சோதனைத் தாள்களின் குறிப்பு பின்காணும் முறைபபடி வைககலாகும்.

மாணவன் பெயர்	சோதனைத் தேதிகள்									
	1		2		3		4		5	
	கி.	வே.	கி.	வே.	கி.	வே.	கி	வே.	கி.	வே.

கிரகிக்கும் திறமை (கி); வேகம் (வே). இந்தப் பட்டியின்மூலம் கிரகிக்கும் திறமைக்கும் வேகத்திற்கும் உள்ள சம்பந்தத்தை நிர்ணயிக்கலாம். ரேகைப் படங்கள்மூலம் இது சம்பந்தத்தை விளக்கலாம். மேல் நாடுகளில் மௌன வாசிபபுத் திறமையைப் பரிசோதித்ததில் ஒரு நிமிஷத்தில் சராசரி 80 முதல் 120 சொற்கள் படிக்கக் கூடுமென்று கணக்கிடபபட்டிருக்கிறது.

கீழ்வகுப்புக்களில் திறமையான வாசிப்புப் பழக்கங்கள் ஏற்பட்ட பின்னர், மேல்வகுப்புக்களில் மாணவர்கள் சுயமாகப் படிக்கப் பழகவேண்டும். இவ்வகைச் சுயமான படிப்பின் பொது நோக்கங்கள் நான்கு என வகுக்கலாம்: கருத்துணர்தல், இரசிகத்தன்மை வளர்த்தல், கற்பனு சக்தி தோன்றுதல், பாஷாஞானம் பெருகுதல். இந்த நான்கு நோக்கங்களும் முக்கியமானவை. இவை பூர்த்தியடைவதற்குத் தேவையான பயிற்சி முறைகளை ஆசிரியர்கள் கைக்கொள்ள வேண்டும்.

வாசித்தலின் நோக்கம்

வாசித்தலின் முக்கிய நோக்கம் கருத்தை அல்லது விஷய ஞானத்தை அடைவதாகும். பல நூல்களைப் படிப்பதால் அவற்றில் கண்டுள்ள பல விஷயங்களை மாணவர்கள் தாமாகவே அறிய முடியும். அன்றாட வாழ்க்கை விபரங்களைப் பற்றியும் சுற்றுப்புறத்தில் நடக்கும் சம்பவங்களைப் பற்றியும், விஞ்ஞான உண்மைகளைப்பற்றியும், நவீன இயந்திர சாதனங்களைப் பற்றியும் அறிவதற்குப் பிள்ளைகட்கு அவா உண்டு. ஒரு சுய நோக்க வேலையைப் பூர்த்தி செய்வதற்கும், கைத்தொழில் சம்பந்தமான விஷயங்களை அறிவதற்கும், ஓய்வு நேரங்களில் தமக்குப் பிரியமான வேலைகளைப் பற்றிய தகவல்கள் சேகரம் செய்வதற்கும் புத்தகங்களைப் படிக்க மாணவர்களுக்கு விருப்பம் ஏற்படும். இந்த விருப்பத்தை வாசித்தலுக்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரே புத்தகத்தை எல்லாக் குழந்தைகளும் விரும்பமாட்டார்கள்; வெவ்வேறு குழந்தைகட்கு வெவ்வேறு புத்தகங்களில் பிரியம் உண்டாகும். வாசிக்கும் விஷயத்தில் குழந்தைகட்குக் கவர்ச்சி ஏற்பட்டால், கருத்துணர்தல் எளிதில் உண்டாகும். குழந்தைகளின் விருப்பத்தையனுசரித்துப் புத்தகங்களைப் படிக்குமாறு அவர்களைத் தூண்ட வேண்டும். பல துண்டுப் பிரசுரங்களிலும் சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் பல விஷயங்கள் பொதிந்துள்ளன.

கருத்துணர்தல்

மாணவர்களின் உலக அறிவு பெருகுவதற்கு இவற்றை வாசிக்கும்படி அவர்களைத் தூண்ட வேண்டும். மேல் வகுப்புக்களில் கட்டுரைகள் எழுதுவதற்கும், பல விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்கும் தேவையான விவரங்களைச் சேகரிப்பதற்கும் பல புத்தகங்களைப் படிக்கத் தூண்டலாம். ஒவ்வொரு புத்தகத்தையும் முழுதும் படிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை; எந்த விஷயத்தைப்பற்றித் தகவல்கள் சேகரிக்க வேண்டுமோ அந்தப் பகுதியை மட்டிலும் வாசித்தல் போதுமானது என்று மாணவர்கள் உணர வேண்டும். அகராதியை உபயோகித்துப் பல சொற்களின் பொருள்களை அறிந்துகொள்ளப் பழக்கம் அளிக்க வேண்டும்.

இரசிகத்தன்மை வளர்த்தல்

வாசிப்பதில் நல்ல சுவை ஏற்பட்டால், சிறந்த இரசிகத்தன்மை உண்டாகும். கருத்துக்கள் சேகரம் செய்வது மட்டும் வாசித்தலின் நோக்கமல்ல; மனத்திற்கு ரம்மியம் அளிக்கவும் பல நூல்களைப் படிக்கவேண்டும்; ஆனந்தம் அடைவதற்குச் சிறந்த புத்தகங்களைப் படித்தல் அவசியமாகும். ஒரு புத்தகத்தில் அடங்கியுள்ள கருத்துக்கள் நமக்கு விளங்காமலிருப்பின், அதைப் படிப்பதில் ஆவல் உண்டாவதில்லை; வேறு நோக்கத்துடன் அதைப் படித்து முடிப்பினும் அதில் ஆனந்தம் அனுபவிக்க முடியாது. இத்தகைய புத்தகங்களைப் படிக்கும்படி வற்புறுத்தினால், ஆனந்தம் உண்டாகாது. ஆரம்பநிலையில் எளிய நடையில் எழுதப்பட்ட சிறு கதைகள் ஆனந்தத்தை அளிக்கும். குழந்தைகளின் தனி விருப்பங்களையும் தேர்ச்சி நிலையையும் ஆராய்ந்து அவற்றிற்கான நூல்களைப் பாடசாலை நூல் நிலையங்களில் சேகரிக்க வேண்டும். தங்களுக்கு விருப்பமான புத்தகங்களைப் படிக்கும்படி ஆசிரியர் மாணவர்களைத் தூண்ட வேண்டும். ஆச்சரியம், தைரியம், வீரம், அனுதாபம், துயரம் ஆகிய உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பக்கூடிய பரம்பரைக் கதைகள், வாழ்க்கை வரலாறுகள், உண்மைச் சம்பவங்கள், சுயசரிதைகள் போன்றவை இரசிகத்தன்மையை வளர்க்கக்கூடியவை. குழந்தைகள்,

எளிய நடையில் அமைந்துள்ள இவ்வகைக் கதைகளைத் தங்களுடைய ஓய்வு நேரங்களில் படிக்கலாம்; வகுப்பறையிலும் படிப்பதற்கு அவகாசம் அளிக்கலாம். வகுப்பில் குழந்தைகள் வாசிக்கும்பொழுது, ஆசிரியர் சுற்றிவந்து, பிள்ளைகள படிப்பதில் அக்கரை காட்ட வேண்டும்; அவர்கள் படிக்கும் கதைகளைப்பற்றி அவர்களுடன பேசலாம்; கடினமான பகுதிகளை விளக்கலாம்; கதையைப் படித்து முடிக்க ஆவலை உண்டாக்கலாம். பல படங்களை உபயோகித்துப் படிப்பில் ஆசையை உண்டாக்கலாம். ஒரு சம்பவத்தை விளக்கும் சித்திரத்தைக் குழந்தைகளுக்குக் காட்டி, அது பற்றிய வரலாற்றை இப் புத்தகத்தில் காணலாம் என்று சொன்னால், அப்புத்தகத்தைப் படிக்க மாணவர் விரும்புவர். ஆசிரியர் ஒரு கதையைச் சொல்லி, மிகுந்த இரசமான பாகத்தில் நிறுத்தி, மீதிப் பகுதியை இன்ன புத்தகத்தில் படித்தறியலாம் என்று சொல்லி ஆவலை எழுப்பலாம். சிறு நாடகங்களை நடிப்பதற்கு அனுசரணையாகப் படிக்கவேண்டிய புத்தகங்களில் ஆவல் உண்டாகும். புத்தகசாலையில் ஒரு புத்தகத்தில் பல பிரதிகள் இருப்பது நலம். தினசரிகளும் மற்ற சஞ்சிகைகளும் பெரிதும் விருப்பம் அளிக்கக்கூடியவை. உயர்தரமான இலக்கியப் பகுதிகளைப் படிப்பதால் மனத்திற்கு உற்சாகமும் ஆனந்தமும் ஏற்படும். உள்ளத்தில் ஊற்றெடுக்கும உணர்ச்சிகளை வெளிப்படுத்தக்கூடிய தன்மை சிறந்த இலக்கியங்களுக்கு உண்டு. உயர்ந்த இலக்கியப் பகுதிகளை ஆசிரியர் உணர்ச்சி ததும்ப உரக்கப் படித்தால், மாணவர்களின் கவனத்தை அவை வசீகரிக்கும். அவைகளிலுள்ள பாஷையின் நடையும், சொற்செறிவும், பொருட்செறிவும் வருணனைகளும் குழந்தைகளுடன் சம்பாஷிப்பதற்கு உரியவை. ஒரு வீணையினின்றும் எவ்வாறு இனிமையான நாதங்களைத் தந்திக் கம்பிகள் எழுப்புகின்றனவோ, அம்மாதிரியே உயர்ந்த இலக்கியங்கள் இருதய உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பும் தந்திகளாகும். இலக்கிய கர்த்தாக்கள் அத்தந்திகளை மீட்டும் கருவிகளே. மனத்திற்குச் சந்தோஷமும இரசிக்கும் தன்மையும் மேல்வகுப்புக்களில் சிறந்த இலக்கியங்களைப் படிப்பதால் மட்டும் உண்டாகும்.

படிக்கும் புத்தகங்கள் உண்மை வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாக இருந்தால் மட்டும் போதாது; பிள்ளைகளுடைய உள்ளத்தில் பல நூதனமான கருத்துக்களைத் தோற்றுவிக்கக் கூடியவைகளாகவும் இருக்க வேண்டும். உயர்தர இலக்கியங்கள் கற்பனை சக்தியைத் தோற்றுவிக்கக் கூடியவை. பல நூல்களைப் படித்து, அவற்றில் காணப்படும் சுவைகளை இரசித்து இன்புறுதல் மட்டும் போதாது; அவை போன்ற கற்பனைகள் பல மாணவர் உள்ளத்தில் தோன்றுவதன் மூலம் பல கட்டுரைகளையும், நாடகங்களையும், கதைகளையும் இயற்றுவதில் திறமை உண்டாகக்கூடும். உள்ளத்தில் ஒளி தோன்றினல், வாக்கினில் ஒளி தானுகத் தோன்றும். வாசித்தலினல் ஏற்படக்கூடிய விரும்பத்தக்க பயன்களில் கற்பனை சக்தி முக்கியமானதாகும்.

கற்பனை சக்தியின் தோற்றம்

வாசித்தலில் மொழிப் பெருக்கம் முக்கியமான நோக்கமாகும். பல புத்தகங்களைப் படிபபதால் குழந்தைகளின் சொற்களஞ்சியம் பெருகும். கீழ்வகுப்புக்களில் உபயோகப்படுத்தப்படும் புத்தகங்களில் சொற்களும் கருத்துக்களும் சுலபமானவைகளாக இருக்கவேண்டும். வாய்மொழிப் பயிற்சிகளின் வாயிலாக அடைந்த சொற்பெருக்கத்தைப் புத்தகங்களைப் படிப்பதன் மூலம் அபிவிருத்தி செய்து கொள்ளலாம். படங்களை உபயோகித்துச் சொற்களையும் சொற்றொடர்களையும் விளக்கலாம். புதிய சொற்களைப் பல சந்தர்ப்பங்களில் உபயோகித்துக் காட்ட வேண்டும்; அவற்றின் பொருளை அப்பொழுதுதான் குழந்தைகள் உணர முடியும். அகராதியில் உள்ளபடி சொற்களின் பொருளை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது; அவற்றைப் பல சந்தர்ப்பங்களில் உபயோகிக்க வேண்டும். பாஷையில் திறமை உண்டாவதற்குப் புதிய சொற்களின் அறிவே ஏற்ற திறவுகோல் ஆகும்.

மொழிப் பெருக்கம் உண்டாதல்

6. வாசிப்புச் சாதனங்கள்

வாசிப்புக்கான பலவகைச் சாதனங்களையும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். சுலபமான கட்டுரைகளையும் கதைகளையும் நாடகங்களையும் உரையாடல்களையும் வாசிப்புப் பழக்கம் ஸ்திரப்படுவதற்குத் தேவையான சாதனங்களாகக் கொள்ளவேண்டும்.

வாசிப்பதற்கான சாதனங்களின் வகைகள்

சிறந்த பல நூல்களினின்றும் கடைந்தெடுக்கப்பட்ட இலக்கியப் பகுதிகள் ஒரு பிரிவாகும்; வரலாறுகள், சுயசரிதைகள், விருத்தாந்தங்கள், கற்பனைகள், விவரணங்கள் பலவும் இப்பிரிவைச் சேர்ந்தவை. மூன்றாவதாக, பொழுது போக்குக்கான ஓய்வு நேரத்தில் படிக்கக்கூடிய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் கதைகளும் நவீனங்களும் ஆகும்.

இச் சாதனங்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆழ்ந்த படிப்புக்குரியவை என்றும், அகன்ற படிப்புக்கு ஏற்றவை என்றும் அவற்றைக் கூறுவர். பாடசாலைகளில் ஆழ்ந்த படிப்புக்குகந்த சாதனங்களே அதிகமாக இருந்து வருகின்றன.

ஆழ்ந்த படிப்பும் அகன்ற படிப்பும்

பாடப் புத்தகங்கள் ஆழ்ந்த படிபபுக்காகவே வைக்கப்பட்டுள்ளன. சில நூல்களை ஆழ்ந்து படித்தல் அவசியம்; சிலவற்றை விரைவாகவும் மேலாகவும் படித்தால் போதுமானது. பாடபுத்தகங்களிலுள்ள சிறந்த செய்யுள் உரைநடைப் பகுதிகளை மாணவர் நுட்பமாக ஊன்றிப் படித்துப் பொருள் உணர வேண்டும்; மேலும் அவற்றிலுள்ள சொல் நயம், பொருள் நயங்களைச் சுவைத்தலும், அவற்றிலுள்ள கருத்துக்களின் இனிமையை அநுபவித்து இன்புறுவதும் ஆழ்ந்த படிப்பின் நோக்கங்களாகும். கதா பாத்திரங்களின் குணவிசேஷங்களை ஆராய்வதும், பாட அமைப்பின் ஒழுங்கையும் தன்மையையும் அறிவதும் ஆழ்ந்த படிப்பின் சின்னங்களாகும். ஆழ்ந்து படித்தலில் நுனிப்புல் மேய்தல் போதாது;

ஆழ்ந்து நுட்பமாகப் பல விஷயங்களைக் கிரகிக்கும் திறமையை வளர்க்கவேண்டும். ஆழ்ந்த படிப்பிற்குத் தேவையான சாதனங்கள் பலவாகும். உயர்தரமான இலக்கிய இலக்கண நூல்களை ஆழ்ந்து படித்தால் மட்டும் பயன் பெறக்கூடும். ஆனால் ஆழ்ந்து படிக்கும் சாதனங்களுடன் விரைவாகப் படிக்க வேண்டிய அகன்ற படிப்பும் இன்றியமையாதது. தொடர்கதைகளும், பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் அகன்ற படிப்புக்கேற்ற சாதனங்கள்.

அகன்ற படிப்பை வளர்க்கும் முறைகள்

சில தொடர்கதைப் புத்தகங்களையும் உபபாட புத்தகங்களையும் மேல் வகுப்புக்களில் உபவாசகங்களாக வைத்து மொழிப் பயிற்சியைத் துரிதப்படுத்தலாம். மாணவர்களை வீட்டிலும் ஓய்வு நேரங்களிலும் இவற்றைப் படிக்கச் செய்யலாம். படித்த பொருள்களைப்பற்றி வாய் மொழியாகப் பேசச் செய்யலாம்; கட்டுரைகளும் எழுதலாம். நூல் நிலையங்களிலுள்ள பல புத்தகங்களைப் படிப்பதாலும் அகன்ற வாசிப்பு உண்டாகும். தினசரிச் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், சிறுவர் பகுதிகள், பாலர் பத்திரிகைகள், ஆராய்ச்சி நூல்கள், அகராதிகள், இன்னிசைப் பாடல்கள், நாட்டுப் பாடல்கள் யாவும் படிப்பை விருத்தி செய்யும் சாதனங்களாகையால், இவற்றைச் சுவைத்துப் படிப்பதால் அகன்ற படிப்பு விருத்தியாகும்.

அகன்ற படிப்பின் நோக்கமும் பயனும்

அகன்ற படிப்பின் நோக்கங்கள் பல. அவற்றில் முக்கியமானவை மொழியறிவு வளர்ச்சி, சொற்களஞ்சியப் பெருக்கம், உலக அறிவையும் பொதுஅறிவையும் வளர்த்தல், வாசிப்பில் பற்று உண்டாக்குதல், விரைவாகப்படிக்கும் திறமையை உண்டாக்குதல், படிக்கும்போதே பொருளுணர்தல், குறைந்த காலத்தில் அதிகமாகப் படித்தல், சுய முயற்சியை வளர்த்தல், ஓய்வு நேரத்தை வீணாக்காமல் நல்ல வழியில் ஈடுபடுதல் ஆகியவை.

மௌனமாகப் படிப்பதனுல் குறைந்த நேரத்தில் அதிகப் புத்தகங்களைப் படிக்கலாம். சுயமாகப் படிப்பதை அகன்ற படிப்புத் தூண்டக்கூடியது. ஓய்வு நேரங்களை நல்ல முறையில் செலவிடுவது இபபடிப்பினுல் ஏற்படக் கூடிய சிறந்த பயனுகும்.

மேல் வகுப்புக்களில் உபயோகிக்கும் வாசகம், உப வாசகம் ஆகியவற்றுடன் பாடசாலைகளில் இருக்கும் நூல் நிலையங்களிலுள்ள வேறு புத்தகங்களையும் மாணவர்கள் படிக்க வேண்டும். இப் புத்தகங்களை வீடுகளுக்கு எடுத்துச் சென்றும், பாடசாலைகளிலேயே "நூல் நிலைய வேளை" களிலும் படிக்க அநுமதிக்கலாம். தமிழுக்கும் நூல் நிலைய வேளை ஏறபடுத்த வேண்டும். புத்தகங்களைப் படிக்கும்பொழுதே குறிப்புக்கள் எடுத்துக்கொள்ளச் சொல்ல வேண்டும். அகன்ற படிப்புச் சாதனங்களைப் படிப்பது போலவே இவற்றையும் படிக்க வேண்டும்; அவற்றில் பயிற்சிகளும் அளிக்க வேண்டும்.

பாடசாலை நூல் நிலையங்கள்

பாடசாலை நூல் நிலையங்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை பொது நூல் நிலையம், வகுப்பு நூல் நிலையம், மேற்கோள் நூல் நிலையம் என்பனவாம். எல்லா மாணவர்களும் ஆசிரியர்களும் உபயோகிக்கக்கூடிய பல கலைகளைப்பற்றிய நூல்களும் செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் பொது நூல் நிலையத்தில் அடங்கியவை. ஒவ்வொரு வகுப்பறையிலும், அவ் வகுப்புப் பிள்ளைகள் படித்தற்குரிய நூல்கள அடங்கிய நிலையம் வகுப்பு ஆசிரியரின் பொறுப்பில் இருக்க வேண்டும்; இது வகுப்பு நூல் நிலையம் எனப்படும். அகராதிகள், நிகண்டுகள், சங்க கால இலக்கியங்கள், பிற இலக்கிய நூல்கள், சிறந்த சஞ்சிகைகளின் ஆண்டுத் தொகுதிகள் முதலியன மேற்கோள் நூல் நிலையத்தின் உறுப்புக்கள் ஆகும்.

நூல் நிலையங்களின் வகைகள்

வகுப்பு நூல் நிலையத்தில் வைக்கவேண்டிய புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தல்

ஆரம்ப வகுப்பு மாணவர்க்குப் பொருத்தமானவை கதைப் புத்தகங்கள், மோகினிக் கதைகள், கட்டுக் கதைகள், புராணக் கதைகள், சாகஸக் கதைகள், சரித்திரக் கதைகள், அறிவியல் நூல்கள், பொது அறிவை வளர்க்கும் சிறு புத்தகங்கள், பல நாட்டு மக்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆகியவை. மாணவர் படிப்புக்கான நூல்கள் அவர்களுடைய உளங்களை வசீகரிக்கக் கூடியனவாக இருக்கவேண்டும். அவர்களே விரும்பி வாசிக்கக் கூடிய நூல்களாகவும் இருக்க வேண்டும். வகுப்புப் பிள்ளைகளின் வயதுக்கும், மொழிப் பயிற்சி நிலைக்கும், மனப்பான்மைக்கும் ஏற்ற புத்தகங்களாக இருக்கவேண்டும். எல்லோருக்கும் பயன்படும்படி பலவகை நூல்கள் இருப்பது நலம். சுயமான முயற்சியைத் தூண்டக்கூடிய அளவுக்கு நடை சுலபமாக இருக்கவேண்டும். புத்தகங்களின் அமைப்பும் அச்சும் கண்களைக் கவரக்கூடிய வனப்பு உடையனவாக இருக்க வேண்டும்.

---

7 செய்யுளும் உரைநடையும்

செய்யுள்

செய்யுளும் மொழி வளர்ச்சியும்

மொழி வளர்ச்சியில் செய்யுள் முக்கியமான ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றது; அதிலும் தாய் மொழியில் செய்யுளே உயிர் நிலை என்று கூறலாம். மானிட வாழ்க்கையினின்று எழும் மனவெழுச்சிகளையும், சிறந்த கருத்துக்களையும், சொல் நயம், பொருள் நயம், இசைநயம் பொருந்தியவாறு வெளிப்படுத்துவது செய்யுளாகும். செய்யுளைச் 'சொற்சித்திரம்' என்று சொல்லலாம். தமிழ் மொழியில் செய்யுள் பண்டைப் பெருமை வாய்ந்தது; உரைநடை வெகு சமீப காலத்திலேயே தோன்றியது. செய்

யுள் வடிவில் அமைந்த பல நூல்களே நமது முன்னோர்கள் நமக்கு அளித்த கலைச் செல்வங்கள் ஆகும். பண்டைக் காலத்தில் கலைகள் பலவும் செய்யுள் வடிவிலேயே அமைக்கப்பட்டன. செய்யுள் இயற்றுவதற்குத் தனி மதிப்பு அளிக்கப்பட்டு வந்தது. மதி நுட்பமான நூல்கள் பலவும் செய்யுள் நடையில் காணப் படுகின்றன. சுருக்கமான அமைப்பும், சொற்செறிவும், பொருட் செறிவும், ஓசை இன்பமும், கற்பனை ஊற்றுக்களும் செய்யுட்களில் விசேஷமாகக் காணப்படுகின்றன. இத்தகைய செய்யுட்களைப் படிப்பதால் பல நன்மையான பலன்கள் உண்டாகும். குழந்தைகளுக்குச் சிறந்த பண்பாடு உண்டாக வேண்டுமானால், இளமை முதல் குழந்தைகட்குச் செய்யுட் பாடம் நடை பெற வேண்டும்.

புதிய சொற்களைக் கற்பதற்கும், பொருள் கூறுவதற்கும், மொழிப் பயிற்சி உண்டாவதற்கும் செய்யுள் கற்பிக்கக் கூடாது; இவை இடை இடையே விரவி வரினும், செய்யுள் கற்பிப்பதன் பிரதான நோக்கம் வேறு.

செய்யுள் கற்பித்தலின் நோக்கம்

உயர்ந்த கருத்துக்களைச் செய்யுள் வடிவில் உணர்த்தும் கவிஞனுடைய திறமையையும், அவனுடைய உணர்ச்சிகள், இயற்கை யழகு, மக்களின் வாழ்க்கை, இனிய நடை, விஷயப் போக்கு, சொற்களின் ஓசை ஆகியவற்றைப் பருகி, இவற்றை மாணவர்களிடை வளர்ப்பதே செய்யுள் கற்பித்தலின் நோக்கமாகும். தனிப்பட்ட சொற்களையும் சொற்றொடர்களையும் கற்பிப்பது செய்யுள் பாடத்தின் நோக்கமல்ல. மனத்திற்கு இன்பம் அளிப்பது மட்டும் அல்ல; காவிய கர்த்தாவின் உணர்ச்சி வெள்ளத்தை ஒருவாறு அறிந்து அனுபவித்து ஆனந்த மடைவதே செய்யுள் படித்தலின் நோக்கமாகும். சிறந்த கவிஞர்களுடைய உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சி வெள்ளமே கவிதைகளாக மலர்கின்றன. பாடல்களின் இசையும் ஓசையும் மனத்திற்கும் நரம்புகளுக்கும் அமைதியையும் சாந்தத்தையும் உண்டாக்கக் கூடியவை. பாடல்களின் இனிய நாதம் குழந்தைகளின் செவிகளுக்கு இனிமையாக

இருக்கும். மாணவர்களுக்கு ஏற்படும் மனவெழுச்சிகளைச் செய்யுள் வெளிப்படுத்தும் தன்மையுடையது. செய்யுளின் வாயிலாக வெளியிடப்படும் கற்பனைகளும் மன வெழுச்சிகளும் மாணவர்களிடையே தோற்றுவிக்க வேண்டும். செய்யுள் படித்தல் தனிப்பட்ட ஓர் ஆனந்தத்தை அளிக்கும் செய்யுளில் கண்டுள்ள நிகழ்சசிகளும் காட்சிகளும் நேரிற் காண்பன போன்றே இருக்குமாதலால், அதைச் சொற் சித்திரம் எனச் சொல்வது மிகையாகாது. செய்யுளின் ஓசை நயமும் காட்சிச் சித்திரமும் மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்தக் கூடியவை. செய்யுள் குழந்தைகளின் கற்பனையை வளர்க்கும் தன்மையுடையது. மேலும் மாணவர்களுடைய ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தி அவர்களுடைய தனித் தன்மையை வளர்க்கும் பான்மையுடையது செய்யுட் பாடம். சிறந்த இலக்கியங்களைப் படிப்பதற்குச் செய்யுட் பாடம் அடிப்படையானது.

செய்யுட்களின் வகைகள்

செய்யுட்களில் பலவகைகளுண்டு. அவை: குழந்தைப்பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், நாட்டுப் பாடல்கள், அபிநயப் பாடல்கள், கதைப் பாடல்கள், நீதிச் செய்யுட்கள், வருணனைகள், துதிப் பாடல்கள், விடு கதைகள், சிந்துக்கள் என்பன. இவற்றில் வருணனைகளும் துதிப் பாடல்களும் விருத்தாந்தங்களும் நீங்கலாக மற்ற வகைகள் குழந்தைகட்கு ஏற்றவை. எளிய பாடல்களானாலும் நடையின் அமைப்புச் சிறந்ததாயிருக்கவேண்டும். அவற்றில் உயர்ந்த சிந்தனைகளும் அழகான சொல் வன்மையும் அமைந்திருக்க வேண்டும்; சந்தமும் நன்கு அமைந்திருக்க வேண்டும். உற்சாகமின்றித் துயரம் விளைவிக்கக் கூடிய பாடல்களும், உணர்ச்சிகளை அதிவேகமாகத் தட்டி எழுப்பக் கூடிய பாடல்களும் குழந்தைகட்குத் தகுந்தவையல்ல. சிறு குழந்தைகள் இசைவெள்ளத்தில் மிதப்பார்கள்; பாடல்களின் சுவையை நல்ல சந்த அமைப்பின் மூலம் பருகக் கூடும். அபிநயமும், சங்கீதமும் குழந்தைகளின் மனத்திற்கு உற்சாகமும் இன்பமும் அளிக்கக் கூடியவை.

ஆனால் போதிக்கப்படும் பாடல்கள் வாழ்க்கை அனுபவங்களைப் பிரதிபலிக்கக் கூடியவைகளாக இருக்க வேண்டும். குழந்தைகளின் அனுபவத்தில் காணப்படாத நிகழ்ச்சிகளும் உணர்ச்சிகளும் அவர்களுக்குச் சுவை கொடுக்க மாட்டா. உற்சாகத்தைத் தூண்டக் கூடிய உயிர் ததும்பும் சந்தமும், சொற்களின் ஓசையும் குழந்தைகளுடைய உள்ளத்தைக் கவரக் கூடியவை.

வகுப்புக்களுக்குத் தகுந்த பாடங்களைந் தொகுத்தல்

சாதாரணமாக நமது பாடசாலைகளில் பெரும்பாலும் நீதிச் செய்யுட்களே கற்பிக்கப்படுகின்றன. செய்யுட் பாடம் போதிக்கும் நோக்கத்திற்கு இது முரண்பாடானது. குழந்தையின் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புள்ள பொருள்களைப் பற்றிய செய்யுட்களே துவக்கத்தில் கற்பிப்பதற்கு ஏற்றவை என்று அறிந்தோம். நீதிச் செய்யுட்கள் குழந்தைகளின் வாழ்க்கையில் அவ்வளவு முக்கியமல்ல; பார்க்கும் காட்சிகளையும் கிடைக்கும் அனுபவங்களையுமே அவர்கள் உணரக்கூடும். சிந்தித்து உணரக்கூடிய தன்மையுள்ள பல அறவுரைகளைக் குழந்தைகளுக்குத் துவக்கத்தில் ஏற்படும் ஆகையால், இவ்வகை நீதிச் செய்யுட்களை துவக்க நிலையில் விலக்கி, குழந்தைகளின் மனப்பான்மைக்கு ஏற்ற பல இனிய பாடல்களைப் போதிக்க வேண்டும். இடைநிலை வகுப்புக்களில் அவர்களுடைய விருப்புக்குகந்த பாடல்களையும் நீதிநெறிச் செய்யுட்களையும் கலந்து கற்பிக்கலாம். மேல் வகுப்புக்களில் பல நூல்களினின்றும் தொகுக்கப்பட்ட பாடங்களைக் கற்பிக்கலாம். துவக்கப் புத்தகங்களில் எளிய நடையில் வசிகரமான பல பாடல்கள் சேர்க்கப்படாமலிருந்தால், ஆசிரியரே, அவ்வகைப் பாடல்களைத் தொகுத்துக் கொள்ள வேண்டும்.

கற்பிக்கவேண்டிய செய்யுளை ஆசிரியர் நன்றாகப் பாடிப் பழகவேண்டும்; பின்னர். இரண்டு மூன்று முறை சரியான சந்தத்தோடு பொருள் விளங்கும் வகையில்

மாணவர்கட்குப் பாடிக் காட்ட வேண்டும். தேவையான இடங்களில் நிறுத்தி, வேண்டும் பொழுது குரலை மாற்றி, இராகத்துடன பாடுவதில் ஆசிரியர் திறமை அடைந்திருக்க வேண்டும். ஆசிரியர் பாடலைப படிக்கும் திறமையை அனுசரித்து, மாணவர்கள் அடையக் கூடிய பலன் இருக்கும. பாடலை முழுதும் மாணவர்கட்குப் பாடிக்காட்டி, அதை முழுதும் அவர்கட்கு அறிமுகப்படுத்த வேண்டும். அடிகளைத் தனித்தனியாகக் கற்பித்தால் பாட்டின் நயம கெட்டுபபோகும். பெரிய செய்யுட்களைப் பல பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம். செய்யுட்களை ஏற்ற இசையுடன் உரக்கப் படித்தால் தான் அவற்றில் காணும் சொற்சுவையும் பொருட் சுவையும் உள்ளத்திற்கு உவகை யளிக்கும். இசையின் இனிமையில் குழந்தைகளும், பறவைகளும, பிராணிகளும் ஈடுபடுதல் வெளிப்படை. செய்யுட் பாடத்தில் மாணவர்கள கருத்துடன் ஈடுபட வேண்டுமானல், இசையுடன் படித்துக் காட்டலும் இசையுடன் படிக்கச் செய்தலுமே சிறந்த முறைகள். சொற்களைப் பிரிக்காமல் சீர்பிரித்துப் பாடிக் காட்டுவதால், குழந்தைகள் பாட்டின் கருத்தை உணருவதுடன் இலக்கிய இன்பத்தையும் அடையக்கூடும பின்னர்ப் பொருள் விளங்காத சொற்களையும் சொற்றொடர்களையும் விளக்கலாம். அநாவசியமாகப் பதவுரை, கருத்துரை, பொழிப்புரை என்ற விளக்கங்களை அளித்துக் குழந்தைகளைக் குழப்பக்கூடாது. ஒரு ரோஜா மலரை இயற்கை நிலையிலேயே கண்டு இன்புறுவதே சிறந்தது; ஆனல் அதன் அழகு, அமைப்பு, நிறம், மணம் ஆகியவற்றில் மனத்தை ஈடுபடுத்தி அம்மலரைப் பலவகைகளில் உபயோகிப்பதும் சிறந்ததே; ஆயினும், அம்மலரை இதழ்களாகப் பிய்த்துப பார்த்து அழகுணர்ச்சி பெற முடியாது. பிய்த்த பின்னர் இதழ்களை ஒருங்கே சேர்த்து ஒரு மலரை உண்டுபண்ண முடியாது. அது போலவே ஓர் அழகிய பாடலைப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை என்று சொற்களாகப் பிரித்துப் போதிப்பதால் செய்யுட் போதனை ரசமற்றுப்போகும். கவியின்

செய்யுள் போதிக்கும் முறை

கருத்தையும் உணர்ச்சியையும் அறிவதற்கு இம்முறை உதவி செய்யாது. பாடல்களைப் போதிப்பதன் நோக்கம் சொல்வன்மையை அபிவிருத்தி செய்வதுமட்டும் அல்ல; குழந்தைகளின் அனுதாபம் நிறைந்த கற்பனைசக்தியைத் தூண்டுவதும் மனவெழுச்சிகளை எழுப்புவதுமே பாடல்கள் போதிப்பதன் நோக்கங்களாதலால், சொல் விளக்கம் மட்டும் போதாது. மேல் வகுப்புக்களில் உவமை. அணிகள், சொல் நயம், பொருள் நயம், இசைநயம், இலக்கண விசேஷம முதலியவைகளை எடுத்துக் கூறலாம். நூலாசிரியரின் வரலாறறையும் மேற்கோள்களையும் எடுத்துக் கூறலாம்.

மனப்பாடம் செய்தல்

செய்யுட் பாடம் போதிப்பதால் நம்மிடையே மற்றொரு கெட்ட பழக்கம் இருந்து வருகின்றது. கற்பிக்கும் பாடல்கள் எல்லாவற்றையும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும்படி பிள்ளைகளை நாம் நிர்ப்பந்தம் செய்கின்றோம். நிர்ப்பந்தமாக மனப்பாடம் செய்வதனால் பலன் உண்டாகாது. விருப்பமில்லாத பாடல்களை மனப்பாடம் செய்வதால் அவற்றின்மேல் மாணவர்களுக்கு வெறுப்பு உண்டாகும். குழந்தைகள் செய்யுளின் அழகைத் தாமாகவே இரசித்து மனப்பாடம் செய்யவேண்டும். குழந்தைகள் இரசிக்கும் பாடல்களை மனப்பாடம் செய்து பாடினால் பயன உண்டாகும்; அவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் இனிக்கும். பல பிள்ளைகள் சேர்ந்து பாடுவதும் பாராட்ட வேண்டியதே. மனப்பாடம் செய்வதால் சிறந்த இலக்கியப் பகுதிகளில் பரிசயம் உண்டாகிறது என்று சொல்வது உண்மையல்ல; மனப்பாடம் செய்யும் பாடல்களின் உண்மை மதிப்பைப் பிற்கால வாழ்க்கையில் மாணவர் உணரக் கூடுமாதலால், எல்லாச் செய்யுட்களையும் மனப்பாடம் செய்து ஒப்புவித்தல் அவசியம் என்று ஒரு சாரார் கூறுவர். இது மேன்மையான நோக்கமென்றாலும், மனப்பாடம் செய்ய மாணவர்களுக்கே ஆவல் உண்டாக வேண்டும். மனப்பாடம் செய்வதில் மாணவர்களுக்குள்ளே ஒரே மாதிரியான திறமை இருக்காது. ஒரு மாணவன் ஐந்து நிமிடங்களில் மனப்பாடம் செய்து

பாடக்கூடிய பாடலை மற்றொருவன் ஐம்பது நிமிடங்களில் பாடக்கூடும். எந்தப் பாடல்களை மனப்பாடம் செய்யலாம் என்று குழந்தைகளே தீர்மானிக்கும்படி விட்டுவிடுதல் சிறந்தது. மனப்பாடம் செய்வது ஆசிரியரால் சுமத்தப்பட்ட ஒரு கடமை என மாணவர்கள் கொள்ளலாகாது. குழந்தைகள் தங்களுக்குப் பிரியமான செய்யுட் பாடங்களைத் தூண்டுதலின்றியே மனப்பாடம் செய்ய வேண்டுமானால், கற்பிக்கும் முறை நன்கு அமைய வேண்டும்.

செய்யுட்களை அளவுக்கு மீறிப் பதம் பிரித்து அவற்றிற்குப் பொருள் கூறுவதை அறவே நீக்க வேண்டும். எல்லாச் செய்யுட்களையும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கலாகாது. குழந்தைகளின் இயற்கையான விருப்பத்தை அனுசரித்துப் போதிக்கும் பாடல்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சிறுபிள்ளைகட்கு அதிக உணர்ச்சி ததும்பும் பாடல்களைப் போதிக்கலாகாது. எளிய செய்யுட்கள் இயற்றும்படி மாணவர்களைத் தூண்டலாம். சிறந்த செய்யுட் பகுதிகளை அடிக்கடி பாடிக் காட்டலாம். பல செய்யுட்களைத் தொகுத்து வகுப்புக்களில் உபயோகப்படுத்தலாம். செய்யுட்களுக்கேற்ற படங்களை வரையத் தூண்டலாம்.

செய்யுட்பாடப் போதனையில் ஆசிரியர் கவனிக்க வேண்டிய அம்சங்கள்

உரைநடை

தமிழ் மொழியில் பண்டை நூல்களில் உரைநடை வெகு குறைவு; சில ஆண்டுகளாகத் தான் பல தமிழ் அறிஞர்கள் சிறந்த வசன நூல்களை இயற்றியுள்ளனர். அறிவை வளர்த்துக் கொள்ளவும், சொல்லாட்சிப் பெருகவும், சிறந்த கருத்துக்களை எளிதில் உணரவும், தமிழ் மொழியில் தெளிவாகவும் பிழையின்றியும் கோவையாகவும் பேசவும் எழுதவும் உரைநடை பெரிதும் உதவுகின்றது. பாடசாலைகளில் பிற பாடங்

உரை நடையின் தன்மை

களும் தாய்மொழியிலேயே நடப்பதால், உரைநடை மிகவும் அவசியமாகின்றது. தகுந்த உரைநடைப் பகுதிகளின் மூலம் மேலும் மேலும் படிப்பதில் மாணவர்களுக்கு ஆவலை உண்டாக்க வேண்டும்.

உரைநடைப் பகுதிகளின் இலட்சணம்

தாமே படித்துணரக் கூடிய சக்தியை மாணவர்களிடையே உரைநடைப் பகுதிகள் வளர்க்க வேண்டும். சிறந்த இலக்கியங்கள் அனுபவிப்பதற்கு இப்பகுதிகள் சாதகமாயிருக்க வேண்டும். நடை வசீகரமாக இருக்க வேண்டும். கீழ் வகுப்புக்களில் எழுத்துக்கள் பெரியனவாகவும் தெளிவாகவும அமைந்திருக்க வேண்டும். குழந்தைகட்குப் பழக்கமான எளிய சம்பாஷணைகள், சிறு நாடகங்கள் கதைகள், கீழ் வகுப்புக்களுக்கு உரியவை. விருத்தாந்தங்கள், கற்பனைகள், சுயசரிதங்கள், விஞ்ஞானப் பகுதிகள், வாழ்க்கை வரலாறுகள், விவரணங்கள் ஆகியவற்றிலிருந்து திரட்டப்பட்ட ஒரு தொகுப்பை மேல்வகுப்புக்களில் உபயோகிக்கலாம். செய்தித்தாள்களும் பத்திரிகைகளும் வசன பாடத்துக்கு ஏற்றவை. மாணவர்களுடைய ஆவலைத் தூண்டும் நகைச்சுவை எழுப்பக்கூடிய உரைநடைப் பகுதிகள் அவசியமானவை. சம்பூர்ண வாழ்க்கைக்கு நகைச் சுவை அவசியம்; வாழ்க்கைத் துன்பங்களுக்கு நகைச் சுவை ஏற்ற சஞ்சீவியாகும்.

புத்தகங்களின் அமைப்பு

படிக்கும் புத்தகம் மாணவர்களின் வயதுக்கும் அநுபவத்துக்கும் மனவளர்ச்சிக்கும் ஒத்ததாக இருக்க வேண்டும். நடை வசீகரமாக இருக்க வேண்டும். மொழியும் படிப்படியாகக் கடினத்தன்மை பெற்றிருக்க வேண்டும். நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டு பல வர்ணபடங்கள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். பெரிய எழுத்துக்களில் வகுப்புக்குத் தகுந்தபடி தெளிவாக அச்சிடப்பட்டிருப்பதுடன் அமைப்பு வனப்பும் வலுவும் உள்ளதாக இருக்க வேண்டும். நகைச்சுவை,

வீரம், துணிகரம், அன்பு ஆகிய உணர்ச்சிகளை எழுப்பக் கூடிய பகுதிகள் இருக்க வேண்டும்; அவை சிறந்த இலக்கியங்களிலிருந்து தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறிருப்பின் மூல புத்தகங்களைப் படிப்பதில் குழந்தைகட்கு ஆவல் உண்டாகும். பாடசாலையில் வேறு பாடங்களில் அடங்கியுள்ள பொருள்களைப் பற்றிய பகுதிகளும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். கிரகிக்கும் சக்தி பெருகுவதற்கும், மொழிப் பயிற்சிக்கும், சிறந்த காவியங்களைப் படித்து இன்புறுவதற்கும் வகுப்புப் புத்தகம் உதவ வேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் சில புதிய சொற்கள் இருக்க வேண்டும். நடைகள் பலவிதமாக இருக்க வேண்டும். அவை பல சிறந்த ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஆனால் ஆசிரியர் வாசக புத்தகத்தையே பெரிதும் நம்பியிருக்கக் கூடாது. ஆசிரியரே பல உரைநடைப் பகுதிகளைச் சேர்த்துப் போதிக்கலாம்.

உரைநடை கற்பிக்கும் முறை

பாடம் நடத்துவதற்கு முன்னரே, படிக்கப் புகும் பொருளின் சம்பந்தமாக மாணவர்க்கு ஏற்கனவே அனுபவத்தின் வாயிலாகத் தெரிந்துள்ள பல விஷயங்களைப் பற்றிப் பேசியும் படங்களைக் காட்டியும் அவர்களுடைய மனம் புது விஷயங்களைக் கற்பதற்குப் பக்குவப்படுத்தப் படவேண்டும். உரைநடையில் வந்துள்ள புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் சம்பாஷணையில் உபயோகித்து, அவற்றைக் கரும்பலகையில் எழுதி விளக்குவதுடன், திருத்தமான உச்சரிப்பையும் கற்பிக்க வேண்டும். பின்னர், அப்பாடத்தை மௌனமாக மாணவர்கள் வாசிக்கவேண்டும். பாடம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே சில கேள்விகளைக் கரும்பலகையில் எழுதி, குறிக்கப்படும் காலத்துக்குள் பாடத்தை மௌனமாகப் படித்த பின்னர், கேள்விகட்கு விடைகளைக் கண்டறியச் செய்யலாம். மாணவர்களுடைய சுய முயற்சியினால் இது சாத்தியமாகும். பாடத்தில் உள்ள பொருளின் சாராம்சத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறச் செய்யலாம். கதையாக இருப்பின், ஒவ்வொருவரும் ஒரு வாக்கியம் சொல்லிக் கதையை முடிக்கலாம். மௌனமாகப் படிக்கும்

பொழுது தோன்றும் சந்தேகங்களை மாணவர்கள் ஆசிரியரைக் கேட்டு விளக்கிக்கொள்ள வேண்டும். மௌன வாசிப்புக்குப் பின்னர் ஆசிரியர் பாடத்தை மாணவர்களுக்கு ஒரு மாதிரி வாசிப்பாக உரக்க வாசித்துக் காட்ட வேண்டும். பின்பு சில பிள்ளைகளை ஒருவன் பின் ஒருவனைத் தொடர்ந்து படிக்கச் செய்யலாம். மாணவர்கள் வாசிக்கும் பொழுது செய்யும் பிழைகளை அவ்வப் பொழுதே திருத்தம் செய்யாமல், படித்த பின் திருத்த வேண்டும். இதன் பின்னர் மாணவருக்கு விளங்காத முக்கியமான பாஷை நுட்பங்களையும் இலக்கண விசேஷங்களையும் கற்பிக்கலாம். இவை விளக்கப்பட்டாலன்றிக் கருத்துக்கள் தெளிவடையா. பொருள்களையும் படங்களையும் காட்டி, நிதர்சன முறையில் விளக்கலாம்; செயல்கள் மூலமாகவும் உதாரணங்களாலும் விளக்கலாம்; தெரிந்தவற்றைக்கொண்டு தெரியாதவற்றை விளக்க வேண்டும். ஐந்தாம் வகுப்பிலிருந்து மாணவர்கள் அகராதியைப் பார்த்துச் சொற்களின் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும். பின்னர்ப் படித்த பகுதியில் பல கேள்விகளைக் கேட்டு விடைகளைப் பெறவேண்டும். பாடத்தில் வந்துள்ள பொருள்களைச் சுருக்கமாகக் கரும் பலகையில் எழுதிக் காட்டலாம். கற்பித்த புதுச் சொற்களையும் சொற்றொடர்களையும் கரும்பலகையில் எழுதி அறிமுகப் படுத்துவதுடன், பல சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்லுவதற்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். பாடம் முடிந்த பின்னர் அது சம்பந்தமாக எழுத்து வேலை நடத்தவேண்டும்; சம்பாஷணையும் நடித்துக் காட்டலும் நடத்தவாம். மௌன வாசிப்பில் ஏற்பட்டுள்ள திறமையை மாத மொருமுறை பரிசோதனை செய்து கிரகிக்கும் சக்தியையும் வேகத்தையும் மதிப்பிட்டு, தாள்களைத் தயாரித்து, ரேகைப்படங்களின் மூலம் இவற்றின் சம்புந்தத்தை அறிந்துகொள்ளலாம்.

முதலில் பாடத்தை மௌனமாக மாணவர்கள் படிக்க வேண்டும். பின்னர் ஆசிரியர் பாடத்தைப் படித்துக் காட்டவேண்டும். கீழ் வகுப்புக்களில் நடத்தும்

மாதிரியிலேயே கற்பித்தல் போதும். ஆனால் இலக்கண அறிவு அதிகம் தேவையா யிருக்கும்.

மேல் வகுப்புக்களில் உரை நடைப் பாட போதனை

படித்த பொருளைச் சுருக்குதல், ஒரு பிரிவின் உட்கருத்தை எடுத்துச்சொல்லுதல், கதைகளைத் தன்மை நிலையிலும் உரையாடல்களாகவும் எடுத்துச் சொல்லுதல், கதையின் முடிவை மாற்றுதல், கதாபாத்திரங்களின் குண தோஷங்களை ஒப்பிடுதல், படித்த விஷயங்களைப்பற்றிச் சிறு கட்டுரைகள் வரைதல் போன்ற பயிற்சிகளை நடத்த வேண்டும்.

மொழிப் போதனையில் வினவுதல் முக்கியமான கட்டமாகும். ஆசிரியர்கள் கேள்வி கேட்கும் திறமை படைத்தவர்களாக இருக்கவேண்டும். கேள்விகள் கேட்பதன் மூலம் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது.

கற்பித்தலில் வினவுதலின் அவசியம்

படித்த பொருள்களைப் பற்றிச் சிந்திக்கவும், எண்ணங்களைக் கோவைப் படுத்தி ஒழுங்கு செய்யவும் கேள்விகள் உதவுகின்றன. குழந்தைகள், கற்பித்த விஷயங்களை நன்கு அறிந்துகொண்டார்களா என்று நிர்ணயிப்பதற்கும், அவர்கள் அடைந்த திறமையையும் தேர்ச்சியையும் அளப்பதற்கும் கேள்விகள் உதவுகின்றன. கேள்விகள் மாணவர்களை உற்சாகப்படுத்தி, யோசனையைத் தூண்டுகின்றன. புதுப்பாடம் கற்பிக்கும்பொழுதும், முன்னறிவைப் பரிசோதிக்கும்பொழுதும் கேள்விகள் அவசியம்.

கேள்விகள் எளிய நடையில் அமைய வேண்டும்; நேரான கேள்விகளாகவும் இருக்கவேண்டும். குழந்தைகளின் அறிவு நிலைக்குத் தகுந்தவாறு கேள்விகள் அமையவேண்டும். கேள்விகட்கு முழு வாக்கியங்களில் விடையளிக்க மாணவர்களைப் பழக்க

கேள்விகளின் தன்மை

வேண்டும்; ஆம், இல்லை என்ற விடைகள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருந்தா. விடைகள் குழந்தைகட்குத் தெரியாமலிருந்தால், ஆசிரியரே கூறிவிடுதல் நலம்.

கேள்வி கடினமாக இருப்பின், சொற்களை மாற்றித் திரும்பவும் கேட்கலாம். பாடத்தின் ஆரம்பத்தில் கேட்கப்படும் கேள்விகள் புதுப்பாடத்தின் பொருளைக் கிரகிப்பதற்கு உதவியாக இருக்கும். பாடமுடிவில் சோதனைக் கேள்விகள் மாணவர்களின் தேர்ச்சியை அளவிட உதவும். விடையைத் தெரிவிக்கும் பான்மையில் கேள்விகள் அமையக் கூடாது.

கேள்விகளின் அமைப்புக் குழந்தைகளின் கவனத்தை வசிகரிக்கவேண்டும். எல்லாக் குழந்தைகளும் வினாக்களைக் கவனிக்கும் பழக்கத்தை வளர்க்கவேண்டும். ஒரு கேள்வியை வகுப்பு முழுவதற்கும் கேட்க வேண்டும்;

கேள்விகள் கேட்கும் முறை

தனி மாணவனை மட்டும் சுட்டிக்காட்டி அவனைமட்டும் கேட்கக்கூடாது; வகுப்பிலுள்ள மாணவர் யாவரையும் கேட்க வேண்டும்; மாணவர்களின் கவனத்தை இம்முறை இழுக்கும். சில மாணவர்களை மட்டும் வினவுதல் கூடாது; எல்லா மாணவர்களுக்கும் விடையளிப்பதற்குச் சந்தர்ப்பம் உண்டாக்க வேண்டும். வகுப்பறையின் கோடியில் இருக்கும் பிள்ளைகளைக் கவனிக்காமலிருக்கக்கூடாது. குழந்தைகள் ஆசிரியரை வினவுதலும் அவசியம்; ஒருவரை யொருவர் வினவுவதற்கும் அவகாசம் அளிக்கவேண்டும். குழந்தைகளின் வினாக்களை ஆசிரியர் அலட்சியம் செய்யலாகாது.

ஆசிரியருக்கு மாணவரிடமிருந்து விடை வருவிக்கும் திறமை இருக்க வேண்டும். வினாக்களுக்கு விடை சொல்ல மாணவர்கள் தயாரான நிலையில் இருக்க வேண்டும். விடைகளின் பாஷை தெளிவாகவும் திருத்தமாகவும் இருத்தல் அவசியம்.

விடைகளின் தன்மை

ஆசிரியரே விடையை அளித்துவிடக் கூடாது. முழு வாக்கியங்களிலேயே விடைகள் அளிக்கப் பழக்க வேண்டும். குழந்தைகள் அளிக்கும் விடைகளைத் திரும்பவும ஆசிரியர் சொல்லுவது ஒரு கெட்ட பழக்கம்; இதைக் கைவிட வேண்டும்; ஆசிரியரே சதா பேசிக்கொண்டிருப்பது பயனளிக்காது. மாணவர்

கள் எல்லோரும் ஒன்றுகூடி விடையளிப்பதும் பிழையாகும்; விடைதெரியாத மாணவர்களைக் கண்டுகொள்ள முடியாது; கவனக் குறைவு, சோம்பல், ஏமாற்றுதல் போன்ற குறைகள் இம் முறையினால் உண்டாகக்கூடும். எல்லாரும் சேர்ந்து கூச்சலிட்டால் பிற்போக்கான குழந்தைகளைக் கண்டுபிடித்துத் தனியாகக் கவனம் செலுத்த முடியாது; வகுப்பறையில் ஒழுங்கும் அமைதியும் நிலவாது. மாணவர்கள் அளிக்கும் விடைகள் பிழையாக இருப்பின் ஆசிரியர் அவர்களைப் பரிகசித்தலும், கோபித்தலும், இகழ்தலும் கூடாது.

8. இலக்கணம்

இலக்கணம் என்றால் என்ன?

ஒரு மொழியைத் திருத்தமாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் அனுகூலமாக, அம்மொழியின் தன்மைகளையும் இலட்சணங்களையும், விதிவிலக்குகளையும் ஆராய்ந்து உரைக்கும் நூலே அம்மொழியின் இலக்கணமாகும். உரைநடையும் செய்யுளும் இலக்கியம் என்று சொல்லப்படுகின்றன. இலக்கியம் தோன்றிப் பெருகிய பின்னரே, அதை ஆராய்ந்து மொழியின் இலட்சணங்கள் வகுக்கப்பட்டன. நன்னூலில் "இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்" எனக் கூறியிருத்தலைக் காண்க.

மொழிப்பயிற்சியில் இலக்கணம் கற்பிப்பதைப் பற்றி மூன்றுவிதக் கருத்துக்கள் உண்டு. இப்பகுதி மாணவர்க்கு வெறுப்பையும் சலிப்பையும் அளிப்பதால், இதில் கருத்து வேற்றுமைக்கு இடமிருக்கின்றது.

இலக்கணம் கற்பிப்பதில் அபிப்பிராய வேற்றுமைகள்

ஒருசாரார் பாடசாலைகளில் மாணவர்க்கு இலக்கணமே போதிக்கக் கூடாது எனக் கூறுகின்றனர்; பிறர் பேசுவதைக் கேட்பதாலும், சிறந்த நூல்களைப் படிப்பதாலும் மாணவர்கள் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்றுக் கொள்ளுகின்றனர் என்றும், இத்திறமைகளை இலக்

கணப் பயிற்சி உண்டாக்காது என்றும், இலக்கணத்தைப் பாடதிட்டத்தினின்றும் அறவே வெருட்டிவிட வேண்டுமென்றும் இவர்கள் வாதிக்கின்றனர். மற்றொரு சாரார் இலக்கணத்தின் பல பிரிவுகளையும் ஒரு தனிப் பாடமாகவே கற்பித்தாலன்றிப் பிழையின்றித் தமிழில் பேசவும் எழுதவும் இயலாது என்று கூறுகின்றனர். பின்னுமொரு சாரார் ஒரு பாஷையைத் திருத்தமாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் ஓரளவுக்கு இலக்கண அறிவு தேவை யென்றும், அந்த அறிவு அனுபவ முறையில் அடையவேண்டும் என்றும் கருதுகின்றனர். இதுவே, இக்காலத்தில் நடைமுறைக் கொள்கையாக ஆதரவு பெற்றுள்ளது.

தொடக்க நிலை வகுப்புக்களைப் பொறுத்தமட்டில் இலக்கணமே தேவையில்லை என்ற கொள்கை உண்மையாக இருக்கலாம். இலக்கண விதிகளை இவ் வகுப்புக்களில் கற்பிக்கவேண்டிய அவசியமே இல்லை.

ஆரம்ப நிலையில் இலக்கணம்.

பாஷையில் சிறிதளவு தேர்ச்சி ஏற்படுவதற்கு முன்னால் இலக்கணம் கற்பிப்பது வீண். இலக்கியம் கண்ட பின்னரல்லவோ இலக்கணம்? ஆதலின், மொழியில் தேர்ச்சி பெறாதிருக்கும் குழந்தைகட்கு இலக்கண போதனை பயப்படுதென்ன? மொழிப்பயிற்சி ஓரளவுக்கு உண்டாகிய பின்னரே இலக்கணம் போதித்தல் நலம். பாஷையில் துவக்கத்தில் திறமை உண்டாக வேண்டுமானால், பேசுவதிலும் எழுதுவதிலும் திறமை யடைய வேண்டும். தூய்மையான பாஷையைக் கேட்பதாலும் உயர்தரமான நூல்களைப் படிப்பதாலும் குழந்தைகள் பாஷையில் திறமை பெறமுடியும். வாக்கியங்களின் அமைப்பினாலும், ஓசையினாலும் ஒரு வாக்கியம் பிழையா சரியா என்று அறிய முடியும். இலக்கணம் வாசிப்பதால் பாஷையின் நயத்தை உணர முடியாது. ஆனால் இடைநிலையில் ஓரளவுக்கு இலக்கணம் அவசியமே. மொழியில் நல்ல தேர்ச்சி ஆரம்ப நிலையில் ஏற்பட வேண்டுமானால், இலக்கணம் கற்பதைக் காட்டிலும் அதிகமாகப் படிப்பதும் சொல்லக் கேட்பதுமே சிறந்த முறைகளாகும்.

மாணவர்களில் பெரும்பான்மையோருடைய வீடுகளில் பேசப்படும் பாஷை இலக்கண வரம்புக்கு உட்பட்டதல்ல ; வீடுகளில் கொச்சைமொழியே மலிந்திருக்கும். இதைத் தவிர்க்க, இலக்கண போதனை தேவையில்லை. இலக்கணம் கற்பதால் மட்டும் கொச்சை மொழியைத் தவிர்க்க முடியாது. கொச்சை மொழிப் பழக்கத்தை நீக்க வேண்டுமானால், பாடசாலையில் நடைபெறும் வாய்மொழி வேலைகள் மூலமாகவும், பல புத்தகங்களைப் படிப்பதன் மூலமாகவும் அபிவிருத்தி உண்டாக வேண்டும். நல்ல பேச்சுப் பழக்கங்களைக் குழந்தைகள் கையாளும்பொழுது, மொழியின் அமைப்பை அறிந்துகொள்வதற்கு நல்ல அவகாசம் ஏற்படும். பேசுவதில் போதுமான அனுபவம் இருக்குமானால், மொழியின் அமைப்பு நன்கு விளங்கும். முதியவர்கள் தாய் மொழி இலக்கணத்தைத் தனியாகக் கற்கவில்லை ; சொற்களின் ஓசையினாலும் அமைப்பினாலும் பிழைகளை அறிகின்றனர். துவக்க நிலையில் குழந்தைகளின் தேவை இதுவே. பார்த்தும், கேட்டும், திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்றல் துவக்க நிலைக்குமட்டும் பொருந்தும். பல் புத்தகங்களைப் படிப்பதாலும் பாஷையின் நயத்தை உணரக் கூடும். ஒழுங்கான இலக்கண போதனையை ஆரம்ப வகுப்புக்களில் நீக்குவதால், இலாபமும் கவர்ச்சியும் ஏற்படக்கூடிய படிப்பையும் பேச்சையும் எழுத்து வேலையையும் மேற்கொள்ளுகின்றோம். குழந்தைகளுடைய வயதுக்கும் சொல்லகராதிக்கும் தகுந்த நூல்களைப் படிக்க அவகாசம் அளிக்க வேண்டும். இந்நிலையின் உயர்வகுப்பாகிய ஐந்தாம் வகுப்பில் சிறிதளவு கற்கக்கூடிய நிலையை மாணவர்கள் அடைவார்கள். இவ்வகுப்பில் வாக்கிய அமைப்பு, சொற்களின் வகைகள் ஆகியவற்றைக் கற்பித்தல் போதுமானது. ஆனால் இவற்றைத் தனி இலக்கண பாட புத்தகம் வைத்துக் கொண்டு கற்பிக்கக் கூடாது; படிக்கும் பாடங்களை அனுசரித்தே கற்பிக்க வேண்டும். பாடத் திட்டத்தில் மூன்றும் வகுப்பிலும் நான்காம் வகுப்பிலும் பிழையறப்

கொச்சை மொழியைத் தவிர்த்து நல்ல பேச்சுப் பழக்கம் உண்டாக்குதல்

பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேவையான சில இலக்கண விஷயங்களைப் பாட புத்தகங்களைக் கொண்டே கற்பிக்கவேண்டிச் சில பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன; இதன் நோக்கம் இலக்கணம் தனியாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதல்ல.

மேல் வகுப்புக்களில் இலக்கணம்

ஐந்தாம் வகுப்பைவிட்டு வெளிப்பட்டவுடன், மாணவனுக்கு ஓரளவு பாஷைப் பயிற்சி ஏற்பட்டுவிடும். அந்நிலையில் பிழையறப் பேசவும் எழுதவும் சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று உணரக் கூடிய பருவத்தை மாணவர்கள் அடைகின்றனர். சொற்களின் வகைகளையும் அவை செய்யும் வெவ்வேறு வேலைகளையும் பற்றி அறிந்துகொள்கின்றனர். இந்த நிலையில் சிறிது இலக்கணத்தைத் தனியாகக் கற்பிக்க முற்படலாம். சொற்களும் வாக்கியங்களும் உபயோகித்தற்குரிய கருவிகள் என மாணவன் அறிந்து, அவற்றை உபயோகிக்கும் முறையை உணருவதற்கு இலக்கண அறிவு வேண்டும். மேல் வகுப்புக்களில் இலக்கண விதிகளை அறிவதால், நல்ல நடையையும் தெளிவான சொல்வன்மையையும் மாணவர் அடைகின்றனர்.

இலக்கணம் வெறுக்கப்படும் காரணம்

பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாடங்களில் இலக்கண பாடமே பெரிதும் மாணவர்களால் வெறுக்கப்படுகின்றது. அப்பாடத்தில் உண்மையான அருவருப்பும் பயமும் அடைகின்றனர். ஏனெனில், இலக்கணம் போதிக்கப்படும் முறைகள், பிழையான சுவையற்ற முறைகள். மேலும் ஆரம்ப வகுப்புகளிலேயே இலக்கணம் கற்பிப்பதால் வெறுப்பு உண்டாகிறது. தனியாக இலக்கண பாடத்தைக் கற்பித்தல் சுவையற்ற தன்மையுடையது. படிக்கும் பாடங்களுடன இலக்கண பாடத்தை இணைக்காம விருப்பதும் வெறுப்புக்குக் காரணமே. இலக்கண விதிகளை மனப்பாடம் செய்தல், வெறுப்பிற்குப் பின்னுமொரு காரணம். மொழி கற்க இலக்கணம் ஒரு கருவியே என்ற நினைப்பில்

லாமல் இலக்கணமே முக்கியம் எனக் கருதுவது வெறுப்பை உண்டாக்கும்.

இலக்கண நூல்களை இரு வகைகளாக வகுக்கலாம். ஒன்று ஒழுங்கு இலக்கணம் (Formal Grammar); மற்றொன்று பிரயோக இலக்கணம் (Applied Grammar). இவை இரண்டின் பொருளும் ஒன்றுதான்; ஆனால் வகுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படும் முறையில் வித்தியாசம். ஒழுங்கு இலக்கணம் நிகமன முறையில் வகுக்கப்படுவது; பிரயோக இலக்கணம் ஆகமன முறையில் கற்பிக்கப்படுவது. தக்க ரீதியில் தெரிந்த அறிவைக்கொண்டு விளக்கப்படாத முறையில் பல விகுதிகளையும் சூத்திரங்களையும் ஒழுங்காகக் கற்றல், ஒழுங்கு இலக்கணமாகும். இலக்கணம் என்பது பாஷையைப் பிரயோகிப்பதற்கு ஒரு சிறந்த கருவி என்று உணரும் வகையில், மாணவர்கள் படிக்கும் வாசகத்திலிருந்து பல மேற்கோள்களைப் பிரயோகித்துக் கற்பது பிரயோக இலக்கணம். ஒழுங்கு இலக்கணம் வெறுப்பை யளிக்கும்; பிரயோக இலக்கணம் மனத்திற்குகந்தது. இலக்கணம் போதிக்கும் முறைகள் இருவகைப்படும். அவை, நிகமனமுறை (Deductive Method) ஆகமன முறை (Inductive Method) என்பனவாம். மாணவர்க்கு எளிதில் புலப்படும்படியான சில உதாரணங்களை எடுத்துக்காட்டி, அவற்றினின்றும் ஒரு பொது உண்மை அல்லது விதியை மாணவர்களே அனுமானிக்க வைப்பது ஆகமன முறையின் நோக்கமாகும். இலக்கண பாடம் போதிப்பதற்கு இம்முறையே சிறந்தது. பாஷையை ஆராய்ந்து இலக்கண விதிகள் வகுக்கப்பட்டன; இலக்கண விதிகளை முதலில் வகுத்து அவற்றிற்கேற்ப பாஷை உண்டாகவில்லை. பல உதாரணங்களை ஆராய்வதன் மூலம் மாணவர்களுடைய சுயமுயற்சி தூண்டப்படும். மாணவர் சுயமாக ஊகித்தறிவதால் கற்கும் பொருள்கள் மனத்தில் நன்கு வேரூன்றும். முதலில் இலக்கண விதிகளைப் போதித்து, பின்னர் அவற்றிற்கேற்ற உதாரணங்களை உணருவது நிகமன முறை

இலக்கண வகைகளும் இலக்கணம் கற்பிக்கும் முறைகளும்

எனப்படும். ஒரு இலக்கண விதியை முதலில் கற்று, பின்னர் அதன் பொருளையும், அதற்கு உதாரணங்களையும் கற்றல் இம்முறையாகும். இம்முறை பழைய முறை; இலக்கண அறிவைப் பல விதிகளின் வாயிலாக ஒழுங்காகக் கற்பிக்கின்றது. இதில் குழந்தைகளின் மனோபாவத்திற்கும் பற்றுதலுக்கும் இடம் இல்லை. இலக்கண அறிவை மாணவர்கள் படிக்கும் வாசக பாடத்தின் மூலமாக ஆராய்ந்து பிரயோக ரீதியில் போதிப்பது பிரயோக இலக்கணம் எனப்படும். இங்கு உபயோகிக்கும் முறை ஆகமனமுறை; இதில் மாணவர் இலக்கண பாடத்தில் உற்சாகம் கொள்வர்; இலக்கண விதிகளை நன்கு உணருவார்கள்; வாசகத்திலுள்ள வாக்கியங்களின் அமைப்பையும் முறையையும் ஆராய்ந்து அவற்றிலுள்ள ஒழுங்கை அறிந்து, அவ்விதமாகவே எழுதவும் பயிலுவார்கள். உதாரணங்களும் பயிற்சிகளும் வாசக புத்தகத்தையே அனுசரிக்கவேண்டும். அனுபவமுறை இலக்கணம் ஆகமன முறையில் கற்பிக்க வேண்டும்.

இலக்கணம் கற்பிப்பதில் உபயோகிக்க வேண்டிய முறை

இலக்கண போதனையை மாணவர்கள் வாசிக்கும் வாசகபாடத்துடன் இணைத்து அனுபவ ரீதியில் கற்பிக்க வேண்டும். ஒழுங்கான இலக்கண அறிவைப் பல விதிகளின் மூலம் போதித்தலைத் தவிர்த்து, பல உதாரணங்களிலிருந்து இலக்கண விதிகளை ஊகித்துணரும் முறையாகிய ஆகமன முறையைப் பின்பற்றவேண்டும். தர்க்கரீதியில் எழுதப்பட்ட ஒழுங்கு இலக்கணத்தைக் கைவிட்டு, வாசக பாடங்களை உபயோகித்து பிரயோக அறிவை மாணவரிடம் வளர்க்க வேண்டும். சிந்தனையின் மூல அளவுகோல் ஒரு வாக்கியமாகும். ஆகையால், இலக்கண போதனையை வாக்கியங்களைக் கொண்டே தொடங்க வேண்டும். பல வாச்கியங்களை (வாசகத்தில் வந்துள்ளவை), முடிந்த கருத்துக்களை உணர்த்தும் சொற்றொடர்களே வாக்கியங்களென்றும், கருத்து முடியாத சொற்கள் எச்சத்தொடர் எனவும் கற்பிக்கலாம். அதன்பின்னர் சொற்களின் பாகுபாடுகளையும் வேலைகளை

யும் பல உதாரணங்களின் மூலமாகக் கவனித்து, விதிகளை மாணவர்களே வகுக்க வேண்டும். பல விதிகளை மாணவர்களே ஊகித்துக் கண்டுபிடிக்கவேண்டிய முறையில் இலக்கண பாடம் அமைய வேண்டும். ஆகமன முறையைத் தழுவுவதில் ஆசிரியர் பல விஷயங்களைக் கவனிக்க வேண்டும். மாணவர்களின் வாசக புத்தகத்தில் காணப்படும் பல வாக்கியங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றைக் கரும்பலகையில் எழுதி, மாணவர்களை அவற்றைக் கூர்ந்து கவனிக்கும்படி எச்சரிக்க வேண்டும். அவற்றை மாணவர் ஒப்பிட்டுப் பார்த்து வகைப்படுத்தி, ஆராய்ச்சி செய்து தாமாகவே கற்க வேண்டிய பொது விதியை நிர்ணயிக்க வேண்டும். அவ்விதியை மாணவர்களிடமிருந்தே வருவித்த பின்னர், பின்னும் பல உதாரணங்களை அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, ஏற்படுத்திய பல விதி பல பிரயோகங்களிலும், பொருந்தியுள்ளதா என்று அவர்களே பார்க்க வேண்டும். இவ்வாறு கற்ற விதிகளைப் பல சந்தர்ப்பங்களில் பொருத்திக் காட்டிப் பயிற்சியளிக்க வேண்டும். உதாரணங்கள் பல கொடுக்கப்படவேண்டும்; கற்க வேண்டிய விதியை ஆசிரியரே கூறிவிடக் கூடாது. மாணவர்களே கண்டுபிடிக்க வேண்டும். தொடக்க நிலையிலும் இடை நிலையிலுமே இம்முறை தேவையானது. உயர்நிலையில், மாணவர் மனப்பக்குவம் அடைந்துள்ளோராதலின், விதிகளை ஒழுங்கு முறையில் நேராகவே போதிக்கலாம். இம்முறையில், ஓர் இலக்கண விதியை நன்கு கற்ற பின்னர், அவ்விதியைப் பின்னும் பல உதாரணங்களில் பொருத்திக் காட்டி அதன் உண்மையை அறியவேண்டும். போதிக்கும் பகுதிகளைத் தெளிவாகவும் விளங்கும்படியும் கற்பிக்க வேண்டும். அதிகமான இலக்கணப் பகுதிகள் போதிக்கலாகாது; சிறு பகுதிகளை விளக்கமாகக் கற்பித்தல் அவசியம். இவ்வாறு கற்பித்தால் மட்டும் ஸ்திரமான அஸ்திவாரம் ஏற்படும்.

தமிழ் இலக்கணத்தில் நல்ல தேர்ச்சி ஏற்பட்டால், பிறமொழி இலக்கணம் பயிலுவதற்குச் சுலபமாக இருக்கும். தமிழ் இலக்கணம் எங்கெங்கே ஆங்கில இலக்க

ணத்துடன் ஒத்திருக்கிறது என்று நடுத்தர, உயர்நிலை வகுப்புக்களில் எடுத்துக் காட்டுதல் நலம். இந்த ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றிய அறிவினால், தமிழ் இலக்கண அறிவு உறுதிப்படும்; ஆங்கில இலக்கண அறிவும் விரிவடையும். இவ்வகைப் பயிற்சி ஏற்பட்டால், இந்த இரு மொழிகளின் நடைகளில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை உணர முடியும்.

தமிழ் இலக்கணத்தை ஆங்கில இலக்கணத்துடன் ஒப்பிடுதல்

---

9 எழுத்து

மொழிப் பயிற்சியில் முக்கியமான அம்சம் எழுத்துப் பயிற்சியே ஆகும். ஒருவருடன் நேருக்கு நேர் நமது எண்ணங்களைப் பேச்சின் மூலம் வெளியிடுகிறோம்; அவ்வாறு வெளியிடக் கூடாத நிலைமையில் நமது கருத்துக்களைப் பிறருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கிறோம். பிறருக்கு நாம் கடிதங்கள் எழுதவும் கலைச் செல்வங்களாகிய நூல்களை இயற்றவும் எழுத்து அவசியமாகின்றது. அறிஞர்களுடைய எண்ணங்களும் ஆராய்ச்சி முடிவுகளும் வெளியிடுவதற்கு எழுத்து உதவுகின்றது. எழுத்துத் தோன்றாதிருப்பின் மானிட வாழ்க்கையே சுவையற்றுப் போகும். இந்தப் புது யுகத்தில் எழுத்தே பெரிதும் போற்றப் படுகின்றது. செய்தித் தாள்களை நடத்துகிறவர்கள் ஒரு நாட்டின் மூன்றாவது ஆஸ்தி என்று தற்காலம் சொல்லப்படுகின்றது. எல்லாவகைப் பிரசாரங்களும் எழுத்துமூலம் வன்மை பெறுகின்றன. ஆகையால், வாசிப்பைப் போலவே எழுத்தும் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத கருவியாகும்.

எழுத்துப் பயிற்சியின் அவசியம்

மானிட வாழ்க்கையின் ஆரம்பத்தில் பேச்சு மொழியே தோன்றியது. பின்னர்ப் பேசப்படும் சொற்


களுக்குப் பதிலாகச் சித்திரங்கள் எழுதி, உள்ளக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. பின்னர் சொற்களில் உள்ள ஒலிகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு, ஒலி வேற்றுமைகள் கண்டு கொள்ளப்பட்டன. அதன் பின்பு, இத் தனி ஒலிகளுக்கு வரிவடிவங்கள் கொடுக்கப்பட்டன; இந்த வரிவடிவங்களே எழுத்துக்களாகும். இதிலிருந்து, மொழி தோன்றிய பின்னரே எழுத்துத் தோன்றியது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆகையால், மொழிப் பயிற்சி முறையில், சிறிதளவு வாசிக்கப் பழக்கம் ஏற்பட்ட பிறகே எழுத்துக்களை எழுதக் குழந்தைகட்குக் கற்பித்தல் நலம் எனபது புலனுகினறது. எழுத்துக்களை எழுதக் கற்பிக்கும் காலத்தை நிர்ணயிப்பதற்கு இந்த உண்மை உபயோகப்படும்.

எழுத்துக்களின் உற்பத்தி வரலாறு

பண்டை முறையில் மொழிப் பயிற்சியில் முதலில் குழந்தைகட்கு எழுத்துக்களை எழுதக் கற்பித்தல் முதல் நிலையாகும்; அதிலும் எழுத்துக்களை வரிசைக் கிரமமாகக் கற்பித்து வந்தனர்; கற்ற எழுத்துக்களைக் கூட்டி வாசித்தலில் பின்னர்ப் பழக்கம் அளிக்கப்பட்டது. இம்முறையில் சுவையும் விருப்பமும் ஏற்படாது; படிப்பில் வெறுப்பு ஏற்படும். நவீன முறைகளில், பேச்சுப் பழக்கம் முதலில் குழந்தைகட்கு அளிக்கப்படுகிறது. எழுத்துக்களைக் கற்பிப்பதற்கு முன்னுல், எழுதுவதற்கு அவசியமான கருவிகளை உபயோகிப்பதில் குழந்தைகட்குத் திறமை ஏற்பட்டிருக்கிறதா என்று அறிந்துகொள்ள வேண்டும்; எழுதுவதற்குத் தேவையான ஆயுதங்கள் புஜங்களும் கைகளிலுள்ள தசைகளுமாகும். குழந்தைகள் பாடசாலைக்கு வரும் பொழுதே எழுதுவதற்குத் தயாராக வருகிருர்கள் என்று எண்ணுவது பிழை. குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்கு முன்னரே அவர்களுடைய மனத்திற்கும் கைத்தசைகளுக்கும் இயற்கையான இணைப்பு உண்டாகி யிருக்கும்; இந்தச் சம்பந்தம் மிகக் குறைவாக அந்த நிலையில் காணப்

எழுதும் பருவம்

படும். இந்தச் சம்பந்தம் அதிகரித்தால் குழந்தை எழுதுவதற்குத் தயாரான நிலையில் இருப்பான். பலவகையான 'கிண்டர் கார்டன்' பயிற்சிகளின் மூலம் இந்த இணைப்பு பலம் பெறும். பல பொருள்களைத் தூக்கி வைப்பதனாலும், அவற்றைப் பிரித்து ஒழுங்காக அடுக்கி வைப்பதாலும், பல கட்டைகளை அடுக்குவதாலும், ஆரம்ப நிலையில் இந்த இணைப்புக்களைப் பெருக்கக்கூடும். இவ்வகைப் பயிற்சிகள் மூலமாகத் தசை நார்கள் பலப்பட்டு குழந்தை எழுதுவதற்குத் தயாராகிறான். தசைகளையும் தசை நார்களையும் அடக்கித் தேவையான மார்க்கங்களில் அவற்றின் போக்கைச் செலுத்தத் திறமை உண்டாகும் வரையில் எழுத்துக்களை எழுதக் கற்பிக்கக் கூடாது. குழந்தைகள் யாவரும் ஒரே வயதில் எழுதும் பருவத்தை யடையமாட்டார்கள்; எழுதுவதற்குத் தகுந்த நிலைமை வெவ்வேறு காலத்தில் அவர்கள் அடைவார்கள். ஒரு குழந்தைக்கு எழுத்துக்கள் எழுதக் கற்பிப்பதற்குமுன், அவன் எழுதும் பருவம் அடைந்திருக்கிறானென்று ஆசிரியர் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். எழுதும் பாவத்தை அடையாத குழந்தையை எழுதும்படி நிர்ப்பந்தித்தால், பள்ளியையும் பள்ளிக்கூட வேலைகளையும் அவன் வெறுக்கத் தொடங்குவான். கீழே காணப்படும் உருவங்களைப் பார்த்துக் குழந்தை நன்றாகக் கையை வீசி எழுதச் செய்யவேண்டும்; எழுதி முடிக்கக் காலக் குறிப்புத் தேவையில்லை. இவற்றில் ஐந்து உருவங்களைக் குழந்தை திருப்திகரமாக எழுதிவிட்டால், அக்குழந்தை எழுதுவதற்குத் தயார் என்றும், எழுதும் பருவத்தை யடைந்தான் என்று கருதலாம்; மீதியுள்ள இரண்டு உருவங்களையும் எழுதுவதற்கும் தயாராக வேண்டும்.



சிறு குழந்தைகளை ஆசிரியர் எழுதிக் கொடுத்த எழுத்துக்களின்மேல் பன்முறை எழுதும்படி சொல்வது வெறுப்பை உண்டாக்கக் கூடிய முறை. இதனால்

எழுத்துக்கள் எழுதுவதில் பயிற்சி அளிக்கும்முறை

கால விரயம் உண்டாகுமே யல்லாமல் விரும்பத்தக்க பலன் கிடைக்காது. குழந்தைகளுக்குத் தங்களுடைய தசைகளை உபயோகிக்கும் பருவம் வரும் வரையில், வாசிப்பு, பேச்சு, விளையாட்டு, கை வீசிப் பல உருவங்களை வரைதல் ஆகிய வேலைகளைக் கொடுக்க வேண்டும். கரும்பலகையில் சாக் கட்டியினால் எழுதுவது சிறந்த பயிற்சி. முதல் வகுப்பில் சுவர்களின் கீழ்ப்பகுதி கரும்பலகைகளாக இருப்பின், குழந்தைகள் தங்களுடைய மனத்திற்குத் தோன்றும் உருவங்களையும் பார்க்கும் படங்களையும் வரைவதற்கு அனுகூலமாயிருக்கும். கைவிரல்களையும் தசைகளையும் அடக்கி இயக்கவும், எழுதும் கருவிகளைப் பிடிக்கவும் பழக்கப்பட்ட பின்னரே எழுத்துக்களை எழுத ஆரம்பிக்க வேண்டும்.

தொடக்க நிலையில் எழுத்து

குழந்தைகள் எழுதும் பருவத்தை அடைந்ததும், அவர்களுடைய கண்களில் படும் சொற்கள் யாவற்றையும் பார்த்து எழுதுவதற்கு ஆவல் கொள்ளுகின்றனர். வாசித்த சொற்களை எழுதுவதற்கு அவர்களுக்கு ஆசை உண்டாகும். ஆனால் சொற்களைப் பார்த்துக் கரும்பலகையில் எழுதத் தொடங்குமுன், அவ்வெழுத்துக்களின் அமைப்பு மனத்தில் பதிந்திருக்கும். இன்னும் ஸ்திரப்படுவதற்காகக் குச்சிகள், கொட்டைகள், வளையல்கள் ஆகிய பொருள்களை உபயோகித்து அச்சொற்களை அமைக்க ஊக்கலாம். மணலில் குச்சிகளைக்கொண்டு எழுதப் பழக்கலாம். இதன் பிறகு கிரமமான எழுத்துப் பயிற்சி துவக்க வேண்டும். துவக்கத்தில் கற்பலகைகளில் எழுதும்போது எழுத்துக்களின் அமைப்புச் சரியாக இருக்காது. எந்தச் சொல்லை முதலில் பார்த்து எழுதும்படி சொல்ல வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை உண்டு. செங்குத்துக் கோடுகளும் படுக்கைக் கோடுகளும் உள்ள எழுத்துக்களைக்கொண்ட சொற்களை எழுதுவது எளிது என்ற எண்ணம் இன்னும் ஆசிரியர்களிடம் இருந்து வருகின்றது. அதனால்

டப்பா; டங்கா; பாப்பா, படம், பட்டம் என்ற சொற்களை எழுதுவதற்குத் துவக்கத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இந்த வாதம் உண்மையல்ல. விரல்களையும் தசைகளையும் பல பயிற்சிகளின் மூலம் கண்களுடனும் மனத்துடனும் இணைத்து எழுதும் பருவம் ஏற்பட்ட பின்னர், எந்த எழுத்தையும் பார்த்து எழுதுவதற்கு மாணவர்களுக்குக் கஷ்டம் இராது. மாணவர், செங்குத்துக் கோடுகளையும் படுக்கைக் கோடுகளையும், நல்ல பயிற்சி யடைந்த பின்னரே வரைய முடியும்; ஆனால், இயற்கையாகவே வளைவு கோடுகள் வரைவதில் குழந்தைகளுக்குப் பிரியம். ஆகையால் எழுதுவதற்கு ஒரு தனிப்பட்ட வரிசையைப் பின்பற்றத் தேவையில்லை. எழுத்துக்களின் அமைப்பில் பிழைகள் ஏற்பட்டால், குழந்தைகளை அதைரியப்படுத்தக் கூடாது. படங்களின் கீழ் எழுதப்பட்டுள்ள சொற்களையும், மின்னட்டைகளில் காணப்படும் சொற்களையும் முழுச் சொற்களாகவே குழந்தைகள் எழுதப் பழக வேண்டும். சிறு சிறு சொற்கள் எழுதுவதிலிருந்து வாக்கியங்கள் எழுதப் பழகலாம். பின்னர்ச் சிறு குழந்தைப் பாடங்களைப் பார்த்து எழுதுவதில் பயிற்சி கொடுக்கலாம். சொற்களையும் சிறு வாக்கியங்களையும் பார்த்தெழுதுவதில் திறமை அடைந்த பின்னர், பார்த்துப் பார்த்து எழுதுவதில் பயிற்சியளிக்க வேண்டும்; எழுதப் பழகுவதற்கு இதுவே சிறந்த வழி. ஆசிரியர் எழுதும் முறையைப் பார்த்துக் குழந்தைகளும் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். எல்லாக் குழந்தைகளும் பார்க்கும்படி கரும்பலகைக்கு முன்னால் நின்று ஆசிரியர் எழுதிக் காட்ட வேண்டும். அவருடைய கைகள் செல்லும் போக்கைப் பார்த்து, குழந்தைகளும் எழுதுவார்கள். காப்பிப் புத்தகங்களைப் பார்த்து எழுதுவதைக் காட்டிலும் இம்முறை சிலாக்கியமானது. ஆகவே ஆசிரியருடைய எழுத்து நன்றாக இருக்க வேண்டும்.

குழந்தைகளின் கையெழுத்து நன்கு கவனிக்கப்பட வேண்டும். கல்வியில் நன்கு பயின்ற பல பெரியார்கள் கூடத் தம்முடைய கையெழுத்தின் திருத்தமின்மை

எழுத்துக்களின் உருவ அமைப்பு

யைக் கண்டு குறைப்படுகிருர்கள்; கையெழுத்து இளமையில் திருந்தாததே இதற்குக் காரணம். இக்காலத்தில் பலர் மிகவும் விரைவாக எழுத வேண்டி யிருப்பதால், அழகும் தெளிவும் கவனிக்கப்படுவதில்லை. ஆனல் அழகான கையெழுத்து நல்ல கல்விப் பயிற்சிக்கு ஓர் அறிகுறி. முத்துப் போன்ற எழுத்துக்களை யாரும் விரும்புவர்; சிறந்த மனப் பண்பாட்டை அவை எடுத்துக் காட்டும். நல்ல கையெழுத்து மூன்று அம்சங்களையுடையது: தெளிவு, அழகும், அளவும், விரைவு என. எழுத்துக்களைப் பிறர் படித்துப் பொருளுணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம். ஆகையால் பிறருக்கு விளங்கும்படித் தெளிவாக எழுதுவதே முதலில் கவனிக்க வேண்டும். தமிழில் எழுத்துக்களைத் தனித்தனியாக எழுதிஞல்தான் அவை விளக்கமாகவும் தெளிவாகவும் இருக்கும்; கோவையாகச் சங்கிலிபோல் எழுதுவது தமிழுக்குப் பொருத்த மற்றது. சங்கிலித் தொடர் எழுத்தால் விரைவும் காலக்குறைவும் ஏற்படுமாஞலும், தெளிவு குறையும். எழுத்துக்கள் தெளிவாக இருக்கவேண்டுமாஞல் அவைகட்கு நடுவே இடம் விட வேண்டும்; இரு சொற்களுக்கு மத்தியிலும் சிறிது அதிகமாகவே இடம் விட வேண்டும். எழுத்துக்கள் முத்துப்போன் றிருக்கவேண்டும்; விரைவு வேண்டும் என்று உருவத்தைக் குலைக்கக் கூடாது. புள்ளிகளையும் வளைவுகளையும் நன்கு கவனித்துத் தெளிவாக எழுத வேண்டும். வரிகளுக்கு மத்தியிலும் வாக்கியங்களின் இறுதியிலும் போதிய இடைவெளி விட வேண்டும். தமிழ் எழுத்துக்களில் தெளிவு என்ற அம்சமே முக்கியமானது. வாழ்க்கையின் குறுகிய காலத்தைக் கருதி விரைவாக எழுதுவது அவசியம் என்று கருதுவோர் பலர். இது உண்மையே; ஆஞலும் விரைவு தேவை என்பதற்காகத் தெளிவைப் பறிகொடுத்தலாகாது. ஒரு கால அளவுக்குள் மாணவர்கள் தெளிவாகவும் விரைவாகவும் எத்தனை சொற்கள் எழுதுகிருர்களென்று சோதித்து, ஒரு நிமிடத்தில் எழுதும்படியான சொற்களின் எண்ணிக்கையைக் கணக்கிடலாம். அடிக்கடி இவ்வகைச் சோதனைகள்

வைத்தால், விரைவாகவும் தெளிவாகவும் எழுதுவதில் திறமை உண்டாகும். எழுத்துக்கள் தெளிவாகவும் விரைவாகவும் அமைவது மட்டும் போதாது; அழகு பொருந்தியவைகளாகவும் இருக்க வேண்டும். ஆனல் வேகமும் தெளிவும் இன்றி அழகுமட்டும் போதாது. எழுத்துக்களின் பல பாகங்களின் அளவு சரியாக இருந்தால் மட்டும் அழகு தோன்றும். வரிகள் கோணமலும் எழுத்துக்கள் செங்குத்தாகவும் இருக்க வேண்டும். ஆனல் எழுத்துக்களின் அழகுக்கு மட்டும் காலவிரயம் செய்யக் கூடாது. காப்பி எழுதும் நேரத்தில் மட்டும் அழகுக்கு அதிகமான கவனம் செலுத்துகின்றேம்; மற்ற நேரங்களில் கையெழுத்தின் ஒழுங்கைக் கவனிப்பதில்லை யாதலால் வாழ்க்கையிலும் அவ்வாறே நிலைக்கின்றது. எல்லா எழுத்து வேலைகளிலும் தெளிவும், அளவும், அழகும், விரைவும் கொண்ட எழுத்துக்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

மணலில் கைவிரல்களால் எழுதுவது ஒரு அருவருப்பான பழக்கம். மணல் தினந்தோறும் புதுப்பிக்கப்பட்டால் ஒரு வேளை அருவருப்பு நீங்கும். அழுக்கு மணலில் எழுதுவதால், தேகத்தில் அசுத்தம் பரவும். தனிப்பட்ட மரத்தட்டுகளில் மணலைப் பரப்பி, அவற்றில் குச்சிகளைக் கொண்டு எழுதுவது சிலாக்கியமானது; ஆனல் புது மணல் அடிக்கடி நிரப்ப வேண்டும். அதன் பின்னர்ச் சுவர்களில் அமைத்த கரும்பலகைகளில் வெள்ளைச் சாக்கட்டியினல் எழுதுவது நலம். இதற்கு அப்பால் பலகைகளில் பலப்பங்களினல் எழுதப் பழகவேண்டும். இதற்கடுத்த நிலை காகிதத்தில் பென்சில்களால் எழுதுவதாகும். பென்சில்களை உபயோகித்துக் காகிதங்களில் எழுதுவதில் நல்ல பயிற்சி ஏற்படும் வரையில் மையை உபயோகிக்கக் கூடாது. கற்பலகையிலும் காகிதத்திலும் எழுதத் தொடங்கும் பொழுது மூன்று கோடுகளுக்கிடையே எழுதப் பழக வேண்டும்.

எழுதும் கருவிகள்-மை உபயோகிக்கும் நிலை

குழந்தைகள் எழுதும்பொழுது உடலைப் பலவிதங்களாகக் கோணிக்கொண்டு உட்காருவது கூடாது.

ஆரம்பத்திலேயே இந்தத் துர்ப்பழக்கம் திருந்தாவிடில், உடல் ஸ்திரமான விகாரத் தன்மையை அடையக்கூடும்.

எழுதும்போது உடல் நிலை

ஆகையால் மாணவர்கள் நேராக உட்காரவேண்டும்; நாக்கை நீட்டக் கூடாது; வாய் கோணல் கூடாது. சுகமான நிலையில் நேராக உட்காரவேண்டும். எழுதுகோலைக் கெட்டியாகவும் மிகச் சமீபத்திலும் பிடித்துக்கொள்ளக்கூடாது. சாய்வு மேஜையின்மேல் வைத்து எழுதப் பழகுவது நல்லது.

பிறர் சொல்வதைக் கேட்டு, பார்க்காமல் எழுதுவதே சொல்வதெழுதுதல் ஆகும். பார்க்காமல் பிழையின்றி எழுத வேண்டுமானால், சொற்களின் சரியான உச்சரிப்புத் தெரிய வேண்டியது அவசியம்;

சொல்வ-தெழுதுதல்

உச்சரிப்புக்களை மாணவன் ஊன்றிக் கவனித்திருக்கவேண்டும்; பன்முறை அவைகளைப் பார்த்துப் பார்த்து எழுதியிருக்கவேண்டும். பிழையாக மொழிவதனால், எழுதுவதில் பிழைகள் மலிந்திருக்கும். முதல் வகுப்பில் பார்த்தெழுதும் பழக்கமே போதுமானது; சொல்வதெழுதுதல் தேவையில்லை. சோதனைக்காகக் கூடச் சொல்வதெழுதுதல் தேவையில்லை. அடிக்கடி பார்த்து எழுதுவதால், பிழையின்றி எழுதுவதில் பயிற்சி உண்டாகின்றது. நல்ல உச்சரிப்பினாலும் எழுத்துப் பிழைகள் குறையும். கடினமான சொற்களை ஊன்றிக் கவனிப்பதாலும் பிழைகள் குறையும். மேல் வகுப்புக்களில் சொல்வதெழுதுதலை மாணவர் எழுதப் புகுமுன், எழுதவேண்டிய பகுதியை அவர்கள் நன்கு பரிசீலனை செய்யும்படி விட்டுவிட வேண்டும். முதலில் அவர்களுக்கு நல்ல உச்சரிப்புடன் ஆசிரியர் படித்துக் காட்ட வேண்டும்; அதை மாணவர் ஊன்றிக் கவனிக்க வேண்டும். அறிமுகமில்லாத ஒரு பாடப் பகுதியை எடுத்து எழுதச் சொல்வது பிழையாகும்.

10. கட்டுரை

மொழிப் பயிற்சியில் எழுத்து வேலையின் நோக்கங்கள்

திருத்தமாகப் பார்த்தெழுதவும் சொல்வதெழுதவும் கற்ற மாணவர்கள், சுயமான எழுத்துப் பயிற்சிகளை மேற்கொள்வதற்குத் தகுந்தவர்களாவார்கள். தாய் மொழி மொழியில் சுயமாகவும் திருத்தமாகவும் சுலபமாகவும் எழுதப் போதிய பயிற்சி அளிப்பது அவசியம். இதுவே கட்டுரைப் பயிற்சி எனப்படும். துவக்கத்திலேயே பெரிய பொருளைப்பற்றிக்கட்டுரை எழுதுவது அசாத்தியம். மொழிப் பயிற்சியினால் ஏற்பட்ட சொல்லாட்சியை உபயோகப்படுத்தி, சுலபமான நடையில் எழுதப் பழக வேண்டும். மாணவர்க்குத் தோன்றும் உள்ளக் கருத்துக்களை விளக்கமாக எடுத்துச் சொல்லவேண்டுமானால், கற்ற சொற்களை உபயோகிக்க வேண்டும். மனத்தில் தோன்றும் எண்ணங்களை வாய்மொழியாகச் சொல்லவும், எழுதவும் முதலில் பயிற்சி அளிப்பது ஆசிரியருடைய வேலையாகும். பாஷையைப் பயன்படுத்துவதில் ஊக்கம் காட்டும் மாணவர்களை ஆசிரியர் பின்னும் ஊக்க வேண்டும். கற்பனா சக்தியை உபயோகிக்கவும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். எண்ணங்களை ஒழுங்குபடுத்தி, எளிய நடையில், சொல்நயம் பொருள்நயம் தோன்ற, கோவையாக எழுதப் பயிலுவதே கட்டுரைப் பயிற்சியாகும்.

கட்டுரை வகைகள்

ஒரு பொருளைப் பற்றிய கருத்துக்களை ஒழுங்குபடுத்திப் பேச்சு மூலமாக வெளியிடுவது வாய் மொழிக் கட்டுரையாகும்; அதையே எழுத்து வாயிலாக வெளியிடுவது எழுத்துக் கட்டுரையாகும். எழுத்துக் கட்டுரைக்கு முன்னதாகத் தேவையான பூர்வாங்க வேலையை வாய்மொழிக் கட்டுரை செய்யும். இவ்விருவிதக் கட்டுரைகளிலும் மாணவர்க்குப் போதிய பயிற்சி அளிக்க வேண்டும். துவக்க வகுப்புக்களில் வாய்

மொழிக் கட்டுரைகளே பெரிதும் அவசிய மானவை; மேல் வகுப்புக்களில் எழுத்துக் கட்டுரைகள் அதிகரிக்கும்.

பேச்சு நடையும் எழுத்து நடையும்

இவை இரண்டுக்கும் வித்தியாசங்கள் உண்டு என்பதை ஆசிரியர் உணர வேண்டும். பேச்சு நடை முழு வாக்கியங்களாக இருக்க வேண்டும் என்பதில்லை; கருத்தைத் தெரிவிக்கச் சில சொற்களை மட்டும் சொல்லலாம்; பல சொற்கள் சொல்லாமலே சொல்லக்கூடும்; பேச்சில் கட்டுப்பாடு இராது; நடை இயல்பாக இருக்கும்; பேசும்பொழுது பல அபிநயங்கள் மூலம் உட்கருத்தை விளக்கக் கூடும். ஆனால் எழுத்து நடையில் ஒழுங்கும் கட்டுப் பாடும் தேவை; நடை இலக்கண வரம்புக்குள் இருக்க வேண்டும்; கருத்துக்களை ஓர் ஒழுங்கில் தொடர்ச்சியாக வெளிப்படுத்த வேண்டும்; வழக்கில் இராத சொற்களையும் பிரயோகிக்கலாம்; வாக்கியங்களின் அமைப்பும் ஒழுங்கும் இலக்கணப் பிழைகளின்றி இருக்க வேண்டும். பேச்சு நடை எழுத்து நடையைக் காட்டிலும் தாழ்ந்தது என்று சொல்வது பிழையாகும். பேச்சு மொழியில் இயற்கைக்கு மாறுபடாத உயிரும் உணர்ச்சியும் காணப்படும்; ஆகவே எழுத்து நடையிலும் இந்த அம்சம் காணப்பட வேண்டுமென்றும், கற்றோர்க்கு மட்டும் எழுத்து நடை பயன்பட வேண்டும் என்று இராமல் மற்றோரும் இரசிக்கும் தன்மையில் பேச்சு நடையைத் தழுவியே இருக்க வேண்டும் என்றும் தற்காலத் தமிழறிஞர் பலர் கருதுகின்றனர். இவ்வகை நடையிலேயே துவக்க நிலையில் மாணவர்க்குப் பயிற்சி யளிக்கவேண்டும். குழந்தைகளின் இயற்கையான பேச்சு வன்மையை உபயோகித்தே எழுத்துநடை அமைய வேண்டும்.

எழுத்து நடை இயற்கையாக இருக்க வேண்டும்; சொல் வன்மை சுயமானதாக இருக்க வேண்டும். எழுத ஆரம்பித்ததிலிருந்தே பிற நடைகளைத் தழுவும் வழக்

கத்தை நீக்கி, சொந்த நடையை ஏற்படுத்திக்கொள்ள முயல வேண்டும். மேல் வகுப்புக்களில் சுயமான சொல்வன்மையைக் கையாள வேண்டும். பல நூல்களைப் படிப்பதால் சிறந்த நடை உண்டாகக் கூடும்;

சொந்த நடையும் சுய அனுபவமும்

ஆயினும் அந்த நடைகளில் காணப்படும் உபாயங்களை நீக்க வேண்டும். சுய அனுபவத்தின் பேரில் ஒவ்வொருவரும் சொந்த நடை ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும். கருத்துக்களைக் கபடமில்லாமல் வெளிப்படுத்துவதில் பழக்கம் தேவை. குழந்தைகள் தங்களுடைய அனுபவங்களைப் பற்றிப் பேசவும் எழுதவும் உற்சாகம் கொள்வர்; அந்த உற்சாகத்தைப் பயன்படுத்திக் கட்டுரைப் பயிற்சி அளிக்கலாம்.

எழுத்துக் கட்டுரையின் வாயிலாக எண்ணங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம். உள்ளத்தில் தோன்றும் பல கருத்துக்களைக் குழப்பமின்றி ஒழுங்குபடுத்தி எழுதுவதற்குப் பயிற்சி அவசியம்; வாய்மொழியில் சொல்லுவதற்கும் இவ்வகைப் பயிற்சி அவசியமானது. கண்களால் காணும் பொருள்களையும் புலன்களால் அனுபவிக்கும் விஷயங்களையும் நன்றாக ஊன்றிக் கவனித்துத் திருத்தமாக எண்ணங்களை வெளிப்படுத்துவதில் பயிற்சி வேண்டும். படங்களை ஊன்றிக் கவனித்து அவற்றில் காணப்படும் சம்பவங்களைப் பற்றி வாய்மொழியாக விளக்குவதால் எண்ணங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளக்கூடும்.

எண்ணங்களின் ஒழுங்கும் உற்று நோக்குதலும்

கீழ் வகுப்புக்களில் செய்யும் எழுத்துப் பயிற்சி சொற்றொடராக்கம் எனப்பெறும். இரண்டொரு கேள்விகட்கு முழு வாக்கியங்களில் விடை எழுதுவதே ஆரம்பப் பயிற்சியாகும். பின்னர் ஒரு பொருளையோ அல்லது சம்பவத்தைப் பற்றியோ தொடர்ச்சியாகச் சில வாக்கியங்களில் எழுதப் பழகலாம். வாக்கியங்களில் சில இடங்களைக் காலியாக வைத்து, அவ்விடங்களில் பொருத்தமான சொற்களை நிரப்புதல், படங்களை

கீழ்வகுப்புக்களில் எழுத்துவேலை

விளக்கும் கேள்விகட்கு விடையளித்தல், வாக்கியங்களை இணைத்தல், கற்ற சொற்களையும் சொற்றொடர்களையும் சொந்த வாக்கியங்களில் அமைத்தல், சிதைந்துள்ள வாக்கியங்களைச் சரியாக்குதல், இலக்கண சம்பந்தமான பயிற்சிகள் யாவும் சொற்றொடராக்கப் பயிற்சிகளாகும்.

சொற்றொடராக்கப் பயிற்சிகட்குப் பின்னர் தினசரி வாழ்க்கையில் தேவையான பொருள்களைப்பற்றிச் சிறு கட்டுரைகள் வரையக் கற்பிக்கலாம். (உ-ம்) புஷ்பம்,

தொடர்ச்சியான எழுத்து வேலை

தென்னை, புஸ்தகம், பேனா, சுய அனுபவங்கள், சிறு சம்பவங்கள் அடங்கிய கதைகள், பாடங்களின் சுருக்கம் ஆகியவற்றையும் எழுதக் கற்பிக்கலாம். ஒரு மழை நாள் அனுபவம், படக்காட்சி, பொருட்காட்சிச்சாலை, சிறு பிரயாணம் போன்ற தலைப்புக்கள் இங்கிலையில் எழுதக்கூடியவை. ஐந்தாம் வகுப்பில் சிறு கதைகளும், கற்பனைக் கட்டுரைகளும் எழுதலாம். ஆசிரியரைப் போன்றும், பெற்றோரைப் போன்றும், மிருகங்களைப் போன்றும், ஒரு தொழிலாளியைப் போன்றும் பாவித்துத் தன்மை நிலையில் கட்டுரைகள் எழுதுவது சிறந்த பழக்கம். குறித்த காலத்திற்குள் குழந்தைகளுக்குப் பிரியமான ஒரு பொருளைப்பற்றித் தொடர்ச்சியாகக் கட்டுரை எழுதுவதில் பயிற்சி கொடுக்க வேண்டும்.

மேல் வகுப்புக்களில் பலவகைக் கட்டுரைகளை எழுதச் செய்யலாம். இவ்வகைகள் முதலாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளன. கட்டுரைத் தலைப்புக்கள் குழந்தைகளின் உள்ளங்களை வசீகரிக்கக் கூடியனவாக இருக்க

கட்டுரைத் தலைப்புகள்

வேண்டும்; மாணவர் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களாக இருத்தல் நலம். சில மாதிரிக் கட்டுரைத் தலைப்புக்கள்—பாவனைக் கதைகள், கற்பனைக் கட்டுரைகள், பிறநாட்டு மக்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு,

யாத்திரைகள், படித்த புத்தகங்களின் விமர்சனங்கள், நடைமுறைச் சம்பவங்கள், சுயசரிதைகள், விளையாட்டுக்களை விவரித்தல், கற்பனை உரையாடல்கள். பாடசாலைக் கென்றே பிரத்தியேகமான ஒரு கையெழுத்துப் பத்திரிகை ஏற்படுத்தி, மாணவர்களை விஷயதானம் செய்யும்படி தூண்டலாம்.

கட்டுரைகள் எழுதப் பழகுதல்

மேலே கூறப்பட்ட தலைப்புக்களைப்பற்றிய கட்டுரைகளை ஒழுங்காக எழுதப் பழக வேண்டும். சிறப்பான கட்டுரைகளில் பழக்கம் உண்டாக வேண்டுமாயின் பரந்த உலக அனுபவமும், அறிவும், பல நூல்களைப் படித்தலினால் உண்டாகும் ஞானமும், எழுதும் பழக்கமும் வேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு வகுப்புக்கும் ஓராண்டில் எழுதக்கூடிய கட்டுரைத் தலைப்புக்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். கட்டுரைகள் எழுத ஒரு வாரத்தில் ஒவ்வொரு வகுப்புக்கும் இரண்டு காலப் பிரிவுகளைத் (Periods) தொடர்ச்சியாக ஒதுக்கி வைத்தல் நலம் முதல் காலப் பிரிவில் கட்டுரைத் தலைப்புக்களைப்பற்றிச் சர்ச்சை செய்து, குறிப்புக்களையும் தலைப்புக்களையும் தயாரித்து, ஒழுங்காக இரண்டாம் காலப்பிரிவில் கட்டுரையை வரையலாம். கட்டுரைகள் எழுத வேண்டுமானால், அத்தலைப்புக்களைப்பற்றிய அறிவு அவசியம். மாணவர்களுடைய தனிப்பட்ட தேர்ச்சியையும் மனோபாவத்தையும் கட்டுரைகள் பிரதிபலிக்கும். கட்டுரைகள் எழுதுவதற்குத் தேவையான பரந்த அறிவு பல நூல்களினின்றும் பத்திரிகைகளினின்றும் சேகரம் செய்து ஒரு குறிப்புப் புத்தகத்தில் மாணவர்கள் குறித்துக்கொள்வது நலம். பல அறிஞர்கள் எழுதியுள்ள மாதிரிக் கட்டுரைகளைப் படிப்பதாலும் சிறந்த கருத்துக்களைச் சேகரிக்க முடியும்.

கட்டுரை எழுதத் துவக்குவதற்குமுன் தலைப்பை நன்கு கவனிக்க வேண்டும்; அதைப்பற்றிச் சிந்திக்கவும் வேண்டும். எழுத வேண்டிய விஷயங்களை மனத்தில்

கட்டுரைத் தலைப்புக்களைப் பற்றிச் சிந்தித்தலும் ஒழுங்கு செய்தலும்

ஒழுங்கு செய்துகொள்ள வேண்டும். உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களை வகைப்படுத்திப் பல உட்பிரிவுகளாகப் பிரித்து, அப்பிரிவுகளுக்குத் தகுந்த தலைப்புக்களைக் கொடுத்து ஒரு புறத்தில் குறித்தல் அவசியம். பின்னர் இக்குறிப்புக்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.ஒவ்வொரு உள் தலைப்பையும் ஒரு பத்தியில் விளக்க வேண்டும்.

வாக்கியங்களின் அமைப்பும் பத்தி ஒழுங்கும்

கருத்துக்களை முழு வாக்கியங்களாகவே வெளியிட வேண்டும். வெவ்வேறு கருத்துக்களை ஒரே வாக்கியத்தில் அமைக்கக் கூடாது. வாக்கியங்கள் இலக்கண வழுவின்றி எளிய நடையில் இருக்க வேண்டும். ஒரு உட்பிரிவைப் பல வாக்கியங்களில் தொடர்ந்து விளக்கும் பகுதியே ஒரு பாரா அல்லது பத்தி எனப்படும். ஒவ்வொரு பத்தியிலும் ஒரு முக்கியமான உட்பிரிவு விளக்கப்பட்டிருப்பதுடன், ஒவ்வொரு பத்தியும் முந்திய பத்தியுடன் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். ஒவ்வொரு கட்டுரையிலும் மூன்று பிரிவுகள் உண்டு. அவை முன்னுரை, பொருள் விளக்கம், முடிவுரை என்பனவாம். முதல் பத்தியில் கட்டுரையின் நோக்கத்தை விளக்க வேண்டும்; இடையில் உள்ள பத்திகள் கட்டுரைப் பொருளை விளக்க வேண்டியவை; முடிவுரையில் கட்டுரையைப் பற்றிய முடிவுரை கூறப்பட வேண்டும். கட்டுரையின் துவக்கம் சுவையுள்ளதாகவும், முடிவு கவர்ச்சி பொருந்தியதாகவும் இருக்க வேண்டும். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பல கருத்துக்களை ஒரே பத்தியில் விளக்கக் கூடாது; ஒவ்வொரு பத்தியிலும் ஒரு கருத்து விளக்கப்பட வேண்டும்.

கட்டுரைகளின் நடை திருத்தமும் தெளிவும் பொருந்தியதாக இருக்க வேண்டும். எளிய சொற்களைச் சிறு வாக்கியங்களில் அமைத்து எழுதுவது நல்லது. நடை அழகும் இனிமையும் பொருந்தியிருத்தல் கவர்ச்சி யளிக்கும்; இதற்குப் பல வகை மேற்கோள்களையும்

பழமொழிகளையும் அணிகளையும் உபயோகிக்கலாம். பிற நடைகளைப் பின்பற்றுவதைக் காட்டிலும், ஒவ்வொருவரும் தமக்கென்று ஒரு சுயமான நடையை ஏற்படுத்திக் கொள்வதை ஆசிரியர் வரவேற்க வேண்டும். கூடுமான வரையில் திசைச் சொற்களை நீக்குதல் நலம். கையெழுத்து தெளிவும் அழகும் பொருந்தியதாக இருக்க வேண்டும்; குறித்த காலத்தில் கட்டுரையை எழுதி முடிக்க வேண்டும். பொருத்தமான இடங்களில் நிறுத்துக் குறிகளை அமைத்தல் வேண்டும். எழுத்துப் பிழைகள் இல்லாமல் இருப்பது விரும்பத் தக்கது. எழுத்துப் பிழைகள் பார்வைக்கு வெறுப்பை உண்டாக்கும்; படிப்பவர்க்கு அருவருப்பை விளைவிக்கும்; பல சந்தர்ப்பங்களில் கவனக்குறைவை உண்டாக்குவதுடன் நேர்மாறான பொருளையும் கொடுக்கும். ஆதலால் பிழையின்றி எழுதுவது அவசியம். தமிழில் பொருள்வளம் மிகுந்த சில விசேஷச் சொற்களும் சொற்றொடர்களும் இருக்கின்றன. இவற்றைத் தொன்று தொட்டுப் பேச்சிலும் எழுத்திலும் உபயோகித்து வருகின்றனர். அவற்றைச் சரியான முறையில் உபயோகிப்பதை நாம் வரவேற்க வேண்டும். இவை வழக்கத்தை அனுசரித்த சொற்களும் சொற்றொடர்களுமாகும். அவை கட்டுரைகளின் நடையை அலங்கரிக்கக் கூடியவை. ஆனால் இவைகளைப் பிழையாக உபயோகித்தல் கூடாது. (உ-ம்) நுனிப்புல் மேய்தல், கோட்டை விட்டான், கை நீளம், அடங்காப் பிடாரி முதலியவை.

கட்டுரைகளின் நடையும் அவற்றில் உபயோகிக்க வேண்டிய சொற்றொடர்களும்

தொடக்கத்திலிருந்தே மாணவர்கள் பிழைகளின்றி எழுத வேண்டும். சொற்களைச் சரியாக உச்சரித்தால், தமிழில் எழுத்துப் பிழை உண்டாகாது. சிறு வயதிலிருந்தே கொச்சை மொழியைத் தவிர்க்க வேண்டும். ர, ற, ல, ழ, ள, ந, ண, ன ஆகியவற்றின் வித்தியாசங்களை மாணவர் நன்கு அறியவேண்டும். சொற்களில் இருக்கும் எழுத்துக்களைக் கூட்டு

பிழைகளின்றி எழுதும் முறை

வதால் பிழைகள் நீங்கா. ஞாபக சக்தியின் மூலமாகப் பிழைகளைக் களைய முடியாது. பிழைகளை நீக்க வேண்டுமானால் எழுதி எழுதிப் பழகுவதே சிறந்த முறை. சொல்வதெழுதுதலைக் காட்டிலும் பார்த்தெழுதுதலே பிழைகளைக் களையக்கூடிய முறையாகும். பார்த்து எழுதிப் பழகினால்,பழகியவற்றை ஸ்திரமாக்கிக்கொள்ளச் சொல்வதெழுதுதல் பயன்படும். சொற்களின் எழுத்துக்களை இடம் மாற்றி எழுதிச் சரிவர அமைக்கச் செய்வதாலும், எழுத்துக்களை உபயோகித்துச் சொற்களை அமைப்பதாலும் எழுத்துப் பிழைகளை நீக்கக்கூடும்.

மாணவர்கள் நிறுத்துக் குறிகளின் உபயோகத்தை உணர வேண்டும். கீழ் நிலையில் முற்றுப்புள்ளியின் உபயோகம் விளக்க வேண்டும். மேல் வகுப்புக்களில் மற்றக் குறிகளின் அவசியத்தை விளக்க வேண்டும். குறிகளே யில்லாத ஒரு பாடப் பகுதியை ஊன்றிக் கவனித்தால், அவற்றின் அவசியம் புலப்படும். குறிகள் இல்லாத வாக்கியங்களிலும் பத்திகளிலும் புள்ளிகள் இடும் பயிற்சிகளைக் கொடுக்கலாம். குறிகளின் வகைகளையும் உபயோகங்களையும் மேல் வகுப்புக்களில் கற்பிக்க வேண்டும்.

நிறுத்துக் குறிகள்

தாய் மொழியைக் கற்பித்தலின் முக்கியமான நோக்கம் மாணவர்களாகவே சுயமாக எழுதும் திறமையை வளர்க்க வேண்டும் என்பதாகும். இதை **ஆக்கச் சொல்வன்மை** என்னலாம். நிர்ப்பந்தத்தின் மூலம் இத்திறமை வளராது; ஆசிரியருடைய உதவியும் உற்சாகமும் ஏற்பட வேண்டுமாயின் சில முறைகளை நாம் அனுசரிக்க வேண்டும். மாணவர்கள் தமது ஆக்கச் சொல் வன்மையைக் கையாளுவதற்குச் சந்தர்ப்பங்களை ஆசிரியர் உண்டாக்க வேண்டும். தமக்குப் பிரியமான பொருள்களைப் பற்றி எழுதும்படி மாணவர்களை ஆசிரியர் தூண்ட வேண்டும். எதைப்பற்றியேனும் எம்முறையிலேனும் கட்டுரை எழுதுவதற்கு அவர்களுக்குச்

ஆக்கச் சொல் வன்மை

சுயேச்சை அளித்தல் அவசியம். கட்டுரைகளில் அவர்களுடைய பிரத்தியேகமான கருத்துக்களும் உணர்ச்சிகளும் பிரதிபலிக்க வேண்டும். பிறர் எண்ணங்களை எடுத்தெழுதுவது நன்மை பயக்காது. பாஷை நடையிலும் கட்டுப்பாடு கூடாது. பிறர் நகைப்பார்கள் என்ற உணர்ச்சி ஏற்படுமாகில் ஆக்கச் சொல்வன்மை குறைவுபடும். மாணவர்களுக்கு வெட்கமும் பயமும் தோன்றக் கூடாது. ஆசிரியர் மாணவர்களின் முயற்சியை அலட்சியம் செய்து, ஏளன மனப்பான்மை கொள்ளலாகாது. மாணவர்களுடைய முயற்சிகளைப் போற்றினால், அவர்களுக்குத் தமது ஆசிரியரிடத்தில் நம்பிக்கை உண்டாகும்; தாம் எழுதிய கட்டுரைகளைக் கூச்சமின்றி ஆசிரியருக்குக் காட்டுவார்கள். கட்டுரை எழுதிய மாணவனுடைய விருப்பத்தின் பேரில்தான் அதை வகுப்புக்குப் படித்துக் காட்டலாம். ஆக்கத்திறமை ஏற்பட வேண்டுமானால் எண்ணங்களும் உணர்ச்சிகளும் உண்டாக வேண்டும். கருத்துக்களும் உணர்ச்சிகளும் சம்பூர்ண வாழ்க்கையின் சின்னங்கள். ஆசிரியர் குழந்தைகளிடம் இத்திறமையை எதிர் பார்க்க வேண்டுமானால், தினசரி வாழ்க்கை அனுபவங்கள் பொருள் நிறைந்தனவாகவும் திருப்திகரமானவைகளாகவும் இருக்க வேண்டும். பல பாடல்களையும் கதைகளையும் படிப்பதற்கு அவகாசம் அளிக்க வேண்டும். பல கதைகளையும் சிறு நாடகங்களையும் இயற்றும் திறமையை ஆசிரியர் பெற்றிருப்பதுடன், மாணவர்களும் அவற்றில் பயிற்சி பெற வேண்டும். நாடகங்கள் உலக வாழ்க்கையைப் பிரதிபலிக்கச் செய்யக் கூடியவை.

கட்டுரைகள் எழுதுவதற்கென்று மாணவர்கள் தனி நோட்டுப் புத்தகங்கள் வைத்துக் கொள்ள வேண்டும். கீழ் வகுப்புக்களில் கற்பலகையிலேயே எழுதச் சொல்லித் திருத்த வேண்டும். கட்டுரைகளை எழுதவேண்டியது அவசியமானால், அவற்றைத் திருத்துவது பின்னும் அவசியமானது; திருத்தாவிடில் எழுத்துவேலை பயனடையாது. ஏனெனில் கட்டுரைப் பயிற்சியில் அலட்சிய மனப்பான்மை காட்டுவார்கள்; தேர்ச்சியும்

கட்டுரைகளைத் திருத்துதல்

முன்னேற்றமும் பெறமாட்டார்கள். திருத்திய பின்னர், மாணவர்கள் பிழைகளை உணர்ந்து திருத்திக்கொண்டால் ஏற்படும் பலன் நிலைக்கும். இவ் வேலையை ஆசிரியர் புறக்கணித்தால், மொழிப்பயிற்சி வெகுவாகத் தடைப்படும். பல பயிற்சிகளைக் கொடுத்து அவற்றைத் திருத்தாமல் இருப்பதைக் காட்டிலும், சில பயிற்சிகளை எழுதச்செய்து, அவற்றை நன்கு திருத்திப் பிழைகளை மாணவர்க்கு உணர்த்துவது மேலானது. மாணவர்களுக்குள்ளே எழுதும் திறமையில் வேற்றுமைகள் இருக்கும். பிழைகள் மலிந்திருந்தால் உற்சாகம் குன்றும்; ஆதலால் பிற்போக்கான மாணவர்களை அதைரியப் படுத்தக் கூடாது. பிழைகள் மலிந்திருப்பின், முன் ஆயத்த வேலையாக நடந்திருக்க வேண்டிய வாய்மொழி வேலை குறைவு என்று கருதலாம்; அல்லது கட்டுரைப்பொருள் கடினமாக இருக்கலாம். பிழைகள் மலிந்துள்ள மாணவர்க்குத் தனியாகக் கவனம் செலுத்த வேண்டும். சில பொதுவான பிழைகளை ஆசிரியர் வகுப்புக்கே எடுத்துக் காட்ட வேண்டும். கீழ் வகுப்புக்களில் வகுப்பு நேரத்திலேயே எழுத்து வேலையைத் திருத்தலாம்; மேல் வகுப்புக்களில் ஓய்வு நேரங்களிலும் விடுமுறைகளிலும் திருத்த வேண்டும்.

திருத்தும் முறை

கட்டுரைப் புத்தகத்தில் ஒரு பக்கத்தில் வியாசம் எழுதி, அதற்கு நேரான எதிர்ப்பக்கத்தில் பிழைகளைத் திருத்தி எழுத வேண்டும். முழுக் கட்டுரையையும் திருப்பி எழுதுவது வெறுப்பை அளிக்கும். பிழையான வாக்கியங்களை மட்டும் பெயர்த்து எதிர்ப் புறத்தில் பிழையின்றி எழுதினால் போதும்; பிழைகளை மட்டும் பன்முறை எழுதுவது பழைய வழக்கம்; பயன் ஒன்றுமில்லை. ஆசிரியர் மாணவனை அருகில் வைத்துக் கொண்டு, அவன் எழுதிய கட்டுரையை அவனுடைய முன்னிலையில் திருத்துவது சிலாக்கிய மானது. அல்லது திருத்திய பிறகு அதில் கண்டுள்ள பிழைகளைத் தனித்தனியாக எடுத்துக் கூறலாம். பொதுப் பிழைகளை வகுப்புக்கு எடுத்துக்காட்டித் திருத்த வேண்டும். பிழைகள் முழுமையும் ஆசிரியரே திருத்தி எழுதிவிடக் கூடாது. பல சந்

தேகக் குறிகளை உபயோகித்துப் பிழைகளை ஊகித்துணரும்படி செய்தல் அவசியம்.

பிழைகளைத் தடுக்க உபாயங்கள்

கட்டுரைகளை எழுதப் புகுமுன், வாய்மொழிப் பயிற்சி அத்தலைப்பை அனுசரித்து அளித்திருக்க வேண்டும். இதுவே முன் ஆயத்தவேலை. இதைத் திறமையுடன் செய்தால் பிழைகள் குறையும். சொற்களையும், சொற்றொடர்களையும் உபயோகிப்பதில் நல்ல பயிற்சி ஏற்பட்டிருக்கவேண்டும். மாணவர்கள் தாம் செய்துள்ள பிழைகளைத் திருத்தும் பொழுது, அவற்றை ஊன்றிக் கவனித்துத் திரும்பவும் அப்பிழைகள் தோன்றாத வகையில் அத் திருத்தங்கள் வேரூன்ற வேண்டும். பல பிழைகள் மாணாக்கர்களின் அறியாமையாலும் கவனக் குறைவினாலும் உண்டாகின்றன. அறியாமையால் ஏற்படும் பிழைகளை ஆசிரியரே திருத்தியும் மாணவனுக்கு விளக்கிக் காட்டியும் திருத்த வேண்டும். கவனக் குறைவால் ஏற்படும் பிழைகளை மாணவர்களே உணர்ந்து திருத்துதல் சாத்தியமானது. எழுதிய கட்டுரைகளைத் திரும்பவும் மாணவர்கள் வாசித்துப் பார்த்தால் பல பிழைகளைத் திருத்தக் கூடும்.

மூன்றும் பாகம்

1. தமிழ்ப் போதனையில் சில விளையாட்டுகள்

i. ஆரம்ப வகுப்புக்களுக்கு :

தமிழ்ப் போதனையில் சில விளையாட்டுக்களும் விளையாட்டுப் பயிற்சிகளும்

(1) ஒரு வகுப்பை இரண்டு சம பிரிவுகளாகப் பிரிக்கவும், சில சொற்களை விளக்கும் படங்கள் வரையப்பட்ட அட்டைகளைத் தயார் செய்து கொள்ளவும் ; அச் சொற்கள்மட்டும் எழுதப்பட்ட அட்டைகளையும் தயாரித்துக் கொள்ளவும். ஒரு பிரிவிலுள்ள குழந்தைகளிடம் படங்கள் வரைந்துள்ள அட்டைகளும், மற்றொரு பிரிவினரிடம் இப்படங்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ள அட்டைகளையும் கொடுக்கவும். இப் படங்களிலுள்ள ஒரு பொருளைக் குறிப்பிட்டு அழைத்தால், அப்பொருளின் படம் வைத்துக்கொண்டிருக்கும் மாணவனும் அதன் பெயர் எழுதியுள்ள அட்டையை வைத்திருக்கும் மாணவனும், சேர்ந்து முன் வந்து நிற்க வேண்டும். இம்மாதிரியே தொடர்ந்து நடத்தலாம்.

(2) பல பொருள்களின் படங்கள் அடங்கிய ஒரு படத்தை மாணவர்களிடம் கொடுத்து, அப்படத்தில் ஒரு குறிப்பிட்ட எழுத்தில் ஆரம்பிக்கும் பொருள்களின் பெயர்களை எழுதச் சொல்லுதல்.

(3) ஒரு பலமான அட்டையில் பல சொற்களையே னும் எழுத்துக்களையேனும் படுக்கை வரிசையாக எழுது தல். ஒவ்வொரு எழுத்து அல்லது சொல்லின் கீழே காலி இடம் இருக்கும். பிள்ளைகளிடத்தில் தனித்தனி யாகச் சிறு சிறு அட்டைகளில் எழுதப்பட்ட இந்தச் சொற்கள் அல்லது எழுத்துக்கள் இருக்கும். பிள்ளைகள் தங்களிடமுள்ள தனி அட்டைகளிலிருந்து, பெரிய

அட்டையிலுள்ள முதல் சொல் அல்லது எழுத்தைப் போன்றதை எடுத்துக் காலி இடத்தில் அச்சொல் அல்லது எழுத்துக்களின் கீழ் அமைக்க வேண்டும்.

க	ச	ண	அ	ர
ப	ல	ன	ற	ங

இதைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

க	ச	ண	அ

காலி இடங்களில் பொருத்த வேண்டிய அட்டைகள்.

இணைக்கும் அட்டை

(4) **இது என்ன ?** குழந்தைகளை வட்டமாக உட்கார வைக்கவும். ஒரு குழந்தையை வட்டத்தின் நடுவில் உட்கார வைக்கவும். ஒவ்வொரு குழந்தையும் தன் கற்பலகையில் யாதாயினும் ஒரு வார்த்தையை எழுத வேண்டும். எழுதி முடிந்தவுடன் சுற்றி உட்கார்ந்துள்ள யாவரும் மத்தியிலுள்ள குழந்தை பார்க்கும்படி தங்களுடைய கற்பலகைகளைத் தூக்கிப் பிடிக்க வேண்டும். மத்தியிலுள்ள குழந்தை தன்னைச் சுற்றிலுமுள்ள கற்பலகைகளில் எழுதியிருப்பவற்றை வாசித்துக்கொண்டு வர வேண்டும். தப்பிதமின்றியும், தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கும் ஒரு வார்த்தையைப் படிக்க முடியாவிட்டாலும், படிக்கத் தவக்க மேற்பட்டாலும, அந்த வார்த்தை எழுதிய குழந்தை வட்டத்தின் மத்தியில் செல்ல வேண்டும்; மத்தியில் இதுகாறும் இருந்த குழந்தை வட்டத்தில் சேர வேண்டும். வார்த்தைகளுக்குப் பதில் வாக்கியங்களும் உபயோகிக்கலாம் ; அல்லது சொற்களை எழுதி மத்தியிலுள்ள குழந்தையை எதிர்ப்பதம் கேட்கலாம். ஒருமை—பன்மை, கேள்வி—பதில், . பதில்—கேள்வி என்ற பல முறைகளில் இந்த விளையாட்டை நடத்தலாம்.

(5) **கண்ணாமூச்சு:** பல அட்டைகளில் வெவ்வேறு சொற்களை எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு குழந்தையை அறைக்கு வெளியே அனுப்பிவிட்டு, மற்றவர்கள் தங்களுடைய கண்களை மூடிக்கொள்ளச் சொல்ல வேண்டும். அட்டைகளை வகுப்பறையில் பல இடங்களில் வைக்க வேண்டும். பிறகு கண்களைத் திறந்து கொள்ளலாம். வெளியிலிருக்கும் குழந்தை கண்டுபிடிக்க வேண்டிய சொல் அல்லது வாக்கியம் என்னவென்று எல்லோரும் நிர்ணயித்து, அதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று வெளியிலுள்ள குழந்தைக்கு உள்ளிருந்த குழந்தைகளில் ஒருவன் போய்ச் சொல்லவேண்டும். அக்குழந்தை உள்ளே வந்து அதைக் கண்டுபிடிக்கவேண்டும். சொற்களுக்குப் பதிலாக பூர்த்திபெறாத வாக்கியங்களைப் பூர்த்தி செய்யச் சொல்லலாம். கேள்விகட்குப் பதிலும், பதில்களுக்குக் கேள்வியும் வரவழைக்கலாம்.

(6) **சொல் விளையாட்டு:** வகுப்பை இரு பிரிவுகளாகப் பிரிக்கவும். ஒரு பிரிவினரிடத்தில் பல அட்டைகளில் எழுதப்பட்ட சொற்களையும், மற்றொரு பிரிவினரிடத்தில் அவற்றிற்கேற்ற படங்களையும் கொடுக்கவும். ஒரு குறிப்பிட்ட சொல்லை ஆசிரியர் சொன்ன உடனே, அச்சொல் எழுதப்பட்ட அட்டையை வைத்திருக்கும் குழந்தையும், அதை விளக்கும் படத்தை வைத்துள்ள குழந்தையும் தாமதமில்லாமல் வகுப்புக்கு முன்னால் வந்து நிற்க வேண்டும்.

(7) **எழுத்து விளையாட்டுகள்:** ( ) ஒரு சொல்லை ஆசிரியர் கரும் பலகையில் எழுதி, அதைப் பார்க்கும்படி எல்லாருக்கும் சிறிது அவகாசம் கொடுக்கவும். பிறகு அதை மூடிக்கொண்டு, குழந்தைகளை அதை எழுதச் சொல்லுதல். (ii) ஒரு சொல்லின் எழுத்துக்களை இடம் மாற்றிக் கரும்பலகையில் ஆசிரியர் எழுதி, பிள்ளைகளை அதைச் சரியாக எழுதச் சொல்லுதல். (iii) சொற்களில் சில எழுத்துக்கட்குப் பதில் கோடுகள் இழுத்து, அங்கு இருக்கவேண்டிய எழுத்துக்களைக் கண்டுபிடிக்கச் செய்தல். (iv) ஒரு சொல்லைக் கொடுத்து அதிலுள்ள எழுத்துக்களினின்றும் கிடைக்கக்கூடிய வார்த்தைகளை எழுதச் சொல்லுதல்.

(8) **வாக்கியங்கள் அமைத்தல்:** ஒவ்வொரு அட்டைத் துண்டிலும் ஒரு சொல்லாகப் பல துண்டுகளில் பல சொற்களை எழுதவும். இச்சொற்கள் ஒவ்வொரு வாக்கியத்தைச் சேர்ந்தவைகளாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு சொல் எழுதப்பட்ட அட்டையைக் கொடுக்க வேண்டும். ஒரு வாக்கியத்தை ஆசிரியர் சொல்ல வேண்டும். அவ் வாக்கியத்திலுள்ள சொற்களை வைத்திருக்கும் குழந்தைகள் முன்னால் வந்து சொற்களின் வரிசையில் நின்று, அவரவர்களிடமுள்ள அட்டைத் துண்டுகளை ஒன்று சேர்த்து வாக்கியத்தை அமைக்க வேண்டும்.

(9) **அந்நியனைக் கண்டுபிடி:** ஒரே இனத்தைச் சேர்ந்த பல சொற்கள் அடங்கிய அநேக தொகுதிகளைத் தயார் செய்துகொள்ள வேண்டும்; ஆனால் ஒவ்வொரு தொகுதியிலும் அந்த இனத்தைச் சேராத சொல் ஒன்று இருக்க வேண்டும். அந்தச் சொல்லைக் குழந்தைகள் கண்டு பிடித்து அடிக்க வேண்டும்.

(உ-ம்.) கறுப்பு, சிவப்பு, மஞ்சள், கனம், நீலம், பசு, கழுதை, ஆடு, காகம், நாய்.

(10) **நான் பிரயாணம் செய்கிறேன்:** வட்டமாகப் பிள்ளைகளை உட்கார வைத்துச் சம்பாஷிகக வேண்டும்.

ஆசிரியர்: நான் பிரயாணம் போகிறேன். என்னுடன் ஒரு விளாம்பழம் கொண்டு போகிறேன்.

முதல் குழந்தை: நான் பிரயாணம் போகிறேன். என்னோடு மாம்பழம் கொண்டு போகிறேன்.

இரண்டாம் குழந்தை: நான் கற்பலகை கொண்டு போவேன்.

மூன்றும் குழந்தை: நான் பொம்மை கொண்டு போவேன் என்று தங்களுக்குப் பிரியமானதை ஒவ்வொருவரும் சொல்லலாம்.

ஆசிரியர் : நான் என் விளாம்பழத்தைத் தின்பேன்.

முதல் குழந்தை : நான் என் மாம்பழத்தைத் தின்பேன்.

இரண்டாம் குழந்தை : நான் கற்பலகையில் எழுதுவேன்.

மூன்றும் குழந்தை : நான் பொம்மையுடன் விளையாடுவேன் என்று தொடர்ந்து சொல்ல வேண்டும்.

ii. **நடுத்தர வகுப்புகட்கு :**

1. **கதை அமைத்தல் :** ஒரு கதையின் முதல் வாக்கியத்தை ஆசிரியர் சொல்லுதல். ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு வாக்கியத்தைச் சொல்லிக் கதையைப் பூர்த்தி செய்தல்.

2. **தபால் விளையாட்டு :** பல பிள்ளைகளின் விலாசங்களைத் தனித்தனியான சீட்டுக்களில் எழுதி அப்பிள்ளைகளிடம் அவற்றைச் சேர்ப்பித்தல்.

3. **கதையை முடித்தல்:** ஒரு கதையில் முதல் பாதியை ஆசிரியர் சொல்லி மீதிப் பாதிப் பகுதியை வகுப்புக் குழந்தைகளை முடிக்கச் சொல்லுதல்; அல்லது கதையின் ஆரம்பமும் முடிவும் கொடுத்து, நடுவிலிருக்கும் பகுதியைச் சொல்லச் செய்தல்.

---

2. சில விளையாட்டுப் பயிற்சிகள்

i. ஆரம்ப வகுப்புகட்கு : *1.* **சாமான்களின் ஒழுங்கு—** ஒரு வீட்டில் இருக்கக் கூடிய சாமான்களின் பெயர்கள் அடங்கிய ஜாபிதா ஒன்றைக் குழந்தைகளிடம் கொடுத்து, எந்தெந்த அறையில் என்னென்ன சாமான்கள் இருக்க வேண்டும் என்று பிரிக்கச் செய்தல்.

2. **இனப் பயிற்சி :** நீர், நிலம், காற்று என்ற தலைப்புக்களினடியில் பல சொற்களடங்கிய ஒரு பட்டியைப் பிரித்து இனத்தை அனுசரித்து எழுதச் செய்தல்.

3. **பெயர்—வினைப் பொருத்தம்:** ஒரு பெயர்ச் சொற்பட்டியையும், ஒரு வினைச் சொற்பட்டியையும் கொடுத்துப் பொருத்தச் செய்யலாம்.

(உ - ம்.)	காற்று	காய்கிறான்.
	மரம்	விளையாடுகின்றனர்.
	சூரியன்	நிழல் கொடுக்கின்றது.
	குழந்தைகள்	வீசுகின்றது.

4. **சரி—தப்பு:** ஒரு கேள்வியும் அதன் கீழே விடையுமாக எழுதுதல். விடை சரியாக இருந்தால் அதன் கீழே மாணவர்கள் 'சரி' அல்லது 'ஆம்' என்று எழுத வேண்டும்; தப்பிதமாக யிருந்தால் 'இல்லை' அல்லது 'தப்பு' என்று எழுத வேண்டும்.

(உ-ம்.) நீ கடைக்கு ஏன் போகிறாய்?
நான் கடைக்குக் குளிக்கப் போகிறேன்.
—தப்பு.

5. **பொருத்தமான சொற்கள் அமைத்தல்:** ஒரு வாக்கியத்தில் ஒரு சொல் இருக்கவேண்டிய இடத்தைக் காலியாக வைத்துப் பக்கததில் பிறைக்குறிகளினிடையே பல சொற்களைக் கொடுத்துக் காலி இடத்தில் பொருத்த வேண்டிய வார்த்தையைக் கண்டு பிடிக்கச் செய்தல்.

6. **ஒரு கதையில் சொற்களைப் பொருத்துதல்:** ஒரு கதையில் சில சொற்களைக் காலியாக வைக்கவும். இச் சொற்கள் அடங்கிய பட்டியை மாணவர்களுக்கே கொடுத்து விட்டுக் காலி இடங்களை, இப்பட்டியிலிருந்து, பொருத்தமான சொற்களால் நிரப்புதல்.

7. **எதிர்ப்பதம் அமைத்தல்:** ஒரு வாக்கியத்தில் ஒரு வார்த்தையின் கீழே கோடு இழுத்து, ஒரு காலி இடத்தையும் வைத்துக் கோடு இழுத்த சொல்லுக்கு எதிர்ப்பதத்தைக் காலி இடத்தில் அமைக்கச் செய்தல்.

(உ - ம்.) **நீ திரும்பி இங்கே வராமல், ஊருக்குப்——**

8. ஒரு வாக்கியத்தின் கீழ், அதன் பலனாக ஏற்படக்கூடிய பல வாக்கியங்களைக் கொடுத்து, சரியான பலனைப் பொறுக்கச் செய்தல்.

(உ - ம்.) மனிதன் நாயை அடித்தான்.
நாய் குரைத்துக்கொண்டு ஓடும்.
நாய் இன்னும் அடி கேட்கும்.
நாய் சும்மா இருக்கும்.
நாய் பிரம்பைச் சாப்பிடும்.

ii. நடுத்தர வகுப்புகட்கு:

1. ஒரு வாக்கியத்திலுள்ள சொற்களின் வரிசையை மாற்றி எழுதி, சரியான வரிசையில் அவற்றை எழுதச் செய்தல். ஒரு பத்தியிலிருக்கும் வாக்கியங்களையும் கலைத்துக் கொடுத்து ஒழுங்காக எழுதச் செய்யலாம்.

2. சில பிழையான சொற்கள் உபயோகப்படுத்தப் பட்ட ஒரு சிறு கதையில், அச் சொற்களின் கீழ்க் கோடுகளை இழுத்துக் காட்டுதல்; இவற்றிற்குப் பதிலாகச் சரியான சொற்களைக் கீழே கொடுத்துப் பிழையுள்ளவற்றை நீக்கிச் சரியான சொற்களை உபயோகப் படுத்திக் கதையைத் திரும்பவும் எழுதச் செய்தல்.

3. சொற்களுக்குப் பதில் பல படங்களை உபயோகப் படுத்திக் கொடுத்துச் சரியான சொற்களை உபயோகித்து எழுதச் சொல்லுதல்.

4. பிழையான சில வாக்கியங்களையும் சரியான சில வாக்கியங்களையும் கொடுத்து அவற்றிற்கு எதிரே "சரி தப்பு" என்று குறிக்கச் செய்தல்.

---

3. தமிழ் கற்பிப்பதற்கேற்ற உபகரணங்களின் பட்டியல்

முதல் வகுப்பு:

1. குழந்தைகளுக்கு அறிமுகமான 300 சொற்களின் பட்டியல்.

2. முதல் 50 சொற்களுக்கு (உ-ம். சாதாரண மிருகங்கள், பட்சிகள், காய்கள், மரங்கள், பழங்கள், பூக்கள்) அட்டைப் படங்களும், அவற்றின் பின்னால் அல்லது கீழே அப்படங்களின் பெயர்களும்.

3. சொற்படப் பொருத்த அட்டைகள் (Picture-word matching sets).

4. சுமார் 25 வினைச் சொற்களை விளக்கும் சொ கைப் படங்கள்.

5. சொற்கள் அமைக்கும் சாதனம் (Word-building apparatus),

6. ஒவ்வொரு அட்டையிலும் ஒவ்வொரு வார்த்தை எழுதியுள்ள 100 மின்னட்டைகள்.

7. தொடர்ச்சியாக எழுதியுள்ள சொற்களடங்கிய சில வாசகத் தாள்கள்.

8. பத்துக் கதைப் படங்களும் அவை ஒவ்வொன் றையும் விளக்கும் 5 வாக்கியங்களும்.

9. சம்பாஷணைக்கு உகந்த 5 கதைப் படங்கள்.

10. படப் புத்தகங்கள்—குடும்பம், வீடு, கதை, வேலை, விளையாட்டு, பறவைகள், பிராணிகள், செடிகள், பருவங்கள், இயற்கைக் காட்சிகள், தொழில்கள் முதலிய வைகளைப் பற்றிய படங்களைச் சேர்த்தல்.

11. படங்களையும் அவற்றை விளக்கும் சொற்றொடர் களையும் வாக்கியங்களையும விளக்கும் சாதனம்.

12. குழந்தைகளுக்கேற்ற சில தாலாட்டுப் பாடல் களும் அபிநயப் பாடல்களும்.

இரண்டாம் வகுப்பு :

1. 10 கதைகளை விளக்கும் படங்களும், அவை ஒவ் வொன்றையும் விளக்கும் 10 வாக்கியங்களும்.

2. மூன்று வாக்கியங்களில் விளக்கக் கூடிய சிறு நிகழ்ச்சிகள் அடங்கிய கதைப் படங்கள் 10.

3. கட்டளைகளடங்கிய, மௌன வாசிப்புக் கேற்ற மின்னட்டைகள்.

4. சொற்கள் எழுதிய மின்னட்டைகள்.

5. ஓரினச் சொற்கள், வாக்கியப் பிரிவுகள், தொடர்ந்த சொற்கள்—இவற்றைப் பொருத்துதல்,

6. வெவ்வேறு நிறங்களையுடைய பொருள்களின் பெயர்கள் அடங்கிய அட்டைகளையும் பலநிறத தாள்களையும் பொருத்துதல்.

7. பழங்கள், பூக்கள், காய்வகைகளின் பெயர்கள்—இனம் சேர்த்தல்.

8. பதங்களையும் அவற்றின் எதிர்ப்பதங்களையும் பொருத்துதல்.

மூன்றும் வகுப்பு:

1. தமிழ் எழுத்துக்களின் நெடுங்கணக்கு.
2. சம்பாஷணைக்குரிய 10 கதைப் படங்கள்.
3. பதங்கள் சேர்க்கும் விளையாட்டுச் சீட்டுக்கள்.
4. ஒருமை—பன்மை விளக்கும் 20 சொற்களும் படங்களும்.
5. ர, ற, ல, ழ, ள இவற்றின் பேதங்களை விளக்கும் 20 சொற்கள்.
6. முற்றுப் புள்ளியை விளக்கும் வாசகக் கோவை.
7. மௌன வாசிப்புத் தாள்கள்—12.
8. எழுவாய்—பயனிலைகளைச் சரியாக வாக்கியங்களில் அமைத்தல்.
9. 20 பெயர்ச் சொற்கள், 20 வினைச் சொற்கள் கொண்ட தாள்கள்.
10. சில மாதிரிக் கடிதங்கள்.

நான்காம் வகுப்பு:

1. கதைப் படங்கள், காட்சிப் படங்கள், நிகழ்ச்சிப் படங்கள் 10.
2. சில மாதிரிக் கடிதங்கள்.
3. மௌன வாசிப்புக்கேற்ற 10 சிறு கதைகள்.

4. ஒவ்வொன்றிலும் 10 சொற்கள் கொண்ட 10 மின்னட்டைகள். பிள்ளைகள் பார்த்தவுடன் இவற்றை மூடிவிடவேண்டும்; ஞாபகத்திலிருந்து பிள்ளைகள எழுத வேண்டும்.

5. சில பலமொழிகள் அடங்கிய தாள்.

6. ல, ள, ழ, ர, ற, ன, ந, ண, ஷ, ஜ, ஸ, ஹ, க்ஷ ஆகியவற்றை விளக்கும் 10 வாக்கியங்கள்.

7. சில விடுகதைகள்.

8. வகுப்புக்கேற்ற சில வியாசத் தலைப்புக்கள்.

9. ஒரு மாதிரிக் கட்டுரை.

10. 20 பதங்களும் எதிர்ப்பதங்களும் அடங்கிய தாள்.

ஐந்தாம் வகுப்பு:

1. சில மாதிரிக் கடிதங்கள்.

2. ஆறு கதைப் படங்கள்.

3. மௌன வாசிப்புக் கேற்ற 600 சொற்கள் கொண்ட 10 கதைகள்.

4. சில பழமொழிகள்.

5. சில விடுகதைகள்.

6. ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களும் பல கருத்துக்களைக் கொடுக்கும் ஒரே சொல்லும்.

7. விஷயங்களைச் சுருக்குவதற்கும் பெருக்குவதற்கும் தகுந்த மாதிரிப் பயிற்சிகள்.

8. வகுப்புக் கேற்ற சில கட்டுரைத் தலைப்புக்கள்.

9. சில இலக்கணப் பிழைகளும் அவற்றின் திருத்தங்களும்.

10. சில மாதிரிக் கட்டுரைகள்.

6, 7, 8, வகுப்புக்கள் :

1. சில மாதிரிக் கடிதங்கள்.

2. மௌன வாசிப்புக்குகந்த புத்தகங்களின் பட்டியல்.

3. வகுப்புக் கேற்ற கட்டுரைத் திட்டம்.

4. இலக்கண விளக்கம்.

5. வாய்மொழிக் கட்டுரைக்கான சில படங்கள். (Oral Composition.)

---

4. பாடக் குறிப்புக்கள்

பாடக்குறிப்பின் அவசியம்

வகுப்பிலுள்ள குழந்தைகளுக்குப் போதிக்கவேண்டிய பாட விஷயங்களை ஆசிரியர் நன்ருக அறிந்திருக்க வேண்டியது அவசியம். மேலும், அவற்றைப் போதிக்கத் தகுந்த முறைகளைப்பற்றி யோசனை செய்து, தேவையான உபகரணங்களைத் தயார் செய்து கொண்டு, வகையாகத் திட்டம்செய்து கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். ஆசிரியருக்குத் திறமையும் அனுபவமும் மட்டும் போதாது; போதிக்கும் முறைகள், உபகரணங்களைச் சாதுரியமாக உபயோகித்தல், திட்டமான விஷய ஞானம், தெளிந்த சிந்தனை சக்தி ஆகிய இவை யாவும் வெகு அவசியம். குறித்த நேரத்திற்குள் குறித்த பாடப் பகுதியை நடத்துவதற்கும், போதனையில் மாணவர்களுடைய மனோ நிலையை அனுசரித்து ஒரு ஒழுங்கு முறையைப் பின்பற்றுவதற்கும் ஆயத்தம் இன்றியமையாதது. ஆனால், இவற்றைப்பற்றிச் சிந்தனை செய்தல் மட்டும் போதாது; பாடக் குறிப்பும் எழுதிக் கொள்ள வேண்டும். பாடக் குறிப்புகள் எழுதும் முறைகள் பல; விவரமாக எழுதலாமா, குறிப்பை மட்டும் எழுதலாமா என்ற சந்தேகங்கள் உண்டு. ஆரம்ப நிலையில் அனுபவம் குறைந்த ஆசிரியர்கள் விரிவான பாடக் குறிப்பு எழுதுவதன்மூலம் சிறந்த பலன் எய்துவார்கள்

என்பதில் சந்தேகமில்லை; ஆனால், அனுபவம் விரிந்த பின்னர், சில முக்கியமான குறிப்புகள் மட்டும் எழுதிக் கொண்டால் போதுமானது. பாடக் குறிப்புகளின் பொது வான பகுதிகள் பின் வருமாறு:—

(1) வகுப்பு, போதிக்கும் நேரம், தலைப்பு, பொது நோக்கம், சிறப்பான நோக்கம், உபயோகிக்கும் உபகர ணங்கள். (2) முன்னறிவுச் சோதனை — பீடிகை. (3) போதிக்க வேண்டிய பாடத்தை யொட்டிய குறிப்புகள். (4) போதிக்கும் முறை. (5) கரும்பலகைச் சுருக்கம். (6) முடிவுப்பரீக்ஷை. போதிப்பதில் ஆசிரியர் தமது திறமையைக் காட்ட வேண்டும். ஒழுங்காகப் பாடக் குறிப்பு எழுதுவது மட்டும் போதாது: அது திறமை யான போதனைக்கு ஒரு சாதனமெயொழிய, அதுவே பிரதானமல்ல என்பதையும் உணர வேண்டும். ஆசிரிய ருடைய அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்பப் பாடக் குறிப்பின் பல அம்சங்களைச் சுருக்கியும் எழுதலாகும்.

சில மாதிரிப் பாடக் குறிப்புகள் :

i. இராமனும் சந்திரனும்

முன் காலத்தில் அயோத்தி என்று ஒரு நகரம் இருந்தது. அதைத் தசரதர் என்பவர் ஆண்டு வந்தார். அவருடைய மனைவியின் பெயர் கௌசல்யை. குழந்தை யில்லாமல் இருந்த அவளுக்கு அநேக வருஷங்கள் கழித்து ஒரு குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு இராமன் என்று பெயர் வைத்தனர்.

ஒரு நாள் இரவு நல்ல நிலா வெளிச்சம் இருந்தது. குழந்தை இராமனைத் தாதிகள் நிலவில் விளையாட அழைத்துச் சென்றனர். அப்பொழுது வானத்தில் இருந்த சந்திரனை இராமன் பார்த்தான். உடனே அதன் மேல் ஆசை கொண்டான். சந்திரன் வேண்டும் என்று அழ ஆரம்பித்தான்.

தாதிகள் தங்களால் கூடிய வரையில் குழந்தையைச் சமாதானம் செய்து பார்த்தார்கள். அநேக விதமான

தின்பண்டங்களையும் விளையாட்டுச் சாமான்களையும் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவர்களால் இராமனுடைய அழுகையை நிறுத்த முடியவில்லை. கௌசல்யை வந்து குழந்தையை எடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு கொஞ்சினாள். சந்திரனை எப்படிக் கொண்டுவந்து கொடுக்க முடியும்? தசரதரும் வந்து குழந்தையைத் தேற்றினார். ஆனால் குழந்தையின் பிடிவாதம் குறையவில்லை.

தசரதர் யோசனை செய்தார்- தமது மந்திரியான சுமந்திரரைக் கூப்பிட்டு அனுப்பினார். சுமந்திரர் நல்ல புத்திசாலி. அவர் வந்ததும் ஒரு பெரிய கண்ணாடியைக் கொண்டுவரச் சொன்னார். சந்திரனுக்கு எதிராகக் கண்ணாடியை நிறுத்தி வைத்தார். இராமனைக் கண்ணாடியில் பார்க்கச் சொன்னார். 'இதோ சந்திரன்' என்று குழந்தைக்குக் காண்பித்தார்.

கண்ணாடியில் அகப்பட்ட சந்திரனைக்கண்டு இராமன் அழுகையை நிறுத்தினான். எல்லோரும் சந்தோஷம் அடைந்தனர். சுமந்திரருடைய புத்தியை எல்லோரும் புகழ்ந்தார்கள்.

I. 1. அயோத்தியின் அரசர் யார்?
2. இராமனுடைய தாயாரின் பெயர் என்ன?
3. இராமன் ஏன் அழுதான்?
4. குழந்தையைச் சமாதானம் செய்தது யார்?
5. இராமன் எப்படி அழுகையை நிறுத்தினான்?

II. எதிர்ப்பதங்கள் கூறுக: இரவு, அழுகை, சந்தோஷம், சமாதானம்.

III. இந்தக் கதையை நடித்துக் காட்டுக.

வகுப்பு II. நேரம் : 40 நிமிஷம். பாடம் : தமிழ் வசனம்—இராமனும் சந்திரனும்.

1. நோக்கம் :

(i) பொது : மொழி யறிவை அபிவிருத்தி செய்தல்.

(ii) சிறப்பு: சொற் களஞ்சியத்தைப் பெருக்குதலும், பேசவும் எழுதவும் படிக்கவும பயிற்சி யளித்தலும்.

2. உபகரணங்கள் : i. கதையை விளக்கும் படம்.

ii. வாசக புத்தகம்

3. வகுப்புக்குப் படத்தைக் காட்டி, அதிலுள்ளவற்றின் பெயர்களையும் அதில் காணும் செய்கைகளைப் பற்றிய வாக்கியங்களையும் கேள்விகள் வாயிலாக வரவழைத்தல்.

சந்திரன், மாடி, வீடு, தாயார், குழந்தை, இராணி.

குழந்தை என்ன செய்கிறான்? வானத்தில் எதைப் பார்க்கிறான்? தாயார் என்ன செய்கிறாள்?

4. கதையைச் சுவையுடன் சொல்லுதல். உபயோகிக்கும் சொற்களில் கடினமானவற்றைக் கரும்பலகையில் எழுதி விளக்குதல்.

முன்காலம், அயோத்தி, தசரதர், மனைவி, கௌசல்யை, இராமன், தாதி, இரவு, சந்திரன், ஆசை,

சில பிள்ளைகளை இச்சொற்களைப் படிக்கச் செய்தல்.

4. ஆசிரியரின் மாதிரி வாசிப்பு. சில குறிப்பிட்ட பிள்ளைகளை முதல் இரண்டு பத்திகளை உரக்க வாசிக்கச் செய்தல்.

6. i. கருத்தைப் பற்றிய கேள்விகள் (புத்தகத்தைப் பார்த்தபடியே.)

ii. சொற்களேயும் சிறப்பான சொற்ருெடர்களேயும் வேறு வாக்கியங்களில் பிரயோகித்தல்—முன் காலம், கூடிய வரையில், சமாதானம் பிடிவாதம்,

iii. எதிர்ப்பதங்கள் : இரவு, அழுகை, சமாதானம், சண்டை.

7. சோதனைக் கேள்விகள்.

8. நடித்தல் : கதா பாத்திரங்களே நிர்ணயித்து, குழந்தைகளே இயற்கையாக நடிக்கச் செய்தல்.

II. வேடனும் புருக்களும்

1. வனம் ஒன்றில் ஒருவேடன் வளர்குருவிக் கூட்டினேடும்
இனம் ஒன்று வேட்டைக் கருவிகளும்எடுத்தேதிரிய
கனம்இருண்டு மழைபெய்யக் காற்றெழும்ப அவன் நடுங்கி
மனம்மருண்டோர் மரத்தின்கீழ் வந்திருந்தான் அப்போது.

2. தங்கும் அதன் மேல் இருந்த புருவொன்று அதன் பேட்டை
எங்ககன்றதோ வனத்தில் யாரேனும் பிடித்தாரோ ?
மங்கியதோ? எனப்புகல அதுகேட்டு வனசரன் தன்
அங்கையுறு கூட்டினுற்ற பெண்புரு அழுதுசொல்லும்

3. முன் வினேயால் இதுபெற்றேன்; ஆயினும்நின் முனம் அடைந்த
இன்னவனுக் குபசாரம்புரி என்னும் எரிகொளுவி
அன்னவனே அழைத்துடலின் குளிர்போக்கி, 'ஆகாரம்
என்னே நீ அருந்தெ'ன்று வீழ்ந்திறக்க இவன் நோக்கி,

4. 'அன்பினல் நம்பொருட்டு வீழ்ந்திறக்க இவன்நோக்கி,
துன்பம் வரும்', எனப்பேட்டை விடுத்திடலும் சூழ்ந்ததுவும்
தன் புருஷன் பிரிவதினல் வீழ்ந்திறக்க, தகும் இரண்டும்
இன்பமுறு தெய்வவுரு எய்திவான் உலகடைந்த.

5\. இரக்கமொடு வேடுவனும் எரிவீழ்ந்து கதி
அடைந்தான்
தரைக்குள் உளம் தளர்ந்தசர ணார்த்தியென்று
சார்ந்தார்க்கும்
புரக்க அருள் செயில்தாமே பொன்றவரி னும்வருமென்
றுரைத்துப்பொன் எச்சமிடும் பறவை கதை ஓதுமால்
—பஞ்சதந்திரம்.

1\. இப்பாடலைப் பாடியவர் வீரமார்த்தாண்ட தேவர்.

2\. கனம் - மேகம். மருண்டு - மயங்கி. பேட்டை - மனைவி. வனசரன் - வேடன். அங்கையுறு-கையிலுள்ள; எரிகொளுவி – நெருப்பு மூட்டி.

3\. i. பெண்புறு ஆண் புறுவினிடம் என்ன சொல்லிற்று?

ii. ஆண்புறு ஏன் இறந்தது? எவ்வாறு இறந்தது?

iii. வேடன் பெண் புறுவை என்ன செய்தான்?

iv. வேடனும், பெண்புறுவும் ஏன் நெருப்பில் வீழ்ந்தனர்?

4\. இக்கதையை உரை நடையில் எழுதுக.

வகுப்பு V. நேரம்—40 நிமிடம்.

பாடம்—தமிழ்ச் செய்யுள்—வேடனும் புறுக்களும்—பஞ்சதந்திரப் பாடல்.

1\. **நோக்கம் :**

பொது : இலக்கிய அறிவு வளர்ச்சி. சொற்களஞ்சியப் பெருக்கம்.

சிறப்பு : பாடலின் நயத்தை உணர்தல். பாடலின் கண்டுள்ள விஷய ஞானம்.

2. **உபகரணங்கள் :**

i. இப் பாடலை விளக்கும் படம்.

ii. வாசக புத்தகம்.

3. **பிள்ளைகளுடன் உரையாடல் :** மாணவர்கள் படத்தைக் கவனிக்கும்படிச் செய்தல். படத்தில் காணப்படும். விஷயங்களைப்பற்றிப் பல கேள்விகள மூலம் மாணவர்கள் கூச்சமின்றிப் பேசப் பயிற்சி யளித்தல்.

4. **முன்னுரை :** பஞ்சதந்திரத்தின் வரலாறு—முதனூல், வழிநூல் - உரைநடை நூல் - பாடல் - வித்துவான் தாண்டவராய முதலியார் - வீரமார்த்தாண்ட தேவர் - இவற்றை மாணவர்களுக்கு அறிமுகம் செய்வித்தல்.

5. **ஆசிரியரின் மாதிரிப் படிப்பு :** இராகத்துடன் ஆசிரியர் பாடலை இருமுறை பாடுதல் - சில பிள்ளைகளை அவ்வாறே பாடச் செய்தல் - செய்யுள் நடைக்கும் உரை நடைக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கச் செய்தல்.

6. **கதையின் சுருக்கம் :** பாடலிலுள்ள கதையைச் சுருக்கமாகப் பிள்ளைகளைச் சொல்லச் செய்தல்.

7. **சொல் விளக்கம் :** கனம் — மேகம். மருண்டு — மயங்கி. பேட்டை - மனைவியை (பேடு - மனைவி). வனசரன் — வேடன். அங்கையுறு - கையிலுள்ள. எரிகொளுவி - நெருப்பு மூட்டி.

இவற்றைக் கரும்பலகையில் எழுதி விளக்குதல்.

8. **கேள்விகள் :**

i. பெண்புரு ஆண்புருவுக்குச் சொன்னது என்ன ?

iI. ஆண் புரு ஏன் இறந்தது)

iii. பெண் புருவை வேடன் என்ன செய்தான்?

iv. இக் கதையினால் அறியும் நீதி யாது ?

9. **சொற்களின் நயத்தையும் செய்யுளின் அமைப்பையும் கவனித்தல்;** வளர் குருவி, எரிவீழ்ந்து போன்ற சொற்கள். வனம் ஒன்றில், இனம் ஒன்று, கனம் இருண்டு, மனம் மருண்டு போன்ற வற்றிலுள்ள ஒலி ஒற்றுமை.

கட்டுரை: இக்கதையை வசன நடையில் சுருக்கமாக எழுதப் பயிற்சி யளித்தல்.

குறிப்பு: இந்தப் பாடலை இரண்டு காலப் பிரிவு (Period) களில் இரண்டு பிரிவுகளாக நடத்த வேண்டும்.

III கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

வகுப்பு IV. பாடம்—செய்யுள். நேரம்—40 நிமிடம்.

நோக்கம்:

பொது: இலக்கிய அறிவு வளர்ச்சி—சொற் களஞ்சியப் பெருக்கம்.

சிறப்பு: கருத்து உணர்தல்; செய்யுளின் அமைப்பு; நயம் ஓர்தல்.

உபகரணம்: கற்பிக்க வேண்டிய செய்யுள்.

1. **முன்னறிவு:** ஔவையார்-அவருடைய நூல்கள் - 'அறம் செய விரும்பு' எழுதியவர் - எளிய நடையும் உயர்ந்த கருத்தும் உள்ளவை - இப்பாடல் 'வாக்குண்டாம்' என்ற நூலில் ஒரு பாடல். மயில், வான்கோழி - அழகு, அமைப்பு இவற்றில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள். கேள்விகள் மூலம் விளக்குதல்.

2. ஆசிரியர் இசையுடன் பாடுதல். ஓசை ஒற்றுமைகளைத் தெளிவாகப் படித்தல். இசையுடன் பாடக் கூடிய சிலரைப் படிக்கச் செய்தல்.

3. **கருத்து உணர்தல்:** சந்தி பிரித்துப் படித்துக் கருத்து உணரச் செய்தல். கடின சொற்களின் பொருள் விளக்கம்.

கான மயில் - கானகத்திலுள்ள மயில்
பொல்லாத - அழகில்லாத, அருவருப்பான
போலும் - ஒக்கும்.
கற்ற - இயற்றிய, செய்த.
கவி - நூல்; பாட்டு.

4. கேள்விகள் :

i. கற்றவனுக்கு உவமை யாது?
ii. கல்லாதவன் எதைப போன்றவன்?
iii. வான்கோழிக்கும் மயிலுக்கும் வித்தியாசம் என்ன?
iv. மயிலின் அழகு எத்தன்மையது?
v. கற்றவன் கவி எவ்வாறு இருக்கும்?
vi. கல்லாதவன் கவி எப்படி இருக்கும்?

5. உவமைகளின் சிறப்பு விளக்கம்.

கானமயில் - கற்றவன். வான்கோழி - கல்லாதவன்.

6. **பயிற்சி :** கருத்துத் தெளிவு படுத்துதல்; எழுதச் செய்தல்.

VI. இலக்கணம்.

வகுப்பு IV. நேரம்—40 நிமிடம்.

பாடம்—எழுவாய், பயனிலை.

1. **நோக்கம் :** வாக்கியங்களின் அமைப்பை அறிதல்.
2. **முன்னறிவு :** சொல், வாக்கியம் இவற்றின் விளக்கம்.

(உ-ம்) என் வயலில் ஒரு மரத்தை வெட்டினேன்—வாக்கியம். மரம், வயல்-சொறகள்.

பாட புத்தகத்தில் சில வாக்கியங்களை எடுத்துக் காட்டி அவறறின் அமைபபை ஆராய்தல்.

காணப்படும் முடிவு—பல சொற்கள் சேர்ந்து ஒரு முடிவான கருத்தை அளிக்கக் கூடிய வகையில் அமைந்திருப்பதற்கு 'வாக்கியம்' என்று பெயர்.

3. **பின் வரும் வாக்கியங்களைக் கவனி :**

இராமன் காட்டிற்குச் சென்றான்.
நான் அதிகாலையில் எழுந்தேன்.
மணி மாட்டைக் கட்டினான்.
வீட்டின் பக்கத்தில் கிணறு இருக்கிறது.
ஈசன் எங்கும் இருக்கிறார்.

இவற்றிலுள்ள பெயர், வினைச்சொற்களை எடுத்து எழுது (கரும்பலகை)

பெயர்ச் சொற்கள்	வினைச் சொற்கள்
இராமன்	சென்றான்
நான்	எழுந்தேன்
மணி	கட்டினான்
கிணறு	இருக்கிறது
ஈசன்	இருக்கிறார்

4. **முடிவு :** வினைச் சொற்கள் தொழிலைத் தெரிவிக்கின்றன. பெயர்ச் சொற்கள் தொழிலைச் செய்தவர்களைக் குறிக்கின்றன.

இந்த வினைச் சொற்களுக்குப் **பயனிலை** எனப் பெயர். இந்தப் பெயர்ச் சொற்கள் **எழுவாய்** எனப்படும்.

5. **பயிற்சி :** பாடபுத்தகத்திலிருந்து ஐந்து வாக்கியங்களை எழுதி **எழுவாய், பயனிலை** கண்டுபிடி.

V. கட்டுரை :

கதை எழுதுதல். வகுப்பு V. நேரம்-40 நிமிடம்.

1 **நோக்கம் :** குறிப்புக்களின் உதவியால் ஒரு சிறுகதை எழுதக் கற்பித்தல்.

2. **மாதிரிக் கட்டுரை :** குறிப்புக்கள் : சென்னை மாகாணத்தில் சேலம் ஜில்லா—கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டம்—ஒருவன் தன் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பவில்லை என்ற குற்றச்சாட்டு—பிள்ளையைக் கூப்பிடச் சென்ற ஆசிரியரை அடித்ததாகவும் குற்றச்சாட்டு —நியாய ஸ்தலத்தில் விசாரணை — அம் மனிதனுடைய மறுமொழி — "ஆசிரியரை நான் அடிக்கவில்லை ; பிள்ளையை அனுபபமாட்டேன் என்றும் சொல்லவில்லை -எனக்குப் பிள்ளையே இல்லை !"

3. **கேள்விகள் :**

i. கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டத்தின் முக்கிய அம்சம் என்ன ?

ii. அவன்மேல் என்ன குற்றச் சாட்டுகள் ?

iii. விசாரணையில் அவன் மறுமொழி என்ன ?

4. **நடிப்பு :** இக்கதையை வகுப்பில் நடித்துக் காட்டச் செய்தல்.

5. **கட்டுரை எழுதுதல் :**

தலைப்புக்கள் : i. பீடிகை.
ii. குற்றச் சாட்டுகள்.
iii. நியாய விசாரணை
iv. மறுமொழி

பயிற்சி : பின்வரும் குறிப்புக்களைக் கொண்டு ஒரு கதை எழுதுக :

ஒரு கிழப்புலி — இரைதேட வகையில்லை — ஓர் ஏரி கரையில் ஜபமாலையுடன் இருத்தல் — கையில் தங்கக் காப்பு — ஓர் ஏழைப் பிராமணன் அவ்வழி வருதல் — ஏரியில் ஸ்நானம் செய்து வந்தால் தங்கக் காப்புக் கொடுப்பதாகப் புலி சொல்லுதல் — அவநம்பிக்கை — புலியின் ஆசை வார்த்தைகள் — ஏரியில் சேறு — அந்தணன் கால் புதைந்து வெளியேற முடியாது தவித்தல் — புலி அவன்மேல் பாய்ந்து அவனைப் புசித்தல்.

5. ஆசிரியரின் தமிழ்ப் புத்தகசாலை

1. தொல்காப்பியம்.
2. பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்.
3. சிலப்பதிகாரம்.
4. மணிமேகலை.
5. ஆழ்வாருடைய திவ்யப் பிரபந்தங்கள்.
6. நன்னூல்.
7. தேவாரப் பதிகங்கள்.
8. பெருந்தேவனார் பாரதம்.
9. நைடதம—அதிவீரராமபாண்டியர்.
10. திருப்புகழ்—அருணகிரிநாதர்.
11. மனுமுறைகண்ட வாசகம்—இராமலிங்க சுவாமிகள்.
12. அவிவேக பூரணகுரு கதை.
13. விநோத ரச மஞ்சரி—வீராசாமி செட்டியார்.
14. பிரதாப முதலியார் சரித்திரம்—வேதநாயகம் பிள்ளை.
15. பெரிய விக்கிரமாதித்தன் கதை.
16. நாவலர் பால பாடங்கள்.
17. கமலாம்பாள் சரித்திரம்—இராஜாராமையர்.
18. பத்மாவதி சரித்திரம்—அ. மாதவையா.
19. குசிகர் குட்டிக்கதைகள்.
20. பஞ்சதந்திர வசனம்—தாண்டவராய முதலியார்.
21. பஞ்சதந்திரப் பாடல் — வீரமார்த்தாண்ட தேவர்.
22. இராமாயணம்.
23. மகாபாரதம்.
24. மரியாதை ராமன், தெனாலிராமன், இராயர் அப்பாஜிக் கதைகள்.
25. அராபிக் கதைகள்.

26. தக்காணப் பூர்வ கதைகள்—பண்டித நடேச சாஸ்திரியார்.
27. காவியங்கள்—சுப்ரமணிய பாரதியார்.
28. கட்டுரைகள்— ,,
29. வசனங்கள் ,,
30. அற்புத உலகம்—பெ. நா. அப்புசாமி ஐயர்.
31. சிறுகதைத் திரட்டு—1, 2, 3, 4 பாகங்கள்—அல்லயன்ஸ் கம்பெனி.
32. திருக்கயிலாயகிரி யாத்திரை—சுவாமி சித்பவானந்தா.
33. கட்டுரைகள்—இராஜாஜி—புதுமை பதிப்பகம்.
34. கதைகள் — ,, — ,,
35. கண்ணன் காட்டிய வழி—இராஜாஜி.
36. உபநிஷதப்பலகணி — ,,
37. வாழ்க்கையே வாழ்க்கை—எஸ். வி. வி.
38. சர்வ சமய சமரசக் கீர்த்தனைகள்—வேதநாயகம் பிள்ளை.
39. இராம நாடகம்—அருணசலக் கவிராயர்.
40. நந்தனர் சரித்திரக் கீர்த்தனை—கோபால கிருஷ்ண பாரதியார்.
41. மலரும் மாலையும்—தேசிகவிநாயகம் பிள்ளை.
42. தமிழன் இதயம்—நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை.
43. குழந்தை இன்பம் — யோகி சுந்தானந்த பாரதியார்.
44. அல்லி அரசாணி மாலை போன்ற நூல்கள்.
45. நமது இந்தியா—வ. ரா. மொழிபெயர்ப்பு.
46. விவேக சிந்தாமணி.
47. மஸ்தான் சாயபு பாடல்கள்.
48. வீரமாமுனிவர் தேம்பாவணி.
49. வீட்டு வைத்தியர்—டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்.
50. கலைமகள் தொகுதிகள்.

6. இரு சிறு நாடகக் காட்சிகள்

1. தமயந்தியும் நளனும்

களம் *1.* காட்சி *1.*

இடம் : *அயோத்தியில் ரிதுபர்ணன் அரண்மனை.*

காலம் : *காலை.*

பாத்திரங்கள் : *அந்தணன், வாகுவன் என்ற புனைபெயர் பூண்ட நளன்.*

(தமயந்தி அனுப்பிய அந்தணன் இரண்டாம் சுயம்வரத்தை யறிவித்தல்)

அந்தணன் : *அரசே! எங்கோன் விதர்ப்பன்றன் மகள் தமயந்தி இரண்டாம் சுயம்வரத்தைக் கூட்டினாள். தாங்கள் செல்ல விரும்புவீரேல் அங்ஙனமே செய்யலாம்.*

அரசன் : *(மனமகிழ்ச்சியுடன்) நன்று கூறினீர்! முன்பு நடந்த சுயம்வரத்தில் என் கழுத்தில் விழவேண்டிய மாலை நளன் கழுத்தில் தவறி விழுந்தது என நினைத்தேன். அஃதுண்மை என்பது இப்பொழுது புலனாகின்றது. என் நல்வினைப் பயன் கிடைக்கும் காலம் நெருங்கியதுபோலும். சுயம்வரம் குறித்த நாள் யாது?*

அந்தணன் : *மன்ன! அந்நன்னாள் நாளையேயாகும்.*

நளன் : *(தனக்குள்) நடுக்காட்டில் நள்ளிரவில் நான் விட்டுப் பிரிந்ததை நினைந்து இங்ஙனம் இரண்டாம் சுயம் வரம் இழைத்தனளோ? கற்புடைய பெண்கள் இவ்வாறு செய்தற்கு ஒருப்படமாட்டார்களே! ஒருகால் என்னைக் கூட்டுதற்கே இரண்டாம் சுயம்வரம் ஏற்படுத்தினள் போலும்!*

அரசன் : *(நளனை நோக்கி) வாகுவ! நாளைய சுயம் வரத்திற்கு விதர்ப்பநாடு செல்ல வேண்டும். இக் குறுகிய காலத்திற்குள் தேர் செலுத்த வல்லையோ?*

வாகுவன் : *அரசே! தங்கள் விருப்பப்படியே செய்ய வல்லேன்.*

அரசன் : நன்று! நன்று! தேரினைக் கொணர்க.

(அரசனும் வாகுவனும் தேரேறிச் செல்லல்)

காட்சி 2.

இடம் : விதர்ப்ப தேசத்தில் வீமன் அரண்மனை.

காலம் : காலை.

பாத்திரங்கள் : வீமன், ரிதுபர்ணன், நளன்.

(ரிதுபர்ணவரசன் வருகை)

வீமன் : அயோத்தி வேந்தே! நின் வரவு நல் வரவாகுக! எதிர்பாராத வகையில் தாங்கள் புறப்பட்டு வந்ததைக்கண்டு மிக்க சந்தோஷம். விசேஷம் ஏதேனுமுண்டோ!

ரிதுபர்ணன் : (திகைப்புடன்) அரசே! வேறு விசேஷமொன்றுமில்லை. தங்களைப் பார்த்து வெகுநாட்களானபடியால், பார்த்துச் செல்லலாமென்று வந்துளேன்.

வீமன் : ஆகா! நல்லது. இதோ இம்மாளிகையில் தங்கிச் சற்றே இளைப்பாறுங்கள். தங்களைக் காணும் பேறு வாய்த்தமைக்குப் பெரிதும் மகிழ்கின்றேன்.

(ரிதுபர்ணன் நகரில் வேறு மன்னர்கள் வராமை கண்டு, மனங்கலங்கிச் சென்று விடுதியில் தங்குதல்)

களம் 2

இடம் : தமயந்தியின் அந்தப்புரம்.

காலம் : காலை.

பாத்திரங்கள் : தமயந்தி, தோழிகள், தமயந்தியின் மக்கள்.

தமயந்தி : பாங்கிமார்களே! இன்று ரிதுபர்ணனுடன் தேர்ப்பாகனாக வந்திருப்பவன் எனது மணாளனென்றே கருதுகின்றேன்; எனினும் உண்மையை ஆராய்ந்தறிய வேண்டும். ஆகவே, நம் மக்களை அவனிடம் அழைத்துச் சென்று அவனுடைய மனோ நிலையை அறிந்து வாருங்கள்.

தோழிகள் : தங்கள் விருப்பின்படியே. இதோ சென்று வருகின்றோம்.

(தமயந்தியும் உடன்சென்று மறைந்துநின்று கவனிக்கிறாள்.)

களம் 3

இடம் : நளன் இருக்கும் சமையலறை.

காலம் : நடுப்பகல்.

பாத்திரங்கள் : தோழிகள், மக்கள், வாகுவன் என்ற நளன்.

நளன் : (மக்களைத் தன் முன்னால் கண்டு மனம் நடுங்கி, மெய்வியர்த்து, தன் புயங்களில் அவர்களை அணைத்து) மக்காள்! நீர் என் மக்கள் போன்றிருக்கிறீர்களே! நீங்கள் யார் மக்கள்?

மக்கள் : 'மன்னன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள் யாம்!' அன்னையைக் கானகத்தே விட்டு, அவன் சென்று விட்டதால், இந்நகரில் வாழ்கின்றோம்; எங்கள் வளநாட்டை மற்றொருவன் ஆள்கின்றான்.

நளன் : குழந்தைகளே! உங்கள் அரசு ஒருவன் ஆள, நீங்கள் ஓடிவந்து இங்கு வசித்தல் இழிவல்லவா?

மக்கள் : அடுமடையா! மன்னர் பெருமையை நீயும் அறிவையோ? எங்கள் தந்தையின் திருவடிகளில் மன்னர்களின் மணிமுடி வடுவை எமமருங்கினும் காணலாம்! அங்ஙனமிருக்க, மனத்தினால் இவ்வாறு நினைத்ததுமன்றி, அதை எடுத்துச் சொல்லவும நீ யல்லாது மன்னர் அஞ்சாரோ!

நளன் : (மகிழ்ச்சியுடன்) உண்மை! உண்மை! மன்னர் பெருமையை மடையனாகிய யான் எங்ஙனம் அறிய முடியும்? மக்களே! அறியாதுரைத்த மாற்றத்தினை மனங்கொள்ள வேண்டாம்.

(நளன் மக்களைத் தழுவி அன்பு பாராட்டல்—
தமயந்தி உண்மை உணர்ந்து நளனைக் கூடல்

---

2. சாணக்கியன்

காட்சி 1

இடம் : பாடலீபுரத்துக்கருகில் ஒரு பரந்த வெளி.

காலம் : நடுப்பகல்.

பாத்திரங்கள் : சாணக்கியன், சந்திரகுப்தன்.

[காஞ்சிநகர் வாசியாகிய சாணக்கியன் என்ற அந்தணர் மிகச் சோர்வுடன் பசியால் துன்புற்று நடுப்பகலில் பாடலீபுரத்துக்கு அண்மையிலுள்ள ஒரு பரந்த வெளியில் நடைப் பாதையில் வெகு விரைவாக வருகின்ருர்; நடையில் செருக்கும் ஆண்மையும் மிளிர்கின்றன. வழியில் ஒரு சிறு செடியினல் தடுக்கப்பட்டு, நடைதவறி நிலை தடுமாறுகிருர். உடனே கோபத்தால் துடித்து]

சாணக்கியன் : ஆ! இச்சிறு பூண்டிற்கா இத்துணைச் செருக்கு! சிறிதும் என் வருகையை மதியாது நடுவழியில் நின்று, என் நடையைத் தளர்ச்சியுறச் செய்துவிட்டதே! ஏ! அற்பப் புல்லே! நன்று! நன்று! உன்னை விட்டேனு பார்! அறிவிலும் ஆண்மையிலும் சமயோசிதத் திறமையிலும் சிறந்த சாணக்கியன் என்று என்னை அறிந்திலை போலும! பாவம் நீ என் செய்வாய்! உன் வாழநாள் குறுகியது! உன்னைத் தொலைத்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்.

(பூண்டை வேருடன் பிடுங்கி அதைத் தண்ணீரில் கரைத்துக் குடிக்கிருன்.)

(இச் செய்கையைச் சிறிது தூரத்திலிருந்து சந்திரகுப்தன் கவனிக்கிருன்.)

சந்திரகுப்தன் : (தனக்குள்). இது என்ன ஆச்சரியம்; இவ்வந்தணன் கோபம் ஆற்ற முடியாததாயிருக்கிறதே! ஓர் அற்பப் பூண்டினிடம இவன் காட்டும் ஆத்திரம் இத்தன்மையதாய் இருந்தால், தனக்குத் தீங்கிழைத்தவரிடம் இவன் கொளளும் கோபம் எவ்வளவு கொடியதாயிருக்கும்! நமது நோக்கம் ஈடேறுவதற்கு

இவனே நற்றுணைவன். (வெளிவந்து) ஐயனே! எங்குச் செல்கின்றீர்?

சாணக்கியன்: அப்பா! பசியோ காதடைக்கிறது. அருகில் யாதேனும் சத்திரம் உண்டோ?

சந்திரகுப்தன்: அந்தணரே! பாடலீபுரம் நெருங்கி விட்டீர். அங்கு இராஜவீதியில் அன்ன சத்திரம் காண்பீர். அங்குச் சென்றால் அன்னம் அளிப்பார்கள்.

சாணக்கியன்: மெத்த சந்தோஷம். உடனே அங்குச் செல்கின்றேன். உனக்கு மங்களமுண்டாகுக!

காட்சி 2

இடம்: இராஜவீதியில் ஒரு சத்திரம். அதில் போஜனக் கூடம்.

காலம்: நடுப்பகல்.

பாத்திரங்கள்: சாணக்கியன், நவநந்தர், சந்திரகுப்தன்.

[சத்திரத்தை யடைந்த சாணக்கியர் உட்சென்று போஜன சாலையில் பலருக்கும் வைக்கப்பட்டிருக்கும் உண்கலன்களைப் பார்க்கின்றார். தங்கத் தட்டுகளும் அவற்றின் அருகில் தங்கக் கிண்ணங்களும் இருந்த இடங்களைப் பார்த்து, அவற்றில் ஒரு தட்டின் முனனால் போஜனத்திற்கு அமருகிறார். அது சமயம், அரசகுமாரர்களாகிய நவநந்தர்கள் போஜனசாலையை அடைகின்றனர். தங்களுடைய ஆசனமொன்றில் அமர்ந்திருந்த அந்தணரைக் கண்டு வெகுண்டு,]

நவநந்தர்: அரசகுமாரருடைய ஆசனத்தில் அமர்ந்துள்ள நீ யார்? ஏ, அந்தக! உனக்கு மதியீனமோ? உன் மதிப்புக்குச் சுவர்ணத் தட்டுக்கள் தேவையோ? ஏ, பித்தனே! உடனே நீ எழுந்து செல்லுவாய்.

சாணக்கியன்: நீவிர் யாவீர்? இது அன்ன சத்திரம் என்றல்லவோ நான் வந்தேன்! இதில் மேலோர், கீழோர் என்ற பேதம் உண்டோ? அரசிளங்குமரராக யிருந்தும் பொறுமையை இழந்து, வீணாகத் தூஷிப்

பதில் பயன் யாது? என் சிறப்பை நீவிர் அறியீரோ? ஆயினும் கோபம் கொள்ளேல்; அருகில் அமருங்கள்.

நவநந்தர்: அற்ப! அற்பப் புத்தியால் பிதற்று கின்றனே. உன்னருகே அமர்ந்து உண்ண நாங்கள் பித்தர்களோ? உனக்கு இந்த ஆசனம் தகுதியில்லை. வீணில் ஏன் பெருமை கொள்கிறாய்? உடனே வேறு இடம் தேடு.

சாணக்கியன்: மதியீனர்களே! உருவத்தைக்கண்டு எள்ளலாகாது என்ற முதுமொழியை மறந்தீரோ? என் சக்திக்கு நீவிர் எம்மாத்திரம்? வீணே அகம்பாவம் கொண்டு அலையவேண்டாம. யான் இடம் பெயரேன்.

நவநந்தர்: யாரடா! சேவகா! இவனை வெளியே அகற்று. பித்தனுக்கு இவ்விடம் தகுதியல்ல.

சாணக்கியன்: யாது சொன்னீர்? பித்தனென்றோ ஏசினீர்? மதியிலிகாள்! வருவது யாதென நினையாமல் செருக்கால் எம்மை அவமதித்தீர். உம்மையும் உமது பூண்டையும் வேரறுத்து யான் வெற்றிமாலை சூடுவதை நீவிர் காணுவீர். உமது கர்வத்தையும் அரசையும் அழித்து வெற்றி கொள்ளாவிடில் என் பெயர் சாணக்கியன் அல்ல. இதை அறிவீர். (செல்கிறார்)

(பரபரப்புடன் வெளியே செல்லும் பெரியாரை)

நவநந்தர்: போடா, போ! பித்தா! உன்னால் யாது முடியும்? பிதற்றினால் பயப்படுவோமா?

(வெளியில் சந்திரகுப்தன் அவரை அணுகி நமஸ்கரித்து)

சந்திரகுப்தன்: பெரியீர்! ஏன் இப்பதட்டம்? யாது நேர்ந்தது?

சாணக்கியன்: என்ன செருக்கு! என்ன அநீதி! எனக்கு நவநந்தர் அவமானம் இழைத்தனர். யான் அவர்களை அழிப்பதாகச் சபதம் கூறி வெளியேறி யுள்ளேன்.

சந்திரகுப்தன்: அந்தண சிரேஷ்டரே! யான் தான் இச்சத்திரத்து அதிகாரி. என் விடுதிக்குத் தயை செய்து வருவீர். உமது பசியைத் தணிக்கிறேன்.

(தனக்குள்) என் எண்ணம் ஈடேற இவருடைய அருள் கிடைக்குமோ?

சாணக்கியன்: (உணவருந்தியபின்) கூட்டிச்சென்று அன்னம் படைக்கிறான். அப்பா! உன் அன்பிற்கு மெச்சினேன். உன்னைப் பார்த்தால் அரச வம்சத்தைச் சேர்ந்தவன்போல் காண்கின்றதே. உன் வரலாறு என்ன?

சந்திரகுப்தன்: பிராமணோத்தமரே! என் பெயர் சந்திரகுப்தன. முந்திய அரசருக்கு முராதேவியின் பால் தோன்றிய புதல்வன் யான். என் தாயாதிகளாகிய நவநந்தர்களுடைய கொடூரமான சூழ்ச்சியினால் சகோதரர்களைப் பறிகொடுத்துத் தன்னந்தனியனானேன். தங்கள் வரலாறு அறியக்கூடுமோ?

சாணக்கியன்: மைந்தா! யான் தென்னாட்டிலுள்ள காஞ்சிமா நகரில் உறையும ஓர் அந்தணன். பல க்ஷேத்திரங்களைத் தரிசிக்கும் எண்ணத்துடன் புறப்பட்டேன்.

சந்திரகுப்தன்: அண்ணலே! நன்று, நன்று! எம் துயரைப் போக்க வல்லவர் தாங்களே யன்றோ?

சாணக்கியன்: சந்திரகுப்தா! உன் வல்லமையும் என் சாகஸமும் சேர்ந்திடில் யாவரால் எதிர் நிற்றல் இயலும்? கவலை கொள்ளாதே. இந்த அரச வமிசத்தை நிர்மூலம் செய்து உன்னையே இந்த சாம்ராஜ்யத்திற்குச் சக்ரவர்த்தியாக மகுடாபிஷேகம் செய்கிறேன. என்னை அவமதித்த இப்பூண்டை அகற்றி இந்த அரசை உனக்கு அளிக்கின்றேன். பெற்றுக்கொண்டு நீதிநெறி வழுவாது அரசாண்டு வருவாயாக! இது முக்காலும் சத்தியம்.

சந்திரகுப்தன்: எம் மனோபீஷ்டம் முடிவுறும் காலம் வந்தது, எம பாக்கியமே. அந்தணர் தலைவ! என்னை உமது சீடனாக ஏற்றுக் கொள்ளுவீர்! இனி என் வாழ்வும் தாழ்வும் உம்மைச் சேர்ந்ததே. இனி எனக்குப் பகைவரே இல்லை. எல்லாம் அவன் அருள்!

சாணக்கியன்: ஆம். அவனன்றி யோரணுவும் அசையாதன்றோ? ஆயினும் மதியிலிகளுக்கு அவன் உதவான். வத்ஸ! நீ துயரம் விடு. உன துயரத்தை அகற்றி இவ்வகண்ட சாம்ராஜ்யத்தை உனக்கு அளித்தேன். வா, போகலாம். (இருவரும் நீங்குகின்றனர்)

7. தமிழ் ஆங்கில இலக்கண பரிபாஷைச் சொற்கள்

அசை — Metrical Syllable
அல்வழி — Uninflected
அணி — Figure of speech
அணியியல் — Rhetoric
அளபெடை — Lengthening of the sound
அன்மொழித்தொகை — Ellipsis of other words
அஃறிணை — Inferior Class— animate or inanimate
ஆகுபெயர் — Synecdoche
ஆண்பால் — Masculine Gender
இடம் — Person
இறந்தகாலம் — Past tense
ஈற்றுநிலை — Termination
ஈற்றெழுத்து — Final letter
உம்மைத் தொகை — Ellipsis of the conjunction
உயர்வு நவிற்சி — Hyperbole
உயர்திணை — Superior Class
உருவகம் — Metaphor
உவம உருபு — A particle of comparison
உவமை — Simile
உவமைத் தொகை — omission of the sign of comparison
எச்சம் — Participle or infinitive
எண் — Number
எதிர்மறை — Negative verb
எழுவாய் — Subject
ஒருமை — Singular
ஒன்றன்பால் — Neuter Singular
காலம் — Tense
குற்றெழுத்து — Short Vowel

செய்வினை — Active Verb
செயப்படுபொருள் குன்றாவினை — Transitive Verb
செயப்படுபொருள் குன்றியவினை — Intransitive Verb
செயப்பாட்டு வினை — Passive Verb
சொல்லிலக்கணம் — Parsing
சொற்களின் வகை — Parts of Speech
தன்மை — First Person
திசைச்சொல் — Foreign Word
படர்க்கை — Third Person
பன்மை — Plural
புணர்ச்சி — Combination
பெண்பால் — Feminine Gender
பெயர்ச்சொல் — Noun
முன்னிலை — Second Person
மெய்யெழுத்து — Consonant
யாப்பிலக்கணம் — Prosody
விளி — Vocative Case
வினைச்சொல் — Verb
வினைமுற்று — Finite Verb
வினையெச்சம் — Adverbial Participle
வேற்றுமையுருபு — Case ending

---

8. T. S. L. C. பரீக்ஷைக் கேள்வித் தாள்கள்.

I Elementary Grade: Section B—Tamil Methods

1942

1. மாணவர்கள் ஆரம்ப வகுப்புக்களில் படிக்கும் போது பேசும் பேச்சில் சாதாரணமாய்க் காணக்கூடிய பிழைகளுள் நான்கைக் குறிக்க. அவற்றுள் ஒன்றை நீக்குவதற்காக நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை உதாரணமாக விளக்குக.

2. இரண்டாம் வகுப்பில் வாசிக்கும் குழந்தைகட்குப் புதிய சொற்களைக் கற்பிப்பதற்காகக் கையாளக்கூடிய ருசிகரமான உபாயங்கள் ஆறு கூறுக.

3. (a) மௌனவாசிப்பின் முக்கியம் என்ன?

(b) மாணவர்க்கு ஏற்ற புத்தகம் கிடைக்காத போது அவர்கள் படிப்பதற்கு என்ன தருவீர்கள்?

4. கதை சொல்லுவதன் முக்கியத்தைக் கூறுக. முதல் வகுப்பு மாணவர்க்கு எவ்விதமான கதைகள் விருப்பமாயிருக்கும் என்பதைக் குறிப்பிடுக.

5. ஐந்தாம் வகுப்பிற்கு "ஆறுகள்" என்பதைப் பற்றி ஒரு கட்டுரைப் பயிற்சி (Composition Exercise) தருவதாயிருந்தால், எழுதவேண்டிய விஷயத்தையும் முறையையும்பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்வதற்கு நீங்கள் என்ன உதவி புரிவீர்கள்?

1943

1. வாசிக்கும் வழக்கத்தை உண்டாக்குதற்குக் கையாளக்கூடிய முறைகளில் மூன்றைக் குறிப்பிட்டு, அவற்றின் ஒன்றின் குணங்குறைகளை ஆராய்ந்து எழுதுக.

2. செய்யுட்பாடம் கற்பிக்க அநுசரிக்கப்படும் தற்கால முறையின் இயல்புகளில் நான்கினைக் குறிக்க.

3. ஐந்தாம் வகுப்பிற்கென்று நீங்கள் தேர்ந்தெடுத்த ஒரு செய்யுளை அவ் வகுப்பில் கற்பிப்பதற்காகப் பாடக் குறிப்பு வரைக.

4. மாணவர் தம் சுயக் கருத்துகளை வெளியிடும் ஆற்றலை வளர்க்க, அவர்களை எபபடி உற்சாகபபடுத்துவீர்கள் ?

5. இரண்டாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரையில் வாசிக்கும் மாணவர் உபயோகிபபதற்கான வகுப்புப் புத்தகசாலை ஒன்றை எப்படி வளர்த்து வருவீர்கள் ? அதனை முற்றிலும் பயன் படுத்தும்படி அவர்களை எப்படித் தூண்டுவீர்கள் ?

1944

I. பாஷா போதனையில், முக்கியமாக ஆரம்ப நிலையில், வாய்மொழிப் பயிறசி ஏன் இன்றியமையாதது ?

II. ஐந்தாம் வகுப்புக்கு ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிக் கடிதமெழுதுவதில் ஓர் அப்பியாஸம் கொடுக்கும்போது மாணவருக்கு நீர் அளிகக்கும் போதனைக் குறிப்புகளை எடுத்துக கூறுக.

III. செய்யுட்பாட போதனுமுறையும் வசனபாடப் போதனுமுறையும் எவ்விதம் வேறுபடும ?

அல்லது

இலக்கணத்தைக் காரிய அநுமான (inductive) முறையில் கறபிப்பதென்றால் என்ன ? உதாரணத்துடன் விளக்குக

1945

I. சாதாரணமாக எவ்வொலிகளை மாணவர்கள் பிழையாய் உச்சரிக்கிறார்கள் ? அவற்றைச் சரியாக உச்சரிககச் செய்ய எமமுறைகளைக் கையாளுவீர் ?

II. வாசிக்கக் கற்பிககும் (teaching reading) முறைகள் சிலவற்றைச் சொல்லுக. முதல் வகுபபிற்கு அவற்றுள் எமமுறையை அனுசரிப்பீர ? ஏன ?

III ஐந்தாம் வகுப்புக்குக் கட்டுரை எழுதும் பயிற்சிக்காக எவ்வெவ்வித விஷயங்களைக் கொடுப்பீர்? ஒவ்வொரு வகைக்கும் ஒரு உதாரணம் தருக.

IV அபிநயப் பாட்டுகளின் (action songs) நோக்கத்தையும் பயன்களையும் கூறுக.

1946

I நான்காம் வகுப்பு மாணவருக்கு "யானை"யைப் பற்றி வசனபாடம் கற்பித்த பின் நீவிர் கொடுக்கக் கூடிய பயிற்சி வகைகளுள் நான்கனைக் குறிக்க.

II III, IV, (மூன்றும் நான்காம்) வகுப்பு மாணவருடைய சொற் களஞ்சியத்தைப் (vocabulary) பெருக்குவதற்காக நீங்கள் மேற்கொள்ளக்கூடிய உபாயங்களுள் நான்கனைக் குறிப்பிடுக.

III ஐந்தாம் வகுப்புக்கு ஒரு இலக்கண விதியை ஆகமந முறை (inductive method) ப்படி, எவ்வாறு கற்பிப்பீர்கள் என்பதை ஓர் உதாரண வாயிலாக விளக்குக.

IV முதலாம் வகுப்பில் தாய்மொழிப் போதனைக்கவசியமான உபகரணங்கள் (equipment) எவை என்று கூறுக.

1947 & 1948

2. Secondary Grade—Section B—Tamil Methods

1942

1. சிறந்த செய்யுளின் நலத்தைப் பாராட்டி மகிழ்தற்கு மாணவர்களை எப்படிப் பழக்குவீர்கள்?

2. மூன்றும் வகுப்பு மாணவர்களது வாசிப்புத் திறமையை வளர்த்தற்கு உதவக்கூடிய உபகரணங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைப் பயன்படுத்தும் விதத்தை விவரிக்க.

3. ஒரு இலக்கண விதியை ஆகமந (Inductive) முறைப்படி எவ்வாறு கற்பிப்பீர்கள் என்பதை உதாரண வாயிலாக விளக்குக.

4. கட்டுரை அப்பியாசங்களைத் (Composition Exercises) திருத்தும்போது கவனிக்கவேண்டிய விஷயங்களைக் குறிப்பிடுக. மாணவர் எழுதும்போது சாதாரணமாய்ச் செய்யும் பிழைகள் மீண்டும் வராமல் தடுப்பதற்கு என்ன உபாயம் பண்ணுவீர்கள் என்பதைக் காட்டுக.

1943

1. மௌன வாசிப்பு எப்படி முக்கியமானது? அதனை விருத்தி செய்ய என்ன வசதிகளை ஏற்படுத்தித் தருவீர்கள்?

2. மோசமான எழுத்துப் பிழைகள் சாதாரணமாய் எக் காரணங்களால் உண்டாகின்றன? அவற்றைத் தவிர்க்க என்ன செய்வீர்கள்?

3. முதல் மூன்று பாரங்களில் ஏதாவது ஒன்றிற்குக் கற்பிக்கப்படும் உரைநடைப் பாடத்தின் பல்வேறு படிகளை வருணிக்க.

4. முதல் வகுப்பில் படிக்கத் தொடங்கும் பிள்ளைகளுடன் சம்பாஷிப்பதற்கும், அவர்கட்கு வாய்மொழி வேலை தருவதற்கும் ஏற்ற சில விஷயங்களைக் குறிப்பிடுக.

1944

I. முதலாம் இரண்டாம் வகுப்புகளின் பாஷா போதனையில் நீர் உபயோகிக்கும் சாதன உபகரணங்களை (aids and appliances) எடுத்துரைக்கவும். அவற்றில் ஒன்றை விசேஷமாக நீர் எவ்வாறு தயாரித்து உபயோகிப்பீரென்று கூறுக.

II. செய்யுள் கற்பிக்கும்போது முழுப்பாட்டையும் ஒருங்கே எடுக்காமல் துண்டித்துக் கற்பிக்கும் முறையை (piece-meal treatment) கையாளுவதனால் ஏற்படும் குறைகள் யாவை? அவற்றைத் தடுப்பதெங்ஙனம்?

III. இரண்டாவது மூன்றாவது பாரங்களில் எத்தகைய கட்டுரைகளை எழுதும்படி பயிற்சி செய்தல் மிகவும்

ஏற்றதாகும்? குறிப்பிட்ட ஒரு விஷய சம்பந்தமாய் உம்முடைய மாணவர் பயன் பெறுமாறு எத்தகைய குறிப்புக்களை யளிப்பீர்?

IV. படிக்கும் பழக்கத்தை உம்முடைய மாணவரிடம் உண்டு பண்ணும் சில வழிகளைக் கூறுக. முதல் மூன்று பாரங்களிலுள்ள மாணவருக்கு எத்தகைய புத்தகங்கள் விருப்பம் அளிக்கக் கூடியவை?

1945

I. புதிதாகப் பள்ளிக்கூடம் வரும் மாணவர்களின் பேச்சில் பொதுவாகக் காணப்படும் குறைகள் (common defects) எவை? அவற்றை எப்படித் திருத்தலாம் என விளக்கிக் கூறுக.

II. செய்யுளின் இயல்புகளை (characteristics) ஆறும் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு (Standards VI to VIII) வரை உள்ள மாணவர்கள் உணர்ந்து கொள்வதற்கு நீர் எவ்வகையில் உதவி அளிப்பீர் எனக் கூறிச் செய்யுள் உரை நடையினின்றும் எங்ஙனம் வேறுபடுகிறது எனவும் காட்டுக.

III. எழுத்துக்களை எழுதக் கற்பிக்குமுன் மாணவர்களுக்கு நீர் அளிக்கும் முற்பயிற்சிகள் (preliminary training) எவை?

IV. எழுத்துக் கட்டுரைக்கு முன் வாய்மொழிக் கட்டுரை (oral composition) ஏன் நடத்தப்பட வேண்டும்? ஐந்தாம் வகுப்புக் கேற்ற ஒரு கட்டுரைப் பொருளைத் தேர்ந்தெடுத்து, அதைத் தழுவிய வாய்மொழி உரையை (oral work) நடத்த என்ன திட்டம் (plan) போடுவீர் எனக் காட்டுக.

V. ஆரம்பப் பருவத்தில் (early stages) மொழியைக் கற்பிப்பதில் நடித்துக் காட்டும் முறையால் (drama-tisation) விளையும் நற்பயன்களை விளக்கிக் கூறுக.

1946

I. திருந்திய பேச்சின் நல்லியல்புகள் எவை? அவற்றைப் பெற உம்முடைய மாணவரை எவ்வாறு பயிற்றுவீர்கள்?

II. மௌன வாசிப்பினால் ஏற்படக் கூடிய நன்மைகள் யாவை? இத்தகைய பழக்கத்தை உம்முடைய மாணவர் பெறுவதற்காக அவர்களை எவ்வாறு பழக்குவீர்கள்?

III. மூன்றும் வகுப்பு மாணவருடைய தாய்மொழிப் போதனைக்குப் பயன்படக்கூடியதும், செயல் திட்டமுறை (project method) க்கு ஏற்றதுமான ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு, அதை எவ்வாறு பயனுடையதாகச் ,செய்வீர் என்பதை விவரிக்க.

IV. செய்யுட் பாடத்தினை நடத்தும் பொழுது நீங்கள் கவனத்தில் வைக்க வேண்டிய விஷயங்கள் யாவை?

V. கட்டுரை அல்லது வியாசப் பயிற்சிகளின் வாயிலாகவே உம்முடைய மாணவரது படைக்கும் ஆற்றலை எவ்வாறு தூண்ட முடியும்?

1947

I. ஒரு வசன பாகத்தை உமது மாணவர்கள் படித்து அனுபவிப்பதை (appreciate) விட அதே விஷயத்தைக் கொண்ட ஒரு செய்யுள் பாகத்தை அவர்கள் இன்னும் நன்றாக அனுபவிக்க நீர் என்ன செய்வீர் என்று விளக்கிக் காட்டுக.

II. முதல் I, II வகுப்புகளுக்குப் பாஷை போதிக்க எவ்வித உபகரணங்களை (equipment) நீர் சேகரம் செய்வீர்?

III. வாய் மொழிப் பயிற்சியின் (oral work) நோக்கங்கள் யாவை? பாலர்கள் திருத்தமாகப் பேசப் பயிற்சி செய்ய எவ்வித முறைகள் சிறந்தவை என்று விளக்குக.

IV. மாணவர்களது எழுத்து வேலை (written work) யை அமைக்க மொழி கற்பிக்கும் ஓர் ஆசிரியர் கொள்ள

வேண்டிய முறைகள் (principles) யாவை? II-ம் பாரத்திற்கு உபயோகிக்கக் கூடிய எழுத்து வேலை வகைகளில் ஐந்து எழுதுக.

V. மௌன வாசிப்பின் பலன்களை எழுதுக. மௌன வாசிப்பை விருத்தி செய்ய நீர் எவ்வித முறைகளைக் கையாளுவீர் என்று விவரிக்க.

மார்க்குகள்.

I. மௌன வாசிப்பு (silent reading) பழக்கத்தை உமது மாணவர்களுக்குப் பயிற்சி செய்ய எவ்வித முறைகளைக் கையாளுவீர்? 14

II. உமது மாணவர்களுடைய எழுத்து வேலையில் (written work) காணப்படும் பிழைகளைத் திருத்த என்ன செய்வீர்? 14

III. பாலர் பேச்சில் காணப்படும் சாதாரணமான குறைபாடுகள் யாவை? அவைகளைத் திருத்தும் முறைகள் யாவை? 12

அல்லது

ஒரு செய்யுள் பாடத்தின் நோக்கங்கள் யாவை? ஒரு வசன பாடத்தின் நோக்கங்களுக்கும் இவைகளுக்கும் என்ன வித்தியாசங்கள். 12

மொத்தம் 40

I. மொழிக் கல்வியின் (Language teaching) மற்ற அம்சங்களுடன் சம்பந்தப் படுத்திப் (correlate) போதிப்பது தான் இலக்கணம் போதிப்பதற்கு மிக சிறந்த முறையாகும்—இதை விளக்கிக் காட்டுக. $12\frac{1}{2}$

II. கட்டுரை வரைதல் பயிற்சி (Composition exercise)-க்கு முன் ஆயத்தமான முக்கிய வழிகள் (steps) யாவை? III-ம் பார மாணவர்கள் "தென்னை மரம்" என்னும் கட்டுரை தயார் செய்ய எவ்வித உதவி செய்வீர் என்று விளக்குக. $12\frac{1}{2}$

மார்க்குகள்.

III. கீழ் வகுப்புக்களில் (spelling) அபிவிருத்தி செய்யச் சில முறைகளை எழுதுக. 12½

IV. வகுப்பு நிலையங்களின் (Class libraries) பிரயோசனங்களை விவரிக்க. இவ்வித நிலையங்களை எவ்வாறு அமைப்பீர்? இவ்வித நிலையங்களில் எவ்வகையான புத்தகங்களை நீர் சேகரித்து வைப்பீர்? 12½

மொத்தம் 50

1948

I. முதல் வகுப்பு மாணவர்களுக்கு (Class I) எழுத்துக்களை எழுதக் கற்பிக்கத் தொடங்கும் முன் என்ன முற் பயிற்சியை (preliminary training) அளிக்கலாம்?

II. ஐந்தாம் வகுப்புக்கு (Class V) ஏற்ற ஒரு செய்யுளை எப்படிக் கற்பித்து, அதன் சுவையை மாணவர் உணரும்படி செய்வீர் என்பதை ஒரு (appreciate the poem) பாடக் குறிப்பின் துணைக்கொண்டு (notes of lesson) விளக்குக.

III. மூன்றும் வகுப்புக்கு (Class III) ஏற்ற படிப்புத் தாள்களை (reading charts) எங்ஙனம் ஆயத்தம் செய்யலாம்?

அல்லது

ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் (Class V) சொற்களஞ்சியத்தை (Vocabulary) பெருக்குவதற்கான (enlarge) வழிகளில் எவையேனும் நான்கினைக் குறித்து, அவற்றுள் ஒன்றை, எடுத்துக் காட்டுக்கள் (illustrate) தந்து விளக்குக.

9. தாய்மொழிப் பாடத்திட்டம்

முதலாம் வகுப்பு—வயது $5\frac{1}{2}$ முதல் $6\frac{1}{2}$ வரை

ஆண்டின் முதல் ஒன்றிரண்டு மாதங்களில், ஆசிரியர் தம்மிடம் புதிதாக வந்துள்ள குழந்தைகளுடன் அளவளாவி, அவர்களோடு உணர்வொற்றுமை ஏற்படுத்திக் கொள்ளுவதிலும், அவர்களுடன் உரையாடிக் கதை சொல்லி அவர்கள் கூச்சத்தைத் தெளிவிப்பதிலும் தம் கருத்தைப் பதிக்க வேண்டும். அவ்வாண்டின் எஞ்சிய மாதங்களில், உரையாடலுக்கும் கதை சொல்லலுக்கும் ஒதுக்கப்பட்ட வேளைகளில், தெளிவாகவும், திருத்தமாகவும், இயற்கையாகவும் பேசப் பிள்ளைகட்குக் கற்றுக் கொடுத்தல் ஆசிரியரின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாயிருக்கவேண்டும். பிள்ளைகள் பேசும் சொற்றொகையைப் பெருக்கும் கருத்தோடு, சிறு சிறு வாக்கியங்களில் அவர்களைப் பேசப் பழக்குதல் இதற்குச் சாதனமாகும். கொச்சை மொழிகளையும், சிற்சில இடங்களில் மட்டும் வழங்கும் சொற்களையும் ஆளுதல், சொல்லின் ஈற்றொலியை இசையாது விடுதல், தெளிவின்றி இசைத்தல் முதலிய உச்சரிப்புக் குறைபாடுகளுடன் பேசுதலுமாகிய பெரு வழக்கினை மாற்றுதல் மற்றொரு முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும்.

உரையாடலுக்கும் வாய்ப்பேச்சுக்கும் உகந்த சில பொருள்கள்

வகுப்பில் சொல்லப்பட்ட கதைகள், அல்லது வகுப்பில் உள்ள ஏதாவது ஒரு குழந்தைக்கு முன்னமேயே தெரிந்துள்ள கதைகள், தாலாட்டுப் பாட்டுகளும் அபிநயப் பாட்டுகளும்—

வீடு: குடும்பம், வீட்டு வேலைகளும் விளையாட்டுக்களும்.

பாடசாலை: ஆசிரியர், உடன்படிக்கும் மாணவர், படங்கள், விஷய அட்டைகள் (Charts) முதலியன.

பழக்கங்கள் : பாடசாலையிலும், தெருவிலும், வீட்டிலும் நடந்துகொள்ளவேண்டிய மரியாதை முறை.

சாதாரண மிருகங்களும் பறவைகளும்.

விடுமுறை நாட்கள் : பண்டிகைகள், உற்சவாதிகள், தொழில்கள்.

சுகாதார முதுரைகளும், உடற் பாதுகாப்புப் பயிற்சியும்.

வாசித்தல் : இப்பருவத்தில் வாசிப்பெல்லாம் பெரும்பாலும் வாய்விட்டுப் படிப்பதாகவே இருக்கும். அன்றியும், குழந்தைகள் முன்னமே அறிந்துள்ளவையும், தம் பேச்சில் ஆண்டுவருவனவுமான சொற்களை வரிவடிவிலும் தெரிநதுகொண்டு, வாய்விட்டு உரக்கப் படிக்க மட்டும் கற்பிக்கவேண்டும். முதல் வகுப்பின் முடிவில், சாதாரண சக்தியுள்ள பிள்ளையும் அப்படிப்பட்ட சொற்களில் சுமார் முந்நூற்றையும், அவற்றாலாகும் சிறு சிறு வாக்கியங்களையும், படங்கள் மின்னட்டைகளைப் (flash cards) பார்த்துத் தெரிந்து கொண்டு படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

எழுதுதல் : குழந்தைகள் தாங்கள் படித்த சொற்களையும் சிறு வாக்கியங்களையும், கரும்பலகை, படம், மின்னட்டை, பிற உபகரணங்கள் இவற்றில் எழுதியிருப்பதைப் பார்த்து அதைப்போல் தாமும் எழுதத் தாராளமாய்ப் பழகுதல்.

உபயோகித்தற்குரிய உபகரணங்கள் : சொற்படப் பொருத்த அட்டைகள், மின்னட்டைகள், சொல்லாக்க எழுத்தட்டைகள் (அல்லது கட்டைகள்) படங்கள் நிறைந்த புத்தகங்கள், தனிப் படங்கள்.

இரண்டாம் வகுப்பு—வயது 6½ முதல் 7½ வரை.

I. **வாய்மொழி வேலை—(1)** முதல் வகுப்பில் நடைபெறுவதற்கெனக் குறித்தவை போன்ற பொருள்களைப் பற்றி உரையாடுதலைத் தொடர்ந்து நடத்துதலோடு, பிள்ளைகள் மேலும் பல சொற்களை எடுத்தாள வாய்ப்பும்

உண்டாக்குதல். ஒரு சிறு நிகழ்ச்சியை முதலும் முடிவும் தெளிவாய்த் தோன்றுமாறு தம் மனத்தில் அமைத்து, அதை எடுத்துச் சொல்லவும் பிள்ளைகளைப் பழக்குதல்.

(2) சிறு நாடகங்களையும், உரையாடல்களையும் நடத்திக் காட்டுதல்.

(3) பாலர் பாட்டுக்களும், அபிநயப் பாட்டுக்களும் மேலும் பல பாடக்கற்றல்.

II. **வாசிப்பு**—(1) பாட புத்தகத்தையும், சொல்லட்டை வாக்கிய அட்டைகளையும் பார்த்துப் படித்தல். 400 புதுச் சொற்களைக் கற்றல்.

(2) **மௌன வாசிப்பு:**—மௌன வாசிப்புக்கும் உரக்க வாசிப்புக்கும் தகவுப் பொருத்தம் 40/60 ஆக இருத்த வேண்டும்.

இதில் அடங்குபவை,—(i) மின்னட்டைகளில் எழுதியுள்ள கட்டளைகளும், கற்பனைகளும், பிற பாடங்கள், கைவேலைகள், பள்ளியிற் செய்து முடிக்க மாணவர் தாமே குறித்து மேற்கொண்ட காரியங்கள் (porjects) என்பன வற்றைப் பற்றிய உத்தரவுகளைப் படித்து அவற்றிற் கேற்ப நடத்தல். (ii) மேலே 1 (2)-ம் பிரிவினையிற் கண்ட நாடகங்களையும், சம்பாஷணைகளையும் நடிக்கப் பழகுமுன் மௌனமாக வாசித்தல்.

III. **எழுதுதல்;**—எழுதுகோலைச் சரியான முறையில் பிடிக்கவும், தெளிவாயும் விரைவாயும் எழுதவும் கற்பதை வற்புறுத்தல். படித்த பாடங்களிற் கேட்கும் வினைக்களுக்கு ஒவ்வொரு வாக்கியத்தில் விடை எழுதும் திறமையை வளர்த்தல்.

உபகரணம்—முதல் வகுப்பிற்கு உள்ளபடி.

மூன்றாம் வகுப்பு—வயது $7\frac{1}{2}$ முதல் $8\frac{1}{2}$ வரை.

I. **வாய்மொழி வேலை :**—இதிலடங்குபவை—

(i) முக்கியமாய் வாய்மொழிக் கட்டுரை. அதாவது ஒரு சிறு நிகழ்ச்சியை முதலும், முடிவும் தெளிவாய்த் தோன்றுமாறும், பொருத்தமற்ற விவரம் பல புகுத்தாமலும் எடுத்துக் கூறுதல்.

(ii) நாடகம் நடித்தல்.

(iii) எளிய செய்யுட்களைப் பார்த்துப் படிப்பதும்; பாராமல் ஒப்பிப்பதும்.

II. **வாசித்தல் :**—(i) பிள்ளைகள் சொற் களஞ்சியத்தின் சுமார் 500 புதுச் சொற்களைச் சேர்த்தற்பொருட்டுப் பாடப் புத்தகங்களை அல்லது தேர்ந்தெடுத்த பிற பகுதிகளைப் படித்தல்.

(ii) **மௌன வாசிப்பு :**—இதன் தகவுப் பொருத்தம் 40-லிருந்து 60-ஆக உயரவேண்டும். மௌன வாசிப்பின் விரைவை அதிகப்படுத்துவதிலும், உச்சரிப்புக்கான அசைவைக் குறைத்தலிலும் சிறப்பாகக் கவனஞ் செலுத்தவேண்டும். அவ்வாறே வாக்கியத்திலும், படித்த கதைகளின் சாரத்தைச் சுருக்கிக் கூறுவதிலும் மாணவர்க்குப் போதிய பழக்கந் தந்து பொருளறியும் திறமையை வளர்க்கவும் கருத வேண்டும்.

III. **எழுதுதல் :**—கையெழுத்தின் தெளிவைக் கெடுக்காமலே விரைவாய் எழுதப் பழகுதல். எழுத்து வேலையில் விரைவும் தெளிவும்தான் முக்கியமாகத் தேவை என்று வற்புறுத்திக்கொண்டே, திருத்தமும் அழகுங் கூடத் தேவை என்று நாடத் தலைப்படுதல்.

வாசக பாடப் புத்தகங்களிலிருந்தும், பாட திட்டத்திலுள்ள பிற பாடங்களிளிருந்தும் கேட்கும் கேள்விகளுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதப் பயிலுதல்.

IV. (i) **இலக்கணத்தின் முக்கிய முதற் பாடங்கள் :**—பெயர்ச்சொல், வினைச்சொற்களைப் பிரித்து எடுத்துச் சொல்லவும் அவற்றின் ஒருமை பன்மை வேறுபாடுகளைக் காட்டவும் பழகுதல். முற்றுப் புள்ளியின் உபயோகம்.

(ii) **கற்ற எழுத்துக்களின் நெடுங்கணக்கு வரிசை முறையைத் தெரிந்துகொள்ளுதல்.**

நான்காம் வகுப்பு—வயது $8\frac{1}{2}$ முதல் $9\frac{1}{2}$ வரை.

I. வாய்மொழி வேலை :—கட்டுரை வேலைக்குப் பூர்வாங்கமாக ஒரு கதை அல்லது நிகழ்ச்சியைப் பற்றிய குறிப்புக்களை நிரல்பட அமைத்தல்.

II. எழுதுதல்:—கட்டுரை எழுதும் பயிற்சிக்கு முதற்படியாகச் சமூக வாழ்க்கையைப் பற்றிய கடிதங்களும் சொந்தக் கடிதங்களும் எழுதுதல். ஆண்டின் பிற்பகுதியில் சொந்த அனுபவங்களைப் பற்றிச் சுருக்கமாய்க் கட்டுரை எழுத இயலுமளவு முயலுதல்.

III. வாசித்தல் :—(i) எடுத்தாளாவிடினும் பொருள் மட்டும் தெரிந்துள்ள சொற்களின் தொகையையும் புதிய கருத்துக்களையும் அதிகப்படுத்திக் கொள்க.

(ii) நூல் நிலையப் புத்தகப் படிப்பு வாயிலாக, மௌன வாசிப்பின் விரைவையும் பொருளுணர் திறமையையும் அதிகப்படுத்துவதற்காக, குறிப்பிட்ட பயிற்சியும் பழக்கமும் தரல். படிப்பில் உதட்டசைவை மிகவும் குறைத்தலும், வாய்விட்டுச் சொல்லுதலை அறவே நீக்கலும் மௌன வாசிப்பை இவ் வகுப்பில் நடத்துதலின் குறிக்கோளாக இருக்கும்.

வசனப் பகுதிகளையும், நன்கு தேர்ந்தெடுத்த எளிய செய்யுள்களையும் ஊன்றிப் படித்து, அதனால் பொதுவாகவும், பிறபாடங்களின் சார்பாகவும் பிள்ளைகள் எடுத்தாளற்கு உரிய சொற்களின் தொகையை அதிகப்படுத்துதல்.

ஐந்தாம் வகுப்பு—வயது $9\frac{1}{2}$ முதல் $10\frac{1}{2}$ வரை

I. வாசிப்பு :—(*1*) மௌன வாசிப்பு—(i) இதில் சற்றேறத்தாழப் பெரியவர்களைப்போலவே சிறிதும் சத்தம் செய்யாமலும், உதட்டை அசைக்காமலும் படிக்கும் பழக்கம் கைவரப் பெற வேண்டும்.

(ii) இதற்குள் புத்தகங்களைப் படிப்பதில் சுவை காணத் தலைப்படு மளவிற்கு மாணவர்கள் வாசிப்பு வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(2) (i) மாணவர்கள் சொற் களஞ்சியத்தில் இன்னும் சுமார் 800 சொற்களைச் சேர்க்கவும்.

(ii) தக்க உயர்தர வசனத்தையும் செய்யுளையும் அவர்கள் அறியவும் வேண்டி, நல்ல வசனப் பகுதிகளையும், செய்யுள்களையும் விவரமாய்க் கற்பித்தல்.

II. **எழுதுதல்** :—சமூகச் சார்பாகவும் வாணிபச் சார்பாகவும் நீண்ட கடிதங்கள் எழுதுதல்.

ஆண்டின் பிற்பாதியில் முறையான கட்டுரை எழுதத் தொடங்குதல், அதாவது சாதாரண விஷயங்களைப் பற்றி முதலில் ஒழுங்கான திட்டம் வகுத்துக் கொண்டு, பின்பு சிறிய கட்டுரைகள் எழுதுதல்.

வாக்கியத் தொடர்.

III. **இலக்கணம்** :—பேச்சிலும் எழுத்திலும் நிகழும் பிழைகளை நீக்கும் திறமை பிள்ளைகட்கு வாய்க்கும் பொருட்டு, முன்பே கற்றுள்ள ஆரம்ப இலக்கணப் பகுதிகளை நினைப்பூட்டலும், இன்றியமையாத இன்னும் சில விதிகளைக் கற்பித்தலும். நிறுத்தற் குறிகள்.

ஆரம்பநிலை கடந்த வகுப்புக்களில் தாய்மொழிக் கல்வி

ஆறும் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை

இவ் வகுப்புக்களில் பிள்ளைகளின் வாசிப்பின் பெரும்பாகம் மௌன வாசிப்பா யிருக்க வேண்டும். பொருளுணர்ச்சி குறையாமலே வாசிப்பின் வேகத்தை அதிகப்படுத்துதல் நோக்கமா யிருக்கவேண்டும். இப்படிச் செய்வதால் எல்லாப் பாடங்களிலும் செலவிடும் நேரம் சிக்கனப்படும். பொழுது போக்கிற்காகவும் மௌன வாசிப்பை மேற்கொள்ளும்படித் தூண்டலாம். ஆனால், வகுப்புகளில் நடைபெறும் மௌன வாசிப்பு, கீழ்க்கண்ட இரண்டு திட்டமான நோக்கங்களை யுடையதாய் இருக்க வேண்டும்.

(1) **வாசிப்பின் விரைவை மிகுதிப்படுத்தல் :**—இது செய்தற் கேற்ற வழிகள் இரண்டு. (i) உதட்டசைவு போன்ற ஆரம்பத் தசை இயக்கங்கள் குரலவய வங்களில் எழாதபடி தடுத்தல்.

(ii) எளிய விஷயங்களைக் குறிப்பிட்ட நேரத்தில், மௌனமாய்ப் படித்து முடிக்கப் பழக்குதல்.

(2) **(மௌன வாசிப்பில்) பொருளுணர் திறமை வளர்ச்சி ;**— இது நிறைவேறுவதற்குத் திட்டமான பயிற்சி கள் தேவை. அவற்றிற் சேரக்கூடிய சில கீழே தரப்பட்டுள்ளன :—

(i) குறிப்பிட்ட சில விவரங்களைக் குறித்துக் கொள் ளுதல்.

(ii) கிடைத்த ஆதாரங்களிலிருந்து முடிவு கண்டு பிடித்தல்.

(iii) (அ) ஒரு வாக்கியத் தொடரின் (Paragraph) நாய கக் கருத்தை (Central idea) அல்லது அதன் பொதுப் பொருளைப் பிரித்து எடுத்துக் காட் டல். (ஆ) வாக்கியத் தொடரிலும் விரிந்துள்ள தோர் பகுதி. (உ-ம். ஒரு அத்தியாயம்) கூறும் பிர்தான விஷயத்தை எடுத்துக் காட்டல்.

(iv) கிடைத்த ஆதாரங்களிலிருந்து தமக்கு வேண் டிய விவரங்களை விரைவிற் கண்டு பிடித்தல். (உ-ம்.) ஒரு பொருளைப்பற்றிக் கட்டுரை வரை வதற்காகச் சரித்திர நூல்களையும், பூகோள நூல்களையும், பிறவற்றையும் கையாளுதல்.

இம் மேல் வகுப்புகளில், கட்டுரைப் பயிற்சி வாய் மொழியாகவும் எழுத்து மூலமாகவும் நிகழ வேண்டும்.

எழுதப்படும் கட்டுரைகள் பெரும்பாலும் சில வாக்கி யங்களே கொண்ட சிறு பயிற்சிகளா யிருக்க வேண்டும். இவைகள் கீழ்க்கண்ட பயன்களைத் தரும் தனிப் பயிற்சி களையும் தம்மிடத்தே கொண்டிருக்க வேண்டும்.

(i) ஆளும் சொற் களஞ்சியத்தைப் பெருக்குதல்.

(ii) கருத்தை முன்னுக்குப் பின் முரண்படாது வெளியிடுந் திறமை பெறுதல் (ஒரே வாக்கியத் தொடரில் அடங்கும் கட்டுரையுட்பட எல்லாக் கட்டுரைகளும் திட்டமான முதல், நடு, முடிவு உடையனவா யிருக்க வேண்டும்.)

(iii) சொல்வன்மை (வாக்குத் தாட்டி) பெறுதல்.

முறைப்படி எழுதப்படும் நீண்ட கட்டுரைகள் ஓராண்டிற்கு இத்தனை யென்று வரையறுக்கப்பட வேண்டும். (பன்னிரண்டு போதும்), விவரப் பெருந்தலைப்புகளும் உள் தலைப்புகளும் கூடிய கட்டுரைத் திட்டம் ஆயத்தம் செய்த பின்னரே இக் கட்டுரைகளை எழுத வேண்டும்.

ஆறும் வகுப்பு

வாசக பாடம் ஆழ்ந்த படிப்பு

கீழ்க் குறித்தவற்றிலிருந்து தேர்ந்தெடுத்தவை :—

(1) (i) நூலின் பெருமையை ஓரளவும், படிப்போர் உள்ளத்தில் உயர்ந்த உணர்ச்சிகளை எழுப்பும் வன்மையை முக்கியமாகவும் கவனித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்பனை மலிந்த இலக்கியங்கள்.

(ii) உண்மையாய் நேர்ந்த அநுபவக் குறிப்புகள்; மக்கள் செய்து முடித்த அரிய காரியங்கள்; அவர்கள் வாழ்க்கை முறை, உள்ள பொருள்கள், பல மக்கள் இவற்றை உள்ளபடியே எடுத்துரைக்கும் நூல்கள்.

(iii) இயற்கை நூல்கள் (பஞ்சதந்திரத்திற் காணும் பிராணிக் கதைகள் முதலியவை.)

(2) (i) கதைப் பாடல்கள். (உ-ம். தேசிங்குராஜன் கதை, அல்லியரசாணி மாலை).

(ii) இலகுவான இன்னிசைப் பாடல்கள்.

(iii) சிறு நாடகங்கள் அல்லது நாடக ரூபத்தில் அமைக்கப்பட்ட கதைகள் என்னும் இவற்றின் தொகுதிகள்.

மௌன வாசிப்பிற்கு உரியவை.—வீரம் துணிகரம், ஆச்சரியம் இவை பற்றிய கதைகள், கற்பனைக் கதை, கர்ண பரம்பரைக் கதை இவைகளடங்கிய நூல்கள்.

கட்டுரை :—வாய்மொழியிலும், எழுத்திலும் இவ் வகுப்புக்குப் பொருத்தமான விஷயங்களாவன :—

(i) தனிப் படங்கள் தொடர்ப் படங்கள், பிளான்கள், வரி வடிவுங்கள் (diagrams) இவற்றின் பொருளை உணர்ந்து விளக்குதல்.

(ii) ஒரு கதையை, அல்லது நாட்டு வரலாறு, ஆட்சிமுறை நூல், இலக்கியம் இவற்றிலிருந்து எடுக்கப்பட்ட தக்கதொரு விஷயத்தை, நாடக வடிவில் அமைத்தல்.

(iii) படர்க்கை முறைப்பேச்சைச் சம்பாஷணை வடிவில் எழுதுதல்.

(iv) கடிதமெழுதுதல் (சந்தர்ப்பத்தையும் கடிதம் பெறுவோனையும் குறிப்பிட்டு எழுதுதல்).

இலக்கணமும் நிறுத்தல் அடையாளங்களும் :—இந்திய மொழிகளின் இலக்கணங்களில் எழுத்து சொல் முதலியவற்றின் பயன் (function) எவ்வளவு முக்கியமோ அவ்வளவு அவற்றின் அமைப்பும் (form) முக்கியம். ஆதலால், அமைப்பு, பயன் ஆகிய இரண்டையும் கற்க வேண்டும்.

நிறுத்தவேண்டிய இடங்களிலெல்லாம் திட்டமாய் நிறுத்திப் பொருளுணர்ச்சி தோன்ற இனிதாய் உரத்து வாசிக்கும் பாட்ப் பகுதிகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு, நிறுத்தற் குறிகளைக் கையாளும் பயிற்சிகள் தர வேண்டும். மாணவர்கள் தங்களுக்குத் தெளிவாக விளங்காத வாசகங்களில் நிறுத்தற் குறிகளை அமைக்க முடியாது. அவர்கள் படிப்பின் முடிவு வருஷத்தின் பிற் பகுதியில்தான், அவர்களுக்குச் சொல்லாற்றல் அறியும்

உணர்ச்சி, வளர்ச்சி பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கலாம். எனவே, அதுவரையிற் கொடுக்கப்படும் பயிற்சிகளின் பெரும்பாகம், முற்றுப் புள்ளி, காற்புள்ளி, இவற்றைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

அச்சிடப்பட்ட தாள்களைப் பரிசோதனைக்காகக் கொடுப்பதானால், அவற்றில் நிறுத்தற்குறி இடவேண்டிய இடங்களை யெல்லாம் செங்குத்துக் கோடுகளால் குறிக்க வேண்டும்.

இலக்கணம் : சொல் வகைகளும் (Parts of speech) வடிவங்களும். தனிநிலை வாக்கியம், எழுவாய் பயனிலைக்கிடையே யுள்ள அடிப்படையான வேறுபாடு, வாக்கியத்தின் பிற உறுப்புகள், இன்றியமையா முற்றுவினை, செயப்படுபொருள், வினையுரிச்சொல், பெயருரிச்சொல், முதலியன. தனி வாக்கியங்களில் சொற்கள் இயற்கைமுறையில் அன்வயமாக அமைந்திருந்தாலும், அவவாறின்றிச் செய்யுள் நடையில் வருவதுபோல வேற்று முறையில் இடமாறி அமைத்திருந்தாலும், வாக்கிய அமைப்பை அறிந்து கொள்ளும் திறமை மாணவர்க்கு வாய்க்க வேண்டும் வாக்கிய வகைகள்.

வாசக நிறுத்தக் குறியீடுகள் : கருத்தைக் கருதியிடும் குறிகள்—முற்றுப்புள்ளியும் காற்புள்ளியும்.

சந்தேகக் குறிகள் :—
வினாக்குறி ?
வியப்புக் குறி !
மேற்கோட் குறி " "

ஏழாம் வகுப்பு

வாசிப்பு ஆழ்ந்த படிப்பு

I. (i) ஆறும் வகுப்பிற்போலக் கற்பனை இலக்கியங்களிலிருந்து எடுக்கும் திரட்டுகள்.

(ii) வாழ்க்கை வரலாறு யாத்திரை, இயற்கை வளங் காண்பதற்குச் செய்யும் சஞ்சாரம், இயற்கை வரலாறு (natural history) இவற்றிலிருந்து எடுக்கும் திரட்டுகள்.

II. (i) கதைப் பாட்டும் இன்னிசைப் பாட்டும் (lyrical verse) கலந்த தொகை நூல் திரட்டுகள்.

(ii) உரைநடையிலுள்ள சிறு நாடகங்கள், பண்டைப் பெரு நாடகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்ற களங்கள் (scenes).

மௌன வாசிப்பு : வீரக் கதைகள், துணிகரச் செய்கைகளும் அற்புதங்களும், கற்பனைக் கதைகளும் கர்ண பரம்பரைக் கதைகளும், நீண்ட கதைச் செய்யுள்கள்.

கட்டுரை : வாய்மொழியிலும், எழுத்திலும் நடைபெற வேண்டும். அடியிற்கண்ட புது விஷயங்கள், அதற்குரிய பொருட் பட்டியிற் சேர்ந்திருக்க வேண்டும் :—

(1) ஒரே கதை அல்லது நிகழ்ச்சியைச் சந்தர்ப்ப வேறுபாட்டிற்கேற்ப வெவ்வேறு விதமாய்ச் சொல்வது. (உ-ம்.) ஒரு மோட்டார் விபத்தை (i) மோட்டாரோட்டி சொல்வது போலவும், (ii) போலீஸ்காரன் நீதித்தலத்தில் தெரிவிப்பது போலவும், (iii) மோட்டா ரோட்டியும் அவன் நண்பனும் உரையாடுவது போலவும், (iv) அந் நிகழ்ச்சியைக் கண்ணுற்றொருவன் தன் நண்பனுக்குக் கடித மூலம் அதனைத் தெரிவிப்பது போலவும் பெயர்த்தமைத்தல்.

(2) படித்த அல்லது கேட்ட கதையைத் திருப்பிச் சொல்லுதல், அல்லது கொடுத்த கதைக் குறிப்புகளைக் கொண்டு (சில சமயங்களில்) முழுக் கதையைச் சொல்வது.

(3) யாதாமொன்று இயங்கு முறையை, அல்லது தயாரிக்கப்படு முறையை, வரிவடிவத் (diagram) துணை கொண்டு விவரித்தல். (உ-ம்) நெய் எடுத்தல்.

(4) விஷயக் குறிப்பெடுத்தல்.

இலக்கணமும் நிறுத்தற் குறிகளும் : கலவை வாக்கியம் (complex sentence).

அதன் உறுப்புக்களைப் பிரித்தலும் சேர்த்தலும்.

சொல் வகைகள் : பெயர்ச்சொல், வினைச்சொல் முதலியவற்றின் பாகுபாடுகள்.

வினைச்சொற்களும், அவற்றின் பாகுபாடுகளும் ; வேற்றுமை உருபுகள்.

நிறுத்தற் குறிகள் : அரைப்புள்ளியும் முக்காற் புள்ளியும்.

எட்டாம் வகுப்பு

வாசித்தல் (ஆழ்ந்த படிப்பு)

1. அடியிற்கண்டவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப் பட்டவை :—

(i) கற்பனை இலக்கியம்.

(ii) நாட்டு வரலாறு, வாழ்க்கை வரலாறு, யாத்திரை, அறிவியலாராய்ச்சியிற் கண்டு பிடிக்கும் புதுமை (scientific discoveries).

(iii) கட்டுரைகளும், விஷயச் சுருக்கங்களும். இவற்றோடு சமாசாரப் பத்திரிகைகளினின்றும், மாதாந்தரப் பத்திரிகைகளினின்றும், ஆசிரியர்கள் தேர்ந்தெடுத்த சிறிய கட்டுரைகளையும் பயன்படுத்தலாம்.

2. (i) கதைப் பாட்டும், இன்னிசைப் பாட்டும்.

(ii) முதல்தர (அல்லது பண்டைய) நாடகங்களும் சிறிய வசனநடை நாடகங்களும்.

வாசித்தல்—மௌன வாசிப்பு : நவீனங்களும் சாகசக் கதைகளும் (novels and romances) ; சிறு கதைகள் ; வியாசங்கள் ; ஆழ்ந்த கருத்துடையனவும், நகைச்சுவை பொருந்தியனவுமான சுருக்க வருணனைகள் ; பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்.

கட்டுரை : வாய்மொழியிலும் எழுத்திலும் நிகழ்வது அடியிற் கண்ட புது விஷயங்களும் அப்பாடத்துக்குரிய பொருளா யிருக்க வேண்டும் :—

(1) வகுப்பில் நடந்த வேலைகளைப் பற்றி எழுதுதல்; (projects); மாணவ யாத்திரைகள் முதலியவற்றைப் பற்றி விளக்கப்படங்களுடன் எழுதுதல்.

(2) அரிய வாசகங்கட்குப் பொழிப்புரைத்தலும், பொருள் விளக்கங் கூறுதலும்.

(3) சுருக்க வடிவில், தரப்பட்ட விஷயத்தைப் பெருக்கி எழுதும் பயிற்சிகள்.

(4) சுருக்க மெழுதுதல்

(5) அரைகுறையாய்ச் சொன்ன கதையைப் பூர்த்தி செய்வது.

(6) சமாசாரப் பத்திரிகைகள், வார மாதப் பத்திரிகைகள், நூல் நிலையப் புத்தகங்கள் முதலியவற்றைப் படித்து, ஒரு குறித்த விஷயத்தைப் பற்றிக் கட்டுரை எழுதுதல்.

(7) வகுப்பு அல்லது பள்ளிக்கூடப் பத்திரிகைக்கு விஷயதானம் செய்தல்.

இலக்கணமும் நிறுத்தற் குறிகளும்—ஆறும் ஏழாம் வகுப்புகளில் படித்த இலக்கணப் பகுதிகளை மீண்டும் படித்தல்.

புணர்ச்சி. செய்யுளிலும் வழக்கிலும் காணும் சாதாரண அணிகள். செய்யுளின் ஓசையமைதி (rhythm) பற்றிய உண்மைகளைக் கற்றல்.

இலக்கண வழுவின்றிப் பேசவும் எழுதவும் பழகுதல். இதற்குக் கீழ்க்கண்ட பயிற்சிகள் பயன்படும் :—

(அ) வாக்கியங்களைப் பொருள்மாற்றாது குறிப்பிட்ட வடிவில் பெயர்த்தமைத்தல்.

(ஆ) வாக்கியக் கோவையமைப்பை (sentence sequence) மாற்றி எழுதுதல்.

(இ) கீழ்க் குறித்தவாறும் மாற்றி எழுதுதல் :—

(1) செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்குதல்.

(2) வினா வாக்கியத்தைச் சாதாரண வாக்கியமாக்குதல்.

(3) எதிர் மறையை உடன்பாடாக்குதல்.

(4) நேர்முகப்பேச்சைப் படர்க்கைப் பேச்சாக்குதல்

(5) அலங்கார வினாவை (rhetorical question)ச் சாதாரண வாக்கிய மாக்குதல்.

(6) குணத்தைக் குணியாக்குதல்.

நிறுத்தற் குறிகள்.—ஆறும் ஏழாம் வகுப்புகளில் கற்றுக் கொண்ட குறிகளை ஆளுதலும், இன்னும் அதிக பயிற்சிப் பெறுதலும்.

கருத்துக் குறிகள்.—கோடு

இடைப் பிறவரற் குறிகள்.—இரட்டைக்கோடு— —
அரை வட்டக் குறி.—( ).